# அபத்தம்

மாசி 2024

14



## துணிந்து நில்! நிமிர்ந்து நில்!
## உரிமத்துக்காக எழுந்து நில்!

ஏடு இட்டோர் இயல்

# துணிந்து நில்! நிமிர்ந்து நில்! உரிமத்துக்காக எழுந்து நில்!

*இம்முறையும் தை மாதத்தில் புத்தகக் கண்காட்சிப் பரபரப்பு.*

*கிட்டத்தட்ட எல்லா எழுத்தாளர்களுமே தங்கள் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன என்று கிடைக்கும் கொட்டகை எண்களை அறிவித்துக் கொண்டே இருந்தார்கள். தாங்கள் அங்கே நிற்கும் நேரங்களைக் கூட குறிப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள்.*

*வாசகர்களை (அல்லது காதலிகளைச்) சந்திக்க, செல்பி எடுக்க, கை எழுத்துப் போட, தங்கள் புத்தகங்களை வாங்க முதல் நாள் முதல் ஷோ கூட்டம் மாதிரி வாசகர்கள் வரிசையில் அலை மோதும் காட்சியைக் கண்களால் கண்டு களிக்க, அங்கே நிற்கிறார்கள். தங்கள் புதிய புத்தகங்களின் வெளியீட்டு விழா நடத்துகிறார்கள். சந்திக்கிற மற்றப் பிரபலங்களோடும், வாசகர்களோடும் பெருமையோடு செல்பி போடுகிறார்கள். இவர்களை எல்லாம் தவற விடக்கூடாது என்று எத்தனை பேர் சாப்பிடவும், மலசல கூடமும் போகாமல் காத்திருந்தார்களோ தெரியாது.*

*எனக்குச் சிரிப்பாக இருந்தது!*

*கொட்டகை வெளியீட்டாளர்களுடையது. அவர்கள் பல எழுத்தாளர்களின் புத்தகங்களை விற்கிறார்கள். அவர்களுக்குத் தான் பணம் கிடைக்கும்.*

*எதற்காக இந்த எழுத்தாளர்கள் இப்படிக் குத்தி முறிகிறார்கள்?*

*வேலையை விட்டுச் சொந்தச் செலவில் வந்து சேர்கிற எழுத்தாளனுக்கு எவ்வளவு உரிமத் தொகை கிடைக்கும்?*

*வெறும் உளத் திருப்தியும், அங்கீகாரமும் தான் என்றால், அங்கே ஒரு உளவள ஆற்றுப்படுத்தலுக்கு என தனியான ஒரு கொட்டகை தேவை.*

•••

*இது நான் பேஸ்புக்கில் போட இருந்த பதிவின் விரிவாக்கம். அதற்கான காரணம், தன்னை இன்னொரு எழுத்தாளர் உடற்கேலி செய்ததால் மனம் புண்பட்டு, அதற்கான காரணம் தன்னை விட குறைவானவர்களே அந்த எழுத்தாளரிடம் கையெழுத்து வாங்கிய பொறாமை தான் என்று சாரு போட்ட பதிவு. பிறகு தன்னுடைய கொட்டகை மலசல கூடத்திற்கு முன்னால் இருக்கிறது என்று புலம்பியிருந்தார்.*

*நான் தான் இங்கே முடிசூடா மன்னன் என்று மூணு நாலு பேர் உரிமை கோரி அடிச்சுக் கொள்கிற தமிழ் இலக்கிய உலகத்தில், ஆயிரம் பிரதி விற்க ஐந்து வருடம் முக்குகிற ஒரு நம்பர் வண்ணுக்கே இந்தக் கதி என்றால் மற்ற எழுத்தாளர்களை நினைக்கப் பரிதாபமாக இருந்தது.*

*தங்களுடைய புத்தகங்களை விற்க வேண்டும், தங்களுடைய கருத்துக்கள் பலருக்கும் போய்ச் சேர வேண்டும் என்று எழுத்தாளர்கள்*

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

**தங்களுடைய புத்தகங்களை விற்க வேண்டும், தங்களுடைய கருத்துக்கள் பலருக்கும் போய்ச் சேர வேண்டும் என்று எழுத்தாளர்கள் ஆசைப்படுவதில் எந்தத் தப்பும் இல்லை. அது நியாயமானது தான். தமிழ் இலக்கிய உலகில் இலக்கியம் படைத்தல் என்பது வெறும் labor of lovந முயற்சி தான். அதை ஒரு வாழ்க்கைக்கான வழியாக இல்லாவிட்டாலும், ஒரு வருவாய்க்கான வழியாக குறிப்பிட்ட சிலரைத் தவிர, மற்றவர்களால் கருத முடிவதில்லை. மக்கட்தொகைக்கு ஏற்றதொரு சீரிய இலக்கியத்திற்கான சந்தை தமிழில் இல்லை.**

**இலக்கியப் புத்தகங்கள் தான் விற்பதில்லை என்றால், இலக்கியம் என்று நீங்கள் சொல்வது என்ன? என்ற கேள்வியிலிருந்து தொடங்க வேண்டும். பொதுவெளியில் பிரபலமான கவிஞர்கள் நிறைய விற்கிறார்கள், எங்களுடைய கவிதைப் புத்தகம் நகரவேயில்லை என்றால், உங்களுடைய பின்நவீனத்துவக் கவிதை என்னைப் போன்ற கொஞ்சம் பரவலாக வாசிக்கிற ஒருவனுக்கே விளங்காத போது, மற்றவர்கள் வாங்குவது என்ன, வாசிப்பதற்கே முன்வரப் போவதில்லை.**



**facebook: George RC**

ஆசைப்படுவதில் எந்தத் தப்பும் இல்லை. அது நியாயமானது தான்.

தமிழ் இலக்கிய உலகில் இலக்கியம் படைத்தல் என்பது வெறும் labor of love முயற்சி தான். அதை ஒரு வாழ்க்கைக்கான வழியாக இல்லாவிட்டாலும், ஒரு வருவாய்க்கான வழியாக குறிப்பிட்ட சிலரைத் தவிர, மற்றவர்களால் கருத முடிவதில்லை. மக்கட்தொகைக்கு ஏற்றதொரு சீரிய இலக்கியத்திற்கான சந்தை தமிழில் இல்லை.

வணிகப் பத்திரிகைகளால் பிரபலம் பெற்ற எழுத்தாளர்களுக்கான சந்தை எப்போதுமே இருந்தபடி தான் இருக்கிறது. கண்ணதாசன், ஜெயகாந்தன், சுஜாதா என்று இதனால் சம்பாதித்த பலருடைய நீண்ட பட்டியல் உண்டு. அதனால் அவர்கள் லட்சாதிபதிகளாக வந்தார்களோ இல்லையோ, எழுத்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கான பெரும் பகுதியை வழங்கிக் கொண்டிருந்தது. இதனால் அவர்கள் முழுநேரமாகவோ, அல்லது பெருமளவோ எழுதவும் முடிந்தது.

இதெல்லாம் பொதுவெளியில் பிரபலமான வார இதழ்கள் மூலமாகக் கிடைத்த பிரபலத்தால் மட்டுமே கிடைத்த புண்ணியம். அவர்களும் சிற்றிதழ்களோடு நிறுத்தியிருந்தால் இதெல்லாம் கிடைத்திருக்கச் சாத்தியமேயில்லை.

எனவே, சமூகம் வாசிப்பதில்லை என்று ஒட்டுமொத்தமாக முடிவு கட்ட முடியாது. அதைப் போல, ‘காமன் மேனின்’ ரசனை மட்டமானது என்று கூட முடிவுக்கும் வர முடியாது. ரமணி சந்திரனும் ராஜேஷ்குமாரும் விற்பதைப் போல, ஜெயகாந்தனுடைய புத்தகங்களும் பல பதிப்புகள் கண்டவை தானே. (ஜெயகாந்தன் பெரிய இவனா? என்று கேட்பதாக இருந்தால், அந்தக் கேள்வியை உங்கள் தனிச்சுற்று வாசிப்புச் சிற்றிதழிலேயே நிறுத்திக் கொள்ளவும்!).

இலக்கியப் புத்தகங்கள் தான் விற்பதில்லை என்றால், இலக்கியம் என்று நீங்கள் சொல்வது என்ன? என்ற கேள்வியிலிருந்து தொடங்க வேண்டும். பொதுவெளியில் பிரபலமான கவிஞர்கள் நிறைய விற்கிறார்கள், எங்களுடைய கவிதைப் புத்தகம் நகரவேயில்லை என்றால், உங்களுடைய பின்நவீனத்துவக் கவிதை என்னைப் போன்ற கொஞ்சம் பரவலாக வாசிக்கிற ஒருவனுக்கே விளங்காத போது, மற்றவர்கள் வாங்குவது என்ன, வாசிப்பதற்கே முன்வரப் போவதில்லை. விஜய் படங்களில் முற்போக்குச் சிந்தனைப் போக்கு, மணிரத்தினம் படங்களின் உலகளாவிய பார்வை, பாப்லோ நெருடாவின் கவிதைகளில் விஞ்சியிருப்பது பெண்ணியமா? மார்க்ஸிசமா? போன்ற தலைப்புகள் எல்லாம் கல்வியியல் ஆய்வாளர்கள் கூட அண்டாத விடயங்கள். அவற்றிற்கான பரம்பல் குறுகிய வட்டங்களாகக் கூட இருப்பதில்லை. அவையும் பொன்னியின் செல்வன் சைஸில் இருந்தால் அது special interest group களுக்கானது.

அவ்வாறு வாசிப்பதற்கு ஆர்வம் உள்ள பின்நவீனத்துவ நுகர்வாளர்கள் தொகை ஒரு சந்தையாகக் கருதுகிற அளவுக்கான எண்ணிக்கையில் இல்லை. அவர்களில் பெரும்பாலார்களும் pdf please பஞ்சப் பரதேசிகள்... இந்த பின்நவீனத்துவக் கவிஞர்கள் மாதிரி!

இன்றைக்கும் சீரியஸ் இலக்கியம் பேசிக் கொண்டு, வணிகச் சஞ்சிகைகளையும், ‘ரசனை இல்லாத முண்டங்களான காமன்மேன்களையும்’ திட்டிக் கொண்டிருக்கிற சீரிய இலக்கிய வாதிகளுக்கும், அதே வணிகச் சஞ்சிகைகளில் எழுதவும், நேர்காணல்களுக்கும், தங்கள் புத்தகங்கள் பற்றிய பெட்டிச்

செய்திகளுக்குமான 'திருட்டுத் தனமான ஆசை' இருந்து கொண்டு தான் இருக்கிறது. தமிழ்ச் சினிமாவைத் திட்டிக் கொண்டே, அதே ரசனை இல்லாத முண்டங்களான காமன்மேன்கள் விசிலடித்துக் கை தட்டுகிற 'பஞ்ச் டயலாக்' எழுதுகிற சந்தர்ப்பம் சினிமாவில் கிட்ட வேண்டும் என்ற இரகசியக் கனவுகளும் உண்டு.

இதெல்லாம் எங்களுக்கு இல்லை, நாங்கள் படைக்கும் தூய இலக்கியங்களின் தரம் விற்பனை எண்ணிக்கையால் நிர்ணயிக்கப் படுவதில்லை, அமெரிக்காவில் பிறந்திருந்தால் அடுத்த ஆஸ்கார் எனக்குத் தான்' என்ற நினைப்போடு இருந்தால், அவர்களுக்கு இதெல்லாம் பிரச்சனையாக இருக்கப் போவதில்லை. அவர்கள் தாலிக்கொடியை அடைவு என்ன, விற்றே தங்கள் கவிதைத் தொகுப்பை வெளியீடு செய்யலாம்.

அவர்களுக்கு இலக்கியம் என்பது தவம். எழுத்து என்பது யாகம். எல்லாவற்றையும் துறந்து தவம் செய்கிற, பற்றற்றவர் களுக்கு, உலகாயத விடயங்கள் அனாவசியமான சுமைகள். அவர்களுக்கு புத்தக விற்பனை என்ன, எத்தனை பேர் கையெழுத்து வாங்க வருகிறார்கள் என்பது கூடப் பொருட்டாக இருக்கப் போவதில்லை. பிறகு உரிமத் தொகை பற்றி எதற்கு அலட்டிக் கொள்ளப் போகிறார்கள்?

ஆனால், ஒவ்வொரு முறையும் புத்தகக் கண்காட்சி முடிந்ததும், விற்பனை எதிர்பார்த்த அளவு இல்லை என்று பதிப்பாளர்களும் எழுத்தாளர்களும் புலம்புவது என்றைக்குமே வழமையாகி விட்டது. அதைவிட, விழா அமைப்பாளர்கள் பற்றிய விமர்சனங்கள் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், பொதுமக்களிடம் இருந்து வருவதும் கூட வழமையாகத் தான் இருக்கிறது.

தமிழ்நாட்டில் பதிப்பாளர்களுக்கான அமைப்பு இருக்கிறது. அது ஒரு தொழிற்சங்கத்திற்குரிய, தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதும், வளர்ப்பதுமான நோக்கங்களைக் கொண்டிருப்பது நியாயமானது.

ஒரு அமைப்பாகத் திரண்டிருப்பதால், பெரிய அளவிலான இவ்வாறானதொரு நிகழ்வை அவர்களால் முன்னெடுக்க முடிகிறது. இது வெறுமனே புத்தக விற்பனையில் பெறுகிற லாபத்தோடு முடிந்து போகிற பிரச்சனை இல்லை. அரசாங்கம் வருடாந்தம் எழுபத்தைந்து லட்ச ரூபா வழங்குகிறது.

சென்ற தடவை புலன் பெயர் இலக்கியம் குறித்துப் பேச அழைக்கப்பட்ட புலன் பெயர் இலக்கியப் 'பிரதிநிதிகளுக்கு' விமானச்சீட்டு, விமான நிலையத் திலிருந்து வரவேற்பு வாகனம், வசதிகளுடன் கூட தங்குவசதிகள் என்பன வழங்கப்பட்டிருக்கின்றன. மற்றவர்களுக்கும் இந்த விடயங்கள் தெரிந்து அவர்களுக்கும் அந்த வசதிகள் கிடைப்பதை அவர்கள் விரும்பாததால், அதைப் பொதுவெளியில் பகிரங்கமாகச் சொல்லாமல் கமுக்கமாகவே இருந்து கொண்டார்கள்.

தமிழக அரசின் தமிழினி 2000 விழாவிற்கான இலவச டிக்கட் வசதிகளுக்காகவே பல இலக்கியர்களின் immediate குடும்பத்தினரும் தற்காலிக 'இலக்கியர்களாக்கப்பட்ட' கதைகள் எங்களுக்குத் தெரியும். (தமிழேன்டா! யோக்கிய சிகாமணிகள்!)

சென்ற தடவை புலன் பெயர் இலக்கியம் குறித்துப் பேச அழைக்கப்பட்ட புலன் பெயர் இலக்கியப் 'பிரதிநிதிகளுக்கு' விமானச்சீட்டு, விமான நிலையத் திலிருந்து வரவேற்பு வாகனம், வசதிகளுடன் கூட தங்குவசதிகள் என்பன வழங்கப்பட்டிருக்கின்றன. மற்றவர்களுக்கும் இந்த விடயங்கள் தெரிந்து அவர்களுக்கும் அந்த வசதிகள் கிடைப்பதை அவர்கள் விரும்பாததால், அதைப் பொதுவெளியில் பகிரங்கமாகச் சொல்லாமல் கமுக்கமாகவே இருந்து கொண்டார்கள்.

தமிழக அரசின் தமிழினி 2000 விழாவிற்கான இலவச டிக்கட் வசதிகளுக்காகவே பல இலக்கியர்களின் immediate குடும்பத்தினரும் தற்காலிக 'இலக்கியர்களாக்கப்பட்ட' கதைகள் எங்களுக்குத் தெரியும். (தமிழேன்டா! யோக்கிய சிகாமணிகள்!)

இப்படியான செலவீனங்க ளுக்காகவும், இந்த விழாவைப் பற்றி பரவலாகத் தெரியப் படுத்துவதற்காகவும் (Promotion) வழங்கப்படும் பெருந்தொகை அது.

இதை விட, அங்கே வழங்கப்படுகின்ற கொட்டகைகளுக்கான இடத் திற்காக பெரும் பணம் வசூலிக்கப் படுகிறது. உணவு வினியோகக் கொந்தராத்துக்கான அனுமதிக்குக் கூட பெரும் பணம் அறவிடப்படுகிறது.

பெரும் திருவிழா கணக்கில் நடத்தப்படும் இந்த விழாவில் பெருமளவு மக்கள் கலந்து கொள்கிறார்கள். இதை விட அதிகம் மக்கள் கூட்டம் சேரக்கூடும் என்று பட்டிமன்றப் பேச்சாளர் களை அழைப்பது கூட, புனித இலக்கியர்களுக்கு ஹராம்!

எல்லாம் கோலா கலமாக முடிவுக்கு வந்ததும் அதே பதிப்ப ாளர்கள் புத்தக விற்பனை நடக்கவில்லை என்று புலம்புகிறார்கள்.

எழுத்தாளர்கள் பற்றி நான் குறை கூறவரவில்லை. அது அங்கீகாரம், தன்னகங்காரம் (Ego) சம்பந்தப்பட்ட விடயம். தன்னகங்காரத்திற்கு இதை விடப் பெரிய அடி கிடைக்க முடியாது. ஒரு சுப்பர் ஸ்டாருக்குரிய வரவேற்பை எதிர்பார்த்துப் போன எழுத்தாளர்கள் கொட்டகையில் இலையான் கலைத்துக் கொண்டிருக்க வேண்டி நேரிடுவது துயரம் தான். ஒரு புத்தகம் விற்பதே பெரும் விருது கிடைப்பதான பெருமையை வழங்கக் கூடியது.

வாசகன் அடையாளம் கண்டு கையெழுத்துக் கேட்டால், அது ஆஸ்கார் தான்.

தங்கள் பெயர் அச்சில் வருவதுதான் அதியுச்ச இன்பம் என்றால், அவ்வாறே ஆகக் கடவது.

பதிப்பாளர்களின் பிரச்சனை

என்ன? அவர்களுக்கு அங்கீகாரம், தன்னகங்காரமும் எந்த விதமான பொருட்டும் அல்ல. அவர்களின் நோக்கம் இலக்கிய சேவை கூட இல்லை.

அவர்களின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பது தான்.

இல்லை, இலக்கியம் வளர்ப்பது தான் என்றால், லாப நட்டக் கணக்குப் பார்க்கக் கூடாது. இலக்கிய சேவை என்று கோயில் கணக்கில் எழுதி விட்டு, அடுத்த புத்தகத்திற்கான வேலைகளில் இறங்க வேண்டியது தான்.

தொடர்ச்சியாக பணத்தை இழக்கும் தொழிலை நீங்கள் தொடர்ச்சியாக நடத்த வருமான வரித் திணைக்களம் கூட அனுமதிப்பதில்லை. தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தை ஏன் நடத்துகிறாய் என்று கேள்வி கேட்கும்.

என்னைப் பொறுத்தவரை, பதிப்பகங்கள் பஞ்சப் பாட்டு பாடுவதற்கான காரணம், உரிமத் தொகை கொடுக்கக் கூடாது என்ற ஒரே நோக்கம் என்று தான் சொல்வேன். கருப்புப் பிரதிகள் நீலகண்டனும், உயிர்மை மனுஷ்யபுத்திரனும் தங்கள் கடன்கள் பற்றிப் புலம்பியதை இரண்டு தடவைகள் பேஸ்புக்கில் வாசித்திருக்கிறேன். உடனே என் மனதில் தோன்றியது, இந்தப் புலம்பலின் பின்னணியும் நோக்கமும் வேறாகத் தான் இருக்க வேண்டும் என்பது. புத்தக விழாவில் சேரும் பணத்திற்குப் பங்கு கேட்க கடன்காரர்களும், உரிமத்தொகை கேட்கும் எழுத்தாளர்களும் அள்ளுப்படக் கூடும் என்ற பயமாகத் தான் இருக்க வேண்டும்.

தமிழர்களோடும் தமிழ் வியாபாரிகளோடும் தொடர்பு கொண்டிருந்தவன், அல்லல்பட்டவன் என்ற முறையில் நான் சொல்லக் கூடியது, பெட்டிக்கடைத் தமிழர்கள் நேர்மையான வியாபாரங்களுக்கும், வர்த்தகத் தொடர்புகளுக்கும் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் உரியவர்கள் அல்ல. சட்டபூர்வமாகவும், நேர்மையாகவும் கொடுக்கல் வாங்கல் செய்யும் தமிழர்களை நான் கண்டதில்லை. எந்த வற்புறுத்தல், துரத்தலும் இல்லாமல் தரவேண்டிய தொகையைக் கேளாமல் கூப்பிட்டுத் தரும் பழக்கத்தையோ, குறைந்த பட்சம் தன்னால் தர முடியாது என்று வெளிப்படையாகச் சொல்லவோ, சொன்ன தவணைக்கு தர முடியாது போனால் மன்னிப்புக் கோரி பிறகு தருவதாக உறுதியளிக்கவுமான பண்புகளையோ நான் கண்டதில்லை. நிச்சயமாகப் பணம் கொடுக்க மாட்டோம் என்ற நோக்கத்துடனேயே பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதையும், தரம் பற்றிய எந்த விளக்கமும் கவலையும் இல்லாமல், முடிந்த வரைக்கும் குறைந்தளவு விலையில் பெற்றுக் கொள்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருப்பதும், அதற்கும் கடன் சொல்வதும், பணம் தரும் நேரத்தில் கூட சில ரூபாய்களைக் கழித்துக் கொள்வதில் படும் அற்ப திருப்தியும் நான் கண்டு பட்டுத் தெளிந்தவை.

**என்னைப் பொறுத்தவரை, பதிப்பகங்கள் பஞ்சப் பாட்டு பாடுவதற்கான காரணம், உரிமத் தொகை கொடுக்கக் கூடாது என்ற ஒரே நோக்கம் என்று தான் சொல்வேன். கருப்புப் பிரதிகள் நீலகண்டனும், உயிர்மை மனுஷ்யபுத்திரனும் தங்கள் கடன்கள் பற்றிப் புலம்பியதை இரண்டு தடவைகள் பேஸ்புக்கில் வாசித்திருக்கிறேன். உடனே என் மனதில் தோன்றியது, இந்தப் புலம்பலின் பின்னணியும் நோக்கமும் வேறாகத் தான் இருக்க வேண்டும் என்பது. புத்தக விழாவில் சேரும் பணத்திற்குப் பங்கு கேட்க கடன்காரர்களும், உரிமத்தொகை கேட்கும் எழுத்தாளர்களும் அள்ளுப்படக் கூடும் என்ற பயமாகத் தான் இருக்க வேண்டும்.**

உலகத்திலேயே மோசமான திருட்டு என்பது இன்னொருவரின் உழைப்பைத் திருடுவது என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. அதைக் கனகச்சிதமாகச் செய்வதில் தமிழர்கள் வல்லவர்கள். இதைத் தமிழ்க் கடைகளில் வேலை செய்த எவரும் இங்கே சொல்லுவார்கள். அதைப் போல, செய்த வேலைக்கான பணத்தைத் தராமல் எந்த வெட்கமும் இல்லாமல் இழுத்தடித்து அலைக்கழிப்பார்கள். தொடர்ந்தும் வேலை செய்விக்கும் எண்ணம் இருந்தால், முழுமையாகத் தர மாட்டார்கள். முழுமையாகத் தந்து விட்டால், பட்ட துன்பத்தால் தங்களுடனான முழுமையான தொடர்புகளைத் துண்டித்து விடுவீர்கள் என்ற எண்ணம். தர வேண்டிய மீதியை வைத்துக் கொண்டு இன்னும் வேலை செய்விக்க வேண்டும் என்ற எண்ணம். இதனால் தான் இவர்கள் எல்லாரும் பெட்டிக்கடைக்கார மனநிலையோடு இருக்கிறார்கள்.

ஒரு நேர்மையுள்ள மனிதனால் இவர்களோடு பணத் தொடர்புகளை வைத்துக் கொள்ள முடியாது. பணத்தை வைத்துக் கொண்டே, எனது சேவைக்கான பணத்தைத் தராமல் இழுத்தடித்துக் கொண்டு, விருதுவிழாக்களுக்கு ஆயிரக்கணக்கில் செலுத்தி முழு மேசையை வாங்கி வெட்கமில்லாமல் கோட், சூட் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தவர்களை நான் நேரில் கண்டிருக்கிறேன். அலைய வேண்டி வந்ததால் மனம் நொந்து சபித்திருக்கிறேன்.

தொட்டுணரக் கூடிய பொருட்கள், பயன்படுகின்ற சேவைகளுக்கே இவ்வாறு செய்கிறவர்கள், சும்மா கிடக்கிற இடத்தில் வருகிற விளம்பரம் தானே என்று அதற்குப் பணம் தராமல் அலைய வைப்பார்கள். இதனால் தான், அதிகளவு விளம்பரங்களை வைத்துக் கொண்டு லாபம் பெறுவது போல பீலா விடுகிறவர்கள் சொல்லும் கதைகளை நம்புவதில்லை. அதிக விளம்பரங்கள் பத்திரிகையில் வருவதாகக் காட்டினால் தான் மற்றவர்கள் விளம்பரம் தருவார்கள் என்பதற்காக, பணம் கிடைக்காத விளம்பரங்களால் இடத்தை நிரப்புவதுண்டு. இதெல்லாம் என் சொந்த அனுபவங்கள்.

இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தமிழர்கள் என்று வரும்போது அங்கே நம்பிக்கை, நாணயம், நேர்மை என்பதெல்லாம் நகைக்கடைக்காரன் விளம்பரம் மாதிரி. சொல்வது பொய் என்று அவனுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். நேர்மையானவன் அதை விளம்பரத்திலோ, வாயாலோ சொல்லத் தேவையில்லை. அவனது நடவடிக்கைகளே அதற்குச் சாட்சி பகரும்.

இதே பிரச்சனை புத்தக விற்பனையிலும் தான் நடக்கும். விற்பனைக்குக் கொடுத்த புத்தகங்களை விற்றாலும் புத்தகக் கடைக்காரார்கள் ஒழுங்காகப் பணம் கொடுப்பதில்லை. இந்தப் புத்தகங்களும் ஏதோ சுடச் சுட விற்பனையாகின்றவையும் அல்ல. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் நகர்கிறவை.

இவர்களிடம் இருந்து பதிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும் பணம் பெறுவது ஒன்றும் சாதாரண வேலை இல்லை தான்.

அச்சக நிறுவனத்தினர் அடுத்த தொல்லை. சொன்ன நேரத் திற்கோ, எதிர் பார்த்த வடிவத்திலோ, உறுதியளித்த விதத்திலோ சேவைகளை வழங்குவதில்லை. நான் எப்போதுமே என்னைத் தேடி வந்த வாடிக்கையாளன் என்னிடம் திரும்ப வரவேண்டும், வேறு ஆட்களைக் கூட்டி வர வேண்டும் என்று தலைகீழாக நிற்பேன். எதிர்பார்த்ததையும், நான் உறுதியளித்ததையும் விட அதிகமான சேவை வழங்க வேண்டும் என்பதற்காக எத்தனையோ விடயங்களை மேலதிக செலவுகள் இல்லாமல் செய்து கொடுத்திருக்கிறேன். செய்து முடித்த வேலையை தேடிக் கொண்டு போய் கொடுத்து வருவேன். ஆனால், என்னுடைய வேலைக்காக மன நிறைவோடு சம்மதித்த பணத்தைத் தந்தவர்கள் மிக அபூர்வம். ஏற்கனவே என் செலவுகளை விட மேலதிகமான ஒரு சிறு லாபத்தைத் தவிர அதிகமாகவும் கேட்டிருக்க மாட்டேன். அதைக்கூட கல்லில் நார் உரிக்க வேண்டியிருந்தது.

இதை விட, எனக்கு லாபம் வந்து விடக் கூடாது என்று என்னைக் கடந்து போய், வேறு ஒருவரிடம் போய், அருகில் இருந்த நான் செய்கிற வேலையைச் செய்வித்த முன்னாள் நண்பர்கள் இருக்கிறார்கள்.

இப்படிக்கொத்த நேர்மையாளர்களான வடிவமைப்பாளர்கள், அச்சகங்கள், விற்பனையாளர்களைக் கடந்து தான் புத்தக விற்பனைப் பணம் கைக்கு வந்து சேர வேண்டும் என்பது என்னவோ உண்மை தான். ஆனால், இவர்கள் தனியே ஒரு புத்தகத்தை அச்சடித்து முதுகில் சுமந்து விற்பவர்கள் இல்லை. பல்வேறு புத்தகங்களை அச்சடிக்கிறார்கள். மொழிபெயர்த்தல், பிரசுரித்தல் உட்பட்ட பல்வேறு செயற்பாடுகளுக்கான மானியங்களை ஏதோ வழிகளில் பெற்றுக் கொண்டு தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு எப்போதும் கையில் காசுப்புழக்கம் இருக்கும்.

அதில் இவர்கள் எழுத்தாளர்களுக்கான உரிமத் தொகையாக எவ்வளவு கொடுக்கிறார்கள்? பிரபல எழுத்தாளர்களுக்கு வேறு வழியில்லாமல் கொடுக்க வேண்டி இருக்கிறது. காரணம், அவர்களால் காசு பார்க்கிறார்கள். தொடர்ந்தும் காசு பார்க்க வேண்டும். சிறிய எழுத்தாளர்களுக்கு தங்கள் இரக்கத்தில், பாவ புண்ணியத்திற்கு அஞ்சி எப்போதாவது கொடுக்கிறார்கள். எப்போதாவது ஒரு தடவை அபூர்வமாகக் கிடைக்கும் உரிமப் பணத்தில் பிரபஞ்சன் தன் நண்பர்களுக்குச் செலவிடுவது பற்றி யாரோ எழுதியிருந்தார்கள். எனவே, உரிமம் வழங்குவது என்பது விதி விலக்காகத் தான் தமிழ்ப் பதிப்புலகில் இருக்கிறது. ஓரிரு பதிப்பகங்கள் அவ்வாறு செய்வதாகக் கூறினார்கள். தங்களுக்கு உரிமம் கிடைப்பதைக் கூட, பேஸ்புக்கில் பெருமையாகப் போட வேண்டிய நிலை இருக்கிறது.

பிரபல எழுத்தாளர் ஒருவர் இந்தத் தொல்லையால் தானே பதிப்பகம் தொடங்கியதாக அறிந்தேன். முன்பு அவருடைய மனைவியின் தலையீட்டால் தான் அவருக்கும் உரிமங்கள் கொடுக்கப் பட்டதாக கூறியிருந்தார்கள்.

அவ்வாறாக, போய் நாக்கைப் பிடுங்கிக் கொள்வதற்கு நாலு வார்த்தை கேட்டு வரும் பொறுப்பு வாய்ந்த துணைவியர்களும் இந்த எழுத்தாளர்களுக்கு வரமாய் அமைந்ததாகவும் தெரியவில்லை.

**இவர்கள் தனியே ஒரு புத்தகத்தை அச்சடித்து முதுகில் சுமந்து விற்பவர்கள் இல்லை. பல்வேறு புத்தகங்களை அச்சடிக்கிறார்கள். மொழிபெயர்த்தல், பிரசுரித்தல் உட்பட்ட பல்வேறு செயற்பாடு களுக்கான மானியங்களை ஏதோ வழிகளில் பெற்றுக் கொண்டு தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு எப்போதும் கையில் காசுப்புழக்கம் இருக்கும். அதில் இவர்கள் எழுத்தாளர்களுக்கான உரிமத் தொகையாக எவ்வளவு கொடுக்கிறார்கள்?**

**பிரபல எழுத்தாளர்களுக்கு வேறு வழியில்லாமல் கொடுக்க வேண்டி இருக்கிறது. காரணம், அவர்களால் காசு பார்க்கிறார்கள். தொடர்ந்தும் காசு பார்க்க வேண்டும். சிறிய எழுத்தாளர்களுக்கு தங்கள் இரக்கத்தில், பாவ புண்ணியத்திற்கு அஞ்சி எப்போதாவது கொடுக்கிறார்கள். எப்போதாவது ஒரு தடவை அபூர்வமாகக் கிடைக்கும் உரிமப்பணத்தில் பிரபஞ்சன் தன் நண்பர்களுக்குச் செலவிடுவது பற்றி யாரோ எழுதியிருந்தார்கள். எனவே, உரிமம் வழங்குவது என்பது விதிவிலக்காகத் தான் தமிழ்ப் பதிப்புலகில் இருக்கிறது.**

பதிப்புலகத்தை விட, வணிக வார இதழ்கள் குறைந்த பட்ச நேர்மையைக் கடைப்பிடிப்பதாகத் தான் என்னுடைய புரிதல். ஒருவார வெளியீடு என்பதால் சன்மானம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதாகவும் இருக்கக் கூடும்.

எழுத்து என்பது பார்ப்பதற்கு எந்த உடல் உழைப்பும் தேவைப்படாத, முதலீடுகள் அவசியமில்லாத செயற்பாடு மாதிரித் தான் தோன்றும். அதற்கான உழைப்பு என்பது வெறும் சொற்களைக் கடந்தது. அதற்கான நேரம், முன்தயாரிப்புக்கான நேரம், திறமை, அதனால் இழக்கும் குடும்ப நேரம் என்று எத்தனையோ இழப்புகளையும் உழைப்புகளையும் கொண்டது. அதற்கான பெறுமதி வெறும் அலகுகளிலேயோ, ரூபாய்களிலோ அளவிடப் பட முடியாதவை.

ஆனால், அந்த உழைப்புக்கு ஒரு பெறுமதி உண்டு. அந்த உழைப்பை விற்று பண வடிவமாக்கக் கூடிய திறன் பதிப்பாளருக்கு உண்டு. அதைச் செய்கிறார்கள். தனியே அந்த எழுத்துக்களை மட்டும் அன்றி, அதைச் சார்ந்த வழிகளாலும் அவர்கள் பெரும் பணம் சம்பாதிக்க முடிகிறது.

அரசாங்கம் புத்தகத் திருவிழாவிற்கு வழங்கும் பணமும், புத்தகத் திருவிழா கொட்டகை விற்பனையிலான பணமும் அந்த சார்ந்த வழிகளுக்குள் அடக்கம்.

பணம் பார்க்கிறார்கள். அந்தப் பணத்தைப் பங்கு போட மற்றவர்கள் வராதபடிக்கு வழிகளையும் அடைத்துக் கொள்கிறார்கள்.

இது எப்படி முடிகிறது? அமைப்பாகத் திரண்டிருக்கிறார்கள். அதனால் தான் முடிகிறது.

புத்தகத் திருவிழாவில் கிடைக்கிற இந்தப் பணம் எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்குமானது என்றால், அவர்களுக்கான அடிப்படை வசதிகளைக் கூட ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை கூட இல்லாமல் அதைக் கையாட முடிகிறது.

தங்கள் ஆட்களுக்கே நாலைந்து கொட்டகைகளை வெவ்வேறு பதிவுகள் மூலமாக பெற்றுக் கொண்டு, கிடைக்க வேண்டிய பதிப்பாளர்களைத் தவிர்த்து விடுகிறார்கள். குறைந்த பட்சம் மழை நேரத்தில் புத்தகங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளைத் தவிர்க்கக் கூடிய வழிகளைக் கூட அவர்கள் சிந்திப்பதில்லை. பிரசுரித்தலுக்கே சம்பந்தம் இல்லாத நிறுவனங்களுக்கு கொட்டகை வழங்குகிறார்கள். இதில் கொட்டகை வழங்குவதில் அரசியல் தலையீடுகளும் அரசியல்வாதிகளின் kickback எதிர்பார்ப்புகளும் இருக்கும் என்றே நான் நம்புகிறேன். பெரும் பணம் புரளும் இடத்தில் கல்லாவுக்குள் கை வைக்க நினைக்காத தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இருக்க முடியாது.

இத்தனையும் தாங்களும் பதிப்பக நிறுவனத்தினராக இருக்கும் இந்த அமைப்பின் அங்கத்துவர்களால் தான் நடந்தேறுகின்றது என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

புத்தக விற்பனையைத் திருவிழாவாக நடத்துவதன் நோக்கமே அதற்கான பாரிய exposure ஒன்றைக் கொடுப்பதற்காகத் தான். விற்பனையை அதிகரிப்பதற்கான வசதிகளைக் கொடுத்து, அதற்குரிய ஆர்வலர் கூட்டத்தைத் திரட்டக் கூடிய சகல உபாயங்களையும் வகுத்து அவர்களை புத்தகங்களை வாங்கச் செய்வதை விட வேறு என்ன நோக்கம் அங்கே இருக்க முடியும்? அந்த நோக்கத்தை இந்தத் திருவிழா நிறைவேற்றுகிறதா? புத்தகத் திருவிழாவுக்கு வருகிற கூட்டம் கோயில் திருவிழாவில் தங்கள் பாலியல் வக்கிரங்களை நிறைவேற்ற அலையும் பாலியல் வரட்சிக் கூட்டம் போன்றது அல்ல. வாசிப்பு ஆர்வலர்கள் தான் வருகிறார்கள். அவர்களை வரவேற்று அவர்களுக்கான ஒரு சுற்றாடலை ஏற்படுத்தி, அவர்களை முடிந்தளவு பணத்தைச் செலவிட வைக்க வேண்டும்.

அதற்கு, அவர்கள் களைப்பாறவும், இளைப் பாறவுமான இடங்கள், சுத்தமான கழிவறைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், புத்தகங்களைச் சுமந்து கொண்டு அலைவதற்கு வசதியான விளம்பரப் பைகள், நியாய விலை உணவு வசதிகள் என்று ஒவ்வொரு விடயமும் கருத்துக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய சந்தை அது. இவ்வாறான விவசாயிகள் சந்தை, சேதன உணவுற்பத்திச் சந்தை என்பவற்றில் நான் விற்பனையாளனாக இருந்திருக்கிறேன். அதைச் செய்கின்ற தன்னார்வலர்கள் அந்த விற்பனையாளர்களின் வெற்றியைத் தான் தங்கள் வெற்றியாகக் கருதுகிறார்கள். தங்கள் முயற்சியை லாபம் ஈட்டும் முயற்சியாகக் கருதுவதில்லை.

தங்களுடைய இரக்கத்தில் இந்தப் பதிப்பாளர்களை தங்கியிருக்கச் செய்து, அவர்களின்

**தங்களுடைய இரக்கத்தில் இந்தப் பதிப்பாளர்களை தங்கியிருக்கச் செய்து, அவர்களின் வெற்றிக்கான வழிகளை உருவாக்காமல், இதனால் கிடைக்கக் கூடிய மற்றப் பணத்தைக் கபளீகரம் பண்ணுவதைத் தவிர வேறெந்த நோக்கமும் இவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எங்களுடைய கொட்டகைக் கட்டணம் வந்தால் போதும், விற்பதும் விற்காததும் உங்கள் பிரச்சனை என்பது சம்பந்தமில்லாத வியாபாரிகளுக்குச் சரியாக இருக்கலாம், பதிப்பாளர் சங்கத்திற்கு இருக்க முடியாது.**

**இடம் வழங்காமல் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும், அங்கத்தவர்களாகச் சேரும் முயற்சிகளுக்கு இடப்படும் முட்டுக்கட்டைகள் குறித்தும் பதிப்பாளர்கள் போட்டிருந்த பதிவுகளை வாசிக்க நேர்ந்தது.**

வெற்றிக்கான வழிகளை உருவாக்காமல், இதனால் கிடைக்கக் கூடிய மற்றப் பணத்தைக் கபளீகரம் பண்ணுவதைத் தவிர வேறெந்த நோக்கமும் இவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எங்களுடைய கொட்டகைக் கட்டணம் வந்தால் போதும், விற்பதும் விற்காததும் உங்கள் பிரச்சனை என்பது சம்பந்தமில்லாத வியாபாரிகளுக்குச் சரியாக இருக்கலாம், பதிப்பாளர் சங்கத்திற்கு இருக்க முடியாது.

இடம் வழங்காமல் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும், அங்கத்தவர்களாகச் சேரும் முயற்சிகளுக்கு இடப்படும் முட்டுக்கட்டைகள் குறித்தும் பதிப்பாளர்கள் போட்டிருந்த பதிவுகளை வாசிக்க நேர்ந்தது.

பதிப்பாளர்களுக்கான சங்கம் என்றால், குறித்த சில அடிப்படை நிபந்தனைகளுடன், சந்தாப் பணம் செலுத்திச் சேர விரும்பும் அனைவருக்கும் சமமான வாக்குரிமை அளித்துச் சேர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உண்டு. அது எல்லா பதிப்பாளர்களுக்கும் பயன் அளிக்கும் என்பதற்காகத் தான் அரசு பணத்தை ஒதுக்குகிறது.

இது ஒரு மாபியாக் கூட்ட மனநிலையில் இருப்பதால், அதனால் கிடைக்கும் பாரிய லாபத்தை தாங்கள் மட்டும் பங்குபோட நினைப்பதால், அந்த லாபம் புத்தக விற்பனையை விட அதிகமாக இருப்பதால் தான் இவர்கள் மற்ற எவரையும் உள்ளே அனுமதிக்க மறுக்கிறார்கள். தங்களுக்கு கொட்டகை மறுக்கப்பட்டதை பிரபல பதிப்பாளர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். கொட்டகையை மறுப்பவர்கள், நிர்வாகத்திற்குள் அனுமதிக்கவே போவதில்லை.

ஆக மொத்தத்தில், மாபியா அயோக்கியர்கள் தங்களுக்குள் சங்கம் அமைத்து திருட்டை சட்டரீதியானதாக்குகிறார்கள். இதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி போராடி முடிவு காண வேண்டியவர்கள் பதிப்பாளர்கள்.

பல ஆயிரக்கணக்கில் கொட்டகைக்கு பணம் வாங்குகிறவர்கள் மழையினால் சேதம் என்றால், அதற்கு நட்ட ஈடு வழங்கக் கூடிய பொறிமுறைகளைச் செய்திருக்க வேண்டும். எதிர்பார்த்த அளவு மக்கள் தொகையைத் திரட்ட முடியாதிருந்தால், அறவிட்ட பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும். நடிகர்கள் கூட நட்டமடைந்த வினியோகத்தர்களுக்குப் பணத்தை திருப்பிக் கொடுக்கிற கதைகள் உண்டே!?

இல்லையென்றால், ஒவ்வொரு பதிப்பாளரும் தன்னுடைய விற்பனையின் ஒரு குறிப்பிட்ட வீதத்தைச் செலுத்துவதற்கு வழி சமைக்க வேண்டும். இதனால் சிறு பதிப்பாளர்களும் கலந்து கொள்ள முடியும். பெரும் பணம் பார்க்கும் பதிப்பாளர்கள் செலவை ஆபத்து (risk) இல்லாத முதலீடாகத் தான் பார்ப்பார்கள்.

அதை ஒட்டுமொத்தமாகத் திரண்டு செயற்படுவதன் மூலமும், அடுத்தடுத்த முறைகளில் முற்றாகப் பகிஷ்கரிப்பதன் மூலம் தான் நடைமுறைக்குக் கொண்டு வர முடியும். ஒவ்வொரு முறையும் விழா முடிந்ததும் புலம்பிக் கொண்டு அடுத்த முறைக்கு இடம் பிடிக்க அள்ளுப்பட்டு முண்டியடித்தால், அமைப்பின் கருணையிலும் இரக்கத்திலும் என்றைக்கும் தங்கியிருக்க வேண்டித் தான் ஏற்படும்.

**ஆக மொத்தத்தில், மாபியா அயோக்கியர்கள் தங்களுக்குள் சங்கம் அமைத்து திருட்டை சட்டரீதியானதாக்குகிறார்கள். இதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி போராடி முடிவு காண வேண்டியவர்கள் பதிப்பாளர்கள்.**

**பல ஆயிரக்கணக்கில் கொட்டகைக்கு பணம் வாங்குகிறவர்கள் மழையினால் சேதம் என்றால், அதற்கு நட்ட ஈடு வழங்கக் கூடிய பொறிமுறைகளைச் செய்திருக்க வேண்டும். எதிர்பார்த்த அளவு மக்கள் தொகையைத் திரட்ட முடியாதிருந்தால், அறவிட்ட பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும். நடிகர்கள் கூட நட்டமடைந்த வினியோகத்தர்களுக்குப் பணத்தை திருப்பிக் கொடுக்கிற கதைகள் உண்டே!?**

என்னிடம் கேட்டால், நான் இப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறேன் என்று புலம்பிக் கொண்டோ, முணுமுணுத்துக் கொண்டே இருப்பதில்லை. சாதாரண வாழ்க்கையில் கூட, நண்பர்கள் தங்கள் குடும்பப் பிரச்சனைகளைப் பற்றி சதா புலம்பிக் கொண்டிருந்தால் நான் சொல்வது இது தான்...

ஒன்றில் இப்படி என்னால் வாழ முடியாது, நிம்மதியாக வீட்டுக்குப் போக முடியாது, நித்திரை கொள்ள முடியாது உள்ளது என்று நினைத்தால், ஒரேயடியாக வெளியேறுவது உனக்கும் நல்லது, பிள்ளைகளுக்கும் நல்லது. நீங்கள் சண்டையிட்டுக் கொள்வது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் அவர்களின் உளநிலைக்கும் நல்லதில்லை. இல்லை, பிள்ளைகளுக்காக நான் இருக்கத் தான் வேண்டும் என்றால், வாயைப் பொத்திக் கொண்டு மானரோஷம் இல்லாமல் அங்கேயே இரு. என்னிடம் வந்து இப்படிப் புலம்பிக் கொண்டிருக்காதே.

இப்படித் தான் நான் சொல்வேன். எங்களைச் சூழ்ந்திருக்கும் எந்தத் துன்பம் என்றாலும், அது வியாபாரத்தில் ஏற்படும் நட்டமாக இருந்தாலும், ஒரு கட்டத்தில் நாங்கள் முடிவு செய்ய வேண்டும்.

அதைத் தொடர்ந்து செய்வதா? அல்லது கடையை மூடி விட்டு வேறு வேலை பார்ப்பதா?

அதை விடுத்து புலம்பிக் கொண்டே, குற்றம் கூறிக் கொண்டே திரிவது எந்தத் தீர்வையும் தரப் போவதில்லை.

இதே பிரச்சனை நான் முன்பு வேலை செய்த இடத்திலும் இருந்தது. எனக்கு அந்த வேலை என்பது வாழ்வாதாரத்திற்காக என் உடல் அங்கே இருந்தேயாக வேண்டிய

நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டதொன்று. உடல் அங்கேயிருந்தாலும், என் மனம் வேறு எங்கோதான் இருந்தது. நான் அப்போது தாயகம் வார இதழாக நடத்திக் கொண்டு இருந்தேன். நான் எழுதிய ஏடு இட்டோர் இயல்கள், சிறுகதைகள் எல்லாம் அங்கே இயங்கிக் கொண்டிருந்த இயந்திரங்களை கவனித்துக் கொண்டே, மனதில் தோன்றுகின்றவற்றை சிறுதுண்டுகளில் குறிப்பாக எழுதிக் கொண்டு வீடு வந்து எழுதி முடித்தவை தான். எனவே அங்கிருந்த வேலை நிலைமை எனக்குப் பெரிதான பாதிப் பை ஏற்படுத்தவில்லை.

ஆனால், அங்கு தாங்கள் நடத்தப்படும் முறை பற்றி பலரும் தங் களுக்குள் முறைப் பட்டுக் கொண்டு இருந்தார்களே அன்றி, அது குறித்து எதையும் செய்வதில் அக்கறை காட்டவில்லை. ஒரு கட்டத்தில் நான் சொன்னேன்... நல்லது. சும்மா நான் புலம்பப் போவதில்லை. தொழிற் சங்கத்தை இங்கே கொண்டு வருவதற்கான எல்லா வேலைகளையும், அதற்கான ஆபத்துக்களையும் எதிர்கொண்டு, நான் செய்யத் தயார். நீங்கள் எனக்கு எதுவும் செய்யத் தேவையில்லை. என்னுடைய நேர்மையில் நம்பிக்கை இருந்தால் தொழிற்சங்க அங்கத்துவ அட்டையில் கையெழுத்து வைத்து தந்தால் போதும். மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்.

உண்மையாகப் பிரச்சனை தீர வேண்டும் என்று விரும்பியவர்கள் என் பின்னால் அணி திரண்டார்கள். சும்மா புலம்பியவர்கள் நழுவிக் கொண்டார்கள். என்னுடைய வேலை போகக் கூடிய ஆபத்து இருந்தபோதிலும், ஒவ்வொரு முறையும் சிறிய வித்தியாசத்தில் நாங்கள் தோற்றுப் போனாலும், மூன்று முறைகள் தொழிற்சங்கப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியிருந்தேன். நிர்வாகமும் என்னுடைய துணிச்சலையும் நேர்மையையும் கண்டு என்னை வேலை நீக்கம் செய்ய முயன்றதில்லை. ஆனால், ஒவ்வொரு முறையும் எங்களுக்குக் கிடைத்த நலன்கள் என்னோடு இருந்தவர்கள் மட்டுமன்றி, எங்களுக்கு மேலாளர்களாக இருந்தவர்களுக்கும் பயன் உள்ளதாக இருந்தது. எங்களில் பலர் கனடிய மேல்மத்திய தர வர்க்கத்தினரின் வருமான எல்லைக்குள் இருந்தோம். எங்கள் மேலாளர்கள் அதை விட அதிகளவு சம்பளம் பெற்றார்கள். இதற்கெல்லாம் காரணம், நான் என் துணிச்சலையும் நேர்மையையும், எனக்கு விசுவாசமான சில நண்பர்களையும் நம்பி அன்றைக்குத் துணிச்சலாகக் கிளம்பியது தான்.

நான் இதையெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், வெறுமனே புலம்பிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. பேஸ்புக் பரபரப்பு மாதிரி ஒரு வாரத்தில் மறந்து போக, எல்லாருக்குமே business as usual ஆக, நிலைமை வழமைக்குத் திரும்பி விடும். அதே பிரச்சனைகள் அப்படியே இருக்கும்.

இந்தப் பதிப்பாளர்கள் எல்லாம் இன்றைக்கு இத்தனை லாபம் பார்ப்பது எதனால்?

எழுத்தாளர்களின் எழுத்தினால் மட்டும் தான். தங்களுடைய உழைப்புக்குரிய ஊதியம் கிடைக்காமல், வெறும் அங்கீகாரம் மட்டும் தான் நோக்கம் என்றால், அது சமூக சேவை. அந்தச் சமூக சேவையில் எதற்காக இன்னொரு கும்பல் லாபம் பார்க்க வேண்டும்?

என்னுடைய முப்பதுக்கு மேற்பட்ட வருடங்களிலான என் எழுத்துக்களை எத்தனையோ புத்தகங்கள் போடலாம். நான் எழுதிய அரசியல் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், விஞ்ஞானத் தொழில்நுட்பக் கட்டுரைகள், சினிமா விமர்சனங்கள் என எத்தனையோ வகைகளில் என்னால் எழுதப்பட்டவற்றைத் தொகுத்து வெளியிடலாம். மூன்று புத்தகங்களை அமசோனில் வெளியிட்டதைத் தவிர நான் வேறு எதையும் வெளியிடுவதில் ஆர்வம் காட்டவில்லை. என்னால் இன்று வரைக்கும் ஒரு நேர்மையான பதிப்பாளரையோ, அச்சிடக்

**இந்தப் பதிப்பாளர்கள் எல்லாம் இன்றைக்கு இத்தனை லாபம் பார்ப்பது எதனால்?**

**எழுத்தாளர்களின் எழுத்தினால் மட்டும் தான். தங்களுடைய உழைப்புக்குரிய ஊதியம் கிடைக்காமல், வெறும் அங்கீகாரம் மட்டும் தான் நோக்கம் என்றால், அது சமூக சேவை. அந்தச் சமூக சேவையில் எதற்காக இன்னொரு கும்பல் லாபம் பார்க்க வேண்டும்?**

**என்னுடைய முப்பதுக்கு மேற்பட்ட வருடங்களிலான என் எழுத்துக்களை எத்தனையோ புத்தகங்கள் போடலாம். நான் எழுதிய அரசியல் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், விஞ்ஞானத் தொழில்நுட்பக் கட்டுரைகள், சினிமா விமர்சனங்கள் என எத்தனையோ வகைகளில் என்னால் எழுதப்பட்டவற்றைத் தொகுத்து வெளியிடலாம். மூன்று புத்தகங்களை அமசோனில் வெளியிட்டதைத் தவிர நான் வேறு எதையும் வெளியிடுவதில் ஆர்வம் காட்டவில்லை. என்னால் இன்று வரைக்கும் ஒரு நேர்மையான பதிப்பாளரையோ, அச்சிடக் கூடியவரையோ கண்டுபிடிக்க முடியவில்லை. வெறும் புத்தகத்தை வெளியிட்டு, அச்சில் என் பெயரைக் கண்டு புல்லரிப்பதிலோ, அங்கீகாரம், விருதுகளிலோ எனக்கு எந்த ஆர்வமும் அக்கறையும் இல்லை. என்னுடைய உழைப்பை இன்னொரு கூட்டம் சுரண்டி அதில் பிழைப்பு நடத்த நான் அனுமதிக்க விரும்பவில்லை.**

கூடியவரையோ கண்டுபிடிக்க முடியவில்லை. வெறும் புத்தகத்தை வெளியிட்டு, அச்சில் என் பெயரைக் கண்டு புல்லரிப்பதிலோ, அங்கீகாரம், விருதுகளிலோ எனக்கு எந்த ஆர்வமும் அக்கறையும் இல்லை. என்னுடைய உழைப்பை இன்னொரு கூட்டம் சுரண்டி அதில் பிழைப்பு நடத்த நான் அனுமதிக்க விரும்பவில்லை.

ஆனால், அதற்கான தேவை இல்லாதபடிக்கு எனக்கு எப்போதுமே வாழ்வாதாரத்திற்கான வேலை இருந்து கொண்டே இருக்கிறது. அரச உதவிப் பணத்திலும், பெண்டாட்டி உழைப்பிலும் ஓசிச் சோறு சாப்பிட்டு மாக்சிச சிந்தாந்தம் பேசும் எழுத்தாளர்கள் மாதிரி இல்லாமல், இன்றைக்கும் சொந்த உழைப்பில் தான் என் வாழ்க்கை ஓடுகிறது.

ஆனால், பல எழுத்தாளர்களின் நிலை அப்படியல்ல.

தாங்கள் முழுமையாகச் சுரண்டப்படுகிறோம் என்று தெரிந்து கொண்டே, தொடர்ந்தும் அந்தச் சுரண்டலுக்கு இடம் அளித்துக் கொண்டு புலம்பிக் கொண்டிருப்பதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை.

இந்த இலக்கியக் கும்பலுக்குள் நானும் ஒருவனாக இருந்திருந்தால், போர்க்கொடியோடு முன்னால் போகும் முதல் ஆளாக நான் இருந்திருப்பேன். நான் அயோக்கியனாக இல்லாததால் அவர்களும் என்னைச் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை. எவருக்கும் சமரசம் செய்து கொள்ளாத, அற்ப விடயங்களுக்கு என்ன, பெரிய விடயங்களுக்கும் விலை போகாத அளவுக்கு தன்னம்பிக்கையுள்ள எனக்கு, கண் முன்னால் காணும் அநீதிகளைக் கண்டு கடந்து போக முடிவதில்லை.

பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தேடிச் செயற்படுத்த வேண்டும். அல்லது வாயைப் பொத்திக் கொண்டு வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

சும்மா புலம்பிப் புறுபுறுத்துக் கொண்டு இருக்கக் கூடாது.

இங்கே பாடல்களுக்கான வரிகளை எழுதுவோருக்கான Songwriters சங்கம் ஒன்றுண்டு. மிகவும் பலம் வாய்ந்த அமைப்பு. தமிழ்நாட்டைப் போல, இங்கே பாடல்களுக்கான உரிமைகள் தயாரிப்பாளருக்கோ, இசையமைப்பாளருக்கோ, பாடகருக்கோ உரியன இல்லை. சகல உரிமைகளும் பாடலை எழுதியவர்களுக்கு மட்டும் தான். ஒரு பாடல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டாலோ, அந்தப் பாடலை பொதுவெளியில் வேறு ஒரு குழு பாடுவதாக இருந்தாலோ, அது யூடியூப்பில் ஒளிபரப்பப்பட்டாலோ அதற்குரிய உரிமத் தொகை பாடல் ஆசிரியர்களுக்கு மட்டும் தான். இதனால், அவர்களை அமர்த்தும் பெரும் பாடகர்கள் தங்களையும் பாடலாசிரியராகச் சேர்த்துக் கொள்ளும்படி வற்புறுத்துவதுண்டு.

இப்படிப் பாடல் எழுதுவது குறித்த ஒரு பயிற்சிக் கூடத்திற்கு நான் போன கதை ஒன்றுண்டு.

இப்படியான உரிமத் தொகைகளைப் பெற்று இந்த அமைப்புத் தான் பாடலாசிரியர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறது. தங்களுடைய அந்த உரிமைக்கு வேட்டு வைக்க முயன்றபோதெல்லாம் பலம் வாய்ந்த இந்த அமைப்பு சரியான அரசியல்வாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதைத் தடுத்து நிறுத்துகிறது.

ஹொலிவூட் சினிமா, தொலைக்காட்சி எழுத்தாளர்கள் சமீபத்தில் வேலைநிறுத்தம் செய்திருந்தார்கள். புதிதாகத் தோன்றியுள்ள செயற்கை நுண்திறன் தங்களுடைய வாய்ப்புகளுக்கு ஆபத்தாக முடிந்திருப்பதால், அதைத் தடுப்பதற்காக நீண்ட காலம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு சமீபத்தில் தான் அது முடிவுக்கு வந்தது.

இங்கே உள்ள எழுத்தாளர்களுக்கான Writers guild மிகவும் பலம் வாய்ந்த அமைப்பு. எழுத்தாளர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கான உரிமத் தொகைகளை உறுதி செய்வதற்காக செயற்படுகிற அமைப்பு. இங்கே பதிப்பகங்கள் உரிமத் தொகையை வழங்காமல் ஏமாற்ற முடியாது. விற்பனையைக் குறைத்துக் காட்டிச் சுத்த முடியாது. அதற்கான பொறிமுறைகளை இந்த அமைப்பு உறுதி செய்துவைத்திருக்கிறது. அதற்கான சட்ட உறுதிகள் உண்டு.

தமிழ்நாட்டில் சினிமாவில் ஒளியூட்டுவோர்களும், துணை நடிகர்களும் சங்கம் அமைத்து தங்கள் நலன்களை உறுதி செய்யும்போது, எழுத்தாளர்களுக்கு மட்டும் அவர்களின் நலன்களைப் பாதுகாக்க ஒரு சங்கம் கிடையாது.

இந்த அயோக்கியர்களை ஒன்றிணைத்துச் சங்கம் அமைப்பதை விட, பூனைக்கு மணி கட்டுவது சுலபமான வேலை.

எல்லா வேறுபாடுகளையும் மறந்து, நாங்கள் எல்லாரும் எழுத்தாளர்கள், எங்கள் உழைப்புச் சுரண்டப்பட்டு, எங்களுக்கு உரிய பங்கு தரப்படுவதில்லை, அதற்காக ஒன்றிணைந்து போராடுவோம் என்ற உணர்வை வைத்துக் கொண்டு இவர்களை ஒன்றிணைக்க முடியாது. ஏற்கனவே முற்போக்கு, பிற்போக்கு என்று தலைவீக்கம். அதை விட, திராவிடம், இடதுசாரியம், அம்பேத்காரியம், இந்துத்துவம் என்ற தத்துவார்த்த முரண்பாடுகள். போதாக்குறைக்கு சமயம், சாதி என்று எங்கெங்கு தன்னை மேலானவனாகக் காட்ட முடியுமோ அங்கெல்லாம் தமிழன் தன் பிரிவைக் காட்டிக் கொண்டே இருப்பான். தன் பிரிவைச் சேர்ந்தவன் கேடு கெட்ட அயோக்கியனாக இருந்தாலும், அவனுக்குச் சார்பாகத் தான் இருப்பான்.

சரி, தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்கிற கோஷம் போடுகிற இடதுசாரிச் சிந்தனை உள்ளவனுக்காவது அந்த எண்ணம் இருக்கும் என்று பார்த்தால், அரச உதவிப் பணத்திலும் பெண்டாட்டி உழைப்பிலும் வீட்டில் உட்கார்ந்தபடியே உலகெங்கும் உள்ள போராட்டங்களுக்கு எல்லாம் மார்க்ஸிஸ தரக்கட்டுப்பாட்டு முத்திரை குத்தும் பாரிய பணி தன் மேல் சுமத்தப்பட்ட மாதிரி, 24 மணி நேரம் பேஸ்புக் பதிவு போடும் லண்டன் மார்க்ஸீயப் பண்டிதர், ‘அமைப்பு எல்லாம் கட்டமுடியாது’ என்கிறார். இவருடைய புத்தகங்கள் பற்றி சமீபத்தில் உரையாடியபோது, தமிழ்நாட்டுப் பரிச்சயம் உள்ள

ஒருவர் சொன்னார், 'அவருடைய புத்தகங்கள் விற்பதில்லை, பதிப்பாளர்கள் பெரும் நட்டத்திற்கு ஆளாகிறார்கள்' என்று. இத்தனை புத்தகம் போட்டிருக்கிறேன் என்று பெருமை கொள்கிறவருக்கு எத்தனை புத்தகம் விற்றது, எவ்வளவு பணம் உரிமத் தொகையாகச் சம்பாதித்தேன் என்று சொல்ல முடியவில்லை.

எல்லாமே பெயருக்குத் தாண்டா! என்பது தான் நிலைமை என்றால், எப்படி அமைப்புக் கட்ட முடியும்?

எந்த வேறுபாடுகளும் இல்லாத ஒரு எழுத்தாளர்களுக்கான சங்கம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் எத்தனையைச் சாதிக்க முடியும்!?

நாட்டின் சனத்தொகையில் பெரும்பாலானவை கவிஞர்களாக இருப்பதாலேயே அங்கத்துவப்பணமே கோடிக்கணக்கில் வந்து சேரும். அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியம், காப்புறுதி, நோய்க் காப்புறுதி, பதிப்பாளர்களுடன் எழுத்தாளர் நலன்களை உறுதி செய்யும் ஒப்பந்தங்கள், உரிமத் தொகையை உறுதி செய்தல், ஏன் சங்கமே தானே அச்சகத்தையும் பதிப்பகத்தையும் வினியோக நிறுவனத்தையும் உருவாக்கி முழுமையான லாப அமைப்பாகக் கூட இயங்க முடியும். பதிப்பகங்களுடனான ஒப்பந்தத்தில் எழுத்தாளர்களுக்குப் பலம் வாய்ந்த சமநிலை முதல் விற்பனை எண்ணிக்கையின் உண்மைத்தன்மையை கணக்காய்வு செய்வதற்கான வழிமுறைகள், பொறிமுறைகளைக் கூட நிர்ப்பந்திக்க முடியும். ஒரு பெரும் அமைப்பாக எழுத்தாளர்களின் நலன் குறித்து அரசிடம் சட்ட மாற்றங்கள் முதல் நிதியுதவி வரைக்கும் உரிமையோடு கேட்க முடியும். சகல தரப்பினருடனும் பலத்தோடு பேரம் பேசலாம்.

சினிமாக்காரன் கதையைத் திருடினால் கோட்டுக்கு இழுத்து பெரும் நட்டஈடு வாங்க முடியும். நினைத்தவன் எல்லாம் விக்கிபீடியா தொடங்கி, நினைத்த பாட்டுக்கு எழுத்தாளர் விபரக் கோவை வைப்பதற்கு இடம் அளிக்காமல் தாங்களே உத்தியோகபூர்வமான விவரங்களை ஆவணப்படுத்தலாம்.

எழுத்தாளர்களின் பிரசுரமான படைப்புகளைக் கணிப்பில் கொண்டு, பல்வேறு படிகளில் சந்தாக்களையும் வாக்குரிமைகளையும் உருவாக் கலாம். கிடைக்கும் சந்தாப் பணத்திலேயே கிறடிட் யூனியன் மாதிரியாக உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் வசதிகள் செய்யலாம்.

Possibilities are endless.

அதற்கு தங்களைச் சுரண்டுவதை அனுமதிக்கக் கூடாது என்பதில் ஆர்வம் உள்ள உறுப்பினர்கள் வேண்டும். தலைமை தாங்குவதற்குப் பொதுப்பணத்தைச் சுருட்டுகிற சிந்தனை இல்லாத நேர்மையாளர்கள் வேண்டும். சுயநலத்திற்காகப் பின்பக்கமாய் போய் பதிப்பாளர்களுடன் குலவாத எழுத்தாளர்கள் வேண்டும்.

ஆனால், எந்தச் சவாலுக்குமே தயாராக இல்லாமல், சுயநலத்தோடு இருந்த அயோக்கியர்கள் எல்லாம் இவ்வாறான ஒரு அமைப்பு தொடங்கி வெற்றிகரமாக இயங்கினால், அரசியல் தலைமீடுகளின் உதவியுடன் அதை கைவசப்படுத்தி, அங்குள்ள பணத்தைத் திருடுவதற்குத் தயாராக இருப்பார்கள்.

எல்லாருமே அயோக்கியர் களாக இருக்கும்போது, கடவுள் சோதோம் கொமோராவில் நல்லவர்களைத் தேடிய மாதிரித் தான் கடைசியில் முடியும்.

எங்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது, முழுமையாகச் சுரண்டப்படுகிறோம் என்று தெரிந்த பின்னால் ஒரு அப்பாவி மனிதன் மௌனமாக இருப்பதை நான் ஒரு பிரச்சனையாகப் பார்ப்பதில்லை. அவனுடைய இயலாமை அவ்வாறானது. தன்னைத் தியாகம் செய்யப் போய் தன் குடும்பத்தைப் பலி கொடுக்கச் சாதாரண மனிதன் விரும்புவதில்லை. அவனுக்கு தெரிவுகள் இருப்பதில்லை. ஒரு வீட்டில் வேலை செய்ய வந்த சிறுமியைப் போராட்டம் செய்ய யார் தான் வற்புறுத்த முடியும்? அவளின் வாழ்க்கைக்கான தீர்வைக் கொடுக்காமல், வெளியே நின்று உசுப்பேத்துவதில் அந்தப் பெண்ணுக்கு என்ன பயன் கிடைக்கும்? வெளியே நிற்கும் மனிதர்கள் தான் அதற்காகப் போராட வேண்டும். அவளுக்கான தீர்வுக்கான வழிகளைத் தேட வேண்டும்.

ஆனால், கொஞ்சமாவது சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள், தன்னம்பிக்கை கொண்டிருந்தால், நிச்சயமாக தங்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து எதையாவது செய்தே ஆக வேண்டும்.

அல்லது வாயைப் பொத்திக் கொண்டு மௌனமாக தங்கள் மீதான சுரண்டலுக்கு ஒத்தோடிக் கொண்டு இருக்க வேண்டும். அவ்வப்போது பேஸ்புக்கில் புலம்பல் பதிவு போட்டு எதுவும் ஆகப் போவதில்லை. ஒரு வாரச் சுற்றோடு அது அமைச்சருக்கு கொடுத்த விண்ணப்பம் போல, குப்பைக் கூடைக்குள் போய் விடும்.

சுரண்டுகிற அயோக்கியர்கள் சிரித்துக் கொண்டே கடந்து போய் விடுவார்கள். தங்களின் இரக்கத்திலும் கருணையிலும் உயிர் வாழ்கிறவர்கள் தானே என்ற எண்ணத்தோடு!

இதுவரை நான் கண்ட தமிழ் வியாபாரிகள் மாதிரியே, தமிழ் எழுத்தாளர்களுக்கிடையேயும் நான் நேர்மையாளர்களைக் கண்டதில்லை. மற்றவர்கள் மீது பொறாமையும், தான் மட்டும் நலன் பெற வேண்டும் என்ற சுயநலமும், அங்கீகாரம் என்று வெற்றுப் பொருள் மீதான வேட்கையும் கொண்ட அயோக்கியர்களாகத் தான் கிட்டத்தட்ட எல்லோருமே எனக்குத் தெரிகிறார்கள்.

சுயநலம் மிக்க அயோக்கியர்கள், தங்களுடைய உழைப்பைச் சுரண்டுவதற்கு எதிராக குரல் எழுப்புவார்கள், அணி திரள்வார்கள் என்று எல்லாம் எதிர்பார்க்க முடியாது.

தங்கள் மீதான சுரண்டலுக்கே வாய் திறக்காத இவர்கள் சமூக நீதிக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பதைப் போல முட்டாள்தனம் வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

இவர்களுக்குத் தீர்வாகச் சொல்லக் கூடியது,

Get up, Stand up, Stand up for you rights,

Or, Shut up and write! அ

அபத்தம்
மாசி 2024




ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

# வலக் கை கொடுப்பதை இடக் கை அறியாதிருக்கட்டும்



வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாதிருக்கட்டும்.

சிறுவயதில் கற்றுக் கொண்டது. என்றென்றைக்கும் என்னோடு இருப்பது.

கொடுப்பதைப் பற்றி எப்போதாது சொல்ல நேர்ந்தால், அது மற்றவர்களை அவ்வாறு கொடுப்பதற்கு ஊக்குவிப்பதற்காக மட்டும் தான்.

விருதுகள் எனப்படும் கேலிக்கூத்துகள், கோமாளித்தனங்கள் குறித்த எங்கள் கருத்துக்களை அபத்தம் முதலாவது இதழில் இருந்தே அறிந்து வந்திருப்பீர்கள்.

அங்கீகாரத்தை கொடுப்பதற்கு மட்டும் அன்றி, பெறுவதற்காகவும் விருது கொடுக்கும் கேவலம் நீங்களும் காணாததல்ல. தங்களுக்குக் கிடைக்கக் கூடும் என்ற ஒரே காரணம் தவிர்ந்து, வேறெந்த நோக்கமும் இல்லாமல் விருதுப்புரவலர்களைப் புகழ்ந்து பாடும் பிச்சைக்காரப் புலவர்களில் நீங்களும் ஒருவராகவும் இருக்கக் கூடும்.

வெறும் அத்தாட்சிப் பத்திரம் தான் உங்களுக்கு முக்கியமானது ஆயின், தாராளமாக நாங்களும் கள்ளநோட்டு மாதிரி அச்சடித்தே தரலாம்.

செலவுகளை நீங்கள் பொறுத்துக் கொண்டால் போதும். அசல் நோட்டுகளால்!

தமிழில் இலக்கியம் படைத்தல் என்பது வெறும் labour of love என்பது பற்றியும், தமிழ் எழுத்தாளர்களுக்கான சங்கம் ஒன்றை அமைப்பது அவர்களுக்கான ஓய்வூதியம் முதல் நோய்க் காப்புறுதி வரைக்கும் பயன்படக் கூடியது என்பது பற்றியும் இம்முறை ஏடு இட்டோர் இயலில் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே, வெறும் விருதுகளை விட, பொற்கிழிகள் பெரும்பயனுள்ளவை. ஏதோ விதத்தில் படைப்பாளிக்குப் பயன்படக்கூடியவை. ஒரு மொழிக்கும் அது சார்ந்த சமூகத்துக்கும் அடையாளத்தைக் கொடுப்பவையும் பெருமை சேர்ப்பவையும் அவற்றில் படைக்கப்படும் கலை இலக்கியங்கள் தான். ஏதோ வகையில் தன் மொழியைச் செழுமைப்படுத்தி, தன்

சமூகம் சார்ந்து ஒரு நன்னெறியையும் வழிகாட்டலையும், வாழ்க்கை முறையின் வரலாற்றுப் பதிவையும் செய்கின்ற இலக்கியத்தைப் படைக்கின்ற ஒவ்வொரு படைப்பாளிக்கும் ஒரு சமூகம் கடமைப்பட்டிருக்கிறது.

ஆனால், சமூகம் சார்ந்த எந்தச் சிந்தனையும் சமூக நீதி குறித்த எந்த உணர்வும் இல்லாமல், அங்கீகாரம் குறித்த சுயநலனோடு அலைகிற இலக்கியகாரார்கள் நமக்குள் அதிகம். அதைப் பயன்படுத்தி தாங்கள் பெயர் வாங்க முடியும் என்று நினைக்கிற விருதுப்புரவலர்களும் அதிகம்.

நீங்கள் ஏற்கனவே வகைப்படுத்தி வைத்திருக்கும் வகையறைக்கள் எதற்குள்ளும் நாங்கள் அடங்காதவர்கள். அதுவே சில நேரம் உங்களுக்குச் சிக்கலாகவும் இருக்கக் கூடும். எங்களோடு அடையாளப்படுத்தவோ, எங்களைப் பற்றிக் குறிப்பிடவோ!

அதனால் என்ன?

எங்களுக்கு எதிர்பார்ப்பு எதுவும் இல்லை.

அதனால், இழப்பு எதுவும் இல்லை.

ஒரு சமூகத்தின் பிரதிநிதிகளாக இல்லாமல், அதன் அங்கங்களாக நாங்களும், எங்களை இலக்கியவாதிகள் என்று யாரும் சொல்வதில்லை, நாங்களும் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க, ஒரு சமூகம் ஒரு இலக்கியவாதிக்குச் செய்ய வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கு உண்டு என்பதை உணர்கிறோம்.

அதன் அடிப்படையில் அந்த இலக்கியவாதியின் பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டும், அது அவருக்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற நோக்கில், ரமேஷ் பிரேதனுக்கு, அவரது பங்களிப்புக் குறித்ததாகவும், அவரது தற்போதைய நிலையையும் தேவையையும் கருத்தில் கொண்டதாகவும் எம்மால் முடிந்த ஒன்றைச் செய்ய முயன்றிருக்கிறோம்.

இதை விருது என்றோ, பரிசில் என்றோ கொச்சைப்படுத்தவோ, இதை வைத்து எங்களுக்கு ஏதாவது கிடைக்க வேண்டும் என்றோ எந்த நோக்கமும் இல்லாமல், இதைச் செய்திருக்கிறோம்.

ரமேஷ் பிரேதன் பற்றிய பரிச்சயம் கூட எனக்கு நண்பர் கற்சுறா மூலமாகத் தான் கிடைத்தது. அவருடைய நேர்காணல் ஒன்றை அபத்தத்தில் ஆரம்பித்து, அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, பிற்போட்டிருந்தோம். அவருக்கு பிரபஞ்சன் விருது கிடைத்ததற்கான அறிவிப்பும் வந்திருக்கிறது.

அவரது நிலை குறித்து அக்கறை கொண்ட கற்சுறா முன்னரும் இரு தடவைகள் தனிப்பட்ட ரீதியில் உதவி செய்தபோதும், அவை ரமேஷ் பிரேதனுக்குக் கிட்டவில்லை. நந்திகளின் கைவரிசை.

இம்முறை கற்சுறாவின் முழுமுயற்சியாக ஒரு fund-raising dinner ஒன்றை நடத்தி, ஈழப் பேராட்டத்தில் ஆரம்ப காலத்திலிருந்து தங்களை ஈடுபடுத்தி அர்ப்பணித்துக் கொண்டு, தற்போதும் தொடர்ந்தும் சமூகம் பற்றிய கரிசனையோடு செயற்படுகின்ற, எங்கள் நண்பர்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்களில் பெரும்பாலோர் ரமேஷ் பிரேதன் பற்றி அறிந்திராவிடினும், எங்களுடைய அழைப்புக்கு மதிப்பளித்து வழங்கியிருந்த பங்களிப்பை ரமேஷ் பிரேதனுக்கு நேரடியாகவே அனுப்பியிருக்கிறோம். இதில் முன்னெடுப்பும் முழு முயற்சியும் முழுச்செயற்பாடும் கற்சுறாவினுடையது.

இந்திய ரூபாய்களில் 51,900 பெறுதியான இந்த உதவிக்கு மாவலிராஜன், நமு (இவர்கள் இருவரும் பெரும் இடதுசாரியத் தலைவரான வி.பொன்னம்பலம் அவர்களின் புத்திரர்கள்), ஜெயக்குமார் (ராகவனின் சகோதரர்), ஆதவன், மித்திரன், எல்லாளன், நேசன் ஆகிய இன்றைக்கும் சமூகம் சார்ந்த நடவடிக்கைகளில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கும் நண்பர்கள் கலந்து கொண்டு தங்கள் பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். எங்களுக்கும் அது ஒரு அரசியல் குறித்த உரையாடலாகவும் அமைந்தது.

ரமேஷ் பிரேதனும் அதைப் பெற்றுக் கொண்டு, அனைத்து நண்பர்களுக்கும் நேரடியான நன்றிக்குறிப்பையும் தெரிவித்திருக்கிறார். இது தற்போதைக்கு எம்மால் முடிந்தது.

நாங்கள் நீண்ட தொலைவில் இருக்கிறோம். அருகில் இருந்திருந்தால், எங்கள் உதவிகள் இன்னும் வேறுவிதமாக இருந்திருக்கும். அவருடைய தற்போதைய நிலையில் அவருக்கு நிதி சார்ந்து மட்டுமன்றி, உளவியல், உணர்வுரீதியான ஆதரவும் அவசியமானது. தமிழ்நாட்டில் உள்ள இலக்கிய நண்பர்கள் முடிந்தவரைக்கும், அவருடைய தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, அவருக்குச் சிரமம் தராத வகையில், அவருடைய அனுமதியுடனும் விருப்புடனும், அவருக்கான ஆதரவையும் உதவிகளையும் முடிந்த வழிகளிலும் வகைகளிலும் நல்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

வெறும் விருதுகளை விட, அவ்வாறான அக வகையிலான ஆதரவு தான் புத்துயிர்ப்பைத் தருவது. சலிப்பு இல்லாமல் தொடர்ந்தும் இயங்குவதற்கான ஊக்குவிப்பைத் தருவது. ஒரு சமூகத்திற்கான தன்னுடைய அர்ப்பணிப்பை அந்தச் சமூகம் உணர்ந்து கொள்ளவில்லையே என்ற உணர்வு வருவது அந்தச் சமூகத்தின் தோல்வி. அர்ப்பணிப்பாளனின் தோல்வி அல்ல.

இது எங்களுடைய முதல் முயற்சி. கடைசியானது அல்ல.

விருது வழங்கி பிழைப்பு நடத்துவோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதற்கெல்லாம் போட்டிக்கு வர மாட்டோம். மற்றவர்களுடைய பிழைப்பில் மண் போடுவது எங்கள் இயல்பு இல்லை.

'நம்ம வழியே தனிவழி தான்!'.

இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்தும் செய்யவுள்ளோம்.

வெறும் இலக்கியம், கலை சம்பந்தமான துறைகள் மட்டுமன்றி, சமூக அக்கறை பற்றிய நிலைப்பாடுகளும், சமூகநீதி பற்றிய செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு, அதற்காக எதையும் எதிர்பாராது உழைப்பவர்களுக்கான அங்கீகாரத்தையும், தேவையேற் படுகிறவர்களுக்கும் இவ்வாறான விதத்தில் வழங்குவதற்குத் திட்டமிட்டு ள்ளோம். அதற்கான பரிந்துரைகள், விண்ணப்பங்கள் எதையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதற்காக என்றே எங்களைப் புகழ ஆரம்பிக்கவும் தேவையில்லை.

முடிந்தவரைக்கும் வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாதிருக்கும்.

ஆனாலும், அந்த அங்கீகாரம் அறியப்பட வேண்டியது, பெருமைப்பட வேண்டியது என்ற போதெல்லாம் அதையெல்லாம் பகிரங்கமாகச் சொல்லவும் நாங்கள் தயங்கப் போவதில்லை.














எழுத்துக்களுக்கும் அப்பால், பயணங்களிலும் புகைப்படக் கலையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர் நோயல் நடேசன். அவருடைய பயணங்கள் பெரும்பாலும் புராதனப் பெருமை மிக்கதும், கலாசாரப் பாரம்பரியங்கள் நிறைந்ததுமான இடங்கள் நோக்கியவை தான். பணி ஓய்வு பெற்ற பின்னால், துணைவியார் சகிதம், கமெராவும் கையுமாக உலகம் சுற்றும் வாலிபன் அவர். இம்முறை அபத்தம் அட்டைப்படம் அவருடைய கைங்கர்யமே.













# சட்டம் ஒரு இருட்டறை


AI art: PK

நோயல் நடேசன்

கொரானா காலத்தில் புதிய நம்பரிலிருந்து எனது தொலைப்பேசியில் ஒரு அழைப்பு வந்தது. அதில் 'நான் சமந்தா; நினைவிருக்கிறதா?' என்றிருந்தது.

'உன்னை மறக்க முடியுமா?' எனத் தகவல் அனுப்பினேன்.

அப்போது இரவு நேரம் சமைத்துக்கொண்டிருந்த என் மனைவி சியாமளாவிடம் 'சமந்தாவிடமிருந்து தகவல் வந்துள்ளது' என்றேன் .

'யார் அது ?'

'எனது கிளினிக்கில் வேலை செய்தபோது அவள் கர்ப்பிணியாகி பின்னர் நான் நீதிமன்றம் போனேனே;. நினைவிருக்கிறதா?'

' ஓ! அவளா? ஏன் உங்களுக்குத் தகவல் அனுப்புகிறாள்?. பதில் அனுப்பவேண்டாம்!' என்றார்.

'நான் பதில் அனுப்பிவிட்டேன்.'

'உங்களுக்கு வெட்கம் - மானம் - ரோசம் இல்லைதானே!'

மனைவி திட்டும்போது சிரிப்பது மட்டுமே எனது ஆயுதம். ஐம்பது வருடத்தில் நான் அறிந்துகொண்ட ராஜதந்திரம்! பேசி செய்த திருமணமானால் வார்த்தைகளிலாவது மரியாதை இருக்கும். இது காதல் திருமணம்! மரியாதைகள் எதையும் எதிர்பார்க்க முடியாது. நான் சிரித்தவுடன் அதற்குமேல் எதுவும் சொல்லாமல் விலகிவிடுவார். அதையே இன்றும் எனது அஸ்திரமாகப் பாவித்தேன்.

மீண்டும் தொலைபேசியில் 'மன்னிக்கவேண்டும். நான் அன்று தேவையில்லாது பிரச்சனையை ஏற்படுத்திவிட்டேன். எனக்கு இப்போ மூன்று பிள்ளைகள். இப்பொழுது நான் பற்றிக்குடன் ஒன்றாக இல்லை.'

'நான் இப்பொழுது கிளினிக்கை விற்றுவிட்டேன்' எனப் பதில் மட்டும் அனுப்பினேன்.

மீண்டும் எந்த பதிலும் வரவில்லை. நானும் எந்த வகையிலும் சமந்தாவைத் தொடர்பு கொள்ளவிரும்பவில்லை.

சமந்தாவால் நான் பல பாடங்களை அறிந்துகொண்டேன். வாழ்வின் அனுபவங்களே எமது ஆசிரியர்கள் என்பதை மறுக்கமுடியாது.

சமந்தா அழகான உயரமான பெண். எப்பொழுதும் சிரித்த முகம் அத்துடன் எப்பொழுதும் திறந்த மனத்துடன் என்னுடன் பேசுவாள். மிருகங்களில் அதுவும் பூனைகளில் மிகவும் விருப்பம் கொண்டவள். பூனைகளை அவள் பிடிக்கும்போது அவை அவள் கையில் அமைதியாகிவிடும். அவளுக்கு அனுபவம் இல்லாதபோதிலும் அவள் இலகுவாகக் கற்றுக்கொண்டாள். ஏற்கனவே பற்றிக் என்பவனை பாய் பிரண்டாக வைத்திருந்தாள்.

அவனது குறை நிறைகளைக்கூட எனக்குச் சொல்வாள். சத்திர சிகிச்சை

செய்யும் நேரத்தில் எனக்கு அவள் சொல்வதை எப்படியும் கேட்டாக வேண்டும். அவளும் நானும் மட்டும் வேலை செய்யும்போது வேறு வழி இல்லை. அவளிடம் ஒரு முக்கிய விடயம் எனக்குப் பிடித்திருந்து. நான் வெளியே போன நேரத்தில் யாராவது என்னைத் தேடி வந்தால் அவர்களுடன் பேசியபடி நான் வரும்வரை தக்கவைத்திருப்பாள். அதாவது அவளது வார்த்தைகள் மற்றவர்களை கொழுவி இழுத்துவைக்கும். ஆண் மட்டுமல்ல பெண்ணாக இருந்தாலும் அப்படியே.

அவள் வேலை செய்த இரண்டு வருடங்களின் பின்பு நடந்த விடயம் மறக்கமுடியாது. அதற்காகவே என்னிடம் இப்பொழுது 20 வருடங்கள் பின்பாக மன்னிப்புக் கேட்கிறாள். 200 வருடங்கள் பின்பாக ஆவுஸ்திரேலிய ஆதிவாசிகளிடம் வெள்ளை அவுஸ்திரேலியரகள் மன்னிப்பு கேட்கும்போது நான் அவளில் தவறு காணமுடியாது. ஆனால் எனது மனைவி அப்படி நினைக்கவில்லை. அவுஸ்திரேலியாவில் கணவனை முதலாவதாகக் கோட்டுக்கு இழுத்தவள் என்ற கோபம் ஆனாலும் என் மனதில் அந்த வடு ஆறிவிட்டது.

நீங்கள் எத்தனை தமிழ்ப் படங்கள் பார்த்திருப்பீர்கள்? எத்தனை பாத்திரங்களது பெயர் உங்கள் மனத்தில் நிற்கிறது? இது ஒரு முக்கியமான விடயமல்ல.. ஆனாலும் 'காதலுக்கு மரியாதை' என்ற தமிழ்த்திரைப் படத்தைப் பார்த்த பின்பு அந்த படத்தின் கதாநாயகி ஷாலினியின் பெயர் மனத்தில் சில காலம் தங்கி விட்டது.

இந்த காலகட்டத்தில் ஒரு உரிமையாளரால் கைவிடப்பட்ட அழகான சாம்பல் நிற பூனைக்குட்டி எனது கிளினிக்கு ஒருவரால் கொண்டு வரப்பட்டது. பாரதி பாடலை நினைவுக்குக் கொண்டு வரும் இந்த குட்டிப் பூனைக்கு வயது நான்கு கிழமைதான். மிகவும் சிறியது. தாயுடன் இருக்கவேண்டிய காலத்தில்

**நீங்கள் எத்தனை தமிழ்ப் படங்கள் பார்த்திருப்பீர்கள்? எத்தனை பாத்திரங்களது பெயர் உங்கள் மனத்தில் நிற்கிறது? இது ஒரு முக்கியமான விடயமல்ல.. ஆனாலும் 'காதலுக்கு மரியாதை' என்ற தமிழ்த்திரைப் படத்தைப் பார்த்த பின்பு அந்த படத்தின் கதாநாயகி ஷாலினியின் பெயர் மனத்தில் சில காலம் தங்கி விட்டது.**

பிரிந்துவிட்டதால் புட்டிபால் கொடுத்து வளர்க்கவேண்டும். அதன் தோற்றத்தைப் பார்த்து 'மினி' என்ற ஷாலினியின் பெயரை வைத்தேன். ஆனால் என்ன? பாலஸ்தீனியர்கள் மேல் கடும் பகை பாராட்டிவரும் இஸ்ரவேல் பிரதமர் நெத்தனியாகு போல் எனது லபரடோர் நாய் சாண்டி, பூனை இனத்தின் மேல் வெறுப்பு கொண்டது. இந்த பூனைக்குட்டியை, அதன் நிமித்தம் எனது வீட்டுக்குக் கொண்டு செல்லவில்லை. பத்துமணி நேரம் கிளினிக்கில் நான் இருப்பதால் அதற்கு வசதியாகி விட்டது. பகலில் எங்கும் திரியும். இரவில் கூட்டில் அடைத்தோம். எந்த குறையுமற்று எனது கிளினிக்கில் வளர்ந்து வந்தது.

ஆனால் மினியால் சில சங்கடங்கள் ஏற்பட்டது. நாய்கள் வைத்தியத்துக்கு வரும் போது எனது அறையில் மினியை அடைத்துப் பூட்டவேண்டும். இதைவிடத் துள்ளிப்பாய்ந்து பல பொருட்களைத் தட்டி கொட்டிவிடும். பல முறை கம்பியுட்டர் வயர்களைக் கழட்டிவிடும். வேலை செய்யும் நேரத்தில் மடியில் இருக்க அடம் பிடிக்கும். எல்லாவற்றிற்கும் மேலாகத் திருடர்களுக்கு அலார்ம் போடுவதற்காக இரவுகளில் கூட்டில் அடைக்கவேண்டும்.

இரவு முழுவதும் அடைபட்டு இருப்பதைப் பொறுக்காமல் அக்காலத்தில் எனக்கு நேர்சாக வேலை பார்த்த சமந்தா, இரவில் மினியை வீட்டுக்குக் கொண்டு சென்று காலையில் திரும்பவும் கொண்டு வருவதாக உறுதியளித்ததைவிட்டு அவளிடம் இரவில் அதை கொண்டு செல்லும் பொறுப்பை ஒப்படைத்தேன். ஆறு மாதத்துக்கு மேல் மினி பகலில் கிளினிக்கிலும் இரவில் சமந்தா வீட்டிலும் வளர்ந்தது. இக்காலத்தில் மினிக்கு குட்டி போடாமல் இருக்க சத்திர சிகிச்சையும் செய்தேன்.

இந்தக் காலத்தில், ஒரு மதியத்தில் சமந்தா ஒருநாள் வந்து 'கர்ப்பிணி ஆகிவிட்டதாகவும் அத்துடன் இரண்டாவது மாதம் என நினைக்கிறேன்.' என்றாள். அவள் சொல்லும் போது ஏதோ ஒரு விடயமாக அவளைக் காண வந்திருந்த பாய் பிரண்ட் பற்றிக்கும் நின்றிருந்தான்.

இருவரும் அதைத் திட்டமிட்டுச் செய்திருக்கலாம்.

கலியாணம் முடிந்த பின் தான் பெண்கள் கர்ப்பமாகும் கலாச்சாரம் சந்திரமண்டலத்தில் இறங்கிப் பல யுகங்களாகி விட்டதால் இந்த செய்தி எனக்கு எந்த அதிர்வையும் ஏற்படுத்தவில்லை. மேலும் மனித நாகரிகத்தில் இடைக்காலத்தில் வந்த திருமணம் என்ற இந்த பழக்கம் பணச்செலவையும் பல அசௌரியங்களையும் உண்டாக்கி கொள்கிறது என இளம் சமுதாயம் மேற்கு நாடுகளில் நினைக்கிறது. இந்த நினைப்பு வெகு விரைவாகக் கீழைத்தேய நாடுகளுக்கும் பரவி வருகிறது. அதை சரி அல்லது தவறு எனப் பார்க்க முடியாது, மாற்றமொன்றே மாறாதது என்பதுபோல்

எனது பிரச்சனை வேறு - அது முக்கியமானது.

'சமந்தா உனக்குத் தெரியும்தானே? நாங்கள் ஹலத்தேனை (Halothane Gas) இங்கு சத்திர சிகிச்சைக்கு மயக்கும் மருந்தாகப் பாவிக்கிறது. இந்த ஹலத்தேன் சில வேளையில் கருச்சிதைவை கொண்டு வரும். ஆரம்பக் கால கர்ப்பமாக இருப்பதால் நீர்

இங்கு வேலை செய்வது நல்லது அல்ல. உமது கர்ப்பத்தில் சிதைவு ஏற்படலாம்.'

'பணம் இல்லை. நான் கடைசி வரையும் வேலை செய்ய விருப்பம்'.

'வேலை செய்ய விரும்புவது நியாயம்தான் ஆனால் உமக்கு ஹலத்தேன் என்ற இந்த மயக்க வாயுவால் கருச்சிதைவு ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பாகி விடுவேனே! . இந்தக் கிளினிக்கில் நாங்கள் இருவர் மட்டுமே வேலை செய்கிறோம். நீர் இல்லாமல் நான் தனியே சத்திர சிகிச்சையில் ஈடுபட முடியாது. உம்மை வைத்துக்கொண்டு வேறு ஒருவரை வைத்து வேலை செய்ய என் பொருளாதாரம் இடம் தராது. அதே வேளையில் ஹலத்தேன் வாயுவாகியபடியால் இந்த கிளினிக் எங்கும் பரவும். அதற்கு நீர் ஒளித்திருக்க முடியாது'.

ஓரளவு என்னை புரிந்துகொள்வாள் என்ற நம்பிக்கையில் இதை அவளிடம் விளக்கினேன். இவ்வளவு நேரமும் எங்கள் உரையாடலைக் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த பற்றிக் 'அப்படி கர்ப்ப சிதைவு ஏற்பட்டால் உமது பேரில் வழக்கு தொடுப்போம்' என்றான்.

அப்பொழுது எனக்கு தலையில் ஜிவ் என ஏறியது. 'முட்டாளே, ஒரு பெண்ணை கர்ப்பிணியாக்குவது மிகவும் இலகுவான விடயம். ஆனால் அவளைப் பராமரிப்பது கடினம். இதைச் செய்வதற்கு முன்பாக மூளையைப் பாவித்திருக்க வேண்டும். உனது முட்டாள்தனத்திற்கு என்னிடம் வெகுமதி தர கேட்கிறாயே' எனக் கேட்ட விரும்பினாலும் கோபத்தை மறைத்துக்கொண்டு சமந்தாவிடம் 'சமந்தா இன்றையில் இருந்து வேலைக்கு வரவேண்டாம் (you are dismissed ) என்றேன்.,

சமந்தாவோ அவளது பாய் பிரண்டோ என்னிடமிருந்து இப்படி ஒரு வார்த்தையை எதிர்பார்க்கவில்லை. இருவருக்கும் முகமும் சிவந்து விட்டது.

'முட்டாளே, ஒரு பெண்ணை கர்ப்பிணியாக்குவது மிகவும் இலகுவான விடயம். ஆனால் அவளைப் பராமரிப்பது கடினம். இதைச் செய்வதற்கு முன்பாக மூளையைப் பாவித்திருக்க வேண்டும். உனது முட்டாள்தனத்திற்கு என்னிடம் வெகுமதி தர கேட்கிறாயே'

பாய் பிரண்ட் பற்றிக் எனது கிளினிக்கை விட்டு ஆத்திரத்தில் வெளியேறிவிட்டான்.

இது போல் திடீரென முடிவுகளை வழக்கமாக எடுப்பது எனது சுபாவமுமில்லை. பற்றிக்கின் வார்த்தை அப்படிச் சொல்ல என்னைத் தூண்டியது. உடனே என்னைச் சுதாரித்துக் கொண்டு மீண்டும் சொன்னேன்.

'சமந்தா நீர் வேலை செய்த இந்த இரண்டு வருடங்களும் சுமுகமானவை. எமக்கிடையே எந்த பிரச்சனையும் இருக்கவில்லை. ஆனால் இந்த நிலையில் உம்மைக்கொண்டு வேலை செய்விப்பதின் மூலம் நான் உமக்குத் தீங்கு செய்கிறேன். நீர் உமது கர்ப்ப காலத்தில் எனது மனைவி வேலை செய்யும் வைத்திய சாலையில் வரவேற்பாளராக வேலை செய்வதற்கு உதவி செய்கிறேன். உமது குழந்தை பிறந்த பின்பு மீண்டும் இங்கு வந்து வேலை செய்யலாம். இதைவிட எதுவும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்கிறேன்.' என அமைதியாகச் சொன்னேன்.

சமந்தாவில் எனக்கு நல்ல மதிப்பு இருந்தது என்பதால் ஏதாவது சுமுகமான உடன்படிக்கைக்கு வரலாம் என்ற நம்பிக்கை இருந்தது. அன்றில் இருந்து சமந்தா வேலைக்கு வரவில்லை. வேறு ஒரு நர்ஸ் வேலைக்குச் சேர்க்கப்பட்டாள். தொலைப்பேசியில் மினியை கொண்டு வந்துதரச் சொன்னேன். மினி என்னுடையது. நான் தரமாட்டேன் என்றாள்.

'மினியைத் தரவிட்டால் உன்மீது வழக்குப் போடுவேன்' என கூறிவிட்டு தொலைப்பேசியை வைத்தேன். மினியை இழந்தது உண்மையில் துக்கமாக இருந்தது. சில வாரங்களின் பின்பு சகலரையும் சமமாக நடத்தப்படுவதைக் கவனிக்கும் அரச நிறுவனமான 'சம வாய்ப்பு மற்றும் மனித உரிமைகள் ஆணையம்' (Equal Opportunity and Human Right Commission) இருந்து அழைப்பு வந்தது. அங்கே நான் சென்றபோது சமந்தா, சமந்தாவின் பாய் பிரண்ட் பற்றிக் உடன் அவர்களது வக்கீலும் சமூகமளித்திருந்தனர்.

அங்கு இருந்த ஆணையாளர் முன்பாக சமந்தாவின் வக்கீல் கர்ப்பிணிப் பெண் என்ற காரணத்தால் சமந்தாவை வேலையில் இருந்து தூக்கியதாக என் மீது குற்றம் சாட்டினார். நான் எனது கிளினிக்கில் தொடர்ச்சியாக வேலை செய்தால் ஹலத்தேன் மயக்க மருந்தால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை விஞ்ஞான ஆதாரங்களையும், ஆராய்ச்சி முடிவுகளையும் விளக்கினேன். ஏற்கனவே அமெரிக்காவில் ஹலத்தேன் வாயுவால் நேர்ந்த கருச்சிதைவுகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளையும், ஆதாரங்களைத் திரட்டியிருந்தேன். அவைகளை ஆணையாளர் முன்பு சமர்ப்பித்தேன். இதைவிட சமந்தாவுக்கு வேறு தொழில் வசதி ஏற்படுத்திக் கொடுத்ததையும் கூறினேன்.

அவர்களால் என்மீது வைத்த குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை.

அப்போது அந்த அதிகாரி எனது ஆய்வுகள் தேவைக்கு அதிகமாக உள்ளன எனப் பாராட்டினார்.

ஒன்பதாவது தரத்தில் வக்கீலுக்கு சட்டம் படிப்பதற்காக கலைப்பகுதி சென்ற என்னை, எனது தந்தையின் நண்பரான பொன்னம்பலம்

ஆசிரியர் 'நீ தீவான். எஞ்ஜினியரிங் செய்யவேண்டும் அதற்காகவே உங்கப்பன் இந்து கல்லூரியில் உன்னை விட்டுப் படிப்பிக்கிறார். அவரை ஏமாற்றாதே' எனக் கூறி கணித பகுதியில் சேர்த்தார்.

நான் சட்டம் படித்திருந்தால் என்ன செய்திருப்பேன்? அரசியலில் சேர்ந்து தற்போதைய தமிழ்த் தலைவர்கள் மாதிரி நாளுக்கொரு கதை பேசியிருப்பேனோ ? இல்லை நமக்குப் பொய் சொல்ல வராது எனக் கொழும்பில் ஏதாவது நிறுவனத்துக்கு வேலை செய்திப்பேனோ அல்லது கனடா அவுஸ்திரேலியா என சென்று அகதி விண்ணப்பங்கள் செய்திருப்பேனோ? யார் கண்டது? ஒவ்வொரு அரிசியிலும் உனது பெயர் எழுதியிருக்கும் எனக் குரானில் எழுதியதுபோல் ஆஸ்திரேலியாவிலுள்ள நாய் - பூனைகளில் எனது பெயர் எழுதியிருந்திருக்கிறது .

பொங்கலுக்குத் தமிழ் ஈழம் கிடைக்கும் என்று அக்காலத்தில் நம்பியிருந்த என்னை 'அவுஸ்திரேலியாவில் மிருக வைத்தியம் பார்ப்பாய்' என யாராவது சொல்லியிருந்தால் நம்பியிருக்கமாட்டேன். இந்த பிறப்பில் வாழாது அடுத்த பிறப்பில் நன்றாக வாழமுடியும் என எண்ணும் எமது மனித மனமே விசித்திரமானது.

சமந்தா விடயம் இத்துடன் முடியவில்லை. மீண்டும் ஒரு அரசாங்க நிறுவனத்தில் என் மீதான குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த தடவை வழக்கறிஞர் ஒருவரை என் சார்பாக நியமிப்பதற்காக மெல்பேனில் உள்ள பெரிய சட்ட நிறுவனத்தை அணுகியபோது ஒரு அழகிய இளம் பெண் வக்கீலை எனக்காக நியமித்தார்கள். நடந்த விசாரணையின் போது சமந்தாவின் வழக்கறிஞர், தனது திறமையைக் காட்டுவதற்கு, வெளிநாட்டிலிருந்து வந்ததால் எனக்கு அவுஸ்திரேலிய சட்டம் தெரியாமல் இருக்கலாம் எனக் கூறியபோது எனது அழகிய வழக்குரைஞர் மௌனத்தை உதிர்த்தபடி புன்னகைத்தார்.

அங்கும் நானே எனக்காக வாதாட வேண்டி இருந்தது. இங்கும் அவர்களின் குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்டது. மனம் தளராத விக்கிரமாதித்தனாக சமந்தாவின் வழக்கு இறுதியில் நீதிமன்றத்திற்கு வந்தது. இதில் ஒரு சூட்சுமம். சமந்தாவின் வழக்குரைஞர் வழக்கை வென்றால் மட்டுமே பணம்பெறுவார். இதே வேளையில் எனது வழக்குரைஞர் வென்றாலும் தோற்றாலும் பணம் பெறுவார்.

வழக்கு நாள் வந்தது. இரண்டு பகுதியினரும் நீதிமன்றத்தில் முன்னறையில் இருக்கும் போது நீதிபதியின் உதவியாளர் வந்து சொன்னார்.

'இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்தால் நான்கு நாட்கள் செல்லும். கிட்டத்தட்ட பதினைந்தாயிரம் டாலர்கள் செலவு ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்படும். இதைப்பற்றிக் கலந்து ஆலோசிக்க அரை மணித்தியாலம் தருகிறோம்' எனக் கூறிவிட்டுச் சென்றார்.

இதை அடுத்து எனது வழக்குரைஞர் என்னிடம் 'இது கோட்டுக்கு வெளியில் பணத்தைக் கொடுத்து நீதிபதியின் உதவியாளர் முன்னிலையில் சட்டப்பூர்வமாக முடித்துக்கொள்ளப்படும் ஒரு முறை' என கூறினார்.

எனக்கும் யார் சரி யார் பிழை என்பதற்கு பதிலாக வேலையை விட்டு விட்டு இப்படி அலைவதும் அலுத்து விட்டது. இதேவேளையில் சமந்தா நிறைமாத கர்ப்பிணியாகி விட்டாள். ஊதிய வயிற்றை தள்ளி, அரக்கியபடி நடப்பதைப் பார்க்க என் மனத்தில் இப்பொழுது அவளுக்கு எதிரான உணர்வு இல்லை. மினியைக் கூட விட்டுக் கொடுத்து விடலாம் என்ற நிலைக்கு வந்து விட்டேன்.

நான் சம்மதித்ததும் நீதிபதியின் உதவியாளர் முன்னிலையில் சமந்தாவின் வழக்குரைஞர் பதினோராயிரத்தில் ஆரம்பித்தார். நாங்கள் இரண்டாயிரம் மட்டும் தருவோம் எனக் கூறி ஒரு மீன்கடை ஏலமாக நடத்தப்பட்டது.

கடைசியில் ஐயாயாயிரம் டாலர்கள் சமந்தாவுக்குக் கொடுத்தால் வழக்கை வாபஸ் வாங்குவது என முடிவு செய்யப்பட்டது. சமந்தாவுக்கு மினியை என்னிடம் தந்தால் மேலும் ஆயிரம் டாலர் தருவதாக நான் சொல்லியபோதும் அவள் மறுத்து விட்டாள். நீதிபதியின் உதவியாளரை அணுகி மினியை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கும்படி கேட்டபோது அவர் மறுத்துவிட்டார்.

அதற்கு இன்னொரு வழக்கு தேவைப்படும் என்றார்.

மினிக்காக இன்னுமொரு வழக்குப் போட அது மீண்டும் ஒப்பந்தத்தில் முடியலாம் கடைசியில் இரு பகுதியினரும் ஒப்பந்தமிட்டு சம்மதித்தோம்.

இதன் பின் ஐயாயிரம் டாலர் பணத்தில் அரசாங்க வரியாக தொளாயிரம் டாலர்களைக் கழித்துக் கொண்டு எனது வழக்குரைஞர் மூலம், சமந்தாவின் வழக்குரைஞரிடம் நாலாயிரத்து நூறு டாலர்கள் கொடுத்தேன். இதேவேளையில் அதிகம் பேசாத எனது அழகிய வழக்குரைஞருக்கு கூலியாக ஐய்யாயிரம் கொடுத்தேன். இந்த விடயத்தில் எனக்கு பத்தாயிரம் நட்டமானது. மினியும் கிடைக்கவில்லை. ஆனால் நான் களைத்துவிட்டேன். எனக்கெதிராக வழக்குத் தொடுத்த சமந்தாவும் தனது வழக்குரைஞருக்குப் பணம் கொடுத்த பின் எவ்வளவு மிச்சம் கிடைத்திருக்கும்?

சமந்தாவின் வழக்குரைஞர் எனது வழக்குரைஞரை விட பலமடங்கு திறமையானவர். அத்துடன் சீனியர். சட்டத்தின் நோக்கம் நியாயமல்ல, இரு பகுதியினரையும் களைப்படைய வைத்து இது போன்ற விடயத்தில் மீண்டும் ஈடுபடாது படிப்பினையைக் கொடுப்பதே. மிருக வைத்தியரான நான்அப்பொழுதுதான் 'சட்டம் ஒரு இருட்டறை ' என்ற வார்த்தையின் அர்த்தத்தை புரிந்து கொண்டேன்!



# 1 இருட்டு இரகசியம்

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் முடிந்து அதன் நினைவுகளாக எங்களுக்கு எஞ்சியவை எல்லாம், நாங்கள் கேட்க விரும்பிய கதைகள் தான். எதைக் கேட்க எங்களுக்கு குஷி வருமோ, அந்தக் கதைகளை மட்டும் சொன்னோம், அது பொய் என்று மனதார எங்களுக்குத் தெரிந்தாலும்.

எதிரியின் அக்கிரமத்தை மட்டுமே பேசுவது எங்களுக்கு உவப்பானது. அதை உலகமும் நம்பும் என்று எதிர்பார்க்கிறோம். அதை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்று நம்புகிறோம்.

அதற்கான கதைகள் மட்டுமே தணிக்கைக்குள்ளால் வெளியே வருகிறது.

செஞ்சோலைக்கு குண்டு போட்ட கதை, எதிரி எவ்வளவு கேவலமானவன் என்பதைச் சொல்லி, எதிரியின் முகத்திரையைக் கிழிக்கப் பயன்படக் கூடிய கதை.

அந்தப் பிள்ளைகள் ஏன் அங்கே கொண்டு போய் நிறுத்தப்பட்டார்கள்? அவர்களுக்கு என்ன பயிற்சி வழங்கப்பட்டது? அவர்கள் கொல்லப்பட்டதும் அவர்களின் பெற்றோருக்கும் இடையில் நடந்த இழுபறி என்ன?

இதெல்லாம் முழுமையாக எங்களுக்குத் தெரிந்திருக்கா விட்டாலும், அதன் உண்மை எங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், அதைத் தெரிந்ததாகவோ, நம்புவதாகவோ நாங்கள் சொல்லப் போவதில்லை.

ஏனென்றால், நாங்கள் சொல்லித் திரியும் கதை, வசனத்திற்கு அது பொருத்தமானதில்லை.

அந்த உண்மையை யாராவது சொன்னாலும், துரோகிகள் பொய் சொல்கிறார்கள் என்றாவது நடிக்க வேண்டி இருக்கிறது.

ஏனென்றால், எல்லாமே எங்களுக்கு அகதிக் கோரிக்கை விண்ணப்பத்திற்காகச் சொல்லும் கதை மாதிரித் தானே!?

துரோகிகள் ஆக்கப்படுவோம் என்ற பயம் தான் இன்றைக்கும் பல எழுத்தாளர்கள் உண்மையில் கடைசி நேரம் என்ன நடந்தது என்பது பற்றி பகிரங்கமாக வாய் திறக்க விடாமல் வைத்திருக்கிறது.

தாய்மாரின் பிடியில் இருந்து பிள்ளைகள் இழுத்துச் செல்லப்பட்டுப் பலி கொடுக்கப்பட்டார்கள் என்ற கதை சொல்லல், மாவீரர்களுக்கு விளக்குக் கொளுத்தி காட்டும் நாடகத்திற்கு உரிய கதை இல்லை.

அந்தக் கதையைச் சொல்லிக் கொண்டு உண்டியலை நீட்ட முடியாது. கேட்பவர்களே உங்களைத் துரத்தித் துரத்தி அடிப்பார்கள். விளக்குக் கொளுத்தினால், நீங்களும் புனிதர் தானே. காட்போர்ட் கல்லறையில் றிசைக்கிள் பூ வைத்தால், நீங்களும் புனிதப் போராட்டத்தின் இறைதூதர்கள் தானே!?இது உண்மைக் கதை. இதை கற்பனைக் கதை என்றபடியே நீங்கள் அப்பால் போவது பற்றி எங்களுக்குக் கவலையும் இல்லை.

உங்களைக் குஷிப்படுத்த வேண்டி, பொய் கதை சொல்வதற்கு, எங்களிடம் உண்டியலும் இல்லை. கொத்துரொட்டிக் கடையும் இல்லை. இதை நம்புவதற்கு உங்களிடம் மனச்சாட்சி இருக்கும் என்று எதிர்பார்க்கும் அளவுக்கு நாங்களும் உங்களைப் போன்ற முட்டாள்களும் இல்லை.

ஆனால், உண்மைகள் சொல்லப்பட வேண்டும். பொய்கள் வரலாறு ஆகிவிடுவதைத் தடுப்பதற்காக!

## வணக்கமுங்கோ!

நான் இப்ப உதால சந்தைக்கொருக்காப் போகலா மெண்டு வந்தாப்போல, உங்களை இதில கண்டிட்டு உங்களோட சில விடயங்களைக் கதைச்சுப்போட்டுப் போகலாமெண்டு நிக்கிறன். நான் சொல்லவாற விசயமொண்டும் பொய்யுமில்லைப் புளுகுமில்லை எண்டதை நீங்கள் நம்புங்கோ. உங்கை ஊருலகத்தில நடக்கிற சில விசயங்கள், இன்னமும் வெளிச்சத்துக்கு வராமல், இப்பவும் இருட்டுக்குள்ள கிடக்கெண்டது உங்களுக்கும் தெரிஞ்ச விசயம். அதுவும் பாருங்கோ எங்கட நாட்டில நடந்த கனவிசயங்கள் இன்னமும் வெளிச்சத்துக்கு வராம இருட்டுக்குள்ள கிடக்குது. சிலர் இந்த விசயங்களை வெளியில வரவிடாமல் பார்க்கிறதில கண்ணும் கருத்துமாக இருக்கினம். ஏன்தெரியுமே? வெளியில வந்தா தங்கட சீத்துவக்கேடுகள் எல்லாம் ஊர்முழுக்க நாறத் தொடங்கியிடும் எண்ட பயம்தான். இருந்தாலும் பாருங்கோ சிலபேர் இப்படி அமுக்கி வைச்சுக் கொண்டிருந்தாலும், அங்கினேக்கை ஆராவது ஒருத்தராலை யெண்டாலும் கசிஞ்சு வெளியில வந்திடும். வன்னிப்போர் முடிஞ்சு, இந்த *2024* ஆம் ஆண்டோடை பதினைஞ்சு வரிசமாகப் போகுது. இந்தப் பதினைஞ்சு வரிசத்துக்குள்ள, வன்னியில *2009*க்கு முன்னம் நடந்த கூத்துகள், இன்னமும் சரியா வெளியில வராம இருட்டுக்கைதான் கிடக்குது. உந்தக் கூத்துக்களைக் குறிச்சு, இப்பவும் கனபேர் வாயைத் திறக்கப் பயப்படுகினம். வேற சிலபேர், எங்களுக்கேன் உந்தவேலை? தின்னுறதுக்கு ஒழுங்காச் சோறு கிடைச்சாச் சரி... எண்டு ஒதுங்கியிருக்கினம். ஆனா, பாதிக்கப்பட்டவன் நிறையப் பறையத்தானே செய்வான். பறையிறவனுக்கும் நேரகாலம் வரவேணுமல்லோ. நானும் உந்தச் சண்டேக்கை அம்பிட்டவன். இப்ப குடும்பத்தோட யாழ்ப்பாணத்தில இருக்கிறன். என்ர குடும்பத்திலும் பெரிய இழப்புப் பாருங்கோ. ஏற்கனவே ஒரு பொடியனும் பொடிச்சியும் மாவீரராய் போயிட்டினம். இன்னொன்று இரணைப்பாலை செந்தூரன் சிலையடியில ஷெல்லுக்கை அம்பிட்டுச் சின்னாபின்னமாப் போச்சுது. இன்னொண்டைப் படுத்த படுக்கையில வைச்சு, கொற இழுவையா இழுத்துக்கொண்டு போச்சினம். அந்தநேரம் என்ர மனிசிபட்ட பாடிருக்கே... பத்துமாதம் அவனை வயித்தில சுமந்து பெத்து, பால் குடுத்து வளர்த்தவளல்லோ! கண்ணால கண்ணீர் வழிய... வழிய... அவள் காலடியில கிடந்த குருகு மணலை அள்ளி, சாபமாய் போட்ட வார்த்தையள்தான், என்ர பிள்ளையைப் பிடிச்சுக்கொண்டு போன ஒருத்தரையும் உயிரோட விட்டு வைக்கேல்லை. சில பேர் சொல்லுற மாதிரி, காட்டிக் கொடுப்பு களாலைதான், இயக்கம் கவுண்டு போனதெண்டதிலை எனக்கு நம்பிக்கையில்லை. என்ர மனிசியைப்போல எத்தனை பெண்டுகள் அந்தக் கடற்கரை மண்ணையள்ளித் திட்டினாளவையோ ஆர் கண்டது? ஆனா, அந்தப் பெண்டுகளின்ர எல்லாச்சாபமும் ஒண்டுசேர்ந்துதான், ஒருத்தரையும் உருப்படி இல்லாமல் அழிச்சுப் போட்டுது. அதோட பாருங்கோ... உடம்பில பூணூல் போட்டுக்கொண்டு, கோயில்ல பூசை செய்து கொண்டிருந்த ஐயர்மாருடைய பிள்ளைகளிலை கைவைச்சது இன்னொரு பாவமான காரியம் எண்டது கனபேருக்கு இப்பவும் புரிஞ்சமாதிரி இல்லை. அதுகள் பாவம். மூண்டுநேரப் பூசைக்கும் மூலஸ்தானத்துக்கை நிண்டு, சமஸ்கிருத சுலோகத்தை முணுமுணுத்துக் கொட்டிருந் ததுகளை வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டுபோய், கையில ஏ. கே. துவக்கைக் குடுத்து, ஆமியளைச் சுடச்சொல்லிக் கேட்டால் அதுகள் அப்படிச் செய்யுங்களே? இதெல்லாத்தையும் நான் ஏன் இப்ப இதில வந்து உளறிக் கொட்டுறனெண்டால், உங்கினேக்கை இப்பவும் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்...' எண்ட கனவோடை கொஞ்சம்பேர் வாழுகினம் கண்டியோ. அவையளுக்கு புண்ணில புளிபட்டமாதிரி இருக்க வேணுமெண்டதுக்குத் தான்.

இதுக்குள்ள இன்னொரு ஆக்கள் என்ன சொல்லுகினம் தெரியுமே? இவையள் ஆரெண்டால் பாருங்கோ, வன்னியில சண்டை நடக்கேக்கை, வன்னிக்கு வெளியில இருந்த ஆக்கள். ரேடியோவில செய்தியளையும் ஆமிக்காரன் செய்த கூத்துகளை ரூபவாகினியிலும் கண்ணால பார்த்துக் காதால கேட்ட ஆக்கள். உவையளுக்கு வன்னிப்போர்க்கள அவல அனுபவங்கள் ஒண்டுமில்லை. அதால அங்கை நடந்தது ஒண்டையும் நம்புகினம் இல்லை. சண்டை முடிஞ்சு வவுனியா இடைத்தங்கல் முகாமில இருந்துபோட்டு, ஊருக்கு வந்து அங்கத்தேக் கொடுமையளைப்பற்றிச் சொன்னால், ' மெய்யே! அப்பிடியோ... இப்பிடியோ... நாங்கள் உதை நம்பமாட்டம். எங்கட 'பிள்ளையள்' உதைச் செய்யாதுகள். இவர் வவுனியாவில முகாமில இருக்கேக்கை ஆமியிட்டை ஏதோ வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார் போலக் கிடக்குது. உப்பிடியான துரோகியளாலைதான் எங்களுக்குத் தமிழீழம் கிடைக்காமல் போயிட்டுது.'

கேட்டியளே! உவேன்ர கதையை. பட்டுக் களைச்சாத்தான் அதன் பாடுகளைத் தெரிய வேண்டி வரும். தங்கட உடம்பில நோகாமல், அடுத்தவன்ர பிள்ளையளின்ர வீரச்சாவில தமிழ் ஈழம் கிடைக்கவேணுமெண்டு இருந்த உதுகளாலைதான், பிரபாகரனுக்கு கடைசியில உந்தநிலை வந்ததெண்டதை அவையள் இன்னமும் உணருகினம் இல்லை. உதைப்போல இன்னும் எத்தனையோ விசயங்கள் இருட்டுக்கை கிடக்குது வெளியில சொல்லுறதுக்கு.

நான் ஒரு ஓட்டைவாயன், உளறுவாயன். எதையும் மனசில பொத்திவைச்சிருக்கத் தெரியாதவன். மனசை எதை உறுத்துதோ, அதுகளை வாயால வாந்தி எடுத்தால்தான், என்ர மண்டைக்கொதி கொஞ்சம் குறைஞ்சமாதிரி இருக்கும். சொல்லுறதுக்கு நிறைய இருக்கடியப்பு. நேரம்போகுது. சந்தைக்கும் போகவேணும். பிறகு வந்து சந்திக்கிறன்.

அப்ப நான் வரட்டே!

**உங்கட குஞ்சியப்பு.**



# அப்ப யாழ்ப்பாணத் திமிர் அப்படியாயின் இவர்கள் யார்?

அங்கே புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் சிறு பதாகைகளைத் தவிர யுத்தம் அழித்த நினைவுகள் எதையும் அந்த மண் அடையாளம் காட்டவில்லை. யாரையும் கொல்லாத ஒரு தெருவையேனும் நாம் அடையாளம் காட்டிவிடமுடியாது என்றாலும் அவற்றின் வரலாறுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தேவை யாருக்கும் இருந்ததேயில்லை.

**கற்சுறா**

நம்மிடம் இருக்கும் நினைவுகளையும், நினைவிலிருக்கும் கதைகளையும் யாராலும் ஒருபோதும் அழித்துவிட முடிவதில்லை என்றாலும் அவை நினைவிலிருக்கக் கூடாது என்பதற்காக அதன் தடயங்களை அழிக்கும் செயற்பாட்டினை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆதிக்கத்திலுள்ள பல்வேறு தரப்பினர் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கிறார்கள். இதற்கும் இன,மத, சாதிய, பிரதேச, தேசிய வேறுபாடுகள் இருப்பதில்லை. ஆனாலும் தடயங்கள் அழிக்கப்படும் போது அவர்களால் நினைவுகளை அழிக்கமுடிவதில்லை. வரலாற்றிலிருந்தும் அவை ஒருபொழுதிலும் அழிந்து போவதுமில்லை.

நமது தேசத்தில் 40 வருடங்களுக்கு மேலான யுத்தம் ஒன்றுமுடிவுக்குக்கொண்டுவரப்பட்ட பின், அதுவரையான யுத்த அழிவின் நினைவுகள் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். அவை அடையாளப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மிகக் கொடுமையான யுத்தங்கள் கடந்து போன தடயங்கள், நினைவுகள் எல்லாமே மறந்துபோன மண்ணாக, வெறும் காடாகியிருக்கின்றன அதிக நிலங்கள். அங்கே புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் சிறு பதாகைகளைத் தவிர யுத்தம் அழித்த நினைவுகள் எதையும் அந்த மண் அடையாளம் காட்டவில்லை. யாரையும் கொல்லாத ஒரு தெருவையேனும் நாம் அடையாளம் காட்டிவிடமுடியாது என்றாலும் அவற்றின் வரலாறுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தேவை யாருக்கும் இருந்ததேயில்லை.

யுத்தகாலத்தில் புலிகளால் அமைக்கப்பட்ட அவர்களது மாவீரர் துயிலும் இல்லங்களை யுத்தம் முடிந்த கையோடு நமது அரசு அவசர அவசமாக அழித்து வெறும் காடாக்கியது. தனது மக்கள் இழந்து போன தங்கள் ‘குழந்தைகளிற்காக விடும் கண்ணீர்’ குறித்து பரந்த மனதோடு அந்த அரசு அணுகியிருக்க வேண்டும். அது இன்னறளவும்

நடைபெறவேயில்லை. (மறுபக்கம் இந்த மாவீரர் துயிலும் இல்லங்களை அடையாளம் காட்டிச் செய்யப்படும் அரசியல் வியாபாரம் பற்றிய கதை இன்னொன்று) மாறாகப் புலிகளும் மக்களும் ஒன்றுதான் என்ற தமது வழமையான அடிப்படைச் சிந்தனையின் நிமித்தம் மிக மூர்க்கத்தனமாக அவை எதிர் கொள்ளப்பட்டு அழிக்கப்படுகிறது. எவ்வாறு புலிகளும் மக்களும் ஒன்றுதான் என்ற தோரணையில் யுத்தகாலத்தில் முடிந்தவரை மக்களை அழித்ததோ அதேபோல யுத்தம் முடிந்த பின்னாலும் அவ்வாறே கையாள நினைக்கிறது. ஆனால் அரசு சொல்வது போலவோ அல்லது புலிகளே சொன்னது போலவோ புலிகளும் மக்களும் ஒருபொழுதும் ஒன்றேயல்ல என்பதே உண்மையானது.

மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்தது போலவே புலிகளது செயற்பாட்டின் கீழிருந்த பல்வேறு இடங்கள் இவ்வாறு நினைவுகளிலிருந்து புலிகளாலேயே அழிக்கப்பட்டன. எவ்வாறு புலிகள் தமக்கு எதிர்க்கருத்துடையோர்களது தடயங்களையும் நினைவுகளையும் அழித்து ஒழித்தார்களோ அதற்கு எந்தக் குறைவுமில்லாது அரசும் செய்தது. ஆனால் புலிகள் அழித்த நினைவுகளை என்றுமே பேசாத இந்த யாழ்ப்பாணிய மனநிலை கொண்டவர்கள், தனியே அரசு அழிக்கும் நினைவுகளுக்கு எதிராக மட்டும் கொந்தளிக்கிறார்கள்-கூக்குரலிடுகிறார்கள். இவர்களது இந்தக் கூக்குரலுக்கு என்றும் எந்தவித மதிப்பும் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறு தமிழர்களது நினைவிடங்கள் அழிக்கப்படும் போது, அதனைத் தமக்குரிய சாதகமான செயலாக எண்ணிய சில தற்குறிகள் புதிதாக நினைவிடங்களை அமைத்து அதனைத் தமது சுய இலாபத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். அவ்வாறான செயலொன்றுதான், யாழ் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிச் செயற்பாடும். உண்மையில் யாழ்ப்பாணியச் சிந்தனைக்குள் இந்த முள்ளிவாய்க்கால் என்ற சொல் பெருஞ்சொல்லாக தன்னுடைய அடையாளமாகக் காட்ட எந்தக் குறியீட்டு உணர்வும் இன்றுவரை அடிப்படையாக அமைந்ததில்லை. இன்று அது அவர்களுக்கு ஒரு தந்திரச் சொல். அல்லது வியாபாரச் சொல். அவ்வளவுதான். அதற்கு மேல் ஒரு நினைவுச் சின்னத் திற்கான எந்த அடிப்படை அறிவையும் அவர்கள் கொண்டு இயங்கவில்லை. இறுதிவரை இந்தப் புலம்பெயர்ந்த யாழ்ப்பாணியம், யுத்தத்தை முள்ளிவாய்கால் வரை நகர்த்திக் கொண்டு போக என்னவெல்லாம் வழி செய்ததோ அதற்கு நிகராக இன்று யுத்தம் முடிந்த பின்னால் அதே முள்ளிவாய்க்கால் பெயரைப் பயன்படுத்தி வியாபாரம் செய்ய முனைகிறது. எந்தக் கூச்சமும் இல்லாது, கவலையும் கொள்ளாது தன்னுடைய நலனுக்காக வன்னியில் உள்ளவர்களையும் கிழக்கில் உள்ளவர்களையும் மரணம் வரை கொண்டு சென்று காவு கொடுத்ததோ அதுபோன்று அந்த முள்ளிவாய்க்காலின் மரணங்களைப் பயன்படுத்தி, அதன் பெயரில் முள்ளிவாய்க்கால் அரிசிமா-முள்ளிவாய்க்கால் குரக்கன்மா-முள்ளிவாய்க்கால் காட்டுத் தேன் என்று, விற்கத் தயாராகியிருக்கிறது. அதனைத் தமிழ்த் தேசிய உற்பத்தி என்று வேறு அடையாளம் சொல்கிறது. முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட மரணங்களை எப்படி இது உடனுக்குடன் வியாபாரம் பண்ணிக் காசு உழைத்ததோ அதற்குக் கொஞ்சமும் குறைவற்று இன்று அந்த முள்ளிவாய்க்காலின் பெயரைக் கொண்டு பணம்

உண்மையில் யாழ்ப்பாணியச் சிந்தனைக்குள் இந்த முள்ளிவாய்க்கால் என்ற சொல் பெருஞ்சொல்லாக தன்னுடைய அடையாளமாகக் காட்ட எந்தக் குறியீட்டு உணர்வும் இன்றுவரை அடிப்படையாக அமைந்ததில்லை. இன்று அது அவர்களுக்கு ஒரு தந்திரச் சொல். அல்லது வியாபாரச் சொல். அவ்வளவுதான். அதற்கு மேல் ஒரு நினைவுச் சின்னத்திற்கான எந்த அடிப்படை அறிவையும் அவர்கள் கொண்டு இயங்கவில்லை.



வெருகல் படுகொலையின் அடையாளம்.

சேர்க்கத் தொடங்கியிருக்கிறது. கிழக்கிலிருந்து நித்திரைப் பாயில் வைத்துப் பிடித்து வரப்பட்ட குழந்தைகளை வடக்கின் யுத்தத்திற்காகப் பலி கொடுத்ததற்கு எந்த வெக்கமும் கொள்ளாது, அது ஒரு 'யுத்த தந்திரம்' என்றும் யுத்தத்தில் இது சாதாரண செயல் என்றும் இந்த யாழ்ப்பாணியம் இன்றுவரை கருத்துரைத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தரங்கெட்ட செயல்களை எக்காலத்திலும் அது தன்னறிவில் விளங்கிக் கொள்ளப் போவதேயில்லை. இவ்வாறான செயல்களுக்கு கொஞ்சமும் குறைவற்று அன்றும் இன்றும் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்கள் தான்- இருப்பவர்கள்தான் இந்த யாழ் பல்கலைக் கழகத்தினரும். இவர்கள் அனைவரும் நமது எதிர்காலச் சமூகத்தின் பெருங்கேடுகள். ஆனாலும் இவர்கள்தான் தொடர்ந்தும் தமது தேசியம் குறித்து அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும், இந்த யாழ்ப்பாணியத் தமிழ்த் தேசியவாதிகளுக்கு என்றும் இடைஞ்சலாக உறுத்திக் கொண்டிருக்கும் இரண்டு நினைவிடங்கள் எப்பொழுதும் அவர்களுக்கு அருவருப்பினை உண்டாக்குபவையாகவே இருக்கும்.

ஒன்று காத்தான்குடிப் பள்ளிவாசல். மற்றது வெருகல் படுகொலைத் தூபி.

இந்த இரண்டு நினைவிடங்களும் தமிழ்த்தேசிய வாழ்விற்கும் அதன் பொற்கால வரலாற்றிற்கும் என்றும் இடைஞ்சல் கொடுப்பவை. மனிதாபிமானம் - தேச அபிமானம் என்று ஒருபுறமும் கருத்துச் சுதந்திரம் உயிர்வாழும் சுதந்திரம் என்று மறுபுறமும், இனவெறி என்றும் நிறவெறி என்றும், புகலிட தேசத்தில், தாங்கள் அவமானப்படும் சந்தர்ப்பங்களைச் சொல்லிக் காட்டி மனிதாபிமானம் கோரும் இவர்கள், எந்த இரக்கமும் இல்லாமல் அதே வெறித்தனத்தைக் காட்டி நின்ற இடங்கள்தான்




காத்தான் குடிப் படுகொலையின் அடையாளம்.

இவை. இன்று வரை தன்னுடைய நெஞ்சை நிமிர்த்தி இல்லையென்று சொல்லமுடியாத அளவிற்கு ஒவ்வொரு யாழ்ப்பாணியாலும் மவுனமாகக் கடந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. இவையிரண்டும் தமிழீழத் தேசியத்தின் அவமானச் சின்னங்கள். எந்தத் தமிழ்ச் சோற்றிற்குள்ளும் புதைத்து ஒழிக்க முடியாத பெரிய இரண்டு பூசணிக்காய்கள். ஆனால் இப்படியொன்று இல்லை என்பதுபோல் மறுபுறம் இந்த யாழ்ப்பாணியப் புத்திஜீவிகளும் அதன் லொபியிசத்தில் தொங்கும் அரசியல்வாதிகளும் ஏன் யாழ்ப்பாணிய இலக்கியவாதிகளும் இன்றும் இனஅழிப்பு மனித உரிமை மீறல் என்று தனது சனத்தை முடிந்தவரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மிகவும் வேடிக்கையானது. அவர்கள் அவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்ற மறந்து விட்டால் தங்களைத் தமது மக்கள் கைவிட்டுவிடுவார்கள் என்பது நன்கு தெரிந்தவர்கள் அவர்கள். அப்படித்தான் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாகக் கதை நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒருவன் முழுப் பித்தலாட்டக்காரன் என்பது தெரிந்த பிறகும் அவனை அண்டிப் பிழைக்க வேண்டிய இடத்தில்த்தான் பழக்கப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள் அதன் மக்கள். உண்மையில் வடபகுதியில் நமது தேசிய விடுதலையின் பெயரில் நடத்தப்பட்ட பல்வேறு அனர்த்தங்களின் நினைவுகளும் நினைவுச் சின்னங்களும் நம்மிடமிருந்து அடையாளம் இல்லாது அழிக்கப்பட்டு விட்டன என்பது உண்மைதான். அவற்றைப் பாதுகாத்து வைக்கும் படியான சூழலை இந்தத் தமிழ்த் தேசிய வெறியர்கள் யாருக்கும் கொடுத்ததில்லை. இன்று வரை அதுகுறித்த ஒரு தடயமும் யாரிடமும் இல்லை. ஆனால் அதுகுறித்து எந்தக் கவலையுமற்ற இந்த யாழ்ப்பாணியச் சிந்தனைக் கும்பல் தாங்கள் செய்ததை மறந்து, அல்லது அதனைப் பேசுவதைத் தவிர்த்து தமக்கு சார்பான நினைவிடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் அழிப்பது பற்றி மட்டுமே அழுகிறது.

இந்த யாழ்ப்பாணியத் தமிழ்த் தேசியவாதிகளுக்கு என்றும் இடைஞ்சலாக உறுத்திக் கொண்டிருக்கும் இரண்டு நினைவிடங்கள் எப்பொழுதும் அவர்களுக்கு அருவருப்பினை உண்டாக்குபவையாகவே இருக்கும்.

ஒன்று காத்தான்குடிப் பள்ளிவாசல்.

மற்றது வெருகல் படுகொலைத் தூபி.

இதுவும் ஒரு வேடிக்கைதான். வரலாறு இதனையொரு 'போலி அழுகை' என்று பதிவு செய்யும் என்று தெரிந்தும் அழுகிறது என்பது வேடிக்கை இல்லாமல் வேறு என்ன?

இந்த மண்ணில் தனியே உங்கள் மாவீரர்கள் மட்டும் துயிலவில்லை. உங்களால் துரோகி எனத் தீர்த்த மண்ணின் மனிதர்களும் துயில்கிறார்கள் என்பதனை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களின் கதையைப் போசாது நீங்கள் சொல்லும் கதைகளை மட்டும் வரலாறு ஒருபொழுதும் கேட்கப் போவதேயில்லை. உங்களின் இருப்பிற்காக வேண்டுமென்றால் நீங்கள் பேசாது இருக்கலாம். ஆனால் வரலாறு அப்படியிருந்ததில்லை. அதுகுறித்து இனியாவது சிந்திக்கத் தொடங்குங்கள்.

யாழ்ப்பாணத்தின் நல்லூர் வைமன் றோட்டில் உள்ள கந்தன் கருணை என்றழைக்கப்பட்ட வீடு ஈழவிடுதலைப் போராட்டத்தின் மிக முக்கிய நினைவுகளில் ஒன்று. ஈழவிடுதலையின் மற்றய இயக்கப் போராளிகளில் 58 பேரளவில் அடைத்து வைக்கப்பட்டு புலிகளால் படுகொலை செய்யப்பட்ட வீட்டின் அடையாளம் இது. ஆனால் இந்த வீட்டினைச் சுற்றியிருந்தவர்களாலோ அல்லது அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய எந்தவொரு ஊடகங்களாலோ அவை எதுவும் பதிவு செய்யப் படவில்லை. இன்றிருக்கும் அந்த வீட்டின் வடிவம் கூட அதுதானா என்றும் சரியாகத் தெரியவில்லை. ஆனால் இன்று அந்த வீட்டின் நிழற்படம் ஒரு முக்கிமான நினைவுச்சின்னம். அந்த வீடு நினைவுச் சின்னமாக இருக்குமா என்றால் இல்லை. அப்படியிருக்க இந்தத் தமிழ்த் தேசிய வெறியர்கள் ஒருபொழுதும் விடப் போவதில்லை. அதுவும் யாழ்ப்பாணத்தில்?

வடபகுதியில் இன்னொரு முக்கியமான நினைவுச் சின்னமாக இருக்க வேண்டியது, புலிகளது துணுக்காய் வதை முகாம். அப்படியொரு வதை முகாம் இருந்ததையே அதிலிருந்து தப்பியவர்கள் சொல்லி வெளியில் தெரிய வேண்டிய நிலைதான் நமது தமிழீழத்தின் மக்களுக்கிருந்த நிலை. அப்படியிருக்க, வெறும் எழுத்துப் பதிவுகளைத் தாண்டி எப்படி அதனுடைய அடையாளத்தைக் காப்பது? அதனையும் விட, ஏறக்குறை 300 பேருக்கும் குறையாது தினமும் அங்கு கைதிகள் தடுத்து வைக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தார்கள் என்று சொல்லப்படும் கதையை இன்றிருக்கின்ற புதிய தமிழ்த் தேசிய வெறி கொண்டவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதேயில்லை. ஆக, அப்படியானவர்களால் அதனை ஒரு நினைவுச் சின்னமாக மனதளவிலேனும் வைத்திருக்க முடியுமா என்றால், முடியவே முடியாது. அங்கே வேலைக்காகச் சென்று வந்தவர்களும் அங்கே புலிகளில் பணியாற்றியவர்களும் அங்கிருந்த சிறைக் கைதி களாலுமே அதன் கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.



**கந்தன் கருணைப் படுகொலையின் சாட்சி•**

வடபகுதியில் இன்னொரு முக்கியமான நினைவுச் சின்னமாக இருக்க வேண்டியது, புலிகளது துணுக்காய் வதை முகாம். அப்படியொரு வதை முகாம் இருந்ததையே அதிலிருந்து தப்பியவர்கள் சொல்லி வெளியில் தெரிய வேண்டிய நிலைதான் நமது தமிழீழத்தின் மக்களுக்கிருந்த நிலை.

அப்படியிருக்க, வெறும் எழுத்துப் பதிவுகளைத் தாண்டி எப்படி அதனுடைய அடையாளத்தைக் காப்பது? அதனையும் விட, ஏறக்குறை 300 பேருக்கும் குறையாது தினமும் அங்கு கைதிகள் தடுத்து வைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தார்கள் என்று சொல்லப்படும் கதையை இன்றிருக்கின்ற புதிய தமிழ்த் தேசிய வெறி கொண்டவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதேயில்லை.

ஆனாலும் அவற்றை வரலாற்றிலிருந்து இந்த யாழ்பாணியத் தேசியவாதிகளால்அழித்துவிட வேமுடியாது.

ஆக, தமது நினைவுச் சின்னங்கள் அழிக்கப்படுவது பற்றி மட்டும் கவலை கொள்ளும் இவர்கள் அதிகம் பேசிவரும் 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' - மற்றும் 'சிறைக்கைதிகள் விடுதலை' - 'இன அழிப்பு' என்று எதுவுமே மருந்தளவும் கருத்துக்கு எடுக்கப்படாமல் இருப்பதற்கு இவர்களது கடந்த காலச் சுயநலச் செயற்பாடே முதன்மைக் காரணமாகிறது. கொலை செய்தவனே அஞ்சலி செய்ய முனையும் செயல் போன்றதுதானே இது.

வன்னியின் க.பொ. சாதாரண மற்றும் உயர்தர மாணவிகள் 53 பேரைக் காவு கொடுத்த புலிகளது செஞ்சோலைப் படுகொலைக்கான நினைவுத் தூபி ஒன்று கட்டப்பட்டதாகச் செய்திகள் அறிந்தாலும் (இந்த செஞ்சோலை அரசியல் குறித்துத் தனிப் பதிவாக எழுத வேண்டும்.) அது யாருடைய கதைகளிலும் தொடரப்படவில்லை. ஏனெனில் அந்தக் கொலைகளின் பின் இருந்த கதைகள் அதி கேவலமானவை. மிகத் திட்டமிடப்பட்டவை.

அந்தக் கொலைகள் நடைபெற்ற நாட்களில் புலிகளது ஊடகங்களும் அதன் தொடர் உளறலாய் உசுப்பேத்திய புலம்பெயர் ஊடகங்களும் செய்த செயல்கள் நல்ல சமூகத்தின் செயற்பாடுகளாய் இருந்ததில்லை. அவ்வளவு கேவலமான நடத்தை கெட்ட செயல் அது. மோசமான மனித அவலம்.

வன்னியின் க. பொ. சாதாரண மற்றும் உயர்தர மாணவிகள் 53 பேரைக் காவு கொடுத்த புலிகளது செஞ்சோலைப் படுகொலைக்கான நினைவுத் தூபி ஒன்று கட்டப்பட்டதாகச் செய்திகள் அறிந்தாலும் (இந்த செஞ்சோலை அரசியல் குறித்துத் தனிப் பதிவாக எழுத வேண்டும்.) அது யாருடைய கதைகளிலும் தொடரப்படவில்லை. ஏனெனில் அந்தக் கொலைகளின் பின் இருந்த கதைகள் அதி கேவலமானவை. மிகத் திட்டமிடப்பட்டவை. அந்தக் கொலைகள் நடைபெற்ற நாட்களில் புலிகளது ஊடகங்களும் அதன் தொடர் உளறலாய் உசுப்பேத்திய புலம்பெயர் ஊடகங்களும் செய்த செயல்கள் நல்ல சமூகத்தின் செயற்பாடுகளாய் இருந்ததில்லை. அவ்வளவு கேவலமான நடத்தை கெட்ட செயல் அது. மோசமான மனித அவலம்.

ஆனால் இந்தத் தேசிய வெறிக்கும்பல் இந்த நினைவுகள் எல்லாவற்றையும் மறந்து தனியே முள்ளிவாய்க்கால் கஞ்சி, முள்ளிவாய்க்கால் வாய்ப்பன் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி என்று தன்னுடைய சமூகத்தைத் தொடர்ந்தும் ஏமாற்றுகிறது. ஒரு சமூகத்தின் மீதான கரிசனையின் நிமித்தம் தான் செய்யவேண்டியதைச் செய்யாது, தனியே தற்குறித் தனத்தோடு கருத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்த முட்டாள் கூட்டத்திற்குள் தன்னை அறிவாளி என்று சொல்லிக் கொண்டு திரியும் யாழ்ப்பாணியப் புத்திசாலிகளுக்குக் கூட தன்னுடைய சமூகம் சார்ந்து சிந்திக்கத் தெரியவில்லை. 1986களில் தமிழீழ விடுதலை இயக்கப் போராளிகளை நெருப்பிலிட்டுக் கொழுத்திய போது அதற்குள் எரிந்தவர்கள் அதிகமாகக் கிழக்கு மாகாணத்தவர்கள் என்ற கவலையோ அல்லது மனக் கஸ்டமோ இன்றுவரை அவர்களுக்கு இல்லை. அதுகுறித்து எழுதப்படும்- பேசப்படும் எந்தக் கருத்துக்களையும் அது தன்னளவில் கவனியாததுபோல் கடந்து செல்ல முனைகிறது. ஆனால் இந்த முட்டாள்க் கூட்டம் மறுபுறம், தான் ஒரு சிந்தனையான சமூகம் அறிவாளிச் சமூகம் என அது தன்னைத் தானே சொல்லிக் கொள்கிறது.

நடந்து முடிந்த ஈழவிடுதலைப் போராட்டம் என்பது கிழக்கு மாகாணத்தவர்களையும் வன்னி மாவட்டப் பிரதேச மக்களையும் மலையக மக்களையும் மனதார ஆதரித்து நின்றது என அவர்களில் யார்தான் காதில் பூ சுத்தினாலும் வரலாறு அவர்களை விடுதலை செய்யவே செய்யாது. தமிழ்த் தேசியக் கருத்தியலின் ஆரம்பத்திலிருந்து வடக்குக்கிழக்கு இணைக்கப் பட்டிருந்ததாகச் சொல்லப் பட்டாலும், அவை உளமார்ந்த நிலையில் எவ்வித இணைப்பும் அரவணைப்பும் இல்லாமலேதான் தொடர்ந்தும் இருந்து வந்தன. எவ்வாறு முஸ்லீம் மக்களையும் மலையக மக்களையும் வன்னி மக்களையும் தன்னுடைய சிறகுகளால் அரவணைப்பதாக அது படங்காட்டினாலும், சந்தர்ப்பங்கள் கிடைத்த ஒவ்வொரு காலத்திலேயும் அவ்வாறு இல்லை;. இல்லை; இல்லவேயில்லை என்பதனை இந்தத் தமிழ்த் தேசியம் வெளிக்காட்டியே வந்திருக்கிறது.

ஆனால் எக்காலத்திலும் ஒட்டாததும் ஒத்துப் போகாததுமான கிழக்கினை அது தொடர்ந்து வெளிப்படையாகவே விலக்கித்தான் வைத்திருக்கிறது. கிழக்கு வேறு நாங்கள் வேறு என்ற அந்த விலகல் நஞ்சை வடக்கின் ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்ப்பாலில் இருநதே ஊட்டப்படுகிறது. இன்று வரை ஒரு வெறியாக வளர அதுதான் முக்கிய காரணமாக இருந்து வருகிறது. வடபகுதியின் சாதிப் படிநிலை வேறுபாடின்றி அவர்கள் அனைவரும் ஒருமிக்கும் இடம் இந்த பிரதேசவாதம். அதுதான். அதனால்த்தான் அதன் கொடூரம் அதிகம். இன்றுவரை அது கொடுத்த விலையும் அதிகம்.

தன்னுடைய அறிவு சார்ந்து தேடமுடியாத ஒருவர் தன்வாழ் காலத்தில் பாதிக்காலம் வரை தான் வாழும் பிராந்தியங்களை விட்டு வேறு எங்கும் போய்வராத ஒருவர் தன்னுடைய பெற்றோரும் தன்னுடைய சமூகமும் கொண்டிருக்கும் கதைகளை மட்டுமே நம்பி

வளவேண்டியிருக்கும். அவ்வாறு வளர்ந்தவர்களது நிலை அதிகமாக இப்படியானதுதான். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணியர்களுக்கு கிடைத்த அனுபவங்கள் இவ்வாறுதான் இருக்கிறது. அதனால்த்தான் தன்னளவில் எந்தத் தேடலுமற்று எந்தக் கேள்வியுமற்று, மட்டக்களப்பான் மடையன் என்றும் சிங்களவனை மோட்டுச் சிங்களவன் என்றும் மலையகத்தைச் சேர்ந்தவர்களைத் தோட்டக்காட்டான் என்றும் வன்னியைப் பட்டிக்காடு என்றும் அவர்கள் அனைவராலும் எந்தக் கூச்சமும் இல்லாது பொதுவெளியில் கூடப் பேசமுடிகிறது. அவர்களுக்குள் அப்படியொரு திமிரை அந்த யாழ்ப்பாணியச் சிந்தனை கொடுத்துவிட்டதன் வெளிப்பாடுதான் அது.

இன்னொரு சமூகத்தை தன்னுடைய அறிவால் அறியாது கருத்துரைத்து வரும் இந்த யாழ்ப்பாணியச் சிந்தனைச் சமூகத்திற்கு, அதனை அறிந்த பின்னாலும் சிந்தனையில் தெளிவு வருவதில்லை. நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவால் இந்த சமூகத்திற்கு பல வேறுபட்ட சூழலில் வாழக்கிடைத்த போதும் எந்த வாழ்நிலையையும் புரிந்து கொள்ள முடியாதிருப்பதற்கு முக்கிய காரணம் அது தன்னை அனைத்து சமூகங்களிலிருந்தும் வேறானது என்றும் தாங்கள் மற்றவர்களைவிடப் புனிதமானவர்கள் என்றும் சிந்திக்கும் முட்டாள் அறிவு மட்டுந்தான் காரணமாகிக இருக்கிறது. இப்படியான ஒரு சிந்தனையின் வடிவில்த்தான்ஒருவர் எங்கிருந்து வருகிறார், எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்றுந் தெரியாத ஒருவரைப் பார்த்து 'யாழ்ப்பாணத்தில எவடம்?' என்று கேட்டுவிட முடிகிறது.

ஒரு அறிவுசார் சமூகமாகவும் ஒரு திறந்த வெளிக் கல்விச் சமூகவும் கிடைத்த தருணங்களிலெல்லாம் தன்னை அடையாளமிட்டு வரும் இந்த யாழ்ப்பாணிய சமூகம் நடந்து முடிந்த யுத்தங்களைப் போராட்டம் என வரையறுக்கும் விளக்கங்களை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். இதன் தர்க்கங்களை நீங்கள் அனைவரும் சந்தித்த பல்வேறு உரையாடற் தளங்களில் அனுபவித்தும் இருப்பீர்கள். இவை எதுவும் தற்செயலானதோ அன்றி அறிவீனத்தாலானதோ இல்லை. இது மிகவும் திட்டமிட்ட செயல் முறை. இது தொடர் படிமுறை.

**தம்முடைய ஊரில் பறையா, நளவா, சக்கிலியா என்று பேசி சண்டித்தனம் செய்த தன் அப்பன்மாரைப் போல் இருக்காது அதே மனநிலையை மடை மாற்றித் தன்னைப் படித்த சமூகம் என்று காட்டிக் கொள்ள சோடியம், பொட்டாசியம்,பொஸ்பரசு என்று அடையாளம் காட்டிப் பேசத் தொடங்கியது இந்த நயவஞ்சகக் கூட்டம்.**

இன்றுள்ள சமூக வலைத்தளங்களின் வருகையின் பின் தங்கள் அனைவரது உண்மையான முகத்தினை அவர்கள் வெளிப்படையாகவே காட்டி வருகிறார்கள். அவர்களின் அன்றாட முகநூல் பதிவுகள் அதற்குச் சாட்சியாகத்தான் இருக்கின்றன. ஒரு கருத்துநிலை குறித்து தமது எதிர்க்கருத்துக்களை அறிவின் தேடலோடு விபரமாக தெரிவிக்க வேண்டிய எந்தக் கடப்பாடும் இருப்பதாக அவர்கள் ஒருபொழுதிலும் உணர்வதேயில்லை. அது அவர்களுக்குத் தேவையுமல்ல. ஒருவர் ஒருவரைத் துரோகி என்றால் ஊரோடு ஒத்தோதித் துரோகி என்ற கதைதான். சுயதேடலற்ற கொடுமையான ஒரு சிந்தனைச் சமூகம். இவர்களது முகநூல் பக்கங்களைக் கூர்ந்து நோக்கினால் அதன் படிமுறை நன்றாக விளங்கும். ஆனால் இந்தச் சமூகம், தான் பகுத்தறிவுள்ள சமூகம் என்று காட்டப் பெரியாரையும் தன் துணைக்மைக்கும். ஆனால் சுயம் மாறாது.

தம்முடைய ஊரில் பறையா; நளவா; சக்கிலியா; என்று பேசி சண்டித்தனம் செய்த தன் அப்பன்மாரைப் போல் இருக்காது அதே மனநிலையை மடை மாற்றித் தன்னைப் படித்த சமூகம் என்று காட்டிக் கொள்ள சோடியம் பொட்டாசியம் பொஸ்பரசு என்று அடையாளம் காட்டிப் பேசத் தொடங்கியது இந்த நயவஞ்சகக் கூட்டம்.

பட்டறிவில் கிடைத்த எந்த அனுபவங்களிலிருந்தும் அது தன்னை மாற்றிவிடாதிருப்பதனை நாங்கள் கூர்ந்து நோக்கினால், அதன் உள்ளார்ந்த விளக்கம் பூரணமாக விளங்கும். எப்படி அது தன்னை மாற்றத்துக்கு உட்படுத்தவில்லை என்பதனை விளக்குவது ஒன்றும் ஒரு பெரிய விடயமல்ல. ஆனால் அது ஒரு பொழுதும் தன்னை விளங்கிக்கொள்வதே இல்லை என்பதுதான் பெரியதும் அதன் முக்கியமானதுமான கொடூரம்.

புகலிடச் சூழலில் வாழ நேர்ந்த போது ஒரு வெற்று இனத்தவனால் 'பாக்கி' என்றும் 'கறுவல்' என்றும் 'ஊத்தை' என்றும் பழிக்கப்படும் போது கோபம் கொள்ளும் இவர்களால், தாங்கள் இன்னொரு சமூகத்தனைப் பழிப்பது பற்றிய கரிசனை இருப்பதேயில்லை. அதுகுறித்த சிந்தனைத் தெளிவு அவர்களுக்குள் வருவதேயில்லை.

*அப்படியாயின் இவர்கள் யார்?*

தங்களுடைய நினைவுகள்-நினைவிடங்கள் அழிக்கப்பட்ட போது கவலை கொள்ளும் இவர்கள், தாங்கள் அழித்த நினைவுகளையும் நினைவிடங்களையும் தன்னறிவில் தெரியாதிருக்கிறார்கள்.

*அப்படியாயின் இவர்கள் யார்?*

தங்களுக்கான ஆதாயத்தில்மட்டும் நின்று'காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' குறித்து அக்றைகொள்வதாகச் சொல்லும் இவர்கள், தங்களால் 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' குறித்துப் பேசுவதேயில்லை.

*அப்படியாயின் இவர்கள் யார்?* அ

# பேய்கள் வாழ்ந்த ஊர்




**விமல் குழந்தைவேலு**

வைத்த இடம் மறந்து அலைந்து திரியும் வாய் பேசா ஜீவனொன்றைப் போலவேதான் நானும்.

எதை தேடி எங்கு போகிறேனென்பது எனக்கே தெரியாததுபோல்தான் தினமும் ஆட்டோ பிடித்து ஏதாவது ஒரு இடத்தில் வந்திறங்கி கன நேரம் நின்று பார்த்துவிட்டு மீண்டும் ஊர் திரும்புவதே எனது ஒவ்வொரு வருட ஊர் வருகையின் போதிலான வாடிக்கையாயிருக்கிறது .

இன்றும்கூட இதோ இப்போது சாகாமத்துக்கு வந்து பட்டுப்போன போன இந்த புளியமரத்தின் கீழே நின்று எதையோ தேடிக்கொண்டுதான் இருக்கிறேன் .

குறிப்பிட்ட நேரத்தை சொல்லி இந்த நேரத்துக்கு வந்து கூட்டிச்செல்கிறேனென சொல்லி சென்ற ஆட்டோ பையனும் தன்னால் வர முடியாது வேறொரு ஆட்டோவை அனுப்புகிறேனண்ணா என தொலை பேசியில் சொல்லி ஒரு மணி நேரமாகியும் எந்த ஆட்டோவும் வரவில்லை. புளிய மரத்தையே பார்த்துக் கொண்டு நிற்கிறேன்.

இந்த புளிய மரத்தின் அருகே ஒரு தேனீர் கடை.

காலையில் ஒரு தடவை பின்னேரம் ஒரு தடவையென ஒரு நாளுக்கு இரண்டு தடவைகள் மட்டும் வந்து போகும் சய்யதுட வேனுக்காக காத்து நிற்கும் சேனை வயல் வேலை முடித்து வந்த சனங்கள்.

சாகாமத்துக்குளத்து மீன்கள் கருவாடாக காய காவல் இருக்கும் பொன்னி பெத்தா.

காற்றில் கலகலத்தாடும் புளியம் பழங்களுக்கு கல்லெறியும் சின்னஞ்சிறுசுகள்...

நாற்பது வருடங்களுக்கு முன்னைய காட்சி மன கண்முன்னே வந்து நின்று நிழடாடுகிறு.

இப்படியாக....

இழந்தவைகளை தேடி தினமும் நான் மேற்கொள்ளும் இந்த குறுகிய தூர சிறு பயணங்கள் பற்றி ஊருக்குள்ளும் என்னைப் பற்றி சிலர் பலவாறாக பேசாமலுமில்லை.

முழங்காலளவு தண்ணீரில் நடந்த ஒழுங்கைகளையும், வரிசையிலமர்ந்து வாய் விரித்து சூரிய நமஸ்காரம் ஆமைகள் கொண்ட அல்லியும் ஒல்லியும் நிறைந்த கேணிகளையும், சின்ன வாய் விட்டு வெடித்த கட்டுடைப்பில் புரண்டோடும் வெள்ள காட்சியையும், ஊருக்கே அடையாளமாக நின்ற வகை வகையான மரங்களையும், வெள்ளந்தியான மனிதர்களையும் மட்டுமல்ல அந்த மனிதர்களோடு வாழ்ந்த என்னூர் பேய்களையுமே நான் தேடுகிறேனென்றா இவர்களிடம் சொல்ல முடியும்? சொன்னால் எந்த காலத்தில் வந்து எதை தேடுகிறாயென கேலி பேசுவார்களென்பதும் எனக்கு தெரியாமலில்லை.

தொழில் நுட்பங்களின் வருகை, ஊரின் வளர்ச்சியும், ராணுவ பாதுகாப்பும் கருதிய ஏற்பாடுகள...

ஒவ்வொரு மாற்றத்துக்கும் ஏதோவொரு காரணம் இல்லாமல் இருக்காது....

எதுவாகவும் இருக்கட்டும் இதற்கிடையில் என்னூர் பேய்களுக்கு என்னாயிற்று ? எங்கே போயிற்று என்னூர் பேய்கள?

ஒரு காலத்தில் பேய்களும், மனிதர்களும் சேர்ந்து வாழ்ந்த என்னூர் வாழ்வுதான் எவ்வளவு சுவாரசியமானது என்பதை என்னைப்போல் யாராவது உணர்ந்திருப்பார்களா ?

பேய் ஆறன், பேய் வண்ணான், பேயாத்தை, பேய் நாவை, பேய் ஆலை என பேய்களை தங்கள் பெயர்களுடன் சேர்த்து பெருமை கொண்ட மனிதர்களுக்கும், மரங்களுக்கும் பேய்களுடன் வைத்திருந்த உறவுகள எப்படியானதென்பதை இந்த தலை முறையினர் அறிந்திருப்பார்களா?

எத்தனை வகையான பேய்கள்... அத்தனை வகை பேய்களையும் கண்ணால் கண்டான்,காதால் கேட்டேன் ... ஏன் நானே பேயோடு பேசினேனென்றெல்லாம் கதை சொன்னவர்களிடம் கதை கேட்டதைப்போலொரு சந்தர்ப்பம் இனியும் கிடைக்குமா?

ஊருக்கு வரும் போதுகளிலெல்லாம் நானும்தான் விசாரிக்கின்றேன் தற்போது ஊரில் பேயோடு தொடர்புடையவர்கள் யாராவது இருப்பார்களா என்று ...

பேய்களை கண்டவர்களின் பேரப்பிள்ளைகளே இப்போது வெளிநாடுகளில்,.. இனியும் பேயை கண்டேனென்ற பேய்க்கதையெல்லாம் பேசக்கூடாது. அப்படி பேயை கண்டாலும் கண்டும் காணாதது போல இருக்க வேண்டுமென்பது புலம் பெயர் பேரப்பிள்ளைகளின் ஓடர். அப்படி உனக்கு பேய்க்கதை வேண்டுமெனில் ஊருக்குள் மந்திரம் படித்த இளம் ஆட்கள் இரண்டொரு பேர் இருக்கிறார்கள். அவர்களின் நேரத்தை மெனக்கெடுத்தி கதை வாங்குவதென்றால் கொஞ்சம் செலவாகும் என்றார்கள். பரவாயில்லை என்று செலவும் செய்தேன். கஞ்சாவையும் தண்ணியையும் அடிச்சிற்று கனடா விசா எப்படி எடுக்கலாம், லண்டனுக்குள்ள இப்பவும் ஆட்கள எடுக்கிறாங்களோ, ஒஸ்ரேலியாவுக்கு என்னவென்று போகலாமென்ற கேள்விகளை கேட்டு என்னை பேயனாக்கியதை தவிர கடைசி வரைக்கும் ஒரு பேய் கதைகூட சொன்னானுகளில்லை.

அண்டைக்கு பிழைச்சிப்போயிற்று ... இப்ப என்னிட்ட நல்ல சூப்பரனான பேய் கதையொண்டு இருக்கு செற ஆவமோ என்டு அண்ணனுக்கிட்ட கேட்டு சொல் என்று தூது வேற.

கண் பார்வைக்கு எட்டும் தூரம் வரைக்கும் பார்க்கிறேன்,.. எந்த ஆட்டோவும் வருவதாக தெரியல்ல,...

கனகம்மா பெரியம்மா பகல் நேர சாப்பாட்டுக்கு வர சொல்லியிருந்தா. போகவில்லையென்றால் கனகம்மா பெரியம்மா அக்காவுடன் கோவிப்பா. அக்கா என்னோடு சேர்ந்துதான் கோவிப்பா. கட்டாயம் சாப்பாட்டுக்கு போகவே வேண்டும். சாப்பாடுக்குத்தான் என்றில்லாவிடினும் பெரியம்மாவின் சுக நலன் விசாரிக்கவாவது போயேயாக வேண்டும். அத்தோடு அன்னபூரணியைப் பற்றியும் பெரியம்மாவிடத்தில் கட்டாயம் விசாரிக்க வேண்டும்.

கனகம்மா பெரியம்மாவின் அம்மம்மாவும் எனது தாயாரின் பெரியம்மாவும் ஒன்றுவிட்ட சகோதரிகளாம். கனகம்மா பெரியம்மா எனக்கு தூரத்து உறவு தானென்றாலும் குடும்ப உறவுகளுக்குள் மிஞ்சி கிடப்பவர்களில் வயதில் மூத்தவர் பெரியம்மாதான் என்பதால் நாட்டுக்கு வரும் போதிலெல்லாம் பெரியம்மாவை பார்ப்பதென்பது கட்டாய கடமை போலாகிறு. கனகம்மா பெரியம்மா தூரத்து உறவென்றால் அதை விடவும். தூ ரத்து உறவுக்காரர்தான் அன்ன பூரணி. என்னிலும் இரண்டு மூன்று வயதுதான் கூடுதலாக இருக்கும்.

கடந்த வருடம் கனகம்மா பெரியம்மாவை பார்க்க போன போது அவவின் வீட்டில்தான் கன காலத்தின் பின் அன்ன பூரணியையும் காண கிடைத்தது. எதையோ பறி கொடுத்தது போல சோகமான முகத்துடன் சுவரையே பார்த்துக்கொண்டிருந்த அன்ன பூரணி என்னை கண்டதும் ‘சின்னம்மே நான் போயிற்று வாறன்கா ‘ என்று கொண்டு எழும்பி போயிற்றா .

‘சென்ட நாள் செல்லாது .... அறுதலி செத்துப்போகப் போறாள்டா மனே ... கோலத்த பார்த்தாய்தானே ... அவ்வளவும்

ஏக்கத்தாலையும் பெரு மூச்சாலையும் உருக்குலைஞ்சி போன உடம்பு ... ஆள பாரன் ... எப்படி இருந்தவள்..சுடலையில இருந்து ஒழும்பி வந்த எலும்பு கூடு போல.... பைத்தியக்காரிபோல ஆகிற்றாள்டா மனே '

'என்ன நடந்த பெரியம்மா அன்ன பூரணி அக்காவுக்கு?'

'என்ன நடந்ததென்டுதான் கேளு... நடந்ததுகள் ஒன்டோ ரெண்டோ சொல்றதுக்கு.... அடுக்கடுக்கா எத்தின சோதினைகளத்தான் கடந்து வந்திருக்காள்.... மூத்த மகன் இயக்கத்துக்கு போனான். போனவன் வரவேயில்ல.... வெடி பட்டு செத்துப் போயிற்றானாமெண்டு கேள்வி பட்டது மட்டும்தான் பெத்த புள்ளர கட்டையக்கூட கண்ணால காண குடுத்து வைக்காதவளாயிற்றாள் . அண்டைக்கு ஏங்கி விறைச்சி குந்துனவள்தான்.... அது மட்டுமோ .... புருசன்காரன் ஆரோ ஒருத்தியோட தொடர்பாமெண்டு அவனோடயும் தினம்தினம் அடிபுடி சண்டை. அவனுக்கிட்ட கேட்டா அப்பிடியெல்லாம் இல்ல அவளுக்கு பைத்தியம் முத்திப் போயிற்றெங்குறான். அது போக... செத்த பொடியனுக்கு புறகால புறந்த ரெண்டு பொடியனுகள் இருக்கானுகள். ரெண்டு பேரும் அவனவனுக்கு விரும்புன பொட்டைய கட்டிற்று போயிற்றானுகள்.அவளுகளும் புருசன்காரனுகள கைக்குள்ள வைச்சிக்கொண்டு தாய்காரிய எட்டிப்பார்க்ககூட உட மாட்டாளுகள். போதாக்குறைக்கு கிடந்த தாயதி பூமி மூண்டேக்கர்ல ஒரு துண்டு வளவுகூட இவளுக்கு குடுக்காம அவள்ற அண்ணன் தம்பி ரெண்டு பேரும் களவு எழுதி பிரிச்செடுத்திட்டானுகள். இதெல்லாம் நடந்து பத்து இருபது வருசமாய்ச்சி. எத்தின ஏமாத்தங்களத்தான் அவளும் தாங்குவாள் ..அதான் பைத்தியமாதிரி ஆகிற்றாள்டா மனே' அன்ன பூரணியின் கதையை கேட்க பரிதாபமாகத்தான் இருந்தது .

கனகம்மா பெரியம்மா வின் அம்மம்மா பற்றி நான் அண்மையிலேயே கேள்விப்பட்ட கதையொன்றை பற்றி கேட்கலாமென்று வந்தால் பெரியம்மா சொன்ன அன்ன பூரணியின் சோக வரலாறால் அன்று கேட்க முடியாமலேயே போய் விட்டது.

இன்று எப்படியும் கனகம்மா பெரியம்மாவிடம் அவவின் அம்மம்மா பற்றிய தகவலை கேட்டறிய வேண்டுமென்ற ஆவல் எனக்குள்.

கனகம்மா பெரியம்மாவுக்கே அம்மம்மா என்றால் நிச்சயமாக அவ ஆயிரத்து எண்ணூறுகளில் பிறந்தவவாகத்தான் இருக்க வேண்டும். அப்போது அவ குமரியாக இருந்த நாளொன்றின் நள்ளிரவில் அவவை பேய் கூட்டிச்சென்றதாகவும், கூட்டிச்சென்ற பேய் அவவை வன்புணர்ந்ததாகவும் ஊருக்குள் கதையாம். நல்ல வேளை அந்த வன்புணர்வில் அவ கருத்தரிக்கவே யில்லையாம். இருந்திருந்தால் இந்நேரத்தில் எங்கள் ஊரில் பேய் பரம்பரையொன்றும் வாழ்ந்திருக்கும். என்றாலும் அவவை பேய் கூட்டிப்போய் வன்புணர்ந்ததின் அடையாளமாக அவ சாகும் வரைக்கும் மட்டுமல்ல அவவின் வாரிசுகள் வாழ்ந்த வரைக்குமே பேயோ''ழி, பேயோ''ழிர புள்ள, பேயோ''ழிர பேரனென்றெல்லாம் அழைக்கப்பட்டதை நானும்கூட அறிந்திருக்கிறேன் . இயக்கங்கள் வந்த பின்னர்தான் அந்த பட்டப்பெயர் இல்லாமல் போனது.

இயக்கங்கள் ஊருக்குள் அரசு நடத்த ஆரம்பித்த கால கட்டத்தில் தடை செய்யப்பட வேண்டிய விடையங்களென ஊர் மக்களால் இயக்கங்களிடம் முன் வைத்த கோரிக்கைகளில் முதல் கோரிக்கை இந்த பேயோ''ழி பெயரழிப்பாகத்தான் இருந்தது. அதற்கேற்ப இயக்கங்களின் கட்டளைக்கமைய ஊருக்குள் அந்த பெயர் இல்லாமலேயே போயிற்று. அன்று கேட்க தவறிய அந்த கதை பற்றி இன்று கனகம்மா பெரியம்மாவிடம் கட்டாயம் கேட்க வேண்டும்.

பச்சை நிற ஆட்டோ ஒன்று வந்து சேர்ந்தது. ஏறி அமர்ந்தேன்.ஆட்டோ பையன் யாரென்று தெரியாது. வேண்டுமாயின் விசாரித்தால் எப்படியும் ஏதோ ஒரு உறவு முறைக்குள்தான் வந்தடங்குவான். ஆட்டோவின் வேகத்தை குறைத்து ஓடுங்க தம்பி என்ற போதுதான் அவனின் சீற்றின் பின் பக்கம் ஒட்டப்பட்டிருந்த பெரிய கடவுள் படத்தையும் கண்டேன்.

'எதுக்காக தம்பி முதுகு பக்கம் கடவுள் படத்தை ஒட்டி வைச்சிருக்கீங்க ..கஸ்டமர் கால் சீற்றில் படக்கூடாது என்பதற்காகவா?'

கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் பையன் திரும்பி என்னை பார்த்த பார்வையில் அவன் ஏதோ கதை சொல்ல போகிறானென்பது நன்றாகவே புரிந்தது.

'இல்லண்ணாச்சி... கால்

**அப்போது அவ குமரியாக இருந்த நாளொன்றின் நள்ளிரவில் அவவை பேய் கூட்டிச்சென்றதாகவும், கூட்டிச்சென்ற பேய் அவவை வன்புணர்ந்ததாகவும் ஊருக்குள் கதையாம்.**

**நல்ல வேளை அந்த வன்புணர்வில் அவ கருத்தரிக்கவே யில்லையாம். இருந்திருந்தால் இந்நேரத்தில் எங்கள் ஊரில் பேய் பரம்பரையொன்றும் வாழ்ந்திருக்கும். என்றாலும் அவவை பேய் கூட்டிப்போய் வன்புணர்ந்ததின் அடையாளமாக அவ சாகும் வரைக்கும் மட்டுமல்ல அவவின் வாரிசுகள் வாழ்ந்த வரைக்குமே பேயோ''ழி, பேயோ''ழிர புள்ள, பேயோ''ழிர பேரனென்றெல்லாம் அழைக்கப்பட்டதை நானும்கூட அறிந்திருக்கிறேன்**

படாமல் இருக்கிறதுக்கில்ல... கண்டதுகளும் ஆட்டோவுக்குள்ள ஏறாமல இருக்கத்தானண்ணாச்சி அத ஒட்டி வைச்சிருக்கன்.'

'கண்டதுகளுமா? என்னடா தம்பி.... கஸ்டமர்களை தவிர வேறெந்த கண்டதுகளும் ஆட்டோவில் ஏர்றது?'

'அதெல்லாம் உங்களுக்கு சொன்னாலும் விளங்காது அண்ணாச்சி . அண்ணாச்சி எந்த ஊர்? ..வெளிநாடோ? ..எங்க இருந்தண்ணாச்சி வந்திருக்கயள்?'

'நானும் இந்த ஊர்தான் தம்பி. நீங்க பிறக்க முதலே நான் போயிற்றன். என்னை உங்களுக்கு தெரியாட்டாலும் நீங்க நிச்சயமா எனக்கு உறவு முறையாகத்தான் இருப்பீங்க .. யார்ட மகன் .. யார்ட பேரன் தம்பி நீங்கள்?'

தகப்பன், தாத்தா பெயரை கேட்டறிந்ததில அவனுக்கும் எனக்குமான சித்தப்பா மகன் உறவு முறையை சொன்னாலும் அந்த பையன் என்னை அண்ணாச்சி என்றே அழைத்துக் கொண்டிருந்தான்.

'சொல்லுங்களன் தம்பி.. கண்டதுகளுமென்றால் யார் எவர் எத?'

'கண்டதுகளுமென்டால்.... என்னெண்டு சொல்றதண்ணாச்சி ...அது பயங்கர சாமானொண் டண்ணாச்சி ...அதுகள்ற பேரெல்லாம் சொல்லக்கூடாது, அண்ணாச்சி'

'பெயர் சொல்லக்கூடாத சாமானென்டால்... அது என்ன சாமான்டா தம்பி? அதுவும் ஆட்டோவுல ஏறுன சாமான்?'

'என்னண்ணாச்சி நீங்க உட மாட்டயள் போலான் கிடக்கு,. உடுங்கண்ணாச்சி ... வேணாம் .. அது பொறுத்த சாமானண்ணாச்சி .'

'சொல்லுங்க தம்பி ... நேரம் போகோணுமெல்லோ... கதை கேட்டுக்கொண்டே வாறனே டாப்பா.'

'சரி அண்ணாச்சி சொல்லுறன்.. சொல்ற கதைய நீங்க நம்பாட்டியும் பரவால்ல நக்கலாக மட்டும் சிரிக்க கூடாது,. சொல்லிற்றன் சரியோண்ணாச்சி ... ஏனெண்டாண்ணாச்சி அது சின்ன சாமானில்லண்ணாச்சி... பொறுத்த சாமானண்ணாச்சி அது. இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் கூசி குளிர்ற மாதிரித்தானண்ணாச்சி இருக்கும்.'

'நான் சிரிக்க மாட்டேன்டாபா, நீங்க சொல்லுங்க கதைய'

என்னை திரும்பி பார்த்து

**'கடையடியில நின்ட ஒள்ளுப்பம் நேரத்துக்க அந்த பொம்புளை இறங்கி இருப்பாவோ என்கிற சந்தேகத்துல திரும்பி போய் நான் வந்த நேரம் என்ட ஆட்டோக்குள்ள ஒரு பொம்புள இருந்தவ... அவ இவடத்தில இறங்கினவவோ என்டு கேட்டால் நீ எப்ப உன்ட ஆட்டோவுல பொம்புளைய ஏத்தி வந்த? வெட்டா வெறும் ஆட்டோவோட நீ மட்டும் தட்டத்தனியத்தானே வந்தாயென்டு கடைக்கார பொம்புளை சொல்றாவென்டா இவன் என்ட கூட்டாளி பொடியன் 'ஏன்டா லூசோடா உனக்கு... நீ எப்படா உன்ட ஆட்டோவுல பொம்புளைய ஏத்தி வந்த' என்டு அடியாத குறையா கேட்டானண்ணாச்சி.... எனக்கு காலும் ஓடல்ல கையும் ஓடல்லண்ணாச்சி... உடம்பெல்லாம் சிலிர்த்து குளிர தொடங்கிச் சண்ணாச்சி...அண்டைக்கு போய் பாயில படுத்த நான்தான். ஒரு மாசத்துக்குப் புறகுதான் தலை நிமிர்த்தி நடக்க முடிஞ்சிச்சி சண்ணாச்சி'**

நம்பலாமா இல்லையா என்று தனக்குள்ளேயே ஒரு முடிவெடுத்தாற்போல சொல்ல தொடங்கினான் பையன்.

'அண்ணாச்சியேய்! இப்பிடித் தான் ... இதே மாதிரியான ஒரு நாள் மத்தியான நேரத்தில தானண்ணாச்சி,.. கண்ணகி புரத்துக்கு ஒராள கொண்டாந்து இறக்கியுட்டுப் போட்டு திரும்பி போறனண்ணாச்சி '

நான் இடையில் ம்ம் சொல்லாததாலோ என்னமோ கதை தொடராமல் தொங்கிக் கொண்டிருந்தது.

'ம்ம், சொல்லுங்களன் தம்பி பிறகு?'

'அத இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் சிலிர்த்து குளிரு தண்ணாச்சி'

'தம்பி! அதைத்தான் சொல்லிற்றீங்களே,. கதை சொல்ல விருப்பம் இல்லையென்றால் வேண்டாம் விடுங்க தம்பி'

'இல்ல... இல்ல... சொல்றனண்ணாச்சி ... அண்டைக்கு அந்த ஆள உட்டுப்போட்டு கிறுகி வாறனண்ணாச்சி ... சிப்பித்திடல் சவக்காலை ஏத்தத்துல நிண்ட பொம்புளையொண்டு ஆட்டோக்கு கை காட்ட நானும் நிற்பாட்டி ஏத்திற்றனண்ணாச்சி. அக்கா எங்க்ககரைப்பற்று டவுணுக்கோ போற என்டு கேட்டன் ஓமென்டு சொல்லிச்சி சண்ணாச்சி'

'சரி பிறகு?'

'புறகண்ணாச்சி ... ஏத்திக் கொண்டு போறனண்ணாச்சி ... போற போது இடையில ஒரு கடையடிய என்ட கூட்டாளி பொடியனொருவன் நிற்கிறத கண்டு ஆட்டோவ நிற்பாட்டி அவனோட கதைச்சிற்று போறனண்ணாச்சி'

'ம்ம்'

'இதான் கடும் கட்டமொண்ட ண்ணாச்சி ... நீங்க கவனமா கேக்கோணும் சரியோண்ணாச்சி?'

'சரிடா தம்பி.... சொல்லுங்கோவன் கதைய '

'அண்ணாச்சியேய்.... அக்கரைப்பற்று டவுணுக்கு போயிற்றனண்ணாச்சி,.. ஆள இறக்கியுட்டுப்போட்டு காச வாங்குவமென்டு கிறுகி பார்த்தா அண்ணாச்சி,. நீங்க நம்ப மாட்டயனண்ணாச்சி, ஆட்டோவில இருந்து வந்த பொம்புளைய காணல்லண்ணாச்சி... யோயிச்சி பாருங்கண்ணாச்சி எனக்கு எப்பிடி இருந்திருக்கும் ?

'கடையடியில நின்ட ஒள்ளுப்பம் நேரத்துக்க அந்த பொம்புளை இறங்கி இருப்பாவோ என்கிற சந்தேகத்துல திரும்பி போய் நான் வந்த நேரம் என்ட

ஆட்டோக்குள்ள ஒரு பொம்புள இருந்தவ... அவ இவடத்தில இறங்கினவவோ என்டு கேட்டால் நீ எப்ப உன்ட ஆட்டோவுல பொம்புளைய ஏத்தி வந்த? வெட்டா வெறும் ஆட்டோவோட நீ மட்டும் தட்டத்தனியத்தானே வந்தாயென்டு கடைக்கார பொம்புளை சொல்றாவென்டா இவன் என்ட கூட்டாளி பொடியன் 'ஏன்டா லூசோடா உனக்கு... நீ எப்படா உன்ட ஆட்டோவுல பொம்புளைய ஏத்தி வந்த' என்டு அடியாத குறையா கேட்டானண்ணாச்சி.... எனக்கு காலும் ஓடல்ல கையும் ஓடல்லண்ணாச்சி... உடம்பெல்லாம் சிலிர்த்து குளிர தொடங்கிச் சண்ணாச்சி...அண்டைக்கு போய் பாயில படுத்த நான்தான். ஒரு மாசத்துக்குப் புறகுதான் தலை நிமிர்த்தி நடக்க முடிஞ்சிச்சி சண்ணாச்சி'

'ஓ,... அதுக்காகத்தானா தம்பி இந்த சாமி படம்?'

'ஓமண்ணாச்சி . அது பொல்லாத சாமானண்ணாச்சி ... இப்ப நல்லா கட்டி ஓதித்தான் ஒட்டியிருக்கன் . இனி அந்த சாமான நமக்குக் கிட்டையும் அணுகா தண்ணாச்சி................'

பெரியம்மாவின் வாசலுக்கு என்னை கொண்டு வந்து சேர்க்கும் வரையிலும் பையனின் மனசை புண்படுத்தும் விதமாக சிரித்து விடக்கூடாதென்பதில் நான் கவனமாகவே இருந்தேன்.

போன வருடம் பார்த்த போது இருந்த சந்தோசத்தின் கொஞ்சத்தை இழந்தது போலவே தெரிந்தது பெரியம்மாவின் முகமும் வரவேற்பும் .

'விரும்பினத போட்டு தின்னு மன' என்று கொண்டு தட்டில் சோறு வைத்தவவிடம் கேட்டேன்.

'என்ன பெரியம்மா ... முகத்தில சந்தோசத்த காணல்ல ... ஒரு மாதிரியாக இருக்க, ஏதும் சுகமில்லையோ ?'

'அப்பிடியொண்டுமில்ல... நாலைஞ்சி ராவா நல்ல நித்திரையில்ல மன.. இவள் நாசமா போவாள் அன்னபூரணி என்ன பாடத்தான் படுத்துறாள் மன .... பொழுது பட்டு விடியுற வரைக்கும் மனிசர நித்திரை கொள்ளயோ உடுறாள்... கண் கெட்டுப் பாவாள் '

'பாவம் ...ஏன் பெரியம்மா அப்பிடியெல்லாம் சொல்ற?'

'பாவமோ?. ஆரு அவளோ? அவள் படுத்துற பாட நீ கண்டாயெண்டா.... என்ன பாடத்தாள் மன படுத்துறாள் . '

'ம்ம்'

'எடேய் மனே ! நான் உனக்கிட்ட கேக்குறன் நீயே சொல்லு பார்ப்பம் '

'என்ன பெரியம்மா?'

'என்னென்டுதான் கேளு அவள்ற புதினத்த... எடேய் மன ஆயிரந்தான் கொடுமைக்காரனா இருந்தாலும் தொட்டு தாலி கட்டி படுத்து புள்ள பெத்த புருசனெல்லோடா அவன்.. அவனுக்கு இவள் இந்த வேலை செய்யலாமோடா மனே?'

'என்ன பெரியம்மா நடந்தது?'

'கேளாதடா மனே அந்த புதினத்த... அண்டைக்கு ராவு நிலவுழுந்த நேரத்துல நெருக்கொழுங்கைக்கால நடந்து வந்தவன புறத்தால வந்து முதுகுல புடிச்சி தள்ளயுட்டிருக்காள் மனே... இருட்டுல குப்புற உழுந்து முகமெல்லாத்தையும் வேலி கம்பி பிய்ச்சி வைச்சிருக்கு. பார்க்கேலாது அவன்ட முகத்த ...'

'ஓ,...'

'அது மட்டுமோ என்னதான் உண்ட பூமி வளவ அபகரிச்சானுகளென்டு நீ சொன்னாலும் உன்ட உடப்புறப்பு களெல்லோடி அவனுகள்.?'

'என்ன பெரியம்மா நடந்தது'

' கேளாத ..அந்த கொடுமைய கேளாத,.. ரெண்டு நாளைக்கு முந்தின ராவு அண்ணன் தம்பி ரெண்டு பேரும் சோறு தின்ன குந்தியிருக்கானுகள் .... இவள் அறுதலி அன்னபூரணி என்ன செய்தாள் தெரியுமோ மன... பின்னால நின்டு அவனுகள் தின்ட சோத்துக்க மண்ணள்ளி போட்டிருக்காளே ... இது நல்ல வேலையோ ... சொல்லு மனே பார்ப்பம் .'

'....... .... '

'அது மட்டுமோ ... நேத்து ராவு அந்த பைத்தியக்காரி செய்தத சொல்றன் கேளன்'

'சொல்லு பெரியம்மா'

'எடியே! நீ பெத்த புள்ளையள்தானேடி அதுகள்... கூட்டாளிமாரோட சேர்ந்திருந்து அவனுகள் கரம்போட்டு விளையாடினா இவளுக்கு என்ன மனே .... பின்னால வந்து நின்டு சில்லடுக்குன கரம்போட்டு பலகைய தூக்கி தலை கீழா கவுட்டுட்டுப்போட்டு போயிற்றாளே மனே ... பொழுது பட்டா போதும் பைத்தியக்காரி என்ன புதினங்கள காட்ட இருக்காளோ என்டு பயந்து சாக வேண்டித்தான் கிடக்கு மன ... என்ன தின்டு முடிச்சிற்றயோ மன?

'ஓம் பெரியம்மா ... நல்ல சாப்பாடு .... நான் போயிற்று வாறனே பெரியம்மா.'

பெரியம்மாவின் அம்மம்மாவின் கதை இன்றும் கேட்கப்பட சந்தர்பம் அமையல.

'ம்ம்,. போகவோ மன... போயிற்று வா மன.. நானும் போகத்தான்...'

'நீ எங்க பெரியம்மா போக?'

'இதென்ன மன கேள்வி,.இண்டைக்கு அவள் அன்ன பூரணிர எட்டாம் சடங்கெல்லோ மன ..உசிரோட இருந்த மட்டுக்கும் வளர்த்த நாய் மாதிரி காலடியில கிடந்தவளெல்லோ மன .. நான்தானே போய் உள்ளடுக்கு வேலையெல்லோம் செய்யோணும் .. இல்லெண்டா இரிக்கயோ உடுவாள் அவள். ராவைக்கு நீயும் வருவாய்தானே மன? வந்திடு மனே.'

'ஓம் பெரியம்மா கட்டாயம் வருவன்.'

யாரப்பா அது; எங்களூரில் இப்பெல்லாம் பேய்களே இல்லையென்று சொன்னது? எங்களூரில் பேய்கள் இருக்கிறது, இருக்கும்.

என் பெரியம்மாக்கள் வாழும் வரைக்கும்.


Life doesn't always give a #SecondChance.
Insure yourself. Secure your family.
647-868-6475
RAVI PONNUDURAI
Life Insurance
is your family's umbrella
to life's unexpected showers
647-868-6475




மல்லாவி 10

# இராசையா என்கிற மேதை

அ.விஜயன்

இராசையா அண்ணை நல்ல உயரமான தோற்றம். றலி சைக்கிள் ஒன்றில் 3ஆம் யூனிற் வாய்க்கால் கரையிலிருந்த அவரது வீட்டிலிருந்து காலை பத்து மணியளவில் மல்லாவிச் சந்திக்கு வந்துபோவார். மீன், மரக்கறி எனத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வார். அவரது குரல் எப்படியிருக்கும் என்று யாருக்கும் தெரியாத அளவில் அவரது கதை குறைவாக இருக்கும். சத்தம் போட்டுக் கதைக்காத சுபாவம்.

இராசையா அண்ணை மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவர். மல்லாவியில் வந்து குடியேறியவர். தச்சுத் தொழிலாளியான அவர் மேசை, கதிரை, கதவு, யன்னல் செய்வதில் ஆர்வம் காட்டியவர் அல்ல. மிக நுணுக்கமான, நுட்பமான வேலைகளைச் செய்வதில் வல்லவராக இருந்தார். அந்தக் காலத்தில் மல்லாவியில் வாழ்ந்த ஒரு விஞ்ஞானி என்று அவரைக் கூறலாம்.

அவரின் மகன் இரத்தினராசா (பெரிசு) என்னுடன் ஒன்றாகப் படித்தவன். சில சந்தர்ப்பங்களில் இராசையா அண்ணையின் வீட்டுக்குப் போயிருக்கிறேன். அவரது தொழிற்கூடத்தில் இருக்கின்ற அனைத்துப் பொருட்களும் புதினமானவையாகவும் நுட்பமானவையாகவும் அன்றாடம் மக்களால் பாவிக்கப்படாத பொருட்களாகவும் இருக்கும். அங்குள்ள சில கருவிகளை என்ன தேவைக்குப் பயன்படுத்துவது என்று ஊகித்து அறிய முடியாது. அந்தக் கருவிகள் அவரால் பயன்படுத்தப்படும்போது பார்த்தால் மட்டுமே புரியும்.

தனது தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகளையும் உபகரணங்களையும் அவரே கண்டுபிடித்திருந்தார். குறடுகள், சிறிதும் பெரிதுமான பிடிச் சிராவிகள், கம்பிகள் மற்றும் குழாய்களை வளைக்கும் உபகரணங்கள் எனப் பலவகையான பொருட்கள் அங்கிருக்கும். இந்தப் பொருட்கள் நுட்பமானவையாகவும் புதினமானவையாகவும் இருந்தமையால் அவற்றில் கண்டபடி கை வைக்கப் பயமாக இருக்கும். தூரத்தில் நின்ற பார்த்துவிட்டு வருவோம். அந்தப் பொருட்கள் பற்றி அவரிடம் விளக்கம் கேட்கவும் பயம். அவர் அந்த நேரத்தில் செய்யும் வேலைகளை பார்த்துவிட்டு வருவோம்.

அவரது பட்டறையில் எப்போதும் காணக்கூடிய விநோதமான பொருள் சொக்கன் எனப்படும் துவக்குகள் தான். பல்வேறு விதமான துப்பாக்கிகளைத் திருத்துவதற்காக அங்கு கொண்டுவருவார்கள். மன்னார், வவுனியா, வன்னியின் பல

பகுதிகளில் இருந்தும் இந்தத் துப்பாக்கிகளைச் சாக்கில் சுற்றிச் சைக்கிள் பாருடன் சேர்த்துக் கட்டிப் பக்குவமாகக் கொண்டுவருவார்கள். வன்னியின் எந்தப் பாகத்திலிருந்தும் காட்டுப் பாதைகளுக்கூடாக மல்லாவியை வந்து சேர்வதற்குப் பாதைகள் இருந்தன.

அந்தத் துப்பாக்கிகள் பெரும்பாலும் ஒரு குழல் அல்லது இரு குழல் துப்பாக்கிகளாக இருக்கும். துப்பாக்கியால் சுடுவதை ஒருபோதும் கண்டிராத நாங்கள் அத்துப்பாக்கிகளை விநோதப் பொருட்களாகப் பார்ப்பதுண்டு. றிப்பீற்றர் என்கிற துப்பாக்கியையும் அவரது பட்டறையிலேயே முதன் முதலில் கண்டேன். அந்தக் காலத்து இளைஞர்களுக்கு துப்பாக்கியைக் காண்பதே அரிதாக இருந்தது. எண்பதுகளின் பின் பாதிப் பகுதியில் பல்வேறுபட்ட துப்பாக்கிகளை மல்லாவி இளைஞர்கள் காண வாய்ப்பிருந்தது. எல்லா இயக்கங்களும் ஏட்டிக்குப் போட்டியாக விதம் விதமான துப்பாக்கிகளைக் காவித்திரிந்த காலமது.

இராசையா அண்ணையிடம் திருத்த வேலைகளுக்குக் கொண்டுவரும் துப்பாக்கிகளை ஒரு சில மணித்தியாலங்களிலோ ஒரு நாளிலோ முடித்து விட முடியாது. சிலவேளை 3 அல்லது 4 நாட்கள் இராசையா அண்ணரின் வீட்டில் தங்கி நின்று அவற்றைத் திருத்திய பின் எடுத்துச் செல்வார்கள்.

இத்துப்பாக்கிகளைக் கொண்டு வருபவர்கள் மல்லாவிப் பகுதிக்குப் புதியவர்கள். பெரும்பாலும் பழைய வன்னிக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களுக்குள் கதைத்துக் கொள்ளும்போது தமது ஊர்கள் மன்னகண்டல், பரப்புக்கால், திராட்டிகுளம், பழைய முருகண்டி, தென்னியன் குளம், கோட்டை கட்டி, ஒமந்தை, நட்டாங்கண்டல், கரிப்பட்ட முறிப்பு, ஒட்டுசுட்டான், குளவிசுட்டான், ஒலுமடு, முள்ளியவளை, புதூர், கல்லிருப்பு, வெள்ளாங்குளம், நானாட்டான், பறையனாளங்குளம் ஆகிய பல ஊர்களின் பெயர்களைக் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

இந்தத் துப்பாக்கிதாரிகள் மிகவும் தூரத்திலிருந்து இரகசியமாக இராசையரின் இடத்துக்கு வருவதற்குக் காரணம் துப்பாக்கிகளில் எத்தகைய பிழையாக இருந்தாலும் (இரும்பு, மரம்) அதைச் செய்யக்கூடிய ஒரே ஒரு நபராக அவர் மட்டுமே இருந்தார். இதற்கு மற்றோர் மறைமுகக் காரணமும் இருந்தது. அந்த நாட்களில் லைசன்ஸ் துவக்குகள் சிலரிடம் மாத்திரமே இருந்தன. பெரிய வயல்கள் உள்ளவர்கள் தமது வேளான்மையைச் சேதப்படுத்தும் காட்டு விலங்குகளைச் சுடுவதற்காக அரசால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டு இருந்தன.

ஆனால், வன்னிப் பரப்பில் புழக்கத்திலிருந்த பல துப்பாக்கிகளுக்கு லைசன்ஸ் எனப்படுகின்ற அரச அனுமதிப்பத்திரம் இல்லாத கள்ளத் துவக்குகளாக இருந்தன. அவை பெரும்பாலும் பிரித்தானியா, ஜேர்மனி, அமெரிக்கா, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்டவை. இத்துப்பாக்கிகள் எந்த நாட்டுத் தயாரிப்புகளாக இருந்தாலும் அவற்றை மீளுருவாக்கிப் புதிய துப்பாக்கியாகத் துப்பாக்கிச் சொந்தக்காரரிடம் கையளிக்கும்போது இராசையா அண்ணையும் துப்பாக்கிச் சொந்தக்காரனும் சந்தோசப்பட்டுக் கொள்வது கண்கொள்ளாக் காட்சி. அவை பழைய துப்பாக்கிளாக இருந்தாலும் இராசையா அண்ணையின் கைபட்ட பின்னர் பள பளப்பாகப் புதிய துப்பாக்கி போல இருக்கும். தேக்கு, சமண்டளை, கருங்காலி ஆகிய மரங்களைப் பயன்படுத்தி மீளுருவாக்கி வானிஸ் பூசுவார்.

இதைவிடப் பல்வேறு வர்ணங்களில் அதற்கான தோட்டாக்களையும் கொண்டு வருவார்கள். சுட்டபின் அதன் கோதை எடுத்துச் சிலர் காற்றாடி செய்து சைக்கிள்களில் பூட்டியிருப்பார்கள். சைக்கிள் ஓடும்போது அது சுற்றுவதைப் பார்க்க ஆசையாக இருக்கும்.

தோட்டாக்களில் பெரிய ஈயக்குண்டுள்ள தோட்டாக்களை எஸ்.ஜி என்பார்கள். அதைப் பாவித்து பன்றி, மான், மரை ஆகிய மிருகங்களைச் சுடுவது என்றும் நாலாம் நம்பர் என்கிற தோட்டாக்கள் மிகச் சிறிய ஈயக்குண்டுகள் அதிகம் இருப்பதால் அது சிதறிப் பறக்கும் தன்மை கொண்டதால் முயல், மயில், உக்குளான், மர அணில் ஆகியவற்றைச் சுடலாம் என்பதும் துப்பாக்கிக்காரர்களின் உரையாடல்கள் மூலம் அறிந்திருந்தேன். சிலவேளை பெரிய மிருகம் ஒன்றை இலக்கு வைத்து எஸ்.ஜி தோட்டாவைத் துப்பாக்கியில் பொருத்தி எடுத்துச் செல்லும் வழியில் முயலைக் கண்டுவிட்டால் மெதுவாக 4ஆம் நம்பர் தோட்டாவை மாற்றிச் சுட்டதையும் அவ்வாறு மாற்ற முயன்றபோது ஏற்பட்ட சிறிய சத்தத்தில் முயல் ஓடிவிட்ட புதினங்களையும் கதைத்துச் சிரிப்பார்கள். இவ்வாறான பல சுவாரசியங்களையும் ஆபத்துக்களையும் அவற்றை எவ்வாறு கையாண்டார்கள் என்பதையும் அறிய முடிந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வேறு பல திறமையான வேட்டைக்காரர்கள் பற்றிய கதைகளும் வந்துபோகும்.

சில துப்பாக்கிகளில் உரிய முறையில் இயக்கினாலும் குறி பார்த்துச் சுடும்போது



இலக்குப் பிழைப்பதாகக் கூறிக் கொண்டுவருவார்கள். அதற்குத் துப்பாக்கியிலுள்ள பிழை ஒருபுறமிருக்க குரங்கைச் சுடும்போது குரங்கு சுடவேண்டாம் என்று கையைக் காட்டினால் அதற்குப் பின் அந்தத் துப்பாக்கியால் இலக்குக்குச் சுடமுடியாதபடி குரங்கு சாக முதல் சாபம் போடுவதாகவும் கதைப்பார்கள். அது எந்தளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. வேட்டைக்காரர்களின் அனுபவத்தில் கூறப்படும் கதைகளே.

ஒரு துப்பாக்கியை இன்னொருவரிடமிருந்து விலைக்கு வாங்கும்போது அத்துப்பாக்கியின் சாதக பாதக விடயங்களை அறிந்து வாங்குவார்கள். ‘அவரின்ர துவக்கு சட்டப்படியிருக்கும்‘ என்று நல்ல துப்பாக்கியைப் பற்றிப் பேசிக்கொள்வார்கள்.

பழைய துப்பாக்கிகள் பலவற்றில் ஏதோ ஓர் உதிரிப்பாகம் பழுதாகியிருந்தால் அது எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்று கண்டுபிடித்து அதே உலோகத் துண்டு ஒன்றை வெட்டியெடுத்து, அதில் சிறிய துளை போட்டு அரத்தால் ராவி எடுத்து பொலிஷ் பண்ணி துப்பாக்கிக் கம்பனியில் தயாரித்த உதிரிப்பாகம் போலவே செய்து பொருத்தும் மேதைத்தனம் இராசையா அண்ணைக்கு இருந்தது. அந்தத் திறமையைக் குறிப்பிட்ட துப்பாக்கிக் கம்பனிகள் அறிந்திருந்தால் இராசையா அண்ணைக்கு விருது வழங்கிக் கௌரவித்திருப்பார்கள்.

அதே போன்ற திறமையாளர்களாக மோகன் என்றும் யோகன் என்றும் அழைக்கப்படும் அவரது கடைசி இரு மகன்களும் திகழ்ந்தார்கள். 80 களில் இயக்கங்கள் துப்பாக்கியோடு திரிந்த காலங்களில், அவர்கள் கொண்டு திரிந்த எஸ்.எம்.ஜி. போன்றதொரு ஆயுத்ததை அச்சு அசலாக அவர்கள் வடிவமைத்தார்கள். ஆனால் அது ஒவ்வொரு முறையும் தனித்தனியாக ரவையைச் செலுத்திச் சுட வேண்டும். அக்காலத்தில் இடியன் என்ற கட்டுத்துவக்கை வடிவமைக்கும் செயலில் மும்மரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்கள் அவர்கள். அதற்கிடையில் ஒரு ஈர்ப்பில் செய்யப்பட்ட செயல்தான் இந்த எஸ்.எம்.ஜி துப்பாக்கியின் வடிவமைப்பு.

துப்பாக்கியைக் கையாள்வது அவற்றைச் சுத்தப்படுத்தி வைத்திருப்பது நுட்பமாக வேட்டையாடுவது எல்லாமே ஒரு கலை. அந்தக் கலையில் பலர் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லோரது துப்பாக்கிகளையும் சீராக்கிக் கொடுக்கும் பாரிய பணி ஒன்றை மல்லாவி என்ற கிராமத்தின் ஏதோ ஒரு மூலையிலிருந்து இராசையா என்ற மனிதர் செய்து கொடுத்தார் என்பது அவரது சிறப்பாகும். மல்லாவியை வளம்படுத்தியவர்களில் இராசையா அண்ணையும் நிராகரிக்க முடியாத ஒரு மனிதர் என்பதைவிட அவர் ஒரு சாதனையாளர்.

இதைவிட அவர் மல்லாகத்தில் வாழ்ந்த காலத்திலேயே சிகரம் என்ற கோபுரம் போன்ற பல அடுக்குகள் கொண்ட கடவுள் படங்கள், நாயன்மார் படங்கள் எனப் பலவற்றையும் உள்ளடக்கிய சிகரத்தைத் தயாரித்தவரும் இராசையா அண்ணையே. அவரது சிகரம் 3ஆம் யூனிற் மகாவித்தியாலயத்தில் 1971, 1972 காலப்பகுதியில் நடந்த கலை விழா நிகழ்வின்போது பாடசாலை வீதியில் பொருத்தப்பட்டிருந்ததையும் நான் பார்த்துப் பிரமித்திருக்கிறேன். அது பற்றிப் பின்னர் விவரமாக எழுதுவேன்.






# கோணங்கித் தனம் காட்டும் புனிதமான அரக்கன்கள்!

மீ ரூ எழுச்சியின் பின்னால், பல்வேறு பிரபலங்களின் கடந்த காலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு, பிரேத பரிசோதனை செய்யப்படுவது போல, இவர் மீதும் தற்போது குற்றச்சாட்டுக்கள் எழுந்து, ஆடையறைக்குள் உள்ள எலும்புக்கூடுகள் வெளியே வந்துள்ளன. 74 வயதான டிபார்தியூ கடந்த இருபது வருட காலங்களுக்குள் 14 பெண்கள் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

ஜோர்ஜ் இ.

பிரெஞ்சுத் திரைப்பட உலகின் மெகா ஸ்டார் Gerard Depardieu என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. பிரெஞ்சுப் படங்களில் மட்டுமல்ல, கிரீன் கார்ட் என்ற ஹொலிவூட் ஆங்கிலப்படம், Cyrano de Bergerac என்ற சர்வதேச அளவில் வெற்றி பெற்ற படம் உட்பட்ட பல படங்கள் மூலமாக சர்வதேச அளவில் அறியப்பட்டிருந்தவர் அவர். பிரான்சில் அவர் புனிதமான அரக்கன் (Sacred monster) என்று அழைக்கப்படுகிறவர்.

தொண்ணூறுகளில் ரைம் சஞ்சிகையில் அட்டைப்படத்தோடு வெளிவந்திருந்த அவரது பேட்டியைப் படித்திருந்தேன். அவரது Cyrano de Bergerac படத்தைக் கூட அந்தக் காலங்களில் பார்த்திருந்தேன்.

மீ ரூ எழுச்சியின் பின்னால், பல்வேறு பிரபலங்களின் கடந்த காலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு, பிரேத பரிசோதனை செய்யப்படுவது போல, இவர் மீதும் தற்போது குற்றச்சாட்டுக்கள் எழுந்து, ஆடையறைக்குள் உள்ள எலும்புக்கூடுகள் வெளியே வந்துள்ளன. 74 வயதான டிபார்தியூ கடந்த இருபது வருட காலங்களுக்குள் 14 பெண்கள் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

2018 இல் பிரெஞ்சு நடிகையான சார்லட் ஆர்னோவைப் பாலியல் வல்லுறவு செய்ததான குற்றச்சாட்டுக் குறித்த விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், மீடியாபார்ட் எனப்படும் விசாரணைப் பத்திரிகையியல் இணையத்தளம் மேற்கொண்ட விசாரணையில் மற்றக் குற்றச்சாட்டுக்கள் வெளிவந்திருந்தன.

படப்பிடிப்புகளின் போது, முறையற்ற விதமாக தன்னோடு நடித்த நடிகைகள் மேல்

உடல் ரீதியான விரும்பத்தகாத செயற்பாடுகளைச் செய்ததாக இவர் மீது பலர் நடிகைகள் குற்றம் சாட்டியிருந்தனர். இந்தச் செயற்பாடுகள் அங்கு இருந்த மற்றவர்கள் முன்னால் நடந்ததாகவும் பல தடவைகள் சுற்றியிருந்தோர் சிரித்துக் கொண்டே அதை ஏற்றுக் கொண்டதாகவும் இந்தக் குற்றச்சாட்டுகள் மேலும் விபரிக்கின்றன.

சார்லட் ஆர்னோவை, அவர்களது குடும்ப நண்பரான டிபார்தியூ இரு தடவைகள் வல்லுறவு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டதை அடுத்து, டிபார்தியூ மீது விசாரணைகள் நடந்தபோதும், அவர் சிறைக்கு அனுப்பப்படவில்லை.

1978 இல் பிலிம் கொமன்ட் என்ற சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில், தனது வளரும் இளமைக்காலம் மோசமானதாக இருந்ததாகவும், அப்போது எண்ண முடியாத அளவு பால் வல்லுறவுகளில் தான் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டது பற்றி 1991 இல் ரைம் சஞ்சிகை இவரைக் கேட்டபோது, 'அது உண்மை, அந்தச் சூழ்நிலைகளில் அது வழமையானதாக இருந்தது' என்று கூறியிருந்தார். பின்னர் தான் அவ்வாறு கூறவில்லை என்று ரைம் சஞ்சிகை மீது மானநட்ட வழக்குத் தொடரப் போவதாகக் கூறிய போது, ரைம் சஞ்சிகை அந்தப் பேட்டி பதிவாக இருக்கிறது என்று கூறியிருந்தது.

டிபார்தியூவின் சரிவுக்கு மூலகாரணமாக இருந்தது இதுவரை வெளிவராத ஒரு விவரணப் படம். 2018 இல் வடகொரியாவின் எழுபதாம் சுதந்திர தினத்தை ஒட்டி, 70 ஆவது பிறந்த தினம் காணும் டிபார்தியூவை இயக்குனர் ஒருவர் ஆவணப்படம் ஒன்றை படம் பிடிக்கக் கூட்டிச் சென்றார். அப்போது அவர் பெண்கள் பற்றித் தெரிவித்த கருத்துக்கள் தொடங்கிய சர்ச்சை தான் இந்த மெகா ஸ்டாரை எரிந்து கருக வைத்திருக்கிறது.

இதையடுத்து கியூபெக் வழங்கிய கௌரவ விருது, பெல்ஜியம் வழங்கிய கௌரவப் பிரஜாவுரிமை என்பன மீளவும் பறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பிரான்சின் அதியுயர் கௌரவமான Legion of Honor கௌரவிப்பை பறிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. 1996 இல் பிரெஞ்சு ஜனாதிபதி ஜாக் சிராக் வழங்கிய இந்த விருது திருப்பிப் பெறப்படுவதற்கான விசாரணைகள் நடைபெறுகின்றன, அந்தக் குழுவே அதை முடிவு செய்யும் எனக் கூறிய பிரெஞ்சுக் கலாசார அமைச்சர், 'A legion of Honour distinguishes a man, an artist, and attitude, values' என்று கூறியிருக்கிறார். ஆனாலும் பிரெஞ்சு ஜனாதிபதி மக்ரோன் அவரது கௌரவம் பறிக்கப்பட மாட்டாது என்று கூறியிருக்கிறார்.

பிரான்சில் உள்ள கிரெவின் மியூசியத்தில் உள்ள அவரது மெழுகுச்சிலை அப்புறப்படுத்தப் பட்டுள்ளது. சுவிஸ் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று இவரது படங்களைத் திரையிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

இதைவிட தற்போது, ஸ்பெய்னைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் ஒருவர் 1995இல் தான் இவரைப் பேட்டி காணச் சென்ற சமயம் தன்னை வல்லுறவு செய்ததாக ஸ்பெய்ன் பொலிசாரிடம் முறையிட்டுள்ளார். நீண்ட நாட்களுக்கு முன்பாக இது நடந்ததால், பிரான்ஸ் சட்டப்படி இவ்வாறான குற்றங்களை விசாரிப்பதற்கான காலக்கெடு முடிந்திருக்கிறது. இதனாலேயே இந்த குற்றச்சாட்டு பற்றி ஸ்பெயினில் பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சமீப காலங்களில் டிபார்தியூ இதைத் தவிர பல்வேறு சர்ச்சைகளுக்குள் அகப்பட்டிருக்கிறார். பகிரங்கமாக கைகலப்புகளில் ஈடுபடுதல், போதையில் வாகனம் செலுத்துதல், விமானத்தில் பொது இடத்தில் சிறுநீர் கழித்தல் என்பதோடு ரஷ்ய ஜனாதிபதி புட்டினைப் பாராட்டியதுடன், ரஷ்யப் பாஸ்போர்ட்டையும் வைத்திருப்பது பலத்த சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருந்தது.

தன் மீதான இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்த டிபார்தியூ தன் மௌனத்தைக் கலைத்து, இதையெல்லாம் 'கும்பல் ஒன்று விசாரணையின்றி தூக்கில் போடுவதற்கு ஒப்பானது' (Lynching) என்று பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இவரது கடிதத்தை அடுத்து, பிரெஞ்சு திரையுலகின் 56 நடிகர்களும் பிரபலங்களும் Le Figaro பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் டிபார்தியூவுக்கு சார்பாக 'இவரைத் தாக்குவது என்பது கலை மீதான தாக்குதல்' என்று கூறியுள்ளனர். மற்றவர்களுக்கு நிருபிக்கப்படும் வரைக்கும் நிரபராதி என்றுள்ள வழமை, சினிமாவின் பெரும்புள்ளியானதால், இவருக்கு மறுக்கப்பட்டுள்ளது' என்று அவர் மீதான இந்தக் கண்டனங்களை lynching என்று கண்டனம் செய்துள்ளனர்.

இதற்குள் பிரெஞ்சு ஜனாதிபதி மக்ரோனும் டிபார்தியூவை நியாயப்படுத்த முயன்றிருக்கிறார். தான் டிபார்தியூவின் ரசிகன் என்றும் அவர் பிரான்சைப் பெருமைப்பட வைக்கிறார் என்றும், அவர் மீது தற்போது நடத்தப்படுவது மனித வேட்டை என்றும் மக்ரோன் வர்ணித்திருந்தார்.

இந்த பிரபலங்களின் டிபார்தியூவிற்கான ஆதரவைத் தொடர்ந்து அவர்களின் அந்த நிலைப்பாட்டைக் கண்டித்து பல அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

எண்ணாயிரம் பேர் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று, அவரது ஆதரவாளர்களின் முயற்சியை 'முகத்தில் துப்பியது போன்றது' என்று வர்ணித்ததுடன், அவர்கள் டிபார்தியூவை காப்பாற்ற முனைவது 'மாற்றங்களை மறுக்கின்ற பழைய உலகத்திற்கான சரியான உதாரணம்' என்று கூறியுள்ளது.

இன்னும் 70 பிரபலங்கள் கையெழுத்து வைத்து மீடியாபார்ட் இணையத்தில் வெளியிட்ட இன்னொரு கடிதம், 'கலைஞனை அழித்து விட யாரும் விரும்பவில்லை. ஆனால், அவருடைய திறமை அவருடைய நடவடிக்கைகளின் பெருமையீனத்தை அனுமதிக்கக் கூடாது' (The talent of Gerard Depardeu does not permit the

indignity of his behaviour) என்று தெரிவித்திருந்தது.

லிபரேஷன் தினசரியில் வெளிவந்த இன்னொரு கடிதம், 'கலையை நியாயப்படுத்துவது என்பது, கலைஞனாக இருப்பது என்பது எங்கள் எல்லாப் பொறுப்புகளில் இருந்தும் எங்களுக்கு விலக்கு அளிப்பதில்லை என்பதைச் சொல்லுவதும் தான்' (Defending art also means saying that being an artist should not exempt us from all responsibility) என்று தெரிவித்திருக்கிறது.

அறுநூறு பேர் கையெழுத்திட்ட கடிதத்தில், நாங்களும் நீதி தன் கடமையைச் செய்ய வேண்டும் என்று தான் விரும்புகிறோம். பெண்ணியவாதிகள் எப்போதும் கேட்பதும் அதைத் தான். ஆனால், பொலிசாரும் நீதித்துறையும் பாதிக்கப் பட்டவர்களுக்குச் செவி மடுக்காமலும், அவர்கள் சொல்வதை அக்கறையோடு கேட்காமலும் இருந்தால், டிபார்தியூ போன்றவர்களின் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் வழமையாக் குவதை மறுக்க வேண்டியது ஒவ்வொருவருடையவும் கடமை என்று குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், யதார்த்தத்தோடு தொடர்பில்லாத வழிபாட்டு உருவங்களால் கலை ஆக்கப்பட வேண்டியதில்லை. நட்சத்திரங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு கலை உரியதல்ல, அவர்களுடைய கட்டமைப்பிற்கு அடிபணிய கலை மறுக்கிறது' (Art doesn't have to be made by idols out of touch with reality. Art doesn't belong to the whims of stars. Art refuses to submit to their system) என்றும் மேலும் கூறியுள்ளனர்.

அத்தோடு, Production of art is not an abstraction situated outside social dynamics என்றும் கூறியுள்ளனர்.

டிபார்தியூவை ஆதரித்த பலரும், ஜனாதிபதி மக்ரோன் உட்பட, டிபார்தியூவினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நிலை பற்றி கருத்துக்கு எடுக்கவில்லை என்று பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தங்கள் மீது

**இன்றைக்கு கோணங்கிக்கு business as usual என்பது, கோணங்கியால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அழித்து விட முடியாத காயங்கள் பற்றியும் குறைந்த பட்ச அனுதாபம் கூடத் தெரிவிக்காமல், அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிற கேவலம் இந்தத் தமிழ் இலக்கியத்திற்கு உரியதாகத் தான் இருக்கிறது.**

பலமான எதிர்ப்பு கிளம்பியவுடன், ஆதரித்து வெளிவந்த கடிதத்தில் கையெழுத்திட்ட சிலர் தாங்கள் முழுமையாக அவரை ஆதரிக்கவில்லை என்று பின்வாங்கியிருக்கிறார்கள்,

உலக இலக்கியம் படித்தேன் என்று பெருமைப்பட்டு பேஸ்புக் பதிவு போடும் பழக்கம் இல்லாத நான், இதை அபத்தத்தில் எழுத நினைத்ததற்கான காரணம், கோணங்கி தன் அஞ்ஞாதவாசம் கலை(ழி)த்து இலக்கிய வட்டங்களுக்குள் திரும்பவும் எந்த நிராகரிப்புகளும் தவிர்ப்புகளும் இல்லாமல், 'நிலைமை வழமைக்குத் திரும்பியது' குறித்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான். இந்த 'ஒலக எலக்கிய' அயோக்கியக் கும்பலுக்கு, உலகம் நீங்கள் வாசிப்பதாகச் சொல்லும் இலக்கிய உலகம் இல்லை, உண்மையான உலகம் உங்களைப் போன்ற அயோக்கியர்களை மட்டும் கொண்டதில்லை, இப்படியான சமூக அக்கறை கொண்ட படைப்பாளிகளையும் கலைஞர்களையும் கொண்டிருக்கிறது என்று சொல்வதற்காகத் தான். இத்தனை சமூக அநீதிகளுக்குள்ளும், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கநெறிகளை மீறுகின்றவர்களை உலகம் அவர்களுடைய பெயருக்காகவும் புகழுக்காகவும் கண்டும் கடந்து போகாமல், தூக்கி எறியத் தயங்குவதில்லை என்று அறைந்து சொல்வதற்காக.

இலக்கியம் படைத்தல் என்பது சமூகத்திற்கு அப்பாற் பட்ட வெளிக்குள் ஒரு வெற்றிடத்திற்குள்ளோ, ஒரு குமிழுக்குள்ளோ உருவாக்கப் படுவதல்ல. அது சமூகத்திற்குள் அடக்கமானது.

கலையைப் படைத்தல் என்பது கலைஞனை அவனது குற்றங்கள் எதிலும் இருந்தும் விடுவிப்பதுமில்லை. அதிலும் குறிப்பாக தனது குற்றங்கள் குறித்து எந்தக் குற்றவுணர்வும், மன்னிப்புக் கோரலும் இல்லாத நிலையில் எந்தக் குற்றவாளிக்கும் மன்னிப்புக் கிடைப்பதில்லை.

சட்டமும் நீதியும் அவற்றுக்கான வரையறைகளுக்குள்ளேயே இயங்கு கின்றன. சட்டங்கள் நீதி என்பதை மட்டுமே கருத்தில் கொண்டவையும் இல்லை. இதனால் தான் காலம் கடந்த குற்றங்களை விசாரிக்க முடிவதில்லை. சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று எவருமே மௌனமாக இருந்தால், சட்டத்தை வளைக்க முடிந்தவர்கள் தப்பிக் கொள்ளத் தான் செய்வார்கள்.

கோணங்கி விவகாரத்தில் கோணங்கியை நியாயப் படுத்துகிறவர்கள் விழுந்தடித்து நியாயம் சொல்ல முயல்வது, பாதிக்கப்பட்டோர் முறைப்படி குற்றச்சாட்டுக்களை சுமத்தவில்லை என்பது தான்.

பாலியல் குற்றங்கள் என்பன திருட்டு, கொலை போன்ற குற்றங்கள் அல்ல. பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் பொதுவெளியில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் நிறைய. பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்படும்போதே, அவர்கள் விரும்பித் தான் அந்தச் சூழலை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று நம்ப வைக்க முயலும் உலகத்தில், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட ஆண்கள் நிலைமை சொல்ல வேண்டியதில்லை. இது சாதாரண சமூகத்தில் உள்ள பிரச்சனை.

சிந்திக்கத் தெரிந்தவர்கள்,

'காமன்மேன்'களை விட தங்களை மேலானவர்களாக நினைக்கும் எங்கள் இலக்கிய உலகில் இவ்வாறான ஒரு குற்றச்சாட்டு எழுந்ததும், அதை நியாயப்படுத்த முயன்றவர்களும், தங்களுக்குச் சம்பந்தமில்லாதது போலக் கடந்து போக முயன்றவர்களும் அதிகம்.

என்றைக்கோ நடந்த சம்பவங்களை 'ஏன் அப்போது செய்யாமல் இப்போது செய்கிறீர்களே?' என்று இங்கே மேற்குலகில் எவரும் சொல்வதில்லை. சட்டம் தன் கடமையைச் செய்கிறதோ என்னவோ, சமூகம் இது குறித்து மௌனமாகக் கடந்து போக நினைப்பதில்லை. ஊடகங்கள் இது குறித்த நியாயத்தைக் கோரிக் குரல் எழுப்புகின்றன.

சக கலைஞர்கள், படைப்பாளிகள் எல்லோருமே இந்தக் குற்றங்களை மூடி மறைக்க நினைப்பதில்லை. பலர் அவர்களுடனான தொடர்புகளைத் துண்டிக்கிறார்கள். சேர்ந்து செயற்பட மறுக்கிறார்கள்.

எவ்வளவு பெரிய நம்பர் வண் ஜாம்பவான்களாக இருந்தாலும் அவர்களின் சரிவு நிச்சயமானதாக இருக்கிறது. ஹொலிவூட்டின் முடிசூடாச் சக்கரவர்த்தியான ஹார்வி வைன்ஸ்டைனை சிறைக்கு அனுப்புவார்கள் என்ற யாருமே எதிர்பார்த்ததில்லை.

வரிக்கு வரியும், வாய்க்கு வாயும் அறம் பற்றிப் பீற்றக் கொள்கிற எங்கள் இலக்கியக் கும்பல் தான் இத்தனை கேவலமானதாக இருக்கிறது.

ஆசான் முதல் அடிப்பொடிகள் வரைக்கும், கோணங்கி குறித்து எந்த விதமன கண்டனங்களும் வெளியிட்டதில்லை. கோணங்கியை ஊர் விலக்கம் செய்ததில்லை.

இன்றைக்கு கோணங்கிக்கு business as usual என்பது, கோணங்கியால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அழித்து விட முடியாத காயங்கள் பற்றியும் குறைந்த பட்ச அனுதாபம் கூடத் தெரிவிக்காமல், அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிற கேவலம் இந்தத் தமிழ் இலக்கியத்திற்கு உரியதாகத் தான் இருக்கிறது. தங்களுடைய பிழைப்புக்கும் அங்கீகாரத்திற்கும் தெரிந்து கொண்டே இவ்வாறான சட்டத்திற்கும் சமூகத்திற்கும் எதிரான குற்றவாளிகளைப் பாதுகாப்பது தான் இவர்களுடைய சாதாரண இயல்பாக இருக்கிறது.

இதற்கான அடிப்படைக் காரணங்களில் முக்கியமான ஒன்று, கோணங்கி போன்றவர்கள் மாதிரியான, கேவலமான அயோக்கியர்களாகத் தான் இவர்கள் எல்லாம் இருப்பது தான்.

பத்துக் கோடிக்கு மேற்பட்ட சமூகத்தில் ஆயிரம் பிரதிகள் விற்க முடியாமல் முக்குகிறவர்கள் எல்லாம் தங்களை நம்பர் வண்கள் என்று அலட்டிக் கொள்வது மட்டுமன்றி, இலக்கியவாதி என்று தன்னை நினைத்துக் கொள்வது, ஜேம்ஸ் பொன்ட் மாதிரி, license to f... என்ற நினைப்பில் திரிகிற கவிஞர்கள், இலக்கியவாதிகள் எல்லாம் இங்கே தான் பெருகிப் போய் கிடக்கிறார்கள்.

இந்தச் சமூகம் பற்றி எனக்கு எந்தப் பெரிய மதிப்பீடுகளோ, நம்பிக்கைகளோ இல்லை.

ஆனால், இவர்களை எல்லாம் இந்தச் சமூகம் கணக்கெடுக்காமல் இருப்பது ஒன்றும் தற்செயலான நிகழ்வு இல்லை!

கட்சி ஆரம்பிக்கிற நடிகனுக்கு இருக்கிற எதிர்வினைகள் கூட, தங்களை ரசிகர்கள் மொய்க்கும் ஹீரோக்களாக நினைக்கும் இந்த அயோக்கியர்களின் கருத்துக்களுக்கு இந்தச் சமூகத்தில் இல்லை.

சமூகத்தின் அநீதிகளுக்காக ஒப்புக்காகவேனும் குரல் கொடுக்காத கூட்டம் பற்றி சமூகம் என்றைக்குமே அக்கறைப்படப் போவதில்லை. சமூகம் அதற்காக நன்றிக்கடன் செலுத்தப்போவதோ, தன்னுடைய தலைவர்களாகத் தெரிவு செய்யுமோ என்றெல்லாம் இல்லை.

ஆனால், சாதாரண மனிதர்களுக்கே சமூகக் கடமை என்ற என்று இருக்கும்போது, தங்களை அவர்களை விட மேலானவர்களாக நினைக்கும் இவர்களுக்கு தங்களுக்குள் நடந்த அநீதிகளுக்கே குரல் கொடுக்க முடியவில்லை என்றால், சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இவர்களுக்கு சமூக நீதியை விட, அங்கீகாரம், விருதுகள், பட்டியல்கள் என்ற மானம் கெட்ட பிழைப்புக்கான வழிகள் தான் முக்கியமானவையாக இருக்கின்றன. அது வரக்கூடிய எந்த வழியையும் இவர்கள் பகைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. தனிப்பட்ட நேரங்களில் சொல்கிற உண்மைகளைக் கூட, பகிரங்கமாகச் சொல்லத் தயாராக இல்லை.

தனியே ஒருவரோடு உறவு வைத்துக் கொள்வதை, consensual என்று சில நேரங்களில் நியாயப்படுத்த முடியலாம். தொடர்ச்சியான, பலர் மீதான அத்துமீறல்கள் predators எனப்படும் வகைக்குள் மட்டுமே அடக்க முடியும். பாதிக்கப்பட்டவர்களின் சமூக நிலைகளை, அதிகாரத்தில் கீழ்ப்பட்ட நிலையில் இருப்பதை வைத்து, தங்களை எதிர்க்கத் துணிவு இருக்காது, குற்றங்களில் இருந்து தப்பிக்கலாம் என்ற உணர்வோடு இவ்வாறான குற்றங்களைச் செய்கிறவர்கள், monsters எனப்படும் அரக்கர்களே.

அதில் sacred என்னும் புனிதத்திற்கு இடம் இல்லை.

படைப்பாளி என்பதால், யாரும் புனிதர்களாகவோ, ஏன் கேளாமலேயே பாவ மன்னிப்பு பெறத் தகுதியானவர்களோ இல்லை.

நான் அடிக்கடி சொல்வது போல, அறம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறவர்கள் அயோக்கியர் களாகவே இருக்கிறார்கள்.

கல்லெறிந்து கொல்ல முடியாதபடிக்கு, பாவங்களால் நிறைந்திருக்கிறார்கள்.

குற்றவாளி மன்னிக்கக் கூடிய அளவுக்கு இல்லாதவராயினும், கல்லெறிய முடியாத அளவுக்காவது இவர்களுக்கு மனச்சாட்சி இருக்கிறதே என்று நினைத்துக் கொள்வது கூட ஒரு வகையில் ஆறுதலாகத் தான் இருக்கிறது. அ



AI art: PK

# காதலா, சாதலா?

**நவமகன்**

இலண்டன் மாநகரில் மிகவும் பிரபலமான அந்த ஐ.ரி நிறுவனத்தின் அடித்தளத்தில் அமைந்திருந்த சிற்றுண்டியகத்தினுள் மதிய உணவைச் சுவைத்தபடியே அலைபேசித் திரையில் முகநூலை மேய்ந்துகொண்டிருந்த அட்ஷரா, ஒருகணம் துணுக்குற்றாள். ‘முன்னாள் காதலனால் இளம்பெண் சுட்டுக்கொலை’ என்ற செய்தித் தலைப்பை மீண்டும் வாசித்தபோது நெஞ்சு பதறியது. கவலை மட்டுமன்றி ஒருவித பயமும் அவளை ஆட்கொண்டது. அதற்குமேல் உணவில் ஒரு பருக்கை கூட அவளின் தொண்டைக் குழியில் இறங்கவில்லை. சட்டென எழுந்து லிப்டைப் பிடித்துக்கொண்டு ஐந்தாம் மாடியிலுள்ள தனது அலுவலக அறைக்குள் நுழைந்தவள், நோர்வேயிலிருந்து அந்தச் செய்தியைப் பகிர்ந்திருந்த

முகநூல் நண்பி ஷர்மியுடன் மெசன்சரில் தொடர்புகொண்டாள்.

'ஓம் அட்ஷரா. அந்தப் பிள்ளையை எனக்கு நல்லாத் தெரியும். ரெண்டு மாதப் பழக்கத்திலேயே அவன்ர குண இயல்புகள் அவளுக்குப் பிடிக்கயில்ல. அதனால பிரேக்கப் பண்ணியிருக்கிறாள். ஆனால், அவனோ விடுறதாயில்லாமல் அவளின்ர காரை உடைச்சு அதுக்குள்ள ஜி.பி.எஸ் டிராக்கரை மறைச்சு வைச்சு வேவுபார்த்து அவள் போறவாற இடமெல்லாம் முன்னும், பின்னுமாய் அலைஞ்சு திரிஞ்சு கரைச்சல் கொடுத்திருக்கிறான். ஏலாக் கடைசியில அவள் பொலிஸ்சுக்கு அறிவிச்சபோதுதான். ஜி.பி.எஸ் டிராக்கர் பிடிபட்டு அவனுக்கு மூண்டு மாதம் சிறையும் கிடைச்சது. சிறையால வந்தும் அவன் சும்மா இருக்கயில்ல. வாட்சப், வைப்பர் எண்டு எல்லாத் திலையும் அவளின்ர படங்களைப் போட்டு கண்டபடி கூடாமல் எழுதிக்கொண்டு திரிஞ்சவன், நேற்றுத் திடீரெண்டு அவளைப் பாலோவ் பண்ணிக் கடத்திக் கொண்டுபோய் காருக்குள்ளயே வைச்சுச் சுட்டுக் கொண்டுபோட்டான்' எனப் பெருஞ்சோகத்துடன் முடித்துக்கொண்டாள் ஷர்மி.

அதனைக் கேட்ட அட்ஷராவுக்கு தலை கிறுகிறுத்து மயக்கமே வந்துவிடும்போல் இருந்தது. மேசையிலிருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து வறண்டுபோன தொண்டையில் வார்த்துக் கொண்டாள். வேலையிற் சிதறிய கவனம் வேறு திசைகளில் வெட்டி ஓடியது. கடந்த காலக் கசப்பான சம்பவங்கள் எல்லாமே கண் முன்னே வந்து அவளை நிலைகுலையச் செய்தது. யன்னல் திரையை விலத்தி வெளியே எட்டிப் பார்த்தாள். அவள் ஆசைப்பட்டு வாங்கிய அவுடிக் கார் வேலைத்தளத் தரிப்பிடத்தில் அழகாய் நின்றது. அதனுள்ளும் ஜி.பி.எஸ். டிராக்கர் இருக்குமோ? நினைக்கவே நெஞ்சு படபடத்தது. இல்லையென்றால் எப்படி மிதுனால் எல்லா இடங்களிலும் என்னைப் பின்தொடர முடிகிறது? இந்த விடையத்தை அம்மா, அப்பாவிடம் கூறலாமா? அல்லது பொலிஸ்சில் முறைப்பாடு செய்யலாமா? மனம் கேள்விகளைக் கேட்டுக்கொண்டதேயன்றி, மூளை விடைகளைக் கூறவில்லை.

ஆறு மாதங்களுக்கு முன் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் சந்தித்து பின் இன்ஸ்ராகிராம் வழிவந்து காதலாகிக் கசிந்துருகிக் கடற்கரை, பூங்கா, ரெஸ்டாரன்ட் என வழமையான எல்லா இடங்களையும் வலம் வந்த வெறும் மூன்று மாதக் காதல்தான் அவர்களுடையதும். மிதுனுக்கு ஏற்கனவே ஒரு காதல் தோல்வியடைந்திருந்த விடையத்தை அவன் அட்ஷராவிடம் மறைத்ததை அவள் அறிந்து கொண்டதிலிருந்து முற்றிய வாய்த் தர்க்கமே இந்தக் காதலையும் தோல்வியில் கொண்டுவந்து நிறுத்தியிருந்தது. வீட்டில் கலியாணப்பேச்சை எடுத்த போதெல்லாம் சாக்குப்போக்குச் சொல்லிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தவள், இந்த வருடப்பிறப்போடு குடும்பத்தினருக்கு தன் காதலைத் தெரியப்படுத்தி காதலனையும் அறிமுகப்படுத்தி வைக்கலாம் என்று எண்ணியிருந்தாள். அந்த எண்ணங்களெல்லாமே வெறும் எண்ணங்களாகவே போயின.

ஹார்மோன் கிளர்ச்சி களையெல்லாம் தாண்டி, மெச்சூரிட்டி நிலையை அடைந்த இருபத்தெட்டு வயதில் எடுத்த எனது சுயமுடிவில் என்ன தவறு இருக்க முடியும்? காதல் உறவென்பதே இருவர் சேர்ந்தது தானே? இருவரில் ஒருவருக்கு உடன்பாடு இல்லையெனில் அதனை எப்படித் தொடரமுடியும்? இந்த ஆண்கள் எதிர்ப் பாலினத்தவரின் உணர்வுகளை மதிக்க மாட்டார்களா? காதலை நிராகரித்தால் கொலைதான் செய்வார்களா? ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாமல் அவளைப் பின் தொடர்வதோ, காதலிக்குமாறு கட்டாயப்படுத்துவதோ மூர்க்கத் தனமான பழமைவாத ஆண் மையச் சிந்தனையின் நீட்சியல்லவா? இந்த நாகரீக வளர்ச்சியடைந்த நாடுகளில் பிறந்து வளர்ந்தவர்களுக்குக்கூடவா இது புரியவில்லை? மனத்துள் கேள்விகளை அடுக்கிக்கொண்டே இருந்தவளின் வெறுப்புணர்வுகள் எல்லாமே ஒட்டுமொத்த ஆண் வர்க்கத்தின் மீதே படிந்துபோனது.

மிதுனின் காதலை அவள் நிராகரித்த கணத்திலேயே அவனுடனான எல்லாவிதமான தொடர்புகளையும் துண்டித்து விட்டிருந்தாள். தொடர்பறுந்து போனவன் நூலறுந்த பட்டம்போல் அலைந்து திரிந்து இறுதியாக அவளுடைய நண்பி நர்மதாவினூடாக முயற்சித்துங்கூட நல்ல பயன் கிடைக்கவில்லை.

ஒரு நாள் அவளது வேலைத்தளக் கார்த் தரிப்பிடத்தில் அவளுக்காகக் காத்திருந்தவன் அவளுடன் கதைக்க முற்பட்டபோது, 'இனிமேல் உனக்கும் எனக்கும்

**ஹார்மோன் கிளர்ச்சி களையெல்லாம் தாண்டி, மெச்சூரிட்டி நிலையை அடைந்த இருபத்தெட்டு வயதில் எடுத்த எனது சுயமுடிவில் என்ன தவறு இருக்க முடியும்? காதல் உறவென்பதே இருவர் சேர்ந்தது தானே? இருவரில் ஒருவருக்கு உடன்பாடு இல்லையெனில் அதனை எப்படித் தொடரமுடியும்? இந்த ஆண்கள் எதிர்ப் பாலினத்தவரின் உணர்வுகளை மதிக்க மாட்டார்களா? காதலை நிராகரித்தால் கொலைதான் செய்வார்களா? ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாமல் அவளைப் பின்தொடர்வதோ, காதலிக்குமாறு கட்டாயப்படுத்துவதோ மூர்க்கத் தனமான பழமைவாத ஆண் மையச் சிந்தனையின் நீட்சியல்லவா?**

எந்தத் தொடர்புமில்லை. என்னைச் சந்திக்க வரவேண்டாம்' என முகத்திலடித்தாற்போல் கூறிவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

அடுத்த கட்டமாக அவன் தன்னுடைய அலுவலகத்திற்குள் வரக்கூடும் என நினைத்தவள் வேலைத்தள வாசலில் உள்ள காவலாளியிடம் அவனது புகைப்படத்தைக் கொடுத்து, இந்த நபர் தன்னைச் சந்திக்க வந்தால் அனுமதி மறுக்குமாறு கோரியிருந்தாள். அவள் நினைத்தது போலவே இன்னொரு நாள் அவன் அங்கு வந்து அனுமதி மறுக்கப்பட்டுத் திரும்பியிருந்தான்.

இப்போது காதல் முறிவடைந்து இரண்டு மாதங்களின் பின்பும் அவள் செல்லுமிடங்கள் எங்கினும் அவளைப் பின்தொடர்ந்த வண்ணமே இருப்பது அவளைச் சினங்கொள்ள வைத்தது. நேற்றுங்கூட நூல்நிலையத்திலிருந்து வீடு வரை அவளைப் பின்தொடர்ந்த அவனது கார் திடீரென்று மாயமாய் மறைந்துபோனது. நேற்றை வரை துணிச்சலோடு இருந்தவளை இன்றைய இந்த முகநூல் பதிவு பெரும் பூதமாய் மிரட்டியது.

சென்ற கோடைகால விடுமுறையில் கடற்கரைக்குக் குளிக்கப்போனபோது அவளைப் பிகினி உடையில் வைத்து மிதுன் விதம்விதமாகப் பிடித்த போட்டோக்கள் எல்லாம் அவனது போனில் இருந்ததை எண்ணிப்பார்த்தாள். என்மீதுள்ள கோபத்தில் போட்டோக்களை சமூக வளைத்தளங்களில் பதிவேற்றிக் கேவலமாக எழுதிவிடுவானோ? நினைத்தபோதே மனம் பதறியது.

ஜி.பி.எஸ் டிராக்கர் எப்படி இருக்கும்? மனத்தில் கேள்வி எழவே கூகுளில் தேடினாள். கொஞ்சம் பெரிய சைஸ் சட்டைப் பொத்தானின் வடிவில் இலகுவாக எங்கும் மறைத்து வைக்கக்கூடியதாகவே அது இருந்ததனையும், அதன் செயற்பாட்டினையும் அறிந்துகொண்டாள். வேலை முடிந்து புறப்பட்டவளுக்கு காரை நெருங்கவே பயமாக இருந்தது. ஆசைப்பட்டு வாங்கிய காரை வெறுப்போடு பார்த்தாள். இதற்குள் எங்கு ஜி.பி.எஸ் டிராக்கர் ஒழிந்திருக்கக்கூடும். மிரட்சியுடன் கண்கள் காரை மேய்ந்தன. சந்தேகப்படும்படியாக எதுவுமே அகப்படவில்லை.

காரை நிறுத்திவிட்டு வீட்டுக் கதவைத் திறந்தபோது பேரிரைச்சல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். மிதுனுடைய நீல நிற பி.எம்.டபிள்யூ கார் காற்றைக் கிழித்துக்கொண்டு தெருவைக் கடந்து சென்றது. திக்பிரமை பிடித்தவள்போல் வீட்டுக்குள் நுழைந்தவளின் மனம் எதிலுமே ஈடுபடவில்லை. இந்த விடையம் குறித்து தனியே இருந்து யோசித்து மனத்தைக் குழப்பாமல் கூடிய விரைவில் நர்மதாவுடன் கதைத்து ஒரு நல்ல முடிவு எடுக்கவேண்டுமென மனதுக்குள் எண்ணிக்கொண்டாள்.

அவளுடைய மனப் பயத்திற்கு இரவுத்தூக்கமும் இரையாகிப்போனது. அரிதாய்த் தூங்கிய இரவுகளிலும் மிதுனே கைத்துப்பாக்கியுடன் கனவில் வந்து கலையாடினான். அத்தகையவொரு கனவுடன் துடித்தெழுந்த இரவொன்றில் உள்ளங்கையால் நெற்றியைத் துடைத்தவளுக்கு, அது இரத்தமல்ல வியர்வையெனத் தெரிந்தபோதுதான் மனப் பதற்றம் அடங்கியது. இப்படியே விட முடியாது. விட்டால், அவனல்ல எனதிந்த மரண பயமே என்னைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றுவிடும். இதற்கொரு முடிவு கட்டியே ஆகவேண்டுமென முடிவெடுத்தவளுக்கு திடீரென ஒரு எண்ணம் தோன்றியது. உடனேயே தந்தையிடம் சென்று கேட்டாள், 'அப்பா கொஞ்ச நாளைக்கு நீங்கள் என்ர காரையும், நான் உங்கட காரையும் மாற்றிப் பாவிப்பமே?'

'ஏனம்மா உனக்கு என்ர பழைய கார்ல ஆசை வந்தது?' கேட்டார் எதுவுமே அறியாத தந்தை.

'பழசா இருந்தாலும் அது மெர்சிடஸ் பென்ஸ் எல்லே, அவுட்டோமற் கார் ஓடி அலுத்துப்போச்சப்பா. அதுதான் கொஞ்ச நாளைக்கு கியர்போட்டு ஓட ஆசையாயிருக்கு' எனக் கூறிச் சமாளித்தாள். 'உண்மையாக இருத்தல் என்பது கடவுளாக இருத்தலுக்குச் சமமானது' என்று அடிக்கடி சொல்லி வளர்த்த அப்பாவிடமே பொய் சொல்ல நேர்ந்ததில் அவளது மனம் குற்ற உணர்ச்சியில் திளைத்தது. அப்பாவினுடைய இந்த மந்திரச் சொற்களை முடிந்தவரையில் பின்பற்றியதனால் தானோ என்னவோ என்னால் மிதுனுடைய அந்த ஒற்றைப் பொய்யை மன்னிக்க முடியாமற் போனது? என்றும் மனதுக்குள் யோசித்தாள்.

அன்று மாலையே தந்தையின் காரில் நர்மதாவின் வீட்டிற்குக் கிளம்பியவள், குடியிருப்புப் பகுதியின் சிறிய தெருவைக் கடந்து பிரதான வீதிக்கு திருப்புவதற்காக சிகப்பு மின்விளக்கில் காத்திருந்திருக்கையில் எதேற்சையாக கண்ணாடியினூடே பின் பக்கம் பார்த்தபோது நீல நிற பி.எம்.டபிள்யூவைக் கண்டு கதி கலங்கிப்போனாள். அடுத்த கணமே பதட்டமடையக் கூடாதென மனதுக்குள் முடிவெடுத்துக்கொண்டவள், பச்சை விளக்கு எரிந்ததும் சட்டெனக் காரைக் கிளப்பி பிரதான வீதிக்கு ஏற்றாமல் வலப்பக்கம் இருந்த சிறிய தெருவுக்கு இறக்கி மின்னல் வேகத்தில் மீண்டும் தனது வீட்டையே வந்தடைந்தாள்.

நெஞ்சு படபடவென அடித்துக்கொள்ள, ஒரே குழப்பமாகவிருந்தது. காரை மாற்றிய பிறகும் பின்தொடர்கிறான் என்றால் எப்படி? அப்போ ஜி.பி.எஸ் டிராக்கர் காருக்குள் இல்லையா? விறுவிறுவென்று வீட்டிற்குள் நுழைந்தவள் தனது கைப் பையினுள் இருந்தவைகள் எல்லாவற்றையுமே கவிழ்த்துக் கொட்டிப் பரிசோதித்தாள். எதுவுமே அகப்படவில்லை. மேலங்கிகள், சப்பாத்துகளெனத் தனது அன்றாட பாவனையிலிருக்கும் பொருட்கள் அனைத்தையுமே பரிசோதித்தாள். சந்தேகப்படும்படியாக எதுவுமே இல்லை. அப்படியானால் எப்படி? தலையிற் கை வைத்தபடியே குந்தியவளுக்கு பயித்தியமே பிடித்துவிடும்போல் இருந்தது.

இப்படியே பயந்து பயந்து வாழ முடியாது. என்றைக்கோ ஒரு நாள் அவனை எதிர்கொண்டுதானே ஆகவேண்டும். அதற்குமுன்

தற்காப்புக்கு என்ன செய்யலாம்? யோசித்தவளின் மூளையில் சட்டென்றொரு பொறி தட்டியது. ‘பெப்பர் ஸ்பிரே‘ இதுதான் சரியான சாமான். அவன் துப்பாக்கியையோ, கத்தியையோ தூக்குவதற்கு முன் நான் அவனது கண்களைக் குறிவைத்து அடித்தால் சரி, சுருண்டு விழுந்துவிடுவான். ஆனால், பெப்பர் ஸ்பிரேக்கு எங்கே போவது? கேள்வி எழுந்தபோதே விடையாய் மலிக்கா ஞாபகத்தில் வந்தாள். மலிக்கா அவளுடன் வேலை செய்யும் மொராக்கோ நாட்டைச்சேர்ந்த துணிச்சலான பெண்மணி. எதற்கும் அஞ்சாதவள். எந்தச் சாமத்திலும் தன்னந் தனியாகத் திரிபவள். ‘உனக்குப் பயமே இல்லையா?‘ என அட்ஷரா ஒரு நாள் அவளிடம் கேட்டபோது, ‘இது இருக்கும்போது எனக்கென்ன பயம்‘ எனக் கைப் பையிலிருந்த பெப்பர் ஸ்பிரேயை எடுத்துக் காட்டி, ‘உனக்கும் வேணுமா? இதனை எளிதாக வாங்கிவிட முடியாது. வேண்டுமென்றால் சொல் ஒழுங்கு செய்கிறேன்‘ எனக் கூறியிருந்தாள் மலிக்கா அன்று.

அடுத்த நாளே விடையத்தை மலிக்காவின் காதிற் போட, அதற்கடுத்த நாளே பொருள் அட்ஷராவின் கைக்குள் வந்தது. அதனைக் கைப் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டு வீட்டிற்குச் சென்றவள், ஆபத்தான நேரத்தில் அதனை அவசரமாக எப்படி எடுக்கவேண்டும். எதிராளியின் கண்களைக் குறிவைத்து எப்படி அடிக்கவேண்டுமென நிலைக் கண்ணாடியின் முன் நின்று ஒத்திகையும் பார்த்துவிட்டுக் காரைக் கிளப்பியவள் நேராக நர்மதாவின் வீட்டுக்கே சென்றாள்.

அவளை வரவேற்று உபசரித்து உரையாடி அவளுடைய சிக்கல்களையும், நோர்வேச் சம்பவத்தை அறிந்ததிலிருந்து அவள் எவ்வளவுக்கு உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதையும் புரிந்துகொண்டபின், ‘இந்தத் தமிழ் ஆண்களே இப்படித்தாண்டி‘ எனச் சினந்தாள் பிரிட்டிஷ் வெள்ளைக் காரனைப் பிரியமானவனாகக் கொண்டிருந்த நர்மதா.

‘ஓம் நர்மி, ஆண்-பெண் பாகுபாடில்லாமல் பிள்ளைகளை வளர்க்கிறது, பெண்களைச் சமமாக நடத்துறது. பெண்களின்ர முடிவுகளை மதிக்கிறது, பெண் பிள்ளைகளின்ர சுதந்திரத்தை அனுமதிகிறது, ஆண் மையவாதச் சொல்லாடல்களைத் தவிர்க்கிறது போன்ற எதுவுமே எங்கட குடும்ப அமைப்புகளுக்க கடைப்பிடிக்கப்படுறதில்லையே பிறகென்னெண்டு?‘ ஆதங்கத்துடன் கேட்டாள் அட்ஷரா.

‘ஓம் அட்ஷரா நீ சொல்லுறதும் சரிதான். அறநெறிகளைப் பற்றியோ சக மனிதர்களின் மீதான மாண்பைப் பற்றியோ துளியும் கவலையில்லாம பிள்ளைகள் வளருவார்களாயிருந்தால் அதைக் குடும்பமும் சமூகமும் கவனித்து, அவர்களது நடவடிக்கைகளைச் சீர்ப்படுத்தப் பார்க்கவேணும். குற்றச் செயலில் ஈடுபடும்போது அதைத் தவறெண்டு சுட்டிக் காட்டவேணும், வன்முறையோ வெறுப்போ எத்தனை ஆபத்தானதெண்டதை அவர்களுக்குப் புரியவைக்கவேணும். தோல்விகளை ஏற்றுக்கொள்ளுற மனநிலையையும் பிள்ளைகளிடம் வளர்த்துவிடவேணும். ஆனால், எங்கட சமூகத்தில படிக்கிறதும், படிப்பிக்கிறதும் உத்தியோகத்திற்காக மட்டுந்தானே. சரி.. அதுகளை விடு, நீ இப்ப என்ன முடிவு எடுக்கப்போற? எனக்கெண்டால் இதை பொலிஸ் மூலமாக் கையாளுறதுதான் நல்லதெண்டு படுகுது.‘

**அறநெறிகளைப் பற்றியோ சக மனிதர்களின் மீதான மாண்பைப் பற்றியோ துளியும் கவலையில்லாம பிள்ளைகள் வளருவார்களாயிருந்தால் அதைக் குடும்பமும் சமூகமும் கவனித்து, அவர்களது நடவடிக்கைகளைச் சீர்ப்படுத்தப் பார்க்கவேணும். குற்றச் செயலில் ஈடுபடும்போது அதைத் தவறெண்டு சுட்டிக் காட்டவேணும், வன்முறையோ வெறுப்போ எத்தனை ஆபத்தானதெண்டதை அவர்களுக்குப் புரியவைக்கவேணும். தோல்விகளை ஏற்றுக்கொள்ளுற மனநிலையையும் பிள்ளைகளிடம் வளர்த்துவிடவேணும். ஆனால், எங்கட சமூகத்தில படிக்கிறதும், படிப்பிக்கிறதும் உத்தியோகத்திற்காக மட்டுந்தானே.**

‘ஏன் நர்மி, பொலிசுக்குப் போனவள்தானே அங்க கொல்லப் பட்டிருக்கிறாள். பொலிஸ் இங்க காதல்ப் பிரச்சனைகளையெல்லாம் பெருசாப் பார்க்காது. கொலைகளைத் தான் பெருசு படுத்தும். அதுக்குமுதல் இந்தக் கண்காணிக்கிறது, பின் தொடருறது எல்லாத்தையும் நிறுத்தச் சொல்லி நீ ஒருக்கால் அவனோட கதைச்சுப் பார்த்தால் என்ன?‘

‘ஓ.. ஒரு பிரச்சனையுமில்ல. நான் வேணுமெண்டால் கதைச்சுப் பார்க்கிறன். அதுவரைக்கும் நீ கவனமாயிரு‘ எனக் கூறி வழியனுப்பிவைத்தாள் நர்மதா.

• • •

கடுங்குளிர் காலம். பகற் பொழுதே இருண்டு கிடந்தது. ஒளி பாய்ச்சி இருளைக் கிழித்தபடி உறுமிக்கொண்டு வந்த நீல நிற பி.எம்.டபிள்யூ அட்ஷராவின் வேலைத்தளத் தரிப்பிடத்தில் உறுமலை நிறுத்திக்கொண்டது. உள்ளே இருந்தபடியே கட்டடத்தின் நுழைவாயிலை நோட்டமிட்டவாறு நேரத்தைப் பார்த்தான் மிதுன். அட்ஷராவின் வேலை முடிவதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன. நுழைவாயில் காவலாளி அவனது அறையிலிருந்து வெளியேறி அங்குமிங்குமாய் நடந்தவாறே சிகரெட்டைப் பற்றவைத்தபோதுதான் மிதுன் கவனித்தான். அவன் வழமையான காவலாளி அல்ல. சட்டென்று காரைவிட்டு இறங்கியவன் குளிர் அங்கியின் சிப்பை இழுத்துக் கழுத்துவரை மூடினான். காரின் பின் கதவைத்திறந்து தோற்பையை எடுத்து பூணூல் போல் தோளில் குறுக்காக மாட்டிக்கொண்டான். குளிர்காற்றை

உள்ளிழுத்துப் பெருமூச்சை வெளியேற்றியவாறே உள்ளேயிருந்த பதட்டத்தை வெளிப்படுத்தாது நேராகக் காவலாளியை நோக்கிச் சென்றவன், 'ஐந்தாம் மாடியில் வேலைபார்க்கும் அட்ஷராவுடன் ஒரு அப்பாயின்மென்ட்' என்றான். அவனுடைய அடையாள அட்டையை வாங்கிப் பதிவு செய்துவிட்டு உள்ளே செல்ல அனுமதித்தான் காவலாளி.

பெரிய மண்டபத்தினுள் இடது பக்கம் சிற்றுண்டியகம். வலது பக்கம் வரிசையாகப் பல கழிப்பறைகள். நடுவே மேலே செல்வதற்கான லிப்ட். லிப்ட்டிற்கும் கழிப்பறைகளுக்கும் இடையில் காணப்பட்ட இருக்கைகளில் ஒன்றில் அமர்ந்துகொண்டான். லிப்ட் அடிக்கடி இரண்டாம் மாடிக்கும், மூன்றாம் மாடிக்கும் போவதும் வருவதுமாயிருக்க பலர் அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்தனர். மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தான். அவள் இறங்குவதற்கு இன்னும் இரண்டொரு நிமிடங்களே இருந்தன. அவை திக்.. திக்.. நிமிடங்களாகக் கரைந்து கொண்டிருந்தபோது

லிப்ட் திடீரென்று மேல்நோக்கிச் சென்றது. ஒவ்வொரு மாடியின் இலக்கங்களையும் கவனித்தவாறே இருந்தான். ஐந்தாம் மாடியுடன் நின்றுபோன லிப்ட் மீண்டும் அதே வேகத்தில் கீழ் நோக்கி இறங்க, அவனது மூளையும் அதே வேகத்திற்குத் திட்டங்களைத் தீட்டியது. சட்டென்று எழுந்தவன் லிப்ட்டின் அருகேயிருந்த கழிப்பறைக் கதவைத் திறந்து வைத்தபடி லிப்ட்டின் வலது பக்கத்தில் மறைவாக நின்றுகொண்டான். 'க்லிங்' என்ற ஓசையுடன் லிப்ட் கதவுகள் திறந்ததுமே, அட்ஷராவுக்கு முன்னமே வெளியே வந்த 'மிஸ் டியோர்' சென்ட் வாசனை, அது அவள்தான் என்பதை உறுதிப்படுத்தியது. கைகளை வீசியவாறே வெளியே வந்தவளின் பின்னால் வேறுயாரும் வந்துவிடுவார்களோ என்ற சந்தேகத்தில் அவள் இரண்டடி நடக்கும்வரை பொறுமை காத்தவன், அவளின் பின்னால் யாருமில்லை என்பதை உறுதிப்படுத்தியதும், சட்டெனப் பாய்ந்து அவளின் கையைப் பிடித்திழுத்து கழிப்பறையின் உள்ளே தள்ளிய வேகத்திலேயே கதவை மூடி லாக் பண்ணிக்கொண்டான். திகைத்துப்போனவளின் மூளை ஒருகணம் ஸ்தம்பித்துப்போனது. செய்வதறியாது அவனைத் திகைப்புடன் பார்த்தவாறே நின்றாள். அவளின் இதயத்துடிப்புச் சத்தம் அவளது காதுகளுக்கே கேட்டது. அவனோ நிதானமாக அவளது கண்களைப் பார்த்தவாறே தன் குளிரங்கியின் சிப்பை கீழிறக்கிக் கையை உள்ளே விட்டான். அக்கணத்தே சட்டென்று உசாரானவள் தோற்பையுள் கையை நுழைத்து பெப்பர் ஸ்பிரேயைப் பற்றிக்கொண்டாள்.

அவன் குளிரங்கியிலிருந்து கையை வெளியே எடுக்க, அவளது கையும் தோற்பையிலிருந்து மெல்ல வெளியே வந்தது. அவன் சட்டென உள்ளேயிருந்தெடுத்த மொபைல் போனை ஆன்பண்ணி அவளின் முன்னே நீட்டினான். ஒருகணம் நிதானித்துப் பார்த்தவள் மெல்ல பெப்பர் ஸ்பிரேயின் பிடியைத் தளர்த்திக்கொண்டாள்.

'இந்தாரும், இதிலிருக்கும் உம்மட போட்டோக்கள், வீடியோக்கள் எல்லாத்தையும் உம்மட கையாலயே அழித்துவிடும்' என்றான். திகைப்பும், ஆச்சரியமும் கலந்த கலவையாய் நின்றவள் போனை வாங்கித் தன் போட்டோக்களையும், வீடியோக்களையும் அழித்துவிட்டுப் போனை அவனிடம் நீட்டினாள்.

'இல்லை, எல்லாமே ரீசென்ட்லி டெலிட்டெட்டிற்குள் இருக்கும், அதையும் அழித்துவிடும்' என்றான்.

அவள் அதனையும் செய்து முடித்தபின், போனை வாங்கியவன் தன் தோற்பையிலிருந்து அவள் தனக்களித்த வாழ்த்து மடல்கள், அன்பளிப்புப் பொருட்கள், புகைப்படங்கள் போன்றவற்றையும் எடுத்து அவளிடம் நீட்டி, 'இந்தாரும் இவைகளையும் நீரே அழித்துவிடும்' என்றான்.

அவற்றைக் கையில் வாங்கியவாறே கேட்டாள், 'ஓ.. அப்ப இதுக்குத்தான் என்னைப் பின்தொடர்ந்தனீரே?'

'ஓம், நான் என்ர பழைய வீட்டிலயிருந்து எழும்ப வேண்டியதாப்போச்சு, அவசரத்துக்கு வீடு கிடைக்கயில்ல. அதனால இப்ப ரெண்டு மாதமா உம்மட வீட்டுக்கு முன்னால உள்ள அந்த உயரமான பில்டிங்கில இருக்கிற என்ர நண்பன் ஒருவனோடதான் தற்காலிகமா தங்கியிருந்தனான். ஆனாலிப்ப என்ர வேலையிடத்துக்குப் பக்கத்திலையே வீடு கிடைச்சிற்று. நாளைக்கே நான் இங்கயிருந்து போயிருவன். அதுதான் உம்மட வேலையிடம் வரையும் வரவேண்டியதாப் போச்சு மன்னிச்சிரும்.'

'ஓ.. சொறி, நான் நினைச்சன் என்னைப் பழிவாங்கத்தான் திரிகிறீராக்கும் எண்டு' எனத் தலையைக் கவிழ்ந்தாள்.

'சேச்சே.. அந்தளவுக்கு நானொண்டும் முட்டாளில்ல, நீரென்னை நிராகரித்து விடுவீரோ எண்ட பயத்திலதான் நானொரு உண்மையை மறைச்சனான். ஆனாலிப்ப அதை மறைச்சதாலையே நீரென்னை நிராகரித்துவிட்டீர். பரவாயில்லை. இதனால எனக்குள் எந்தவிதமான தாழ்வுச்சிக்கலோ, பழிவாங்கும் எண்ணமோ எதுவுமே கிடையாது. என்ர காதலை நிராகரிப்பதற்கான முழு உரிமையும் உமக்குண்டு. அதை நான் மறுக்கயில்ல. உம்மட நிலையை உணர்ந்துகொள்ளுற பக்குவமும், உம்மட முடிவை ஏற்றுக்கொள்ளுற நிதானமும் என்னிடமிருக்கு. எந்தவொரு உறவிலும் பிரிவெண்டது இழப்புத்தான், இதையும் கடந்துவிடக்கூடிய மனமுதிர்ச்சியும், தன்னம்பிக்கையும் என்னிடம் மட்டுமில்ல, உம்மிடமும் இருக்குதெண்டதை நான் நம்புறன். முடிஞ்சா ரெண்டுபேரும் நண்பர்களா இருப்பம். இல்லா விட்டாலும் பரவாயில்ல, நல்ல மனிதர்களாகவாவது இருப்பம். பை -பை' கூறிவிட்டு, அவளுடைய பதிலைக்கூட எதிர்பார்க்காமல் கதவைத் திறந்துகொண்டு வெளியேறி விறுவிறுவென்று நடையைக்கட்டியவனை விழிகள் விரியப் பார்த்தபடியே நின்றாள் அட்ஷரா.

அ

# வாசிப்பும் யோசிப்பும்




## வ.ந.கிரிதரன்

### ஐம்பதுகளில் வெளியான வீரகேசரி பிரசுர நாவல் 'கே.வி.எஸ்.வாஸின் (ரஜனி) 'குந்தளப்பிரேமா'

'வீரகேசரி பிரசுர நாவல்கள் ஒரு பொது மதிப்பீடு' என்னும் அருபந்தம் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களால் நா.சுப்பிரமணியம் என்னும் பெயரில் எழுதப்பட்டது. அப்பொழுது அவர் எம்.ஏ பட்டதாரி. யாழ் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலகட்டம். வீரகேசரி ஐம்பதாவது நூற்பிரசுர விழாவில் அருபந்தமாக வெளியிடப்பட்ட பிரசுரமிது. இப்பிரசுரத்தில் வீரகேசரி பிரசுரங்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது°

'1972ஆம் ஆண்டில் தொடங்கிய வீரகேசரி பிரசுர முயற்சி ஆரம்பத்தில் ஆண்டொன்றுக்குச் சுமார் ஆறு பிரசுரங்களாகத் தொடங்கி, அதிகரித்து வந்து இப்பொழுது மூன்றாண்டுகளாக ஆண்டு ஒன்றுக்குப் பத்து நாவல்கள் என்ற அளவில் விரிவடைந்துள்ளது.'

இவ்விதமே நானும் வீரகேசரி பிரசுரங்களும் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக, உள்ளூர் உற்பத்திக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருந்த சூழ்நிலை காரணமாக உருவாகின என்றே எண்ணியிருந்தேன். ஆனால் உண்மையில் அச்சூழலைப் பயன்படுத்தி வீரகேசரி பிரசுரங்கள் அதிக அளவில் வெளிவந்திருந்தாலும் வீரகேசரி பிரசுரமாக 1951 இலேயே நாவலொன்று வெளியாகியிருந்ததை அறிய முடிகின்றது. அதனை எழுதியவர் எழுத்தாளர் கே.வி.எஸ். வாஸ் (கும்பகோணம் வேதாந்தம் சீனிவாச ஐயங்கார்).




நாவலின் பெயர் - குந்தளப்பிரேமா.

இந்நாவலுக்கு நாவலாசிரியர் கல்கி அவர்கள் நல்லதோர் அறிமுகத்தினையும் எழுதியுள்ளார். நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள வீரகேசரி நிறுவனத்தின் தலைவர் பெரி.பெரி.சுப்பிரமணியச் செட்டியார் தனது முன்னுரையில் 'எங்கள் அடுத்த வெளியீடாக உங்கள் அனைவரையும் மகிழ்வித்த 'நந்தினி' புத்தக ரூபமாக வெளிவரவிருக்கிறாள் என்னும் சந்தோஷ செய்தியையும் உங்களுக்கு இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனைப் பார்க்கும்போது அந்த 'நந்தினி' நாவல் வீரகேசரி பிரசுரமாக வெளியானதா , அது போல் ஏனைய நாவல்களும் அக்காலகட்டத்தில் வீரகேசரி பிரசுரங்களாக வெளிவந்துள்ளனவா என்பது பற்றிய ஆய்வின் அவசியத்தை உணர முடிகின்றது. கே'வி எஸ்.வாஸின் (ரஜனி) 'குந்தளப் பிரேமா' நாவலை இணையக் காப்பகத்தில் கண்டடைந்தேன்.

எழுபதுகளில் வீரகேசரி பிரசுரங்களாக வெளியான கே. வி.எஸ்.வாஸின் நாவல்கள் (இவை நான் அறிந்தவை. முழுமையான

பட்டியலா இல்லையா என்பது ஆய்வுக்குரியது.)⁴

1. குந்தளப் பிரேமா
2. . கணையாளி
3. மைதிலி
4. ஆஷா
5. நெஞ்சக்கனல்
6. மலைக்கன்னி
7. ஜீவஜோதி

கே.வி.எஸ்.வாஸ் அவர்களின் மர்ம நாவல்கள் என் பால்ய பருவத்து வாசிப்புக்காலத்தில், நான் மர்ம நாவல்களில் மூழ்கிக்கிடந்த தருணங்களில் மனத்துக்கு மிகுந்த உவப்பாகவிருந்தவை. அக்கால மித்திரன் பத்திரிகையில் இவரது நாவல்கள் பல தொடர்களாக மீள்பிரசுரமாகிக்கொண்டிருந்தன. தென்னிந்திய சஞ்சிகை, நாவல்களில் மூழ்கிக்கிடந்த காலமாகையால் இவரது எழுத்து நடை எமக்கெல்லாம் மிகவும் உவப்பாக இருந்ததொன்றும் ஆச்சரியமானதல்ல.

இவரது மகனே 'கதம்பம்' சஞ்சிகையின் ஆசிரியரும், வெளியாட்டளருமான எழுத்தாளர் மோகன். இவர் ஆரம்பத்தில் நீண்ட காலம் வீரகேசரியில் கண்ணகி - மாதவி என்னும் புனைபெயரிக் சினிமாச் செய்திகளை எழுதியவர். கதம்பம் சஞ்சிகையில் இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் பல வெளிவந்துள்ளன. தெளிவத்தை ஜோசப்பின் நாவலான 'பாலாயி' அதில்தான்





தொடராக வெளியானதென்பதும் குறிப்பிடத்தக்கது. 1959-1983 வரை கதம்பம் வெளியானது. 83 இனக்கலவரத்தைத் தொடர்ந்து அதுவும் நின்று போனது.

எழுத்தாளர் யாழ்நங்கை (அன்னலட்சுமி ராஜதுரை) நீண்ட காலம் வீரகேசரியில் பணியாற்றியவர். எழுத்தாளர் முருகபூபதியும் அவ்விதம் பணியாற்றியவரே. இவர்கள் கே.வி.எஸ்.வாஸ் பற்றிய அரிய தகவல்களைப் பகிரக்கூடும்.


உசாத்துணைப் பட்டியல்

1.' வீரகேசரி பிரசுர நாவல்கள் ஒரு பொது மதிப்பீடு' நா.சுப்பிரமணியம்
2. குந்தளப்பிரேமா நாவல் - வீரகேசரி பிரசுரம் (1952)
3. கே.வி.எஸ்.வாஸ் - விக்கிபீடியாக் குறிப்பு
4. .இன்றைய ஈழத்து பிரபல எழுத்தாளர்களின் முதல் ஆக்கத்திற்கு களம் தந்தது கதம்பமே மனம் திறக்கிறார் கதம்பம் மோகன் தினகரனிலிருந்து நவம்பர் 8 , 2012




## தேடகம் (தமிழர் வகைதுறை வள நிலையம்) அமைப்பின் சமூக, அரசியல், கலை இலக்கியப்பங்களிப்புகள் பற்றிய சுருக்கமான அறிமுகப் பதிவு!

கனடாத் தமிழ்க் கலை, இலக்கிய உலகில், சமூக,அரசியற் செயற்பாடுகளில் ஓர் அமைப்பின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. ஆனால் இதுவரை இவ்வமைப்பு பற்றிய, விரிவான, பூரணமானதோர் ஆய்வெதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்காக இவ்வமைப்புக்கு விருதுகள் எவையும் கொடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. இருந்தாலும் இவ்வமைப்பு, எவ்விதப் பயன்களையும் கருதாமல் , இன்னும் இயங்கிக் கொண்டுதானுள்ளது. காலத்துக்குக் காலம் இவ்வமைப்புடன் இணைந்து இயங்கியவர்கள் பலர் ஒதுங்கி விட்டாலும், இன்னும் சிலர் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டு தானுள்ளார்கள். இவ்வமைப்பு பற்றிய விரிவான ஆய்வில் இதுவரை இவ்வமைப்புடன் இணைந்து இயங்கியவர்கள் பற்றிய விபரங்களும் ஆவணப்படுத்தப் படுவது அவசியம். இப்பொழுது இந்த அமைப்பு எதுவென்னும் கேள்வி உங்கள் உள்ளங்களில் எழும்பத் தொடங்கியிருக்கும். இந்த அமைப்பு தேடகம் என்று அறியப்பட்ட தமிழர் வகைதுறை வளநிலையம்.

தேடகம் அமைப்பின் இதுவரை காலப் பல்வகைப் பங்களிப்புகளையும் நோக்கினால் பின்வரும் வகைகளில் அவற்றைப் பிரித்துப்பார்க்கலாம்⁴

1. நூலகப் பங்களிப்பு.
2. சமூக, அரசியற் செயற்பாட்டுப் பங்களிப்பு.
3. நாடகத்துறைப் பங்களிப்பு.
4. பதிப்புத்துறைப் பங்களிப்பு.
5. சஞ்சிகைப் பங்களிப்பு.
6. பல்வகை இலக்கிய நிகழ்வுகளை (நூல் வெளியீடு உட்பட) ஏற்பாடு செய்து நடத்தும் பங்களிப்பு.


### 1. நூலகம்

எண்பதுகளில், தொண்ணூறுகளில் பார்ளிமெண்ட், வெலஸ்லி

பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த தேடகம் அமைப்பினரின் நூலகம் கனடாத் தமிழர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான நூலகம். அங்கு தமிழப்பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசிப்பதற்காகவும், நூல்களை இரவல் பெறுவதற்காகவும் சென்றவர் பலர். தேடகம் நூலக எரிக்கப்பட்டதானது கனடாத் தமிழர் மத்தியில் ஒரு கரும்புள்ளியாக எப்போதுமிருக்கும்.

## 2. சமூக, அரசியற் செயற்பாட்டுப் பங்களிப்பு.

காலத்துக்குக் காலம் தேடகம் அமைப்பானது தாயகத்தில், உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கும் அடக்கு ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததுடன், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தியும், பிறர் நடத்தும் ஊர்வலங்களில் பங்குபற்றியும் வந்துள்ளது. எண்பதுகளில் இனவெறி பிடித்த தோற்தலையர்கள் (Skin Heads) ஏனைய இனமக்கள் மீது நடத்திய தாக்குதல்களில் தமிழர் ஒருவரும் கொல்லப்பட்டிருந்தார். அச்சமயம் இனவெறிக் குழுவான தோற்தலையர்களுக்கு எதிராகப் பார்ளிமண்ட் வீதியால் தேடகம் அமைப்பால் நடத்தப்பட்ட கண்டன ஊர்வலத்தில் பலர் கலந்து கொண்டனர். அக்காலகட்டத்தில்




தோற்தலையர்களுக்கு எதிராக, கடுமையாக இனவாதத்துக்கெதிராக இன்னுமொரு கனடிய அமைப்பும் டொரோண்டோ மக்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருந்தது. அந்த அமைப்பின் தோற்தலையர்களுக்கு எதிரான தொடர்ச்சியான செயற்பாடுகளே இறுதியில் தோற்தலையர்களின் செயற்பாடுகளை முடங்க வைத்தன.

## 3. நாடகத்துறைப் பங்களிப்பு.

தேடகம் அமைப்பினரின் நாடகத்துறைப் பங்களிப்பு முக்கியமானது. தமிழர் வகைதுறை நிலையம் என்பதன் சுருக்கமான 'தவநி' என்னும் பெயரில் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. எழுத்தாளர் ப.அ.ஜயகரனின் 'எல்லாப் பக்கமும் வாசல்', 'உள்ளிருந்து', பொடிச்சி, சப்பாத்து, போன்ற நாடகங்கள், புகழ்பெற்ற ஜெர்மனிய நாடகாசிரியரான ஸீக்ஃப்ரீட் லென்ஸின் 'நிரபராதிகளின் காலம்', பலிக்கடாக்கள்', 'பொடிச்சி' என அதன் நாடகத்துறைப் பங்களிப்பு விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்று. தேடகம் அமைப்பு நடத்திய நாடகப் பட்டறைகளும் முக்கியமானவை. இப்பட்டறை மூலம் தம்மைப் புடமிட்டு சிறந்த நடிகர்களாக வளர்ந்தவர்கள் பலர். அவர்களில் ஒருவர் பாபு பரதராஜா. இவரது மறைவின்போது எழுத்தாளர் பா. அ.ஜயகரன் எழுதிய அஞ்சலிக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பார்:

'தேடகத்தினால் நடாத்தப்பட்ட நாடகப் பட்டறைகளிலும் பங்குபற்றி தன்னையொரு வளமிகு நடிகனாக வளர்த்துமிருந்தார். நாடகத்தின்பால் கொண்ட ஈடுபாட்டால் ரொரன்டோவில் தீவிர நாடகத்திற்காக 'மனவெளி கலையாற்றுக்குழு' வைதன்நண்பர்கள் சிலருடன் சேர்ந்து உருவாக்கி 'அரங்காடல்' எனும் தீவிர மேடை நாடக நிகழ்வை நிகழ்த்துவதற்கு முன்னோடியாக நின்றவர்.'

டொராண்டோவில் 'மனவெளி கலையாற்றுக் குழு' ('அரங்காடல்' நாடக நிகழ்வை நடத்தும் அமைப்பு), நாளை நாடக அரங்கப்பட்டறை. கருமையம் போன்ற நாடகத்துறை அமைப்புகள் உருவாவதற்கு உந்து சக்தியாவிருந்தது தமிழர் வகைதுறைவள நிலையம் (தவநி) அமைப்பும் அதன் நாடகப்பட்டறை என்றும் கூறலாம்.

'தவநி' பற்றி பதிவுகள் இணைய இதழுக்கு வழங்கிய நேர்காணலில் பா.அ.ஜயகரன் பின்வருமாறு கூறியுள்ளார்:

'கனடாவில் தமிழ் நவீன நாடகத்துறைக்கு ஊற்றுகோலாய் இருந்தது தேடகம் அமைப்புத்தான். (தமிழர் வகைதுறைவள நிலையம் - தவநி). தவநி தான் எனது முதலாவது நாடகமான பொடிச்சியையும் இரண்டு புள்ளிகள் நாடகத்தையும் தயாரித்து அளித்தது. கனேடிய தமிழ் நாடக சூழலின் முனைப்புக்கு தவநிதான் முதற் காரணம். மனவெளி, நாளை நாடக அரங்கப் பட்டறை போன்றவற்றின் தோற்றத்திற்கும் தவநியே காரணம். நாம் எல்லோருமே தவநியின் அளிக்கைகளாலும், பட்டறைகளாலும் வளக்கப் பட்டவர்களே. எல்லாப்பக்கமும் வாசல் நாடகப் பிரதியை நுலாக தவநியே வெளியிட்டது.'

## 4. பதிப்புத்துறைப் பங்களிப்பு.

கவிஞர் சேரனின் 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்', கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலனின்'ஒரு அகதியின் பாடல்', கலாச்சாரப் பேரவையுடன் (கரவெட்டி) இணைந்து வெளியிட்ட செ.கதிர்காமநாதன் கதைகள் இவையெல்லாம் தேடகம் அமைப்பின் பதிப்புத்துறைச் சாதனைகள். இங்கு நான் உதாரணங்களாகச் சிலவற்றைக் குறிபிட்டாலும், தேடகம் அமைப்பின் சரியான பங்களிப்பை அறிவதற்கு முறையான ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதையும் இத்தருணத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

## 5. சஞ்சிகைப் பங்களிப்பு.

கனடாத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த சஞ்சிகைகளில் ஒன்றான 'தேடல்' சஞ்சிகை தேடகம் அமைப்பினரால்

வெளியிடப்பட்டது. பதினாறு இதழ்கள் வெளியாகியுள்ளன. இதழ் 14 என்று இரு இதழ்கள் (1994 மற்றும் 1996) வெளியாகியுள்ளன. வடிவமைப்புச் செய்தவரின் தவறாக இருக்க வேண்டும். வெளிவந்த இதழ்களில் முதலிரண்டையும் தவிர ஏனையவற்றை 'படிப்பகம்' இணையத்தளத்தில் ஆவணப்படுத்தி வைத்துள்ளார்கள்.

'தேடல்' சஞ்சிகையில் கவிதைகள், மனித உரிமை சார்ந்த கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள், சினிமா பற்றிய கட்டுரைகள், நேர்காணல்கள், சிறுகதைகள், விமர்சனங்கள் எனப் பல்வகையான காத்திரமான ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. செழியன், விதுரன், பா.அ.ஜயகரன், வ.ஐ.ச. ஜெயபாலன், அமுதன், பாமதி, சகாப்தன், ஆனந்தபிரசாத், சிவம், கிறிசாந் பாக்கியதத்தா என்று பலர் கவிதைகள் எழுதியிருக்கின்றார்கள். மொழிபெயர்ப்புக் கவிதைகள் சிலவும் பிரசுரமாகியுள்ளன. சபா வசந்தன், விதுரன், சகாப்தன், வ.ந. கிரிதரன், ஜோர்ஜ்.இ.குருஷேவ் , கோவை றைதன் (இவர் எழுத்தாளர் சகாப்தன், இயற்பெயர் வேல்றைதன் என எழுத்தாளர் பா.அ.ஜயகரன் அறியத்தந்தார்), அருள்தாஸ் என்று பலர் சிறுகதைகளை எழுதியுள்ளார்கள். கட்டுரைகளை செழியன் (இவரது 'ஒரு போராளியின் நாட்குறிப்பு' தொடராக வெளிவந்து கொண்டிருந்தது), பேராசிரியர் சி. சிவசேகரம், வ.ஐ.ச.ஜெயபாலன், பா. அ.ஜயகரன், வ.ந.கிரிதரன், நேசன், ரதன், ஆரூரான், எஸ்.வி.ராஜதுரை... என்று பலர் எழுதியிருக்கின்றார்கள். இவை தேடலில் எழுதியவர்களின் முழுமையான பட்டியல் அல்ல. ஒரு உதாரணத்துக்காகக் குறிப்பிட்டுள்ளேன்.

நந்தலாலா ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எழுத்தாளார் ஜோதிகுமார் கனடா வருகை தந்திருந்தபோது அவருடன் நடாத்திய நேர்காணல். நீண்டதொரு விரிவான நேர்காணல். அதனைத் தேடல் சஞ்சிகைக்காக நான் செய்திருக்கிறேன். இன்னும் தேடல் சஞ்சிகைகளின் தொகுப்பொன்று வெளிவராதது துரதிருஷ்டமானது. எதிர்காலத்தில் வெளியாகுமென்று எதிர்பார்ப்போம்.

### 6. பல்வகை இலக்கிய நிகழ்வுகளை (நூல் வெளியீடு உட்பட) ஏற்பாடு செய்து நடத்துதல்.

தேடகம் நடத்தி வரும் பல்வகை இலக்கிய நிகழ்வுகள் முக்கியமானவை. நூல் வெளியீட்டு அறிமுக நிகழ்வுகள், இலக்கியப் போக்குகள் பற்றிய கலை, இலக்கிய ஆளுமைகளின் உரைகளும், அவை பற்றிய கலந்துரையாடல்கள் இவ்விதத்தில் முக்கியமான அதன் பங்களிப்புகள். இவை இதுவரை முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. ஒரு காலத்தில் தேடகம் தொடர்ச்சியாக நடத்திய பின் நவீனத்துவம் பற்றிய இலக்கிய நிகழ்வுகள் முக்கியமானவை. முன்னாள் யாழ் பல்கலைகழக விரிவுரையாளர் ராஜேந்திரன் நடத்தினார்.

இவ்விதமான இலக்கிய நிகழ்வுகளில் முக்கியமானவைகளில் ஒன்றாகத் தமிழினியின் 'ஒரு கூர்வாளின் நிழலில்' நூல் அறிமுக நிகழ்வைக் குறிப்பிடலாம். இதில் நானும் கலந்துகொண்டு விரிவானதோர் உரையினை ஆற்றியிருந்தேன்.

தேடகம் அமைப்பென்றதும் எனக்கு நினைவுக்கு வருபவர்கள் எழுத்தாளர் பா.அ.ஜயகரன், மயில், சேனா, குமரன், அமரர் நெல்லியடி சிவம் (கணேசமூர்த்தி சிவகுமாரன்), கவிஞர் செழியன், சபேசன், அருள் நாகமுத்து, பாபு பரதராஜா, ரதன், ராதா, 'காந்தியம் சண்முகலிங்கன்', தேவன், இளங்கோ, குமார் மூர்த்தி. இவர்களை ஓர் உதாரணத்துக்குக் குறிப்பிட்டேன். இவர்களில் சிலர் தற்போது தேடகம் அமைப்பிலில்லை. இது முறையான, முழுமையான பட்டியல் அல்ல. தேடகம் அமைப்பைத் தொடங்கும்போது இருந்தவர்கள், இடையில் வந்து இணைந்தவர்கள், இணைந்து விலகியவர்கள், தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் பற்றிய சரியான விபரங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அதனைத் தேடக நண்பர்கள் செய்வார்களென்று நம்புகின்றேன்.

இவ்விதமான ஆவணப் படுத்தலுக்கு 'தேடகம்' பற்றிய ஓர் இலக்கிய மலரினை வெளியிடலாம். அதில் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கலாம். அதே சமயம் தேடகம் வெளியிட்ட 'தேடல்' இதழ்களின் தொகுப்பொன்றைக் கொண்டு வரலாம். அதில் தேடகம் பற்றிய விரிவானதோர் ஆய்வுக் கட்டுரையினையும் உள்ளடக்கலாம்.

தேடகம் அமைப்பின் வருடந்தோறும் நடைபெறும் ஒன்று கூடலும் முக்கியமானதொரு கலை, இலக்கிய நிகழ்வு. கடந்த சில் வருடங்களாக, 'கொரோனா' பெருந்தொற்று காரணமாக நடைபெறவில்லை.

இவ்விதமாகத் தேடகம் அமைப்பின் பல்வகைப்பங்களிப்புகள் பற்றிய விரிவான தகவல்கள் திரட்டப்பட்டு அவை ஆவணப்படுத்தப்படுவது மிகவும் முக்கியமானது. இதுபோல் இதுவரை தேடகம் அமைப்பில் இணைந்து இயங்கியவர்கள், இப்போதும் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் இவர்கள் பற்றிய விபரங்கள் எல்லாம் ஆவணப்படுத்தப்படுவது மிகவும் அவசியம். ஏனென்றால் இவை கனடியத் தமிழர் வரலாற்றின் முக்கியமான தவிர்க்க முடியாத பகுதிகள்.

**சுடர்' ஆசிரியர் கனகசிங்கமும் (ஓவியர் பொன்னரி), அவர்தம் ஓவியங்கள் சிலவும்!**



எழுத்தாளர் தாமரைச்செல்வி தான் 'சுடர்' சஞ்சிகையில் எழுதத் தொடங்கிய காலத்தில் அதன் ஆசிரியராகவிருந்தவர் கனகசிங்கம் என்றும், அவரே அரி, பொன்னரி என்பன அவரது புனைபெயர்கள் என்றும் குறிப்பிட்டுப் பின்வருமாறு பதிவொன்றினைத் தனது முகநூற் பக்கத்தில் இட்டிருந்ததுடன், அண்மையில் ஆஸ்திரேலியாவின் நடந்த 'அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்க'த்தின் தமிழ் எழுத்தாளர் விழாவில் தான் முதன்முறைடாக அவரைச் சந்தித்ததாகவும் குறிப்பிட்டு அவருடனான புகைப்படம் ஒன்றினையும் பகிர்ந்திருந்தார். அதனை நன்றியுடன் இங்கு பகிர்ந்துகொள்கின்றேன். கூடவே 'சுட'ரில் வெளியான அவரது ஓவியங்கள் சிலவற்றையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கபூர்வமாக இருப்பவர்கள். எழுத்தாளர்களின் ஆரம்பக் காலகட்டங்களில் அவர்களது ஆதரவும், ஊக்கமும் பெரிதும் முக்கியமானவை என்பதற்கோர் உதாரணம் 'சுடர்' ஆசிரியர் கனகசிங்கம். பேராசிரியர் கைலாசபதி, தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன், ஈழநாடு வாரமலர் ஆசிரியர் பெருமாள் இத்தருணத்தில் நினைவுக்கு வருகின்றார்கள். இவர்களைப் போன்றவர்களால் உருவான, வளர்ந்த எழுத்தாளர்கள் எத்தனை பேர்.

இத்தருணத்தில் நான் ஈழநாடு வாரமலர் ஆசிரியராகவிருந்த அமரர் பெருமாள் அவர்களை நினைத்துப் பார்க்கின்றேன். அவரை நான் ஒருபோதும் நேரில் சந்தித்ததில்லை. ஆனால் என் இளமைப்பருவத்தில் என் சிறுகதைகளை, கட்டுரைகளை, கவிதைகளை ஈழநாடு வாரமலரில் பிரசுரித்து ஊக்கப்படுத்தியவர் அவர் என்பதை மறக்க முடியாது.

**தாமரைச்செல்வியின் குறிப்பு:**

'ஈழத்தில் வெளிவந்த சஞ்சிகைகளில் சுடர் சஞ்சிகை முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. எழுபது எண்பதுகளில் நிறைய எழுத்தாளர்களை குறிப்பாக பல பெண் எழுத்தாளர்களை வளர்த்தெடுத்திருக்கிறது. கலைச் செல்வி மூலம் உருவான பல எழுத்தாளர்களை அறிந்திருக்கிறோம். அதே போல அடுத்த கட்ட பல எழுத்தாளர்கள் சுடர் மூலம் வளர்ந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் சுடர் ஆசிரியராக இருந்தவர் திரு.கனகசிங்கம் அவர்கள். பொன்னரி, அரி என்ற பெயர்களில்தான் அப்போது நாம் அவரை அறிந்திருந்தோம்.அவருடன் எந்த அறிமுகமும் இல்லாத போதும் எனது கதைகளை மட்டுமின்றி நான் வரைந்து அனுப்பும் ஓவியங்களையும் பிரசுரித்து ஆதரவு தந்தவர். சுடரில் வந்த எனது அநேகமான கதைகளுக்கு நானே ஓவியமும் வரைந்திருக்கிறேன்.'

**'பொன்னரி' என்னும் பெயரில் கனகசிங்கம் அவர்கள் 'சுடரில் வரைந்த ஓவியங்கள்:**









# கண் கொண்டு காண, என்ன தவம் செய்தனை?

புலி அழிந்து போகும் என்பதில் எனக்கு எப்போதுமே அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. எந்த வித அரசியல் கட்டுமானமும் இல்லாமல், படுகொலை அரசியலை மட்டுமே நம்பிய 'அடிச்சுப் பறிப்பம்!' போராட்டம் ஒருபோதும் நீடிக்க முடியாது.

சர்வாதிகார அடக்கு முறையை நம்பிய அரசுகளும், ஜனநாயக அமைப்புகளாக இருந்து ஆட்சி செய்து கால மாற்றத்திற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ளாத கட்சிகளும் நிலைக்க முடியாது. ரஷ்யப் புரட்சிக்குப் பின்னான சோவியத் அரசும், மெக்சிக்கோவில் எழுபது வருடங்களாக ஆட்சி செய்து சிதைந்து போன கட்சியும் நான் உதாரணமாகச் சொல்கிறவை.

காலம் நீண்டதானதாக இருக்கலாம். ஆனால் அழிவு நிச்சயமானது.

Institutions live longer than individuals என்று சொல்வார்கள். புலிகள் விடயத்தில் அது கூட நடக்காது என்பதிலும் எனக்கு நம்பிக்கை இருந்தது. அதை தாயகம் ஏடு இட்டோர் இயலில் அந்தக் காலத்தில் எழுதியும் இருக்கிறேன்.

பிரபாகரன் என்ற ஒற்றை மனிதனை நம்பி, ஒரு முழு இனமும் 'விட்டால் குடுமி, சிரைச்சால் மொட்டை' என்ற ஒற்றைத் தத்துவ மனோபாவத்தோடு இருக்கும்போது, பிரபாரகரனுக்குப் பின்னால் புலிகள் என்ற அமைப்பு இயங்க முடியாது என்பதையும் உறுதியாகவே நம்பியிருந்தேன்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இன்றைக்கும் நிலைத்து நிற்பதற்கான காரணம், அடுத்த தலைமுறைத்

**ஜோர்ஜ் இ.**

தலைவர்களைத் தெரிவு செய்து வளர்த்து விட்டது தான். எந்தத் தலைவரும் தனக்குப் போட்டியாக எவரும் வந்து விடக் கூடாது என்ற சிந்தனையோடு, எல்லாரையும் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்தால் பானையில் எது மிஞ்சும் என்பதை இன்றைக்கும் யாழ்ப்பாணிகள் கண் முன்னால் கண்டு களித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மண்டேலா தன் பதவிக் காலம் முடிந்ததும் ஒதுங்கி மற்றவர்களுக்கு வழி விட்டார். நாங்கள் சம்பந்தனோடு இழுபட வேண்டிக் கிடந்தது.

நான் நிரந்தரமானவன் என்று எந்தத் தலைவரும் இங்கே இல்லை. தங்கள் பதவிக் காலம் முடிந்ததும், அல்லது வேண்டப்படாத போது ஒதுங்கிக் கொண்டு சாதாரண மனிதர்களாகத் தான் வாழ்கிறார்கள். மூன்று முறை பிரதமராக இருந்த

ஸ்டீவன் ஹார்ப்பரும், மூன்று முறை மாநில முதல்வராக இருந்த டோல்ற்றன் மக்கின்ரியும், இங்கே தங்கள் கட்சி மாநாடுகளின் போது சாதாரண மனிதர்களாக வந்து போகிறார்கள். தற்போதைய பிரதமரை தொடர்ந்தும் நீடிக்க விட வேண்டுமா என்ற கேள்வி கட்சிக்குள்ளேயே வந்து விட்டது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான பில் கிளின்டனும் ஒபாமாவும் ஜோர்ஜ் புஷ்ஷூம் சாதாரண மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எங்களுக்குத் தான், 'சூரிய தேவன்!'.

கள்ளவோட்டு சிறிதரன் கட்சித் தலைவரானது தான் நாங்கள் வாக்களித்து தலைவரைத் தெரிவு செய்த ஜனநாயக வெற்றி என்று பெருமைப்படுகிற விடயம்.

'கடவுள் கூட இந்த அநியாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே?' என்று புலம்பிய நண்பருக்குக் கூட, எண்பதுகளில் இருந்த லெபனானை உதாரணம் காட்டி, 'இப்போது நாங்கள் சாத்தியமில்லை என்று அப்போதைய சூழ்நிலைகளையும் தர்க்க நியாயங்களையும் வைத்துக் கொண்டு நினைக்கிற எல்லாமே ஒரு காலகட்டத்தில் சாத்தியமாகித் தான் இருந்திருக்கிறது. நாங்கள் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத விதத்தில் மாற்றம் வரும்' என்று தான் சொல்லியிருந்தேன்.

பிறகு பிரபாகரன் இறந்த போது, தான் அழுததாக அவர் சொன்னது தனிக் கதை.

'யாழ்ப்பாணத்து பிராங்கன்ஸ்டைன்' என்று தாயகம் ஏடு இட்டோர் இயலில், யாழ்ப்பாணிகள் ஒரு பிராங்கன்ஸ்டைன் பூதத்தை உருவாக்குகிறார்கள், அது ஒருநாளைக்கு அவர்களையும் அழித்து தானும் அழியும்' என்பதை, முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பாக எழுதியிருந்தேன்.

இதையெல்லாம் சொன்ன நான், என்னுடைய தீர்க்கதரிசனங்கள் என் கண் முன்னால் நிறைவேறும், இதை எல்லாம் என் வாழ்நாளில் காண நேரிடும் என்று என் கனவில் கூட நினைத்ததில்லை.

**புலிகள் அழிந்த பின்னால் புலிவால் ஆதரவாளர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டு தாங்களாகவே அம்பலப்படுவார்கள் என்பதையும் உறுதியாக நம்பியிருந்தேன். அது மாபியா கூட்டங்கள் போல கொலைகளில் முடியும் என்று தான் நினைத்திருந்தேன். அதைப் போல, பாரிஸில் வைத்து ஒருவர் படுகொலை செய்யப்பட்டு, லெட்டர்ஹெட் புலிகளால் கேணல் ஆக்கப்பட்டிருந்தார்.**

காட்டுக்குள் மறைந்து இருந்து, 'மீண்டும் தோன்றுகிறார்' என்று பில்டப் செய்யப்பட்டு நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், ராஜீவ் கொலைக்காக இந்திய இராணுவம் வந்து கைது செய்யக் கூடும் என்ற கேள்விக்கு, பாலசிங்கத்திற்கு காதுக்குள் 'அவையை வந்து பிடிச்சுக் கொண்டு போகச் சொல்லுங்கோ!' என்று சிரித்தபடி சொன்ன பிரபாகரன், மண்டை பிளந்து இரத்தம் வடிந்தபடி, கண்களைத் திறந்தபடி கிடந்த காட்சி என்றுமே நான் எதிர்பார்த்திராதது. கற்பனை கூட செய்திருக்காதது.

அந்த மரணத்தில் மகிழ்ச்சி கொண்டேன் என்பது இல்லை. இனிமேல் கொலைகளும் அழிவும் முடிவுக்கு வரும் என்ற நிம்மதி மட்டுமே வந்தது.

புலிவால்களைப் போல, மற்ற மரணங்களில் இன்ப அதிர்ச்சி அடைந்து, துள்ளிக் குதித்து இனிப்பு வழங்கி, வெடி கொழுத்தி, வானலைகளில் பொங்கி எழுந்து ஆரவாரம் செய்தது போலன்றி, சுத்தி நின்று உசுப்பேத்தி பப்பாளி மரத்தில் ஏற்றியவர்களை நம்பி தன்னைச் சூரிய தேவனாக நினைத்து இப்படி அவல மரணத்தில் முடிந்து விட்டதே என்ற பரிதாபம் தான் வந்தது. தான் வாழ்நாளில் செய்த அக்கிரமங்களுக்கான கர்மப் பழியை, மரண பயத்தைக் கடைசி மூன்று நாட்களில் அனுபவித்த பின்னால் தான் இறந்திருப்பார் என்றே என்னைச் சுற்றியிருந்தவர்களுக்குச் சொன்னேன்.

அதைப் போல, புலிகள் அழிந்த பின்னால் புலிவால் ஆதரவாளர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டு தாங்களாகவே அம்பலப்படுவார்கள் என்பதையும் உறுதியாக நம்பியிருந்தேன். அது மாபியா கூட்டங்கள் போல கொலைகளில் முடியும் என்று தான் நினைத்திருந்தேன்.

அதைப் போல, பாரிஸில் வைத்து ஒருவர் படுகொலை செய்யப்பட்டு, லெட்டர்ஹெட் புலிகளால் கேணல் ஆக்கப்பட்டிருந்தார்.

மாவீரர் தினம் கூட குழுக்களாகப் பிரிந்து நடக்கும் அளவுக்கு நிலைமை வந்து முடிந்திருக்கிறது.

பிரமுகர்கள் ஆகவேண்டும் என்று படித்த யாழ்ப்பாணிகளும், காசைச் சுருட்டலாம் என்று அயோக்கியர்களும் புலிகளோடு ஒட்டிக் கொண்டார்களே அன்றி, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனைக்கான தீர்வுக்காக இவர்கள் புலிகளோடு ஒட்டிக் கொண்டதில்லை.

கொலைகாரக் கூட்டத்தோடு நேர்மையாளர்களா கூட்டு வைக்க முடியும்? புலிகள் போன்ற பாசிச அமைப்புகளில் பிரமுகர்களாக ஒட்டிக் கொள்வோர் இப்படியான சமூக விரோதிகளாகத் தான் இருக்க முடியும் என்பதற்கு இன்றைய உதாரணம் பாரதீய ஜனதாக் கட்சி.

யாழ்ப்பாணத்திலும் புலிகளோடு ஒட்டிக் கொண்ட முக்கியஸ்தர்கள் எல்லாருமே இப்படி புலிகளால் பயன்பெற முடியும் என்ற நம்பிக்கையில் சேர்ந்து கொண்டவர்கள் தான். புலிகளோடு ஒட்டிக் கொண்ட துணிச்சலாலும் பாதுகாப்பு உணர்வினாலும் தானே பல்கலைக்கழக ஆசிரியர் வேலைக்காரப் பிள்ளையை பாலியல் வன்முறை செய்ய முடிந்தது.

தங்கள் சுயநலம் தவிர்ந்த வேறு எந்த நோக்கமும் இல்லாமல் சேர்ந்து கொண்ட அயோக்கியர்களின்

ஒற்றுமை நெடுநாளைக்கு நீடிக்க முடியாது என்பதை நான் என் சொந்த வாழ்க்கையில் உணர்ந்திருக்கிறேன். என்னோடு இருந்து கோபித்துக் கொண்டு போய் கூட்டுச் சேர்ந்த அத்தனை பேரும் இன்றைக்கு சிதறிப் போய் விட்டார்கள், பலர் ஆளுக்காள் பேசிக் கொள்வதில்லை. அவர்களுடைய நோக்கம் எனக்கு எதிராக ஏதோ 'சதி' செய்யும் நோக்கம் தவிர வேறு எதுவுமாக இருந்ததில்லை. அது நீண்ட காலம் நீடிக்க முடியாது.

இதைப் போல, புலிகளோடு ஒட்டிக் கொண்ட அயோக்கியர்களும், நீண்ட காலம் ஒற்றுமையாக நீடிக்க முடியவில்லை. இன்றைக்கு கனடாவில் மட்டுமே, புலிகளுக்கும் தமிழ்த்தேசியத்திற்கும் விசுவாசப் பிரமாணம் செய்தபடியே, ஆளையாள் மாறி மாறி துரோகிகள் என்றபடி, தங்களுக்குள் மோதிக் கொள்கிற பல கூட்டங்கள் உண்டு. இவர்கள் எல்லாருக்கும் புலியை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்பதைத் தவிர வேறு எந்த ஒற்றுமையும் இல்லை.

இவ்வளவு நாளும் 'நாங்கள் எங்கள் ஒற்றுமையைக் காட்ட' நடிக்கவாவது வேண்டும் என்றும், பிழைப்பு நடத்துகிற அத்தனை அயோக்கியர்களுக்கும் இருக்கிற, 'தங்கள் பிழைப்பைக் கெடுக்கிற எதையும் செய்யக் கூடாது' என்ற கூட்டுச் சிந்தனை காரணமாகவும் பொதுவெளியில் இவர்கள் மோதிக் கொண்டதில்லை.

இன்றைக்கு இந்த குடுமிப்பிடிச் சண்டை பொதுவெளிக்கு வந்திருக்கிறது. இந்தக் கேவலத்திற்கு வரும் என்பதை முடிவாக எனக்கு எதிர்வுகூற முடிந்திருந்தாலும், என் வாழ்நாளில் காணும் பாக்கியம் இப்போதுதான் கிடைத்திருக்கிறது.

•••

புலிகள் காலத்தில் புலிகளுக்கு எதிரானவர்கள் மீது புலிகள் அவதூறுகளை அள்ளி விட்டு கொண்டிருந்தார்கள். சிஐஏ கைக்கூலிகள், வளர்ப்புப் பிராணிகள் என்றெல்லாம் தங்களுக்கு எதிரானவர்கள் மீது அவதூறுகள் பொழிந்த அதே புலிகளில் பலர், அதே புலிவால்களால், பொம்பிளைப் பிரச்சனை, காசு அடிச்சிட்டார், யுத்தத்தின் பின்னால் 'தேசியச் சொத்துக்களை அபகரித்து விட்டார்கள்' என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டனர். ஏதோ அவர்கள் நேற்றைக்குத் தான் இதையெல்லாம் செய்தார்கள், இன்றைக்கு கையும் களவுமாகப் பிடித்து விட்டோம் என்பது போலத் தான் கதை இருக்கும்.

**இந்த அவதூறுகள் பொதுவெளியில் பண்புள்ள மனிதர்களால் செய்ய முடியாத அவதூறுகளாக இருந்தன. இதற்காக புலிகள் தனியான இணையத்தளமே வைத்திருந்தார்கள். அதற்குப் பொறுப்பாக நடராஜா சேதுரூபன் என்பவர் இருந்தார். நிதர்சனம் என்ற பெயரில் வந்த அந்த இணையத்தளத்தில் வெறும் பொய் அவதூறுகளே வெளிவந்திருந்தன.**

**'கிணற்றில் விழுந்து', 'பாம்பு கடித்து', 'மோட்டார் சைக்கிள் விபத்தில்' எல்லாம் 'வீரச்சாவு' அடைந்த புலிகளுக்கு விசேடமாக அஞ்சலி செலுத்த என்று புலிகள் நிதர்சனத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள்.**

'அடே, இவ்வளவு நாளா அதைத் தாண்டா செய்து கொண்டிருந்தார்கள். அதைத் தான் நாங்கள் இத்தனை வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருந்தோம். இன்றைக்கு ஏதோ இப்போது தான் அதைத் தெரிந்து கொண்ட மாதிரிக் கதை விடுகிறீர்களேடா?' என்று நினைத்துக் கொள்வதுண்டு.

இந்த அவதூறுகள் பொதுவெளியில் பண்புள்ள மனிதர்களால் செய்ய முடியாத அவதூறுகளாக இருந்தன. இதற்காக புலிகள் தனியான இணையத்தளமே வைத்திருந்தார்கள். அதற்குப் பொறுப்பாக நடராஜா சேதுரூபன் என்பவர் இருந்தார். நிதர்சனம் என்ற பெயரில் வந்த அந்த இணையத்தளத்தில் வெறும் பொய் அவதூறுகளே வெளிவந்திருந்தன.

'கிணற்றில் விழுந்து', 'பாம்பு கடித்து', 'மோட்டார் சைக்கிள் விபத்தில்' எல்லாம் 'வீரச்சாவு' அடைந்த புலிகளுக்கு விசேடமாக அஞ்சலி செலுத்த என்று புலிகள் நிதர்சனத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள்.

பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது, புலிகள் கடத்திச் சென்ற கதை பற்றிய எழுதியபோது, மாணவர்களின் எதிர்ப்பை மீறி எனது வகுப்பு நண்பன் ஒருவன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பிரிவுக்குப் போனதால் மதில் சுவர்களில் துரோகி ஆக்கப்பட்டது பற்றி எழுதியிருக்கிறேன்.

அவனது சகோதரன் எங்களுக்கு ஒரு வகுப்பு கூடப் படித்தவர். கிரிக்கட் வீரனான அவர் இராணுவத்தில் சேர்ந்து பிரிகேடியராக வவுனியாவில் பணிபுரிந்தார். அப்போது பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டபோது, சிறு குழந்தை ஒன்றுக்கு பரிசு வழங்கிய படத்தைப் போட்டு, அந்தக் குழந்தையைப் பார்த்து 'அவரது கண்ணில் தெரிந்த காமம்' பற்றி நிதர்சனம் விளாசியிருந்தது. பின்னர் எங்கள் பாடசாலை பழைய மாணவர் சந்திப்பில் ஓய்வு பெற்று கனடா வந்திருந்த அவரையும் கண்டிருந்தேன். அவருக்கு தன்னைப் பற்றி எழுதப்பட்ட இந்த விசயம் எல்லாம் தெரிந்திருக்குமோ எனக்குத் தெரியாது.

இப்படியெல்லாம் கேவலமான அவதூறுகளை நிதர்சனம் இணையத்தளம் செய்து கொண்டிருந்தது.

சேரமான் என்பவர் புலிகள் காலத்தில் அரசியல் ஆய்வாளராக பிரபலமானவர். புலி சார்புப் பத்திரிகைகளில் அவரது 'புலநாய்வுகள்' பிரசுரமாகியிருந்தன. புலிகள் அழிந்த பின்னர், புலிகளின் பொலிஸ் மா அதிபர் நடேசனின் மின்னஞ்சல் கட்டுப்பாடு இவரிடம் இருந்ததால், அதில் உள்ள பல இரகசியங்கள் இவரால்

வெளியிடப்பட்டிருந்தன. அதில் தற்போதைய ஊடக ஜாம்பவானும், மூத்த ஊடகவியலாளருமான வித்தியாதரன் இந்தியா, சிங்கள அரசு, புலிகள் என்று, எல்லாருக்கும் தலை, வால், பிட்டம் என்று பாவ்லா காட்டிக் கொண்டிருந்த விவகாரம் எல்லாம் வெளிவந்திருந்தது.

இந்த சேரமானை சிறுவயதில் புலிகள் தான் லண்டனுக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு பாலசிங்கத்துடன் நெருக்கமானவராக இருந்ததாகவும் புலிகள் அமைப்பில் இருந்த ஒருவர் எனக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த சேரமான் தான் தற்போது, பிரபாகரனும், மதிவதனியும் உயிரோடிருப்பதாகவும், ஃபேக் ஐடி தேசியப்புதல்வி துவாரகாவைக் கொண்டு வந்து பதினெட்டாம் ஈழப் போரை ஆரம்பிக்க உள்ளதாகவும் கதை விட்டுக் கொண்டிருக்கிறவர்.

சாந்தி நேசக்கரம் என்பவரும் இப்படியாக புலிவால் வட்டங்களுக்குள் பிரபலமானவர். இவர் தமிழினியின் மரணத்தின் போது, அவர் பற்றிய எழுதிய ஒன்றை வாசித்த ஞாபகம். ஆனால், இப்போது தேசியப் புதல்வி என்பது ஒரு மோசடி என்று பகிரங்கமாகக் கருத்துச் சொல்கிறவர்களில் முதன்மையானவர்.

•••

கனடாவில் புலிகள் ஆரம்பித்த அமைப்புகள், புலிகள் ஊடுருவிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அமைப்புகள், புலிகளின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பிக்கப்பட்ட அமைப்புகள் என்றெல்லாம் புலிக்குப் பின்னான தேசியப் போராட்டத்தை நடத்திச் செல்ல பல அமைப்புகள் இருந்தன.

இதில் நாடு கடந்த தமிழ் ஈழம் என்ற கேலிக்கூத்து வேறு அரங்கேற்றப்பட்டிருந்தது. தங்களைப் புத்திஜீவிகளாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள், யாழ்ப்பாணிகளைச் சுத்துவது போலவே, சர்வதேசத்தையும் சுத்தலாம் என்று ஆரம்பித்து, சர்வதேச தேர்தல் நடத்தி, நூறு வீதம் ஆதரவு என்றால் சர்வதேசம் நம்பாது என்று, குறைவாக கள்ளவோட்டுப் போட்டு, தமாசா பண்ணியிருந்தார்கள். இதையெல்லாம் ஐ.நாவில் காட்டி ஈழம் பெறலாம் என்று இந்த அயோக்கியப் புத்திஜீவிகளும், அவர்களோடு ஒட்டிக் கொண்டு பிழைப்பு நடத்தும் ஊளையிடலாளர்களும் புல நாய்வாலர்களும் இந்த யாழ்ப்பாணிகளுக்கு கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இதை விட, கனடிய அரசோடு நெருக்கத்தை ஏற்படுத்தி, தங்கள் அரசியல் கனவுகளை புலியின் நிழலில் நனவாக்கிக் கொள்ளலாம் என்றவர்களின் முயற்சியில் ஒரு கூட்டமும், பழைய உலகத்தமிழர் அமைப்பின் தொடர்ச்சியாக இன்னொரு அமைப்பும் என இன்னோரன்ன பல அமைப்புகள் புலிகளுக்கு தாங்கள் தான் வாரிசுகள், மாவீரர் ட்ரேட்மார்க்குக்கான ஏக உரிமை தங்களுக்கு மட்டுமேயானது என்றும் இலங்கைத் தமிழரின் அரசியல் காலத்தை நிர்ணயிக்கக் கூடிய சக்தி தங்களுக்கு மட்டுமே உள்ளது என்ற நினைப்பில் இந்த புலன் பெயர் யாழ்ப்பாணிகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருக்கின்றன. அங்கேயுள்ள கட்சிகளுக்குப் பணத்தைக் கொடுத்து தாங்கள் சொல்வது போல அரசியல் செய்விக்கலாம் என்று நம்பிக் கொண்டிருக்கின்றன.

**கனடிய அரசோடு நெருக்கத்தை ஏற்படுத்தி, தங்கள் அரசியல் கனவுகளை புலியின் நிழலில் நனவாக்கிக் கொள்ளலாம் என்றவர்களின் முயற்சியில் ஒரு கூட்டமும், பழைய உலகத்தமிழர் அமைப்பின் தொடர்ச்சியாக இன்னொரு அமைப்பும் என இன்னோரன்ன பல அமைப்புகள் புலிகளுக்கு தாங்கள் தான் வாரிசுகள், மாவீரர் ட்ரேட்மார்க்குக்கான ஏக உரிமை தங்களுக்கு மட்டுமேயானது என்றும் இலங்கைத் தமிழரின் அரசியல் காலத்தை நிர்ணயிக்கக் கூடிய சக்தி தங்களுக்கு மட்டுமே உள்ளது என்ற நினைப்பில் இந்த புலன் பெயர் யாழ்ப்பாணிகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருக்கின்றன.**

ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட நாடு கடந்த அரசாங்கம் இப்போது கேலிக்கூத்தாக முடிவடைந்த பின்னால், தற்போது மிஞ்சியிருக்கிற அமைப்புகளில் ஒன்றான கனடியத் தமிழ்க் காங்கிரஸ், பூகோள தமிழர் அமைப்புடன் சேர்ந்து சிங்களத் தரப்புகளோடு தொடர்புகளை ஆரம்பித்து, ஒரு தூதுக்குழுவை அனுப்பி நேபாளத்தில் வைத்து புத்த பிக்குகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, இமாலயப் பிரகடனம் என்ற ஒன்றைக் கொண்டு வந்து, சிங்களத் தலைவர்களைச் சந்தித்து அந்தத் திட்டத்தைக் கையளித்துப் படங்களும் எடுத்திருந்தனர்.

அவர்கள் மகிந்தவைச் சந்தித்தது புலன் பெயர் யாழ்ப்பாணிகள் மத்தியில் பெரும் பூகம்பத்தைக் கிளப்பி விட்டது.

இன அழிப்புச் செய்த யுத்தக் குற்றவாளியுடன் படம் எடுப்பதா என்பது தான் இந்த புலன் பெயர் யாழ்ப்பாணிகளின் அறச்சீற்றத்திற்கான காரணம்.

தற்போது கனடியத் தமிழ்க் காங்கிரஸ் கூட்டம் துரோகிகள் ஆக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பதறியடித்துக் கொண்டு, மறுப்பு அறிக்கை, தெளிவுபடுத்தும் அறிக்கை எல்லாம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துரோகி அறிவிப்போடு சேர்ந்து வன்முறை நடக்கலாம் என்ற எண்ணத்தில் பொங்கல் விழா ரத்துச் செய்யப்பட்டிருந்தது. தமிழர் மரபு மாத நிகழ்வுகள் ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத்தில் நடந்த போது, பகிரங்க அறிவிப்பு இல்லாமல் 'அழைக்கப் பட்டவர்களுக்கு மட்டும்' நடத்தப்பட்டிருக்கிறது. பின்னர் நடந்த பொங்கல் விழாவும் இயல்விருது ரேஞ்சில் கோட், சூட் போட்டவர்களுக்குத் தான் இரகசியமாக நடத்தப்பட்டது.

கனடியத் தமிழ்க் காங்கிரஸின் முக்கியஸ்தராக இருந்த கரி ஆனந்தசங்கரி இமாலயப் பிரகடனத்தை எதிர்த்து அறிக்கை

விட்டிருக்கிறார். அதற்கு எதிர்த்து அறிக்கை விடாத மாகாண அரசு அமைச்சர் விஜய் தணிகாசலம், நகரசபை உறுப்பினர் ஜுவானிட்டா நாதன் ஆகியோர் துரோகிகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்குள் கனடியத் தமிழ்க் காங்கிரஸ் இலங்கை அரசியலில் தன்னை ஒரு தீர்மானிக்கும் சக்தியாக வேறு நினைத்துக் கொண்டிருந்தது தனிக் கதை. கனடியத் தமிழ்க் காங்கிரஸின் தற்போதைய ‘கயிட்ட காலம்’ எங்கேயோ போய் உதைத்திருக்கிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு நிதி உதவி வழங்கி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து அரசியல் செய்யலாம் என்று நினைத்து சுமந்திரனை முன்நிறுத்தியிருந்தது. இப்போது சுமந்திரன் தலைவராகும் முயற்சியில் தோல்வி அடைந்த பின்னால், அந்தத் திட்டமும் அம்பேல்.

கனடியத் தமிழ்க் காங்கிரஸில் ஒரு வீரப் பெண் இது தமிழர் நலனுக்கு எதிரான பிரகடனம் என்று தனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார். அடுத்த கனடியத் தேர்தலில் அவரை இந்த முட்டாள் கூட்டம் தேசியத் தலைவியாக்கும் என்பதை இப்போதே தீர்க்கதரிசனம் சொல்லி விடுகிறேன். அவ்வளவு விளப்பமான கூட்டம் இது.

இன்னொருவரும் பதவி விலகியிருக்கிறார். அவர் இதற்கெல்லாம் பொறுப்பேற்றி ருக்கிறார் என்பது உத்தியோகபூர்வ விளக்கம்.

பிரச்சனை அத்தோடு முடிந்து விடவும் இல்லை. இவர்களுக்குப் போட்டிக் குழுவாக, பழைய உலகத்தமிழர் அமைப்பின் எச்சங்கள் ஒரு அமைப்பை நடத்தி வருகின்றன. கனடியத் தமிழர்களுக்கான தேசியக் கவுன்சில் என்ற பெயரில். National Council for Canadian Tamils.

ஒரு கட்சியிலிருந்தும் சங்கத்திலிருந்தும் அடிபட்டுப் பிரிந்து, போட்டிக்கு கட்சிகளும் சங்கங்களையும் யாழ்ப்பாணிகள் அமைப்பதே தன்னுடைய ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தான். நாலைந்து கட்சிகளும் சங்கங்களும் இருந்தால்

**இன்றைக்கு தங்களுடைய அலுவலகம் எரிக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை என்று சொல்கிற கரி ஆனந்தசங்கரி இவர்களுக்கு யார்?**

**கனடாவில் முன்னாள் முதல்வர் பொப் ரேயைப் பேச விடாமல் பெரும் குழப்பம் விளைவித்த புலிக் காடையர்களுக்கு அவர் தான் தலைமை தாங்கியிருந்தார். அவருடைய வீரத்தைப் பார்த்து, கனடியப் பாராளுமன்றத்தில் ஈழம் எடுத்துத் தருவார் என்று இதே தமிழ்க் காங்கிரஸ் தான் அவரைப் பாராளுமன்றம் அனுப்பியது. அவரைத் தான் வன்முறையைக் கண்டிக்கவில்லையாம்.**

தானே கூட்டமைப்புகளும் சம்மேளனங்களும் அமைத்து சர்வதேசத்திற்கு ஒற்றுமையைக் காட்ட முடியும் என்று, யாழ்ப்பாணியின் மூளையில் உதித்த மணியான ஐடியாவில் முளைத்தவை தான் இந்தச் சங்கங்கள்.

இப்படியாக, இமாலயப் பிரகடனத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கியவர்களின் பின்னணியில் இந்த அமைப்பு தான் முக்கியமானதாக இருந்து வருகிறது.

இந்த அமைப்பு செல்போன் வைத்திருக்கும் ஊடகக் குழும ஊடகவியலாளரைக் கூப்பிட்டு மாநாடு நடத்தியோ என்னவோ, தமிழ்க் காங்கிரசுக்கு எதிராக அவதூறு செய்ததாக இப்போது கனடியத் தமிழ்க் காங்கிரஸ், கனடியத் தமிழர்களுக்கான தேசியக் கவுன்சிலுக்கு எதிராக மான நட்ட வழக்குத் தொடர்ந்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இப்போது இந்தக் கனடியத் தமிழ்க் காங்கிரசின் ரொறன்ரோ அலுவலகம் அதிகாலை உடைக்கப்பட்டு தீ வைக்கப்பட்டுள்ளது.

இப்போது இந்தப் புலிவால்கள் எல்லாம் ஜனநாயக, மனித உரிமை வாதிகளாகி, ‘வன்முறையின் கொடூரம் சமூகத்தைச் சின்னாபின்னமாக்கும்’, ‘கருத்து வேறுபாடுகளுக்கு வன்முறை தீர்வாகாது’ என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கண்டுபிடித்தவர்கள் அதற்கு அமைதி வழியில் தெருவில் நின்று போராட்டம் நடத்த முயன்று, அதுவும் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆள் வராமல் தோல்வியில் முடியும் என்றோ, தங்கள் மீதும் வன்முறைகள் தீர்வாக்கப்படலாம் என்ற பயமோ கனடியத் தமிழ்க் காங்கிரஸ் தன் ஆர்ப்பாட்டத்தை நடத்தாமல் நிறுத்தியிருக்கிறது.

ஆனால், போட்டிக் கூட்டம் தங்கள் மீது மானநட்ட வழக்குப் போட்ட கடுப்பில் புலிக்கொடியோடு ஒரு கூட்டத்தைக் கூட்டி வந்து, கனடியத் தமிழ்க் காங்கிரஸ் அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்திக் காட்டியிருக்கிறது. தெருவோரம் நின்று கனடியத் தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகிகளை பதவி விலகும்படி கோரி, பதாகைக்கு முட்டை அடித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

இதற்குள் தங்கள் அலுவலகம் எரிக்கப்பட்டதற்கு கரி ஆனந்தசங்கரி எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை என்று தமிழ்க் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் இருவர் அவரது அலுவலகத்தின் முன்னால் நின்று போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆர்ப்பாட்டம் என்று அறிவித்து மக்களைத் திரட்ட முடியாமல், ஆளில்லா நேரம் பார்த்து நடத்தப்பட்ட தாக்குதல் போல இருந்தது.

இன்றைக்கு தங்களுடைய அலுவலகம் எரிக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை என்று சொல்கிற கரி ஆனந்தசங்கரி இவர்களுக்கு யார்?

கனடாவில் முன்னாள் முதல்வர் பொப் ரேயைப் பேச விடாமல் பெரும் குழப்பம் விளைவித்த புலிக் காடையர்களுக்கு அவர்தான்தலைமைதாங்கியிருந்தார். அவருடைய வீரத்தைப் பார்த்து, கனடியப் பாராளுமன்றத்தில் ஈழம் எடுத்துத் தருவார் என்று இதே தமிழ்க் காங்கிரஸ் தான் அவரைப் பாராளுமன்றம் அனுப்பியது. அவரைத் தான் வன்முறையைக்

கண்டிக்கவில்லையாம்.

இது போதாதென்று, இத்தனை நாளும் தலைவரின் மூளைக்குள் உட்கார்ந்திருந்த மாதிரி, இந்த புலன் பெயர் மந்தைக் கூட்டத்தைப் புல்லரிக்க வைத்த புலநாய்வாலர்கள், கனடியத் தமிழ்க் காங்கிரஸோடு ஒட்டிக் கொண்டதை மறைக்க முயன்று, 'ஐயோ, நான் அவனை அறியேனே!?' என்று சேவல் கூவ முன் மும்முறை மறுதலிக்காத குறையாக, தங்களை பகிரங்கமாக அடையாளம் காட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இப்போது, தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் பற்றி புல நாய்வு செய்யும்போது கூட, சொந்தப் பெயரில் எழுத முடியாமல் ஃபேக் ஐடிக்களில் எழுத வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஈழம் ஒரு வெறும் கானல் கனவு என்று உள்ளூரத் தெரிந்த போதும், அது பெருங்கனவு என்று இந்த யாழ்தேஷ் மந்தைக் கூட்டத்திற்கு கதை விட வேண்டி இருக்கிறது.

இப்போது கனடியத் தமிழ்க் காங்கிரசோடு ஒட்டிக் கொண்டிருந்த ஒரு கூட்டம், பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தால், தாங்களும் துரோகிகள் ஆக்கப்படலாம் என்ற பயத்தில், குலை நடுங்கி, கதி கலங்கிப் போயிருக்கிறார்கள்.

கனடாவில் வன்னிச் சட்டத்தை அமுல்படுத்தலாம் என்று தாயகம் பத்திரிகை தடை, தேடகம் எரிப்பு சகல சட்டவிரோதக் காடைத் தனங்களையும் அவிழ்த்து விட்டுக் கொண்டு, அந்தக் காடையர்களை வழிநடத்தியும் போஷித்தும் கொண்டிருந்த கூட்டம், இன்றைக்கு தன்னுடைய ஆட்களாலேயே எரிக்கப்பட்டு, பாதுகாப்புத் தேடி கனடிய காவல்துறையிடம் போய் மண்டியிட்டிருக்கிறது.

**இப்போது கனடியத் தமிழ்க் காங்கிரசோடு ஒட்டிக் கொண்டிருந்த ஒரு கூட்டம், பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தால், தாங்களும் துரோகிகள் ஆக்கப்படலாம் என்ற பயத்தில், குலை நடுங்கி, கதி கலங்கிப் போயிருக்கிறார்கள்.**

**கனடாவில் வன்னிச் சட்டத்தை அமுல்படுத்தலாம் என்று தாயகம் பத்திரிகை தடை, தேடகம் எரிப்பு சகல சட்டவிரோதக் காடைத் தனங்களையும் அவிழ்த்து விட்டுக் கொண்டு, அந்தக் காடையர்களை வழிநடத்தியும் போஷித்தும் கொண்டிருந்த கூட்டம், இன்றைக்கு தன்னுடைய ஆட்களாலேயே எரிக்கப்பட்டு, பாதுகாப்புத் தேடி கனடிய காவல்துறையிடம் போய் மண்டியிட்டிருக்கிறது.**

இப்படித் தான், யாழ்ப்பாணிச் சமூகம் கனடாவில் இவ்வாறான கேவலங்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

•••

அங்கே மறுபுறத்தில் துவாரகா குடுமிப்பிடிச் சண்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது. புலிகளை எதிர்ப்பவர்கள் மீது பொய் அவதூறுகளை வெளியிட்டுக் கொண்டிருந்த நிதர்சனம் இணையத்தளத்தின் பொறுப்பாளர் சேது இலங்கை போன போது, அவரது முந்திய அவதூறுகள் பற்றி யாரோ முறையீடு செய்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் அங்கே அரசு சார்பு யாழ்ப்பாண அரசியல்வாதி ஒருவருக்காக வேலை செய்ததாகவும், இவரது கைது குறித்து அந்த அரசியல்வாதி அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

இவருக்கும் சிங்களப் புலனாய்வுப் பிரிவினருக்கும் தொடர்பு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இப்போது வெளிவந்த துவாரகா பொய் என்று சொல்லிக் கொண்டிருந்ததால், மேற்குறிப்பிட்ட சேரமான், இந்த 'ஊத்தைச் சேது' (இது தன் மீது அவதூறு பொழிந்ததற்காக டி.பி.எஸ். ஜெயராஜ் வழங்கிய கௌரவப் பட்டம்) பற்றி சுவாரஷ்யமான தகவல்களையும் படங்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறார். சேது தான் சிங்களப் புலனாய்வாளர்களுடன் சேர்ந்து வேலை செய்ததைப் பகிரங்கமாகப் பீற்றிக் கொள்ளும் வீடியோக்களும், பெண்ணோடு இருக்கும் படங்களும் என, ஊத்தைச் சேதுவுக்கு முன்பு அவர் அள்ளி விட்ட அவருடைய கசப்பு மருந்து பருக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சேரமான் இப்போது சாந்தி நேசக்கரம் உட்பட்ட பல முன்னாள் மிருகநேசர்களைப் பற்றி பெரும் அவதூறுகள் செய்து கொண்டிருக்கிறார். யாழ்ப்பாணிகள் துவாரகா பற்றி அலட்டிக் கொள்ளாமலேயே தமன்னாவுடன் போட்டோ எடுக்க முண்டியடிக்க, சேரமான் பெரும் புரட்சிக் கனவும் கதையுமாகப் புழுகிக் கொண்டிருக்கிறார். மானநட்ட வழக்குத் தொடுக்கப் போவதாக ஊத்தை சேதுவுக்கு எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்.

எங்களுக்கு என்ன? ஓரமாய் நின்று பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் வாழ்நாளிலேயே இதையெல்லாம் கண்டுகளிக்க என்ன பாக்கியம் செய்தோமோ? எத்தனை பிறவிகள் தவம் இருந்தோமோ?

•••

இன்றைக்குத் தமிழ் வெளியில் இதுவரை வெளிவராத புதிய கருத்துக்கள் எல்லாம் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

கனடியத் தமிழ்க் காங்கிரஸ் அலுவலக எரிப்பின் பின்னால், 'கருத்து வேறுபாடுகளுக்கு வன்முறை தீர்வு அல்ல' என்று கண்டுபிடித்த மாதிரி, தமிழ்த்தேசியப் பித்தம் தெளிந்த சிலர், சிங்கள இனத்தினருடன் புரிந்துணர்வை ஏற்படுத்தி, சிங்கள அரசுடன் பேசுவதன் மூலமாகவே தீர்வைப் பெற முடியும் என்று 'புதிதாகக் கண்டுபிடித்துள்ளனர்'.

மறுபக்கத்தில் கனடியத் தமிழ்க் காங்கிரஸ் என்பது ஒரு அயோக்கியர் கூட்டம் என்று இன்னொரு கூட்டம் 'கண்டுபிடித்திருக்கிறது'.

அடே, இதெல்லாம் நாங்கள் முப்பந்தைந்து வருடங்களாக

உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிற விடயங்கள். புலிகள் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்த காலத்திலும், அதற்கு முந்திய காலத்தில் வந்து சேர்ந்த படித்த இமிக்கிரண்டுகள் நடத்திக் கொண்டிருந்த தமிழீழச் சங்கத்தை அபகரித்த காலம் தொடக்கமும், பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்வைக் கண்டடைய முடியும் என்பதையும், இங்கே புலிகளின் பெயரால் பிழைப்பு நடத்துகிறவர்கள் எல்லாருமே திருட்டு அயோக்கியர்கள் என்பதையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்த 'உண்மைகளைக் கண்டுபிடித்திருப்பவர்கள் எல்லாம், நாங்கள் இதைச் சொல்லிக் கொண்டிருந்த போதெல்லாம், 'அண்ணை அடிச்சுப் பறிக்கப் போகிறார். இந்த 'தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள்' எல்லாம் கனடிய அரசாங்கத்தோடு பேசி, பாராளுமன்றத்திற்குப் போய் ஈழம் எடுத்துத் தரப் போகிறார்கள்' என்றபடியே, எங்களைத் துரோகிகள் என்று சொன்னவர்கள் தான்.

இன்றைக்கு உதிரிகளாக கனடியத் தமிழ்க் காங்கிரஸின் இமாலயப் பிரகடனத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, இனஅழிப்புப் போர்க்குற்றவாளி மகிந்தவோடு போட்டோ எடுத்ததற்காக துரோகிகள் ஆக்கும் சகல அயோக்கியர்களும், இதுவரை காலமும் இவர்களை 'தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள்' என்று அவர்கள் சொன்ன இடத்தில் குத்தி வாக்களித்தவர்கள் தான். இதே போர்க்குற்றவாளிகள் உள்ள அதே சிறிலங்காவுக்கு நல்லூர் தேர்த்திருவிழாவுக்குப் போகிறவர்கள் தான்.

அதைப் போல, தங்கள் பிழைப்புக்காகப் புலிகளோடு ஒட்டிக் கொண்டு இன்றைக்கு துரோகிகள் ஆக்கப்பட்டு விடுவோம் என்ற பயத்தில் தலைக்குத் துண்டோடு அலைகிறவர்களும், அன்றைக்கு இதே கூட்டம் கேட்க விரும்பிய பொய்களைச் சொல்லி 'அரங்கம் நிறைந்த கரகோஷம்' பெற்றவர்கள் தான்.

**புலிகளையும், புலிகளை வைத்துப் பிழைப்பு நடத்திய இந்த அயோக்கியர்களையும் அவர்களது விளம்பரங்களுக்காக அண்டிப் பிழைத்தபடி புலிகளின் சுய இனஅழிப்புக்கு விளக்குப் பிடித்தவர்கள் தான் இந்த ஊடகவியலாளர்கள். இன்றைக்கு ஏதோ உண்மையைக் கண்டுபிடித்தவர்கள் மாதிரி, ஜனநாயகம் பற்றி வகுப்பு எடுப்பவர்களும், கனடியத் தமிழ்க் காங்கிரஸை அம்பலப்படுத்துகிறோம் பேர்வழி என்று சீன் காட்டுகிறவர்களும் என, தாங்கள் தான் இந்த அயோக்கியர்களை அம்பலப்படுத்துகிறோம் என்று துள்ளிக் குதிக்கிறார்கள்.**

**இவர்களால், கனடியத் தமிழ்க் காங்கிரஸ்க்குப் போட்டியாக இருக்கும் தேசியக் கவுன்சில் பற்றி எதையாவது துணிச்சலோடு விமர்சிக்க முடியுமா? அந்த அமைப்பு மாவீரர் தினம் நடத்தி பணம் சம்பாதிப்பதை விட, இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வுக்கு 'என்னத்தைப் புடுங்கி அடுக்கியிருக்கிறதாம்!?' என்று கேட்க முடியுமா?**

இன்றைக்கு ஏதோ தாங்கள் தான் இந்த யாழ்ப்பாணிகளின் பிரதிநிதிகள் மாதிரியும், போராட்டம் தங்கள் கையில் தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது மாதிரியும் பீலா விடும் ஊடகவியலாளர்கள் எல்லாம் ஊடக தர்மத்தை மறந்து, புலிவாலில் தொங்கிக் கொண்டு, தங்களைத் 'தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவர்களே. தேசியத் தலைவரையும் வான் புலிகளின் ஸ்டண்டு சாகசகங்களையும் புகழ்ந்தபடி, இந்த மந்தைக் கூட்டத்திற்கு உப்புப் புளி சேர்த்துக் கதை சொல்லிப் புல்லரிக்க வைத்தவர்கள் தான்.

புலிகளையும், புலிகளை வைத்துப் பிழைப்பு நடத்திய இந்த அயோக்கியர்களையும் அவர்களது விளம்பரங்களுக்காக அண்டிப் பிழைத்தபடி புலிகளின் சுய இனஅழிப்புக்கு விளக்குப் பிடித்தவர்கள் தான் இந்த ஊடகவியலாளர்கள். இன்றைக்கு ஏதோ உண்மையைக் கண்டுபிடித்தவர்கள் மாதிரி, ஜனநாயகம் பற்றி வகுப்பு எடுப்பவர்களும், கனடியத் தமிழ்க் காங்கிரஸை அம்பலப்படுத்துகிறோம் பேர்வழி என்று சீன் காட்டுகிறவர்களும் என, தாங்கள் தான் இந்த அயோக்கியர்களை அம்பலப்படுத்துகிறோம் என்று துள்ளிக் குதிக்கிறார்கள்.

இவர்களால், கனடியத் தமிழ்க் காங்கிரஸ்க்குப் போட்டியாக இருக்கும் தேசியக் கவுன்சில் பற்றி எதையாவது துணிச்சலோடு விமர்சிக்க முடியுமா? அந்த அமைப்பு மாவீரர் தினம் நடத்தி பணம் சம்பாதிப்பதை விட, இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வுக்கு 'என்னத்தைப் புடுங்கி அடுக்கியிருக்கிறதாம்!?' என்று கேட்க முடியுமா? இன்றைக்கும் புலிக் கொடியைத் தூக்கிக் கொண்டு, கார் பவனி சீன் காட்டும் நடவடிக்கைகளால் எதைச் சாதிக்க முடியும் என்று கேட்க முடியுமா?

புலிகளின் பெயரால் இயங்கிக் கொண்டு, கனடிய அரசின் உதவிப் பணத்தை கையாடிக் கொண்டு மருமகள், நண்பிகள், உறவினர்கள் எல்லாருக்கும் வேலை கொடுத்து, இனத்தின் பெயரால் மோசடி செய்து கொண்டிருக்கும் பல்வேறு அமைப்புகள் பற்றி இவர்களால் எழுத முடியுமா?

இமாலயப் பிரகனடத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கும் கனடியத் தமிழ் பாராளுமன்ற அரசியல்வாதிகள் தாங்கள் பதவியில் இருந்த காலத்தில் எப்படியாவது இன அழிப்பு முத்திரை வாங்கி இந்த உசுப்பேத்தல் கூட்டத்தைக் குஷிப்படுத்த வேண்டும் என்று முக்கியதைத் தவிர, வேறு எதைத் தான் உருப்படியாகச் செய்திருக்கிறார்கள் என்று கேட்க முடியுமா?

போராட்டத்தின் பெயரால் சேர்க்கப்பட்ட பணத்தைச் சுருட்டிக் கொண்டவர்களை, தேசியச் சொத்துக்களை திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று அவ்வப்போது குரல் எழுப்புகிற ஊடகவியலாளர்களும்,

அவர்கள் யார், எந்தெந்தச் சொத்துக்கள் அவர்களிடம் உள்ளன என்று துணிச்சலோடு புலனாய்வு ஊடகவியல் செய்ததில்லை. மொட்டையாகச் சிலாவி அடித்து விட்டு, தாங்கள் சமூகத்திற்காக தட்டிக் கேட்கிறோம் என்று சீன் காட்டுவதை விட இவர்கள் வேறு எதையும் செய்ததில்லை.

இது தான் இவர்களின் ஊடக நேர்மை.

நேர்மையுள்ள ஊடகவியலாளனுக்கு சமூகத்தைச் சீரழிக்கும் எல்லா அயோக்கியர்கள் மீதும் தார்மீகக் கோபம் இருக்க வேண்டும். இந்த 'தமிழ்த் தேசிய' ஊடகவியலாளர்களுக்கு, யாழ்ப்பாணிய நலன் தான் முக்கியம் என்பதால், தேசிக்காய் தலையருக்கும் ஒரு குத்து, சிறீதரனுக்கும் ஒரு குத்து தான்!

விளம்பரம் கிடைக்கும் என்றால், கரி ஆனந்தசங்கரிக்கும் ஒரு குத்து! விஜய் தணிகாசலத்துக்கும் ஒரு குத்து! அங்கால, லோகன் கணபதிக்கும் ஒரு குத்து.

பிழைப்பு நடக்க வேண்டும் என்றால்... பிரபாகரனுக்கு உசுப்பேத்தின அமிர்தலிங்கத்துக்கும் ஒரு குத்து! அமிர்தலிங்கத்தைப் போட்டுத் தள்ளின பிரபாகரனுக்கும் ஒரு குத்து! என்கிற அங்கிடுதத்திக் கோமாளி அல்லக்கைகள் மாதிரி!

இந்த மந்தைக் கூட்டத்திற்குள் தாங்கள் தான் விடுதலைப் போராட்டத்தைச் சுமந்து செல்லும் 'தமிழ்த் தேசிய' ஊடகவியலாளர்கள் என்று அங்கீகாரம் பெற வேண்டும் என்பதைத் தவிர, அங்குள்ள அரசியல் நிலைக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்பது பற்றி எங்கேயாவது கருத்துச் சொல்லியிருக்கிறார்களா?

இதனால் தான் இந்த மந்தைக் கூட்டத்தின் மன ஓட்டத்திற்கேற்ப கருத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், இவர்களும் அதே யாழ்ப்பாணிய மந்தை மனோபாவத்தில் இருப்பவர்கள் தான். தங்களைத் 'தமிழ்த் தேசிய' ஊடகவியலாளர்கள் என்னும் போதே, இவர்களின் நம்பகத்தன்மை அடிபட்டுப் போய் விடுகிறது.

**இன்றைக்கு நீங்கள் அயோக்கியக் கூட்டம், தேசியச் சொத்துக்களை அபகரித்த கூட்டம் என்றெல்லாம் சொல்கிற இவர்கள் எல்லாம் உங்கள் தேசிக்காய் தலையர் தெரிவு செய்து அங்கீகரித்தும், ஊருக்குக் கூப்பிட்டுக் கௌரவித்தும், தன்னுடைய பிரதிநிதிகளாக இங்கே வைத்து மிரட்டிப் பணம் சேர்க்கும் அடாவடித்தனம் செய்ய வைத்தார் என்பதில் கூட இவர்களுக்கு வெட்கம் வருவதில்லை.**

**அதையெல்லாம் இவர்களால் கேள்விக்குள்ளாக்க முடியாது. காரணம், இவர்களும் அதே யாழ்ப்பாணித் தமிழ்த் தேசிய குட்டைக்குள் ஊறிய மட்டைகள் தான் என்பதுடன், தங்களையும் துரோகிகள் ஆக்கி விடுவார்கள் என்ற குலை நடுக்கம் தான் இன்று வரைக்கும் இவர்களை இந்தக் கேள்விகளை எழுப்ப விட மறுக்கிறது.**

**கனடியத் தமிழ்க் காங்கிரஸ் வசமாக மாட்டியிருக்கிறது. குலை குலுங்க, அடிச்சு விளாசித் தள்ளுகிறார்கள்.**

இந்தச் சமூகத்தை துப்பாக்கி முனையில் வைத்திருந்து, சுய இன அழிப்பு செய்த பிரபாகரனை தேசியத் தலைவர் என்று விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, வெள்ளையர்களைக் கொண்டு இன அழிப்பு முத்திரை குத்த வேண்டும், மகிந்தவைக் கழு ஏற்ற வேண்டும் என்பதைத் தவிர, இவர்களுக்கு மற்ற யாழ்ப்பாணி மந்தைக் கூட்டத்தை மிஞ்சிய வேறெந்த அரசியல் தெளிவும் கிடையாது.

இன அழிப்பு முத்திரை குத்துவதால் தமிழ் இனத்திற்கு என்ன பயன்? கண் முன்னால் இன்றைக்கு இஸ்ரேலின் இன அழிப்பை ஆதரிக்கிற சர்வதேசம் மகிந்தவை யுத்தக் குற்றங்களுக்காக இழுத்து வருமா? என்ற கேள்விகள் கூட இல்லாமல், இந்த மந்தைக் கூட்டத்தைக் குஷிப்படுத்தி பிழைப்பு நடத்துகிறவர்கள் தான் இந்த ஊடகவியலாளர் கூட்டம்.

இன அழிப்பு என்று குத்தி முறிகிற இவர்கள், பிரபாகரனின் மண்டையில் போட்டு, அடிச்சுப் பறிக்கும் தந்திரோபாயம் கண் முன்னால் மண்டை பிளந்து கிடந்த பின்னாலும், அது இன்றைக்குத் தமிழினத்தைக் கொண்டு வந்து நிறுத்தியிருத்திருக்கிற அரசியல் வங்குரோத்துப் பற்றிக் கேள்வி கேட்கத் தயாரில்லை.

இன்றைக்கு நீங்கள் அயோக்கியக் கூட்டம், தேசியச் சொத்துக்களை அபகரித்த கூட்டம் என்றெல்லாம் சொல்கிற இவர்கள் எல்லாம் உங்கள் தேசிக்காய் தலையர் தெரிவு செய்து அங்கீகரித்தும், ஊருக்குக் கூப்பிட்டுக் கௌரவித்தும், தன்னுடைய பிரதிநிதிகளாக இங்கே வைத்து மிரட்டிப் பணம் சேர்க்கும் அடாவடித்தனம் செய்ய வைத்தார் என்பதில் கூட இவர்களுக்கு வெட்கம் வருவதில்லை. அதையெல்லாம் இவர்களால் கேள்விக்குள்ளாக்க முடியாது. காரணம், இவர்களும் அதே யாழ்ப்பாணித் தமிழ்த் தேசிய குட்டைக்குள் ஊறிய மட்டைகள் தான் என்பதுடன், தங்களையும் துரோகிகள் ஆக்கி விடுவார்கள் என்ற குலை நடுக்கம் தான் இன்று வரைக்கும் இவர்களை இந்தக் கேள்விகளை எழுப்ப விட மறுக்கிறது.

கனடியத் தமிழ்க் காங்கிரஸ் வசமாக மாட்டியிருக்கிறது. குலை குலுங்க, அடிச்சு விளாசித் தள்ளுகிறார்கள். காரணம், இந்த மந்தைக் கூட்டம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது, அதற்கு எதிராகப் போக முடியாது, அதன் பிரதிநிதிகள் மாதிரி அறச்சீற்ற சீன் காட்டினால் தான் இந்த மந்தைக் கூட்டத்திற்கு தாங்கள் பெரிய ஆட்கள் ஆகலாம் என்ற நினைப்பைத் தவிர இவர்களுக்கு வேறு எதுவும் இல்லை.

'பாராளுமன்றத்தில் சிறீதரன் ஆவேசம்' என்கிற லங்காசிறியை விட இவர்கள் எந்த விதத்தில் மேலானவர்களாம்?

இன்னும் கொஞ்ச நாளில் அதைத் தான் இவர்களும் எழுதப் போகிறார்கள்.

'சிறீதரன் காட்டம்! அதிர்ந்தது சிங்களம்!'.

இன்றைக்கு அமைப்பாக கனடியத் தமிழ்க் காங்கிரஸை

எதிர்ப்பவர்களும் ஏதோ இலங்கைத் தமிழ் மக்களின் தீர்வுக்காக நாயாய் பேயாய் அலைகிறவர்களும் இல்லை. இவர்கள் தான் மாவீரர் தினத்தைக் காட்டி உசுப்பேத்திப் பிழைப்பு நடத்துகிறவர்கள். கனடியத் தமிழ்க் காங்கிரஸ் மில்லியன் கணக்கில் கனடிய அரசின் உதவி பெற்று இயங்கும் அமைப்பு என்று வாயூறி, அதைக் கைக்குள் கொண்டு வந்து பணமோசடி செய்து, தாங்கள் சுக வாழ்வு வாழலாம் என்பதைத் தவிர இவர்களுக்கு வேறு எந்த சமூக நோக்கமும் கிடையாது.

ஒட்டுமொத்த அயோக்கியர்களுமே இப்போதும் இந்தச் சமூகத்தை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தலாம் என்று நடத்திக் கொண்டிருக்கும் போட்டிக் குடுமிப்பிடிச் சண்டை, இன்றைக்கு எரிப்பு வன்முறைக்கு போகிற அளவுக்குத் தான் புலிக்குப் பின்னான தமிழ்த் தேசியம் நாறிப் போய்க் கிடக்கிறது.

இத்தனையும் சொல்ல வேண்டி வந்ததற்கான காரணம்...

நான் அகழ் மின்னிதழுக்கு அளித்த பேட்டியில் 'நான் முட்டாள்களுக்குத் தலைவனாக அல்ல, புத்திசாலிகளுக்கு எதிரியாகவே இருக்க விரும்புகிறேன்' என்று சொல்லியிருந்தேன். காரணம், முட்டாள்களை உசுப்பேத்துவதால் வரக்கூடிய ஆபத்துக்கள் எனக்குத் தெரிந்திருந்தன.

இந்த முட்டாள் கூட்டத்தை உசுப்பேத்தி பிழைப்பு நடத்தலாம் என்று தான் தங்களைப் புத்திசாலிகளாக நினைத்துக் கொண்டிருந்த இத்தனை பேரும் இத்தனை நாள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். கனடிய நகரசபைகளில் ஈழம் எடுக்கலாம் என்று யாழ்ப்பாணி முட்டாள்களைத் தவிர வேறு யார் நம்புவார்கள்?

இவர்களை உசுப்பேத்தி வாக்குகளையும், பணத்தையும் சுருட்டலாம் என்று இந்த அயோக்கியர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

'அண்ணை சர்வதேசத்திற்கு வேலையைக் குடுத்து, அடிச்சுப் பறிப்பார்' என்றுநம்பிக்கொண்டிருந்த

**இந்த முட்டாள் கூட்டம் அறிவு பெற வேண்டும் என்பதை இந்த அயோக்கியர்கள் ஒருபோதும் விரும்பியதே இல்லை. இவர்கள் முட்டாள்களாக இருந்தால் தான், இவர்களை உசுப்பேத்தி தங்கள் பிழைப்பையும் அரசியல் கனவுகளையும் பிரமுகர் ஆசைகளையும் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.**

**இவர்களுடைய தகுதிக்கு இவர்களால் முட்டாள்களுக்கு மட்டும் தானே தலைவர்களாக இருக்க முடியும்? இந்த முட்டாள் மந்தைக் கூட்டம் அறிவு பெற்று விட்டால் தாங்கள் தலைவர்களாக முடியாது என்ற உண்மை இவர்களுக்கு நன்றாகவே தெரியும்.**

**நான் மேலே சொன்னது போல, பாசிச அமைப்புகளோடு ஒட்டிக் கொள்கிறவர்கள் எல்லாருமே சுயநலம் சார்ந்த படுமோமான சமூக விரோதிகளும் அயோக்கியர்களும் தான். சமூக நலன் சார்ந்த நேர்மையாளர்கள் எவருமே புலிகள் போன்ற கொலைகாரக் கும்பலோடு மனச்சாட்சியோடு ஒட்டிக் கொண்டிருந்திருக்க முடியாது.**

இந்த முட்டாள் கூட்டத்திற்கு, குறைந்த பட்சம் அரசியல் அறிவைப் புகட்டி, புத்தியைத் தெளிய வைத்து, ஜனநாயகத்தின் அடிப்படைகளை உணர வைத்து, புலிகள் அழிந்த நிலையில் சாத்தியமான தீர்வு ஒன்றை பெறுவதற்கான வழி இது தான் என்று இவர்கள் விளங்க வைத்திருந்தால், இன்றைக்கு இத்தனை கூத்தும் நடந்திருக்காது.

இன்றைக்கும் இந்த முட்டாள் கூட்டத்தை ஜெனிவாவில் தீர்வுப் பொதி இருக்கிறது, தமிழர் மரபு மாதத்தில் புலிக் கொடியை ஏற்றி எங்கள் ஒற்றுமையைக் காட்ட வேண்டும், கஜேந்திரகுமாரும் விக்னேஸ்வனும் ஈழம் எடுத்துத் தருவார்கள் என்று ஏமாற்றிப் பிழைப்பதற்கு இன்னொரு கூட்டம் வாணீர் ஊற்றியபடி காத்திருக்கிறது. அது மற்றத் தரப்பை துரோகிகள் ஆக்குவதன் மூலம் தனது பிழைப்பை நடத்த முயல்கிறது.

இந்த முட்டாள் கூட்டம் அறிவு பெற வேண்டும் என்பதை இந்த அயோக்கியர்கள் ஒருபோதும் விரும்பியதே இல்லை. இவர்கள் முட்டாள்களாக இருந்தால் தான், இவர்களை உசுப்பேத்தி தங்கள் பிழைப்பையும் அரசியல் கனவுகளையும் பிரமுகர் ஆசைகளையும் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இவர்களுடைய தகுதிக்கு இவர்களால் முட்டாள்களுக்கு மட்டும் தானே தலைவர்களாக இருக்க முடியும்? இந்த முட்டாள் மந்தைக் கூட்டம் அறிவு பெற்று விட்டால் தாங்கள் தலைவர்களாக முடியாது என்ற உண்மை இவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

நான் மேலே சொன்னது போல, பாசிச அமைப்புகளோடு ஒட்டிக் கொள்கிறவர்கள் எல்லாருமே சுயநலம் சார்ந்த படுமோமான சமூக விரோதிகளும் அயோக்கியர்களும் தான். சமூக நலன் சார்ந்த நேர்மையாளர்கள் எவருமே புலிகள் போன்ற கொலைகாரக் கும்பலோடு மனச்சாட்சியோடு ஒட்டிக் கொண்டிருந்திருக்க முடியாது.

நான் அடிக்கடி கேட்பது போல, உலகம் முழுவதும் உள்ள புலி ஆதரவுப் பிரமுகர்களில், சமூக நலனை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர் என்று முழுச் சமூகமுமே சொல்கிற ஒரு நேர்மையாளனை, ஒரே ஒரு நேர்மையாளனை, யாராவது காட்ட முடியுமா?

ஒருவர் கூட என்றைக்கும் இல்லை. இது தான் இந்த இழிந்த சமூகத்தின் நிலை.

புலிகள் கேணல், சர்வதேச இணைப்பாளர் என்று போற்றிப் புகழ்ந்த கருணாவும், கேபியும் சிங்களவர்களோடு சங்கமித்தவர்கள் தான்.

புலிகளோடு இருந்த எமில் காந்தன் மகிந்த கூட்டத்தோடு தொடர்பு வைத்து இன்றைக்கு சிங்களத் தரப்போடு பணத் தொடர்புகளோடு இருப்பவர் தான். புலிகளோடு இருந்து அவதூறு செய்த 'ஊத்தைச் சேது' சிங்களப் புலனாய்வாளருக்காக வேலை செய்கிறவர் தான். இப்படி வெளிநாடுகளில் இருந்து மற்றவர்களை துரோகிகள் என்று பட்டம் சூட்டிய 'தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள்' பலர் சிங்கள அரசோடும், ஏன் மகிந்த குடும்பத்தோடு நெருக்கமான வியாபார, வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருக்கிறார்கள்.

புலிகளோடு இருந்து யுத்த முடிவில் கைது செய்யப்பட்டு, புலனாய்வுப் பிரிவுக்காக வேலை செய்ததும் புலிகள் தான். விமான நிலையத்தில் நின்று காட்டிக் கொடுத்ததும் புலிகள் தான்.

ஆனால் இன்றைக்கும் யாழ்ப்பாணிகள் மற்ற இயக்கங்களைத் தான் ஒட்டுக் குழுக்கள் என்று கொண்டிருக்கிறார்கள்.

ஏன் பிரபாகரன் கூட மகிந்தவிடம் பணம் வாங்கிக் கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக வர விடாமல் தேர்தலைப் பகிஷ்கரித்து, தனது தலையில் மண் அள்ளிப் போட்டுக் கொண்டவர் தான்.

அந்த உண்மையைத் தெரிந்து கொண்டும் தான் இந்த புலன் பெயர் யாழ்ப்பாணி மந்தைக் கூட்டம் மகிந்தவோடு படம் எடுத்ததை மரண தண்டனைக் குற்றமாகக் கதை சொல்லிக் கொண்டிருக்கிறது.

இப்படிக்கொத்த பகுத்தறிவு நிறைந்த கூட்டத்தை உசுப் பேத்தி, தாங்கள் 'வேலையைக் குடுக்கலாம்' என்று நினைத்த இந்த அயோக்கியர்கள் இன்றைக்கு அதே உசுப்பேத்தப்பட்ட கூட்டத்தால் துரோகிகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே இந்தக் கூட்டத்தின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு, இமாலயப் பிரகடனத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காதவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

'அடுத்த முறை உங்களுக்குக் குத்த மாட்டம்!'.

இந்த அயோக்கியர்கள் எல்லாம் எப்போதாவது, 'தலைவர் கூட சிங்களவர்களோடு 'ராஜதந்திர நகர்வு' செய்திருக்கிறார், தற்போதைய சூழ்நிலையில் எங்களுக்கு வேறு எந்தத் தெரிவும் இல்லை' என்று, இந்த மந்தைக் கூட்டத்திற்கு புத்தி புகட்டியிருந்தால், சில நேரம் சுயமாகச் சிந்திக்கத் தெரியாத இந்த மந்தைகள் பின்னால் போயிருக்கும். ஜெனிவாவில் தீர்வுப் பொதி, கனடியப் பாராளுமன்றத்தில் ஈழம் என்றெல்லாம் இந்த மந்தைக் கூட்டம் நம்ப வேண்டும் என்று கதை விட்டு விட்டு, இன்றைக்குப் போய் இரகசியமாகப் படம் எடுத்தால் இந்த மந்தைக் கூட்டம் துரோகிப் பட்டம் தானே வழங்கும். இன்றைக்கும் கனடாவில் புலிக் கொடியை ஆட்டினால், சர்வதேசம் நடுங்கும், வந்து தீர்வு வாங்கித் தரும் என்று நம்புகிற முட்டாள் கூட்டத்திற்கு வேறு என்ன அரசியல் தெரியும்?

அதற்கு நீங்கள் சொல்லிக் கொடுத்ததும், அதற்குத் தெரிந்ததும் அது தானே.

மற்றவர்களுக்கு, அதைத் தானேடா நீங்கள் இவ்வளவு நாளும் செய்து கொண்டிருந்தீர்கள்?

ரொறன்ரோவில் தாயகம் தடை, தேடகம் எரிப்பு, டி. பி.எஸ்.ஜெயராஜ் தாக்குதல், கடை கண்ணாடிகள் உடைப்பு, அமிர்தலிங்கம் முதல் மகேஸ்வரி வரைக்கும் நடந்த அஞ்சலிகளுக்கு போனவர்களை மிரட்டல் பார்வை பார்த்தது என்று சகல காடை வேலைகளையும் செய்வதற்குத் தூண்டியும், அங்கீகரித்துக் கொண்டிருந்தவர்கள், இன்றைக்கு தங்கள் மீதும் அதே கூட்டம் திரும்பியவுடன் சமூகம் குறித்தும், ஜனநாயகம் குறித்தும், கருத்து வேறுபாடுகள் குறித்தும் வகுப்பு எடுக்கிறார்கள்.

நீங்கள் விதைத்ததைத் தானேடா அறுக்க முடியும்!?

இந்த மந்தைக் கூட்டத்திற்குத் தெரிந்தது துரோகிகள் தான். பின்னால் அள்ளுப்பட்டுப் போய், தான் புகழ்கிற அதே வாயால் துரோகி என்று தூற்றவும் இந்த மந்தைக் கூட்டம் ஒரு போதுமே எந்த தயக்கமும் கூச்சமும் பட்டதில்லை. அதை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்று கனவு கண்ட அயோக்கியர்கள் எல்லாம் எங்கள் கண் முன்னாலேயே துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று அலறியடித்துக் கொண்டு ஓடுவதை கண் முன்னால் காணும் பேறு பெற்றிருக்கிறோம்.

யாழ்ப்பாணிகள் தாங்கள் உருவாக்கியபுலிப்பிராங்கன்ஸ்டைன் பூதத்தினால் தாங்களும் அழிந்தது போல, தாங்கள் உசுப்பேத்திய இதே மந்தைக் கூட்டத்தால் இந்த அயோக்கியர்களும் துரோகிகள் ஆக்கப்பட்டதை, எங்கள் வாழ்நாளில் எங்கள் கண் முன்னால் கண்டபின்னால், இறந்தாலும் பேஸ்புக் RIP அஞ்சலிகள் இல்லாமலேயே எங்கள் ஆன்மா சாந்தியடையும் என்பதைத் தெரிந்து கொள்வதைப் போன்ற மகிழ்ச்சி வேறெங்கும் எங்களுக்குக் கிடைத்திராது!

ஆகவே, கதை சொல்லும் நீதி...?

விசர் நாய்களுக்கு உசுப்பேத்தினால், எதிரிகள் மீது ஏவி விட்டு கடிக்க வைக்க முடியாது. அந்த விசர்நாய்களுக்கு எதிரியையும் தெரியாது. எஜமானையும் தெரியாது.

அவற்றுக்குத் தெரிந்தது கடிக்க மட்டும் தான்.

இப்படி, தன்னை உசுப்பேத்திய தானைத்தளபதி அமிர்தலிங்கத்தை மண்டையில் போட்டுத் தான் உசுப்பேத்தப்பட்ட பிரபாகரன் தேசியத் தலைவரானார் என்ற உண்மை, இன்றைக்கு தாங்கள் உசுப்பேத்தியவர்களாலேயே அவலப் பட்டு, கருத்துச் சுதந்திரம் பற்றி புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் இந்த அயோக்கியர்களுக்கு என்றைக்கும் மண்டைக்குள் ஏறாது!

நல்ல காலம், இந்த எரிக்கும் அனுமார் கூட்டத்திடம் துப்பாக்கிகள் இல்லை என்பது குறித்து இந்த குரங்குகளை வைத்து இத்தனை நாள் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த இந்தக் கழைக்கூத்தாடி அயோக்கியர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்கள், இஷ்டமில்லாத தெய்வங்களுக்கு நன்றி சொல்ல வேண்டியது தான்.

# பனித்துளிகள்




எஸ்.பாயிஸா அலி

*2.10 க்கு விரல் ஒப்பமிட்டுப் பாடசாலை கேற்றடிக்கு வந்தும் பத்து நிமிடம் கடந்து விட்டிருந்தது. இடப்பக்கமாய் வளைந்து நீண்டு கிடக்கும் கிண்ணியாப் பாலத்தையும் வலப்பக்கமாய் தெம்பிலியும் வாழைக்குலைகளும் பளபளக்கும் நூர்தீன் நானாவின் பழக்கடையையும் இன்னும் எத்தனை தடவைகள்தான் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருப்பது.*

*எல்லா ரக வாகனங்களும் சர்ர்சர்ரென விரையும் இந்த மட்டக்களப்பு வீதியில் எனதருமைக் கணவனாரின் பைக்கை மட்டும் இன்னமும் காணோமே....*

*பாவம் அவரும் என்னதான் செய்வார். அந்தப் பாதிமெண்டல் 1.30 க்கு ஸ்டாப் மீட்டிங் போட்டிருக்கும். நல்லவேளையாக சின்னவள் பீரியட் வயிற்றுவலியென்று ஸ்கூல் போகலே. இல்லாட்டி இப்ப அவளும் கூடத்தான் ரோட்டில் காய்ந்து கொண்டிருப்பாள்.*

*இவருக்கு மறுபடியும் கோல் பண்ணுவோமா என நினைத்துப் போனைக் கையில் எடுத்தாலும் தேவையில்லாம திரும்பத்திரும்ப சங்கடப்படுத்த வேணாமே என ஹேன்ட்பேக்கினுள் திணிக்கிறேன்.*

*மீதமாய் என்னோடு ஒட்டிக் கொண்டிருந்த நாலைந்து சீருடைச் சிட்டுக்களும் ஒவ்வொன்றாய்... அவரவர் ஓட்டோக்களிலும்*

பெற்றவர்கள் உடனுமாய் கிளம்பிக் கொண்டிருக்க...

"என்ன ரீச்சர்....சேர் இன்னும் ஏத்துறதுக்கு வரலையா..." என்றபடி கேற்றை மூடி நடக்கத் தொடங்கிவிட்டாள் எங்க அலுவலகி சுஜானாவும்.

இப்போது எஞ்சி இருந்தது நானும் நதாவும் மட்டுமே. "என்ன புள்ளே..ஓட்டோ வரலையா" என்கிறேன்.

கையில் இருந்த சிறிய குச்சியினால் கேற்றை மெதுமெதுவாய் தட்டியபடியே ஆழ்ந்த யோசனையில் இருந்தவள் சிலிர்த்தபடியாய்" இன்னமும் காணலையே ரீச்சர்" என்றாள்.

'நாம கிளம்ப முதல் இவள வழியனுப்பி ஆகணுமே'என்ற புதிய ஆதங்கம் இப்போதெனக்கு. இல்லாட்டி பாவம் என்னவர்.'

இப்படியான தனிமைப்பட்ட சூழலில் எப்படி இந்த வளர்ந்த பிள்ளைகளைத் தனியே விட்டுட்டு நாம வீட்ட போற' என்று என்னோடு காத்திருக்கத் தொடங்கிடுவார். ரெண்டு பெண்பிள்ளைகளைப் பெற்ற தந்தைக்கேயுரிய பொறுப்புணர்வுதான் அவருக்கும்.

அப்பாடா நல்லவேளையாக நதாவின் ஹோர்ன் சத்தம். நிமிர்ந்து பார்த்தேன் எங்கட மில்லுக்கு அடிக்கடி அரிசி ஏத்த வார இவருக்கு பழக்கமான தம்பிதான்.

ஓடிப்போய் ஏறியவள் என் பக்கம் திரும்பி "உங்கட ஊட்டுவழியாத்தான் போவம் நீங்களும் ஏறுங்க ரீச்சர்" என்றாள் ஒருவகைத் துள்ளலோடு

"இல்லையேம்மா... நீங்க வெள்ளைமணல் பக்கமாத்தானே போவிங்க..."

"நீங்க மொதல்லே வந்து ஏறுங்க ரீச்சர்... நான் இண்டேகி பைசல்நகருக்கு ம்மாக்கிட்டே போவபோறேன்."

என்னவருக்கும்ஓட்டோவில போறதா ஒரு மெசேஜ் வைத்துப் போட்டு அவளருகில் போய் உட்கார்ந்தவாறே கொஞ்சம் கலவரமாய் "என்னது...ம்மா வீட்டுக்கா.."என்றேன்.

அலைகடலோரமாய் ரம்மியமான சூழலும் குளுகுளுவென்ற இயற்கைக் காற்றுமாய்... வெளிச்சிக்கல்கள் கூட ஏதுமற்ற இப்பாடசாலைக்கு மாற்றலாகி வந்து நான்கு வருடங்கள் முடிந்து விட்டிருந்தன. பெற்றோர், பிள்ளைகள் சக ஆசிரியர்களால் எந்த நெருக்கீடுகளும் இதுவரை வந்ததில்லை. ஆறாம் வகுப்பு தொடக்கம் பதினோராம் வகுப்பு வரைக்கும் நம்மட பாடத்திற்கு நாம மட்டுமேதான். நம்மட வலயம் நம்மள மாதிரி இன்னொருவரையும் இங்கே அனுப்பி வைக்காதா என்ற ஒரேயொரு எதிர்பார்ப்பைத் தவிர.

இடைவெளியற்ற தொடர்ச்சியான பாடவேளைகள்....இரவுபகலாய் கண்களைப் பூக்கச்செய்யும் ஒப்படை, செயற்பாட்டு பத்திரங்கள்... கற்பித்தல் கடந்த இதர வேலைக்களுமென இடையிடையே களைப்பும் அயர்ச்சியுமாய் உடலும் உள்ளமும் சோர்ந்தே போனாலும் அதையும் மீறிய தெம்பையும் புதிய உற்சாகத்தையும் எனக்குள் உற்பவிப்பவை இந்த நதாபோன்ற சுறுசுறுப்பான செல்வங்கள்தான்..

இவளை ஆறாம் வகுப்பில் இருந்தே அவதானித்து வருகிறேன். கெட்டிக்காரி. நேர்த்தியாக வருவாள். லேப்புக்குள்ளே போறன்டா அவளுக்கு உயிர். பரிசோதனைக்கென்று நாம கொண்டு வரச்சொல்ற பொருட்களுக்கு மேலையும் குசினிக்குள்ள உள்ள உப்பு, புளி, மஞ்சள் எல்லாம் அள்ளிக் கொண்டு வருவாள்.

ஏ லெவலுக்கும் நல்ல ஸ்கூலும் நல்ல ரீச்சர்சும் செட்டாகிட்டா சந்தேகமேயில்லை இவளொரு டொக்டர்தான் என்று மனசுக்குள் அடிக்கடி கனாக் காண்பேன். நம் கனவு நனவாக வேணுமே என்ற பிரார்த்தனைகளும் கூடவே வரும்.

'என்ன புள்ளே ம்மாவீடு .....வாப்பாவீடு என்று கதை விடுகிறாய்...."

மெதுவாய் கேட்டேன்.

அவள் சொல்லத் தொடங்கியபோது 'அட இவ்வளவு நாளும் இது பற்றி விசாரிக்காம இருந்திட்டோமே என்று எனக்கே என்மீது எரிச்சலும் கோபமும்...

என் வீடு வந்ததும் தேங்க்ஸ் சொல்லி இறங்கிக் கொண்டேன். அதற்கு முன்னமே 'மறக்காம நாளெக்கி ம்மாவே கூட்டி வாமா என்றேன்.

'ம்மாவேயா..".

உற்சாகமாய் தலையாட்டினாள்.

இடைவேளை நேரம் லேப்பிற்குள் பிள்ளைகள் கலைத்துப் போட்ட பொருட்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தபோது "அஸ்ஸலாமு அலைக்கும் ரீச்சர்"

நதாவோடு அவள ருகில் முப்பத்தைந்து வயதில் இன்னொரு நதா.

"வலைக்குமுஸ்ஸலாம்... வாங்கம்மா எப்படி சுகமா..."

நதாவின் படிப்பில் தொடங்கிய எங்கள் பேச்சு அவட உம்மா பற்றி வந்தபோது இடைவேளை முடிந்திருந்தது. time table பார்த்தேன் இந்த ஐந்தாம்பாடம் எனக்கு ப்ரீதான். நதாவை அவட வகுப்பிற்கு அனுப்பிவிட்டு சப்ராசிடம் ஒரு பெப்சிக்கு ஓடர் செய்தேன்.

'என்னம்மா நதா இப்ப கொஞ்ச நாளா செரியான டல்லா இருக்கா. ஹோம்வொர்க் ஒண்டும் பண்ணி வாறதும் இல்லே அதோட மற்ற பிள்ளகளோடையும் கடுகடுன்னு இருக்கா எடுத்ததெற்கெல்லாம் டென்ஷன்... தனிமையிலே ஆழ்ந்த யோசனை... அதுமட்டுமில்லாம ஸ்கூல் விட்டா ஒருநாள் வெள்ளைமணல், ஒருநாள் பைசல் நகர் என்று மாறிமாறித் திரிஞ்சா அவ எப்படிப் படிக்கிற...என்னதான்மா ஒங்கட பிரச்சினை..."

"ஓம் ரீச்சர் நான் ஸ்கூலுக்கு நாலஞ்சி தரம் வந்தப்பவேல்லாம் ஒங்களே சந்திக்க முடியாமப் போயிற்று. நதாட கிளாஸ் டீச்சருக்கு எல்லாம் தெரியும்"....

குரல் கொஞ்சமாய் கரகரக்க...

‘நதாட வாப்பா...“

மெதுவாய் இழுத்தேன்.

“அவர் சூடான் நாட்டுக்கு வேலைக்கு போனார். இப்ப லீவுல வந்திருக்கார் போல .“

“எனா சூடானுக்கா.... மரியான் படத்துல நம்ம தனுஷ் தீவிரவாதிங்களுக்கிட்ட மாட்டி சீரழிஞ்சு வீடு வந்து சேருறத பாத்துப் போட்டுமா அங்க அனுப்பினிங்க...“ சிரித்தபடியே கேட்டேன்.

இயல்பாகப் பழகியவள்போல என் தோளில்தட்டியபடியே “ரீச்சர்..“ என்று கலகலத்தவளின் முகம் திரும்பவும் மெதுமெதுவாய் இறுகிக் கண்களும் கலங்கிட... நான்பதறிப் போனேன்.

“சொறிமா.. நான் தவறா ஏதும்.....“

“இல்லே...இல்லே.. அவரு தீவிரவாதிங்ககிட்ட அகப்பட்டிருந்தாலாவது உசிரக் குடுத்தாவது மீட்டு வந்திருப்பேனே ரீச்சர். ஒரு கேடுகெட்ட பொம்பிளக் கிட்ட இல்லையா மாட்டி கிட்டார்.எண்ட வாழ்க்கையே செதஞ்சு போச்சே....“ மறுபடியும் சிறு விசும்பல்.

ஆறுதலுக்கு அவள் தோளைமெதுவாய் தொட்டேன்.

“பிறகு.....?.“

“என்னையும் விரும்பித்தான் முடிச்சார். டைவிங் போவார். போதுமான வருமானம். நதாக்கு ஒரு தம்பியும் இருக்கு.ஒரு கொறையுமே இல்லாம நல்லாத்தான் வாழ்ந்தோம்...என்ன செய்றது... விதி ...இவருக்கு வந்த பேராசை... வெளிநாட்டு போறேன்டு . ஓடியோடித் திரிஞ்சார். கொழும்பிலே லொட்ஜிலே கண்ட பழக்கமாம். பிறகு பார்த்தா...எனக்குத் தெரியாம அவளோடையும் கள்ளத்தனமா....“

மறுபடியும் கன்னங்களில் ஈரம்.

ஊருக்குள்ளே கொஞ்சங் கொஞ்சமாய் கசிஞ்சாலும் நான் நம்பவேயில்ல ரீச்சர்... அவரில அவ்வளவு நம்பிக்கை. எல்லாம் முடிஞ்ச பிறகுதான் உண்மை தெரிஞ்சுது. எவ்வளவு

“சரிமா..முதல் மனைவி யோட அனுமதி இல்லாம ஆண்கள் ரெண்டாவது முடிக்கேலா என்டுதான சொல்றாங்க... பிறகு ஒங்களுக்குத் தெரியாம இது எப்படி,,,?
கண்களைத் துடைத்துக் கொண்டவாறு நிமிர்ந்தவள் ‘அவன்களுக்கு எதுக்கு ரீச்சர் நம்மட அனுமதியெல்லாம்.. இங்கே எல்லாமே சும்மா பேருக்குதான்..காசவீசி எறிஞ்சா இந்தக் கள்ள மௌலவிமார் ஒடனே காவின் எழுதிடுவாங்களே...“
ச்சே...என்ன மனிதர்கள் இவர்கள்... பெண்களின் உணர்வு களுக்கெல்லாம் ஒரு தனித்துவம் மதிப்பு மரியாதை என்றெல்லாம் ஒண்டுமே இல்லையா...
என் உடலும் மனசும் ஒருசேர ஒடுங்கிப்போனது..

அழுது கெஞ்சி மன்றாடியும் பயனில்ல...அவர்ட முழுக் குடும்பமும் ஒத்துத்தான் கூட்டிக் குடுத்திருக்காங்க போல.....ஊர்ல ஒலகத்துல நடக்காத ஒன்டா... அவன் ஆம்பிளைதான எதுவும் செய்வான். ஒனக்கு சோறும் சீலையும் தந்தா சரிதானே எண்டாங்க.“

‘என்னது சோறும் சீலையும் மட்டும்தான் ஒரு பெண்ணோட வாழ்க்கையா... அப்பா அதைத் தாண்டி அவளுக்கு இந்த உலகத்துல ஒண்டுமே இல்லையா... என்ன கணிப்பீடு இது..‘

எனக்கும் சூடானது..

“அப்ப அவர் என்னம்மா சொன்னார்?“

“சந்தர்ப்ப சூழல் தவறு நடந்திட்டு... ஒனக்கு ஒரு கொறையுமே வராம பார்த்துக்கிட்டு அவளையும் வெச்சுக் கொள்றேனே“ எண்டார்

“.சீ...யாருக்கு வேணும் இந்த அரை வாழ்க்கை.... நீ அவளோடையே கிடந்து சாகுடாண்டு சொல்லிப்போட்டு எங்க வீட்டுக்கே திரும்பி வந்திட்டேன் ரீச்சர்.‘ ஏன் ரீச்சர் நான் இப்படி செய்திருந்தா நெலமே எப்படி இருந்திருக்கும்? நாமளால இப்படியெல்லாம் நெனச்சுக் கூட பார்க்கேலுமா..?

“சரிமா..முதல் மனைவி யோட அனுமதி இல்லாம ஆண்கள் ரெண்டாவது முடிக்கேலா என்டுதான சொல்றாங்க... பிறகு ஒங்களுக்குத் தெரியாம இது எப்படி,,,?

கண்களைத் துடைத்துக் கொண்டவாறு நிமிர்ந்தவள் ‘அவன்களுக்கு எதுக்கு ரீச்சர் நம்மட அனுமதியெல்லாம்.. இங்கே எல்லாமே சும்மா பேருக்குதான்.. காசவீசி எறிஞ்சா இந்தக் கள்ள மௌலவிமார் ஒடனே காவின் எழுதிடுவாங்களே...“

ச்சே...என்ன மனிதர்கள் இவர்கள்... பெண்களின் உணர்வு களுக்கெல்லாம் ஒரு தனித்துவம் மதிப்பு மரியாதை என்றெல்லாம் ஒண்டுமே இல்லையா...

என் உடலும் மனசும் ஒருசேர ஒடுங்கிப்போனது..

“அப்ப பிள்ளைகள்....“.

“எவ்வளவோ மன்றா டியும் தர மறுத்திட்டான்.மகன் ஒருநாள் அவருக்கிட்ட சொல்லிக் கொள்ளாமலே ஓடி வந்திட்டான். வாப்பாக்காரன் வந்து காலுல உழுந்தும் அவன் போகல நதாதான் பாவம். அங்கேயும் இங்கேயுமா அல்லாடுறா..

யா அல்லாஹ், இதென்ன கொடுமை. இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் என்ன பாவம் செய்தார்கள்? பெற்றவர்களின் பொறுப்பற்ற நடத்தைகளால்... தேவையற்ற சலனங்களால்.. சபலங்களால்... பிள்ளைகளுக்கு எவ்வளவு பெரிய சிக்கல்கள்?

மனசு மறுபடியும் பதறியது.

“இவ்வளவுநாளும் போனது போகட்டும்... நதாட ஒ லெவல் எக்ஸாமுக்கு இன்னமும் மூன்று மாசந்தான் இருக்கு. ஒழுங்கா க்ளாஸ் போகணும், ஒழுங்கா படிக்கணும்.நல்ல ரிசல்ட்டுக்கு எதிர் பார்க்கிற பிள்ளை இல்லையா இவள்.

உங்க கணவரோட பேசி ஒரு இடமா அவ இருக்கிறமாதிரிப் பாருங்க. அங்கே ரெண்டு கொப்பி... இங்கே மூண்டு உடுப்பு... இதெல்லாம் படிக்கிற பிள்ளைக்கு ஒருநாளும் சரிப்பட்டு

வராது.“என்றேன் கொஞ்சம் இறுக்கமாய்.

“அவ அங்கேதான் இருந்தா ..எனக்கு நல்லாத் தெரியும் அவருக்கு பிள்ளைகள் என்டா உசிர். அந்தப் பொம்பிளையும் ஒரு குறை வைக்காமதான் பார்த்திருக்கா.. அவருக்கு அங்கேயும் ரெண்டு வயசு மகன். அவன்ட துடினம் கரைச்சல் தவிர வேற ஒரு பிரச்சினை இல்லேண்டுதான் அடிக்கடி சொல்லும்.. அதுதான் பிள்ளையை ஒரேயடியா வரச்சொல்லி தெண்டிக்கல்ல. இப்பதான் அவளுக்கு அங்கே புதுப்பிரச்சினை....“என்று சொல்லி இழுத்தாள்.

“என்ன“

“அவட தம்பிக்காரன் ஒருத்தன் அங்கே அடிக்கடி வாறானாம். இடைக்கிடையே ராவைக்கும் நிக்கிறானாம். அவனது பார்வை போக்கு சரியில்லையாம். அதான் பயப்படுறாள்.“

ச்சே...ஒரு பிள்ளைக்குத் தன்சொந்த வீடே பாதுகாப்பு இல்லாமப் போறது மகா கொடுமை.

‘ரீச்சர்...பாடம்“

பத்தாம் வகுப்பு மொனிற்ரர் சிம்லா.

“அட பெல்லடிச்சது விளங்கல்லை யேமா... சரி போங்க வாறன்“.

அப்ப “சரி ரீச்சர் நாங்க பிறகு பேசுவம்...என்ர பிள்ளையை நல்லா கவனிச்சுக் கொள்ளுங்க. புத்தி சொல்லிக் கொடுங்க.உங்கட கதைய அவள் கேட்பாள்.“

நல்ல வேளையாக அன்றைக்கொரு வாப்பா சொல்லி விட்டுப் போனமாதிரி “பொடியன் சொன்ன சொல் கேட்கிறான் இல்லே ஒங்களயும் கரைச்சல் குடுத்தான் எண்டா கண்ணை மட்டும் விட்டுப் போட்டு பயப்பிடாம மத்த எல்லா இடமும் அடியுங்க ரீச்சர்“ எண்டு இவளும் சொல்லவில்லை.

வீட்டுக்கு வந்து நெடுநேரமாகியும் ஒரு வேலையும் ஓட வில்லை. நதாட கிளாஸ் ரீச்சர் நஜினாவுக்கு உயடடஎடுத்தேன்.

“............ அப்ப இது ஒங்களுக்கு மட்டும்தான் டீச்சர் இது தெரியா..“

“அதெல்லாம் விடுங்க ரீச்சர். இவ ஒழுங்கா எக்ஸாம் எழுதி அடுத்த கட்டத்திற்கு போகணும். இருந்து படிக்க இவளுக்கு பாதுகாப்பான வீட்டுச் சூழல் தேவை....அவட வாப்பாவோடையும் பேசிப் பார்ப்பமா...“

சுகைரா ரீச்சரோடும் பேசுவோம். சரியா...“

மாடியில் ஆலோசனை வழிகாட்டலுக்கான அறை.

“அஸ்ஸலாமு அலைக்கும் நான் நதாட வாப்பா.“

ஒரு நாற்பது.. நாற்பத்தொரு வயசிருக்கலாம். குப்பென்ற சென்ட் மணமோ... சிகரட் நெடியோ இல்லாமல் உடையும் பேச்சும் பார்வையும்கூட கண்ணியமாகவே தெரிந்தது. நதாவின் உம்மா வாறது தொடர்பில் நாங்க அவருக்கு அறிவிக்கவில்லை.

அதிபரிடம் இது தொடர்பில் பேசி ஏற்கனவே முன் அனுமதி பெற்றிருந்தோம். எங்கட அதிபர் நலீப் சேர் எங்களில் முழு நம்பிக்கை வைத்து எங்களை சுயமாக இயங்க விடுபவர். அவரின் நிறைவான வாசிப்பு அனுபவமும் நல்ல இலக்கிய ரசனையும் கூட இதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம். அதிலும் ஆங்கில இலக்கியத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்.

நான், வகுப்பாசிரியை நஜீனா, கவுன்சிலிங் சுகைரா ரீச்சர். நதாவின் உம்மா தவிர அறைக்குள் வேறு யாரையும் அனுமதிக்கவில்லை.

கண்டவுடன் இருவருக்குமே அதிர்ச்சி, பதட்டம், கோபம், ஆத்திரம்.

நாங்கள் மாறி மாறிப் பேசினோம்.

எங்கள் மூவரின் பேச்சும் நதாவின் படிப்பு, பாதுகாப்பு, அவளின் டாக்டர் கனவுகள் பற்றி மட்டுமே. எனினும் உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருக்கும் எரிமலை எவ்வளவு நேரத்திற்குப் பொறுக்கும்,

இடையிலே அவள்தான் ஒரு கட்டத்தில் எல்லை மீறினாள். “ச்சீ...நீயெல்லாம் ஒரு மனுசனா,,,? நம்பி வந்த என்ன நடுத்தெருவிலே விட்டுப்போட்டு அவளோட போனாய்தானே... இப்ப பெரிசா சபையிலே பேச வந்திருக்கார்...“

அவன் கிடந்து பதறினான்

“இல்லே.. இல்லே..அதே மட்டும் இங்கே இழுக்காதிங்க.. இங்கே நாம நதாட படிப்பு பத்தித்தான் பேசுறோம்.... நான் ஒங்களே ஏமாத்தலதானே...கை விடலதானே....“

‘என்னது...ஏமாத்தலை யா... இதெவிட என்னடா ஏமாற்றம் வேணும்...??“

அவள் குரல் உயரஉயர... இங்கே வேறு யாராவது வந்து விடுவார்களோ என்று நான் உண்மையில் பயந்தே போனேன். நல்ல வேளை அப்படியொன்றும் நடந்து விடவில்லை.

திடீரென சுஹைரா டீச்சர்தான் கேட்டாங்க,

“நீங்க ரெண்டுபேரும் டைவர்ஸ் பண்ணிட்டிங்களா...“

“எங்க டீச்சர்... நான் காதிக்கோட்டுக்கல்லாம் குடுத்தேந்தான்.... இவன் ஒரு தவணைக்குமே வரலையே... மாசாமாசம் காசெல்லாம் ஒழுங்கா தாரத்தாலே எங்களுக்கும் பெரிசா ஒரு நடவடிக்கையும் எடுக்கேலாண்டு அவங்களும் கையை விரிச்சிட்டாங்க...“

“அப்ப ஒங்களுக்கு இன்னொன்று முடிக்கிற ஐடியா ஏதும்...“

“ச்சீ...இன்னொன்டா... விரும்பி முடிச்சி... 2 புள்ளைகள் பெத்து 12 வருஷம் ஒன்டா வாழ்ந்த இவனே இப்புடித் துரோகம் செஞ்சிட்டான் ...இனி இன்னொருத்தனை நான் நம்பவா..?“

நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டோம்.

சுகைரா ரீச்சரே திரும்பவும் தொடங்கினார். ஆலோசனை வழிகாட்டலுக்கும் பொறுப்பானவர் அல்லவா... இப்படியான எத்தனை பிரச்சனை களைத்தான் கண்டிருப்பார்.

“பிள்ளையின் படிப்புக்காக கொஞ்ச நாளாவது ரெண்டு பெரும் சேர்ந்து வாழுங்களேன்மா...நதாவும்

எங்களுகிட்டே இதத்தாம்மா சொல்றா. உம்மாவும் வாப்பாவும் ஒண்டா சேரணும். எப்பவுமே ரெண்டு பேருமே எங்களுக்கு வேணுமென்று....“

முதலில் இருவருமே மிகக்கடுமையான வார்த்தைகளால் இதற்குத் தம் எதிர்ப்பை வெளிக்காட்டினாலும் நாங்கள் மூவருமே மாறிமாறி முன்வைத்த கருத்துகளுக்குள் கொஞ்சம் அடங்கிப் போனார்கள்.

எனக்கு அந்தப் பெண்ணின் சுயமரியாதையில் personal life இல் கை வைக்கிறோமோ என்ற குற்றவுணர்வு மிகையாய் உறுத்தியது.

அன்றைக்கு என்னவோ நதாவின் பாதுகாப்பு, படிப்பில் மட்டுமே எங்கள் மொத்தக் கவனமும்.‘

‘யா அல்லாஹ்.. எல்லாத்துக்கும் நீயே பொறுப்பு‘‘

அடுத்துவந்த மூன்று மாதங்களிலும் ஏனைய பாட ஆசிரியர்களாலும் அவதானித்துக் கூறக் கூடிய அளவுக்கு நதாவில் நல்ல முன்னேற்றம்.

இடைக்கிடையே நதாவின் உம்மாவுக்குக் கோல் பண்ணுவேன். உற்சாகமாய் பதில் வரும். பிள்ளையின் படிக்கிற ரூமுக்குள் நல்ல பவரான லைட் போட்டது தொடங்கி past papers வாங்கி குடுக்கிறது...பிள்ளை படிச்சு முடிச்சித் தூங்குற வரைக்கும் வீட்டில முடியுமான அளவு நாமளும் முழிச்சிருக்கிற வரைக்கும் எங்கட உரையாடல் தொடரும்.

“எனா...இந்த வார டிசம்பர் லீவுல அந்தப்பிள்ளை நதாவோட வீட்ட ஒரு தரம் போய் வருவமா...? அதுட உம்மா என்ன எப்பவும்தான் கூப்பிடுறா...“

கணவரிடம் மெதுவாய் கூற...அவரோ ஒரு நக்கல் சிரிப்போடு அதைவிடவும் மெல்லிய குரலில் என்னிடம் கேட்டார்...‘ ‘என்ன அந்தப் பிள்ளை நல்லாப் படிக்குதா எண்டு பார்க்கவா...இல்லே... அவட உம்மாட family life பற்றி நோண்டவா... அங்கே போவப்போறிங்க....“

டிசம்பரின் இடைவிடாத மழையும் வெள்ளமும் அது பரிசாய் கொண்டு தந்த குளிர் காய்ச்சலும்... எனக்கே எனக்கான விருந்தினர்களுமாய்...எப்போதும் போலவே எனது விடுமுறைக் காலம் மட்டும் வீட்டோடையே முடிந்து விட....உண்மையில்.நதாவைப் பற்றிய நினைவே முற்றாய் மறந்துபோனது.

அடுத்து வந்த ஜனவரியின் நடுப்பகுதி.

எங்கள் புதிய ஆறாம்தர விஞ்ஞானிக் குஞ்சுகளோடு லேப்பிற்குள்.

இன்னமும் பெயர் மனசுக்குள் சரியாய் நிக்காத புதுமுகங்களின் செல்லக் கலகலப்புகள். நுணுக்குக் காட்டியில் வைத்து அவதானிக்கவென அந்தப் பிஞ்சுகள் கொண்டுவந்து குவித்திருந்த பழைய பாண்துண்டுகளும். பரமீசியங்கள் நீந்தி விளையாடும் வைக்கோல் நீர் பொலித்தீன் முடிச்சுகளும்... பூஞ்சணம் பிடித்த என் microscope lens களுமாய் நான் வியர்த்து வழிந்து கொண்டிருந்தவேளை....

“ரீச்சர்..“

எனக்கு மிகவும் பரிச்சயமான அந்தக் குரல்...

நதாவின் உம்மாதான்‘

முன்னரையும் விடவும் கொஞ்சம் பளபளப்பாய்... புதிய டிஸைன் அபாயா.. ரெப் செய்த சோலுமாய் சிரித்தபடி அருகில் வந்தவள்... ‘எப்படி சுகமா...“ என்றாள்.

‘நல்ல சுகம்...நீங்க.. நதாவெல்லாம் எப்படி...“

“நல்லம் டீச்சர்....நீங்க சொன்ன மாதிரியே நைட்டா சென்டர்ல IT கிளாஸ், பிறகு இங்கிலிஷ் கிளாசுக்கெல்லாம் போறா... மகனையும் இங்கேயே சேர்த்துவிடுவம் என்றுதான் நானும் அவங்களும் வந்த...நிறையத்தரம் ஒங்களுக்கு கோல் எடுத்தேன்... ஆன்சர் இல்லே... நம்பர் மாத்திட்டிங்களா... நதா ஒங்களுக்கு சலாம் சொல்லச் சொன்னா... மீட்டிங் தொடங்கப்போகுது.. நான் போயிற்று வரவா...ரீச்சர்..“என்று திரும்பியவளிடம்

கேட்பதா...விடுவதா என்ற சிறிய மனப்போராட்டத்தின் முடிவில் கேட்டே விட்டேன்.

“பிறகு...ஒங்கட family life எல்லாம் எப்படிம்மா போகுது...“

அதற்குள் அவள் போன் வைப்ரேட்டாகியது. அவள் கணவராகத்தான் இருக்க வேண்டும். ஒருவிதப் பூரிப்போடு விரைந்து அருகில் வந்தவள் முகத்தில் படர்ந்திருந்த வியர்வையைக்கூடப் பொருட்படுத்தாமல் என்னை இறுக அணைத்து கன்னத்தில் ஒரு முத்தமும் வைத்தபடி “அவங்க கூப்பிடுறாங்க... பிள்ளைகளையும் கூட்டிகிட்டு ஒங்கட ஊட்ட வாரேன் ரீச்சர்....“‘என்றபடி விரைந்தாள்.

நதா என்றால் அர்த்தம் பனித்துளியாம்

இருபத்தொரு வருட ஆசிரியப் பணியில் கடந்துவந்த பனித்துளிகளின் பலவகைமைகளை என்னவென்பது...

‘நாம் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் போராடியும் பெற்றவர்களின் அலட்சியப் போக்குகளால், பொறுப்பற்ற செயல்களால்... மோசமான குடும்பச் சூழ்நிலைகளால்....பெரும் எதிர்பார்ப்புகளோடு மண்ணில் விழுந்த மறுகணமே வற்றி வரண்டு காய்ந்துபோன பனித்துளிகளும்....

சூழல் வெப்பநிலைக்குத் தகுந்த மாதிரி தன் உடல்வெப்பநிலையை மாற்றி வாழப்பழகிக்கொண்ட ஈருடகவாழிகளாய் ....இவள் போன்று தான் பெற்றவைகளுக்காய்...தன சுயம், பிடிவாதம், தன்மானம் அனைத்தையுமே துறந்த தாய்மையின் அர்ப்பணிப்புகளால் வற்றாத நதியாகி சமூகத்துக்குப் பெரும்பயன் தரக் காத்திருக்கும் பனித்துளிகளுமாய்.... என நான் நனைந்து கரைந்த வைரத்துளிகள்தான் எத்தனை... எத்தனை...?‘.

மெதுவாய் கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொள்கிறேன்... நிறைந்த மனசோடு.



## அதிகாரம் 06

# ‘ஒரு ஏதோ..!’

### அங்கும் இங்கும், எங்கும் ஒரு நீள் கதை

இங்கு..

வைகறை வலு தன்மையாகத்தான் துவங்கிற்று. இரா மிக்க நன்றாக தூங்கி விழிப்பவர்கள், ஒரு பிரமாண்ட மாவரக்கன், கல்பத்துயில் முறிந்து, புது சூர்யர்களின் வெளிச்சப் பிரவாகத்தின் கிலாரடிப்பை உணர்வது மாதிரி உணரக்கூடும். இதுவும் மனிதரையும் மனதையும் பொறுத்தது.

உஸோமியை அவ்வளவு cool ஆக இவண் கண்டதில்லை. ‘இதேது..? புது ‘விண்ணாணம்‘ என்று வியந்தான். ‘சூறாவளிக்கு ‘முன்னான‘ அமைதியோ..??!! புயலுக்குப் பிற்பாடுதானே அமைதி..!! முற்பாடு சுழன்றடிக்கும் றாட்டல்கள் கொஞ்சமாவது முஸ்தீபு காட்டுமே,‘ என்றெல்லாம் எண்ணத் தலைப்பட்டான். ஆடா நீர் போன்ற வழமைகளில் தூங்கி, தொங்கிக் கொண்டு இருப்பதால் தான், திடுதிப்பு ஆச்சர்யங்களால் மனுஷ மனது அதிர்வு கொள்கிறது. அவள் இரவு இருந்திருக்கவில்லை. காலை தான் வந்தாள். இரவு இராது காலை வருவது குறைவு. இரவு இராமலும் காலை வராது. அப்படி வரும்போதெல்லாம் படா cool ஆக துவங்குவதுதான் நியமம். ஒன்றோ இரு சந்தர்ப்பங்களில் மட்டுந்தான், உலகத்து சண்டைகளுக்கான சகல சர்ச்சைகளையும் ஒரு சுடு, கடு உலோப் பேணியில் அடைத்து, தூக்கி வந்ததுண்டு.

அப்போ இளவேனில். செத்த மாதிரி பாவ்லா காட்டி,பொதுவான இயற்கைக்குப் புறம்பான வகைக்கு, இராட்சத பொய்யை சுற்றின் சூழலுக்கு விசித்திரமாய் காட்டிய மரங்கள்,- கொல்லக்கொல்ல தழைத்த, புராண ஐதீக அரக்கர்கள் மாதிரி, சிலிர்த்து, சிலுப்பி, எழுந்து, கடூரித்த பூரிப்பிலும் தழைத்த இறுமாப்பிலும் நகைக்கிற காலம். ஒரே வாழ்வில் ‘மனிதக்காலங்கள்‘ ‘சூர்யன்-பின்-முகில்....பின்-சூர்யன்-பிறகு கார்முகில்-பிறகு

## சிறினோ சிறி சிறிசு

'பிரளயம்';..என்று, தீர்க்கமாய் மாறுவது போல்,- சுற்றிவர படர்ந்திருக்கும் இயற்கை வெளியான வெளி இயற்கையில், பவனஞ்சார்ந்த காலம், ஒரே வருஷத்துக்குள்ளேயே நாலு தடவை மாற்றங்கொள்வது அழ்ழ்ழ்ழகானது அது உள்ள பிரதேசம் சுகமானதென்றும் அதில் தான் வாழ்வது பாக்கியமென்றும்,- இறும்பூயெய்திக் கொண்டான், இவண். தேஸம் மாறி வாழ்கிற போதுதான், அதன் எழில் தெரிகிறது. உஸோமிக்கு இந்த எழிலழகு தெரிய வாய்ப்பில்லை. அவள் பிறந்தது, வளர்ந்தது, வாழ்வது, கொழுவுவது, றாட்டுப்படுவது, 'சமூக விதிகள்' என்று திகில் காட்டி, 'You should live like this.'என்று வருகிற போது, 'Get the hell outta here.' என்று துப்பி விட்டு மீதியை நோக்கி நகர்வது;.., யாவுமே இங்கு, இந்நாட்டில் மட்டுந்தான்.

'நான் வருகிற வழியில் சுவாரஸ்யமான ஒரு விவகாரம் நடந்தது,' என்றாள் உஸோமி. 'நீ வாழ்கிற வழி எல்லாமே சுவாரஸ்யந்தானே. என்ன அது;??' என்று கேட்டான் இவண். இந்த பதிலை தமாஸாகப் பகடியாகவோ, எதிர் விமர்சனமாகவோ அவள் எடுத்தாள், என்பதில் இவணுக்கு படு குழப்பம் வந்ததுண்மை. 'நான் வருகிற வழியில், குறுக்கே வந்த வந்த ஒரு, வயிறு வீங்கிய, தெருவில் உலாத்தும் பசுவை முட்டி மோதிவிட்டேன். அது கட்டாக்காலி மாடு,' என்றாள் உஸோமி. 'ஐயோ;.பாவமே;!!! பிறகு..??' இவணுக்கு திடுமென உஸோமியின் 'குத்தல்' புரியவில்லை. திடுமென்று சுதாகரித்துக் கொண்டு, 'ஐவ்வெருளி..இங்கு எங்கு தெருவில் மாடு. வெருளீ(ஈ)?' என்று சோந்தலாக மழுப்பினான். 'இல்லை. நான் இந்தியாவில் இருப்பதாக கனவு கண்டேன்.'

'Car ஓட்டிக் கொண்டு வரும்போதா;.??!!'

'அட கோதாரீ அப்போ நான் நித்திரையில் தான், ஊறாசு ஓட்டியிருக்கிறேன். பஹ்ஹ்பஹ்பஹ்ஹ்;.!! ஐயகோ..!!

**செல்பேசியில், பட்டப்பழைய பாட்டொன்றின் ராகவிசையைப் பொருத்தியிருந்தான். விரும்பிச் சொருகிய tune கூட ஒருவித சமிக்ஞை புரியா நாராசமாகவே கேட்டது. பதட்டத்துடன், ஆனால், அதை வெளிக்காட்டாமல் விட,: படு பிரயத்தனப்பட்டு, செல்பேசியைத்தூக்கி, தொடர்பாக்கி, 'hello காலை வணக்கம். நான் இப்போ படு busy. பிறகு call பண்ணுகிறேன்,' என்றான். காது முனையில், 'இல்லை. உங்களுடன் அவ்வ்வசரமாக பேச வேண்டும், என்ற**

**பெண்குரலை உஸோமி புரிந்திருக்க முடியாது.**

**'**

**யாரது..??' என்று கேட்டாள்.**

ஏதாவது விபத்து நடந்திருந்தால்..??!! நினைக்கவே இரத்தம் முழுமையுமே வெள்ளையாகிறது;.!!!'

'நீ நித்திரையில் கூட எல்லாம் ஓட்டுவாய். எனக்கு தெரியாததா..?! விடு. உயிர்ச்சேதம் இல்லைத்தானே...!!'

சும்மா சொன்னானாயினும், இவள் அரைத்தூக்கத்தில் தான் ஒட்டிக் கொண்டு வந்திருக்கிறாளோ?, என்று அச்சங் கொண்டான், இவண். விசனமெதுவெனில், என்றுமே அதன் மெய்-பொய்யை அறிய முடியாது, என்பதுதான். அவள் கண்களை உற்று நோக்கினான். சிறிது சிவந்துதான் இருந்தது. உஸோமிக்கு காரண காரியமேதுமின்றியும் கண் சிவக்கும். தவிரவும், உஸோமியின் சிவப்பு இரத்தம் பூரா எவ்வாறு வெளுக்கும் என்பது பற்றியும் இவணுக்கு அச்சொட்டாய் தெரியும். அதை அறிய, உடலியல், உயிரியல் கற்க வேண்டும்.

கோரவரக்கனாய் (அரக்கியாய்) உஸோமியின் கண் சிவக்கும் நிலபரமொன்று திடுக்கடீரென்று, அடுத்து வந்தது.

இந்த இளவேனிலின் மாயாதங்கம் மாதிரித்தான், உஸோமியின் மாயானந்தமும் வேளைகளில். நிரந்தரமற்றது. காரணமேதுமின்றி உஸோமியின் மேல் கை போட்டு, தன் பக்கமாய் இழுக்க எத்தனித்தபோது, திடுக்கடீரென்று, செல்-பேசி அபசகுனமாய் ரீங்கரித்தது. அந்த 'சகுனம்' சூர்ய தேவர்களில் காலை விழிக்கும் முகராசி சகுனமல்ல. செல்-பேசியில், பட்டப்பழைய பாட்டொன்றின் ராகவிசையைப் பொருத்தியிருந்தான். விரும்பிச் சொருகிய tune கூட ஒருவித சமிக்ஞை புரியா நாராசமாகவே கேட்டது. பதட்டத்துடன், ஆனால், அதை வெளிக்காட்டாமல் விட,- படு பிரயத்தனப்பட்டு, செல்-பேசியைத்தூக்கி, தொடர்பாக்கி, 'hello..காலை வணக்கம். நான் இப்போ படு busy. பிறகு call பண்ணுகிறேன்,' என்றான். காது முனையில், 'இல்லை. உங்களுடன் அவ்வ்வசரமாக பேச வேண்டும், என்ற பெண்குரலை உஸோமி புரிந்திருக்க முடியாது.

'

யாரது..??' என்று கேட்டாள். 'தெரிந்த ஒரு ஆள். இப்போ பேச முடியாது, என்று சொல்லி வைத்தேன். நீ இங்கு இருக்கிறாயல்லவா..?! அப்போ, நான் busy தானே. உன்னுடன் busy,'

'தெரிந்த ஆளா.?! A.Pabavesvaran அல்லது, A.Parameswaran என்ற பெயர் display இல் இருந்ததே. யார் அது;???!!!'

அங்கு...

ஊர்களின் வாய்கள் பிரபஞ்சம் மாதிரி பெரிது. சும்மா சப்பும். 'வெறுவாய் என்றாலும் வெற்றிலை என்று, 'அரை' படுந்தான்.' ஆனால், அவை சகலவற்றிலுமே கிஞ்சித்தேனும் உண்மை கிடையாதென்றும் கிடையாது. ஆனால், 'சின்ன அதான அதை' அந்த உண்மையை, என்றுமே தோம்பிழுத்து, தோண்டி எடுக்க முடியாது. அது அடியில் எங்காவது பள்ளி கொள்ளும்.

சசிவாணி (not to be confused with சுசிவேணீ 'அவள்' சசிவாணியின் மகள்.) விஷயத்திலும் இப்படித்தான். சிறு கிஞ்சித்து மெய் உள்ளுடன்

இருக்கவே செய்தது. ஊர், பெண்களுக்கு மட்டுமென்று வித்தியாசமான சட்டங்களை புராதன காலந்தொட்டு வைத்திருக்கிறது. கடைசிவரை கொஞ்சமாவது அது இருந்தே ஆகும். இல்லை, எல்லாம் சரியாகும்॰ சமமாகும், என்பது பொய். அது போலிகளின் படு(ஊ) பொய்க்கதை. அதன் பெரு காரணம்॰ பற்பல காரணங்களால், பெண்களே தாம் இரண்டாந்தர மாந்தராக அடக்கப்படுவதை பற்பல தருணங்களில் கண் விழிக்காமல் ஆதரிப்பது தான்;.!! அது சமூக கட்டுமானப் பிறழ்வின் சரிதம் சார்ந்தது.

அதையேன் இப்போ;.???!!!

ஒரு வகையில் அது, தேவையற்ற வம்பு. தேவையான வம்புகள் நிறைய்ய்ய இருக்கிறபோது, தேவையற்ற வம்புகளை பிறகு பார்க்கலாம்.

சசிவாணியை 'ஆட்டக்காறி' என்றே ஊர் பறைந்தது. படு ஆட்டக்காறி. அது என்ன ஆட்டம், என்பதில் ஆளுக்காள் வித்தியாசம் இருந்ததும் மெய். துவக்கத்தில் இதை கொண்டு திரிந்தது கொடிச்சிவாலிக்கிழவிதான் (No: 1). அதிலேது ஆச்சர்யம்..??!!

'பெண் பூட்டும்' அதன் தொலைந்த சாவியும் துவக்கத்திலிருந்தே லோகம் பூரா உள்ள ஒரு விவகாரமாயினும், அது,'அங்கு' போன்ற இடங்களிலேயே கொடிகட்டி, மண்டை கிறுங்க சிலுப்பா உலுப்பும். அதற்கும் பல காரணங்கள்.

அதேன் இப்போ;.???!! இந்த வம்பும் சோலியானது.

ஊரார்,- 'பெட்டைகள்', பெண் புரசுகள், இன்ன இன்ன வகையில்தான் உடை அணிய வேண்டும், ஆட்கள் முன் எவ்விதம் கால் மடக்கி குந்த வேண்டும், இன்னின்ன வேலைகளை,- மறு கேள்வி கேட்காமல் ஆற்ற வேண்டும், அலங்காரம் அளவுடன் இருக்க வேண்டும், 'வினாக்குறியாய்' மறுவினா கேட்காமல், மடங்கி வாழ வேண்டும், 'பொம்பிளை சிரிச்சால் போச்சு, புகையிலை விரிச்சால் போச்சு,' என்றெல்லாம் 'அலம்பல் ஈறு விளக்குமாறு' கட்டுவதை சசிவாணி ஏற்கவில்லை. இந்த கட்டுப்பெட்டித்தனம் கேவலமானது, என்ற உள் துடிப்பு எப்போதும் அருண்டு, அருட்டப்பட்டுக் கொண்டே இருந்தது, அவளிடம். ஆதலால், வீட்டார், ஊரார், பேரார், போரார் செய்யச் சொன்னதை எல்லாம், அவள் செய்யாமல் விட்டாள்.

'உதட்டுச்சாயம் பூசக்கூடாது..?'
பூசுவேன்!
'Mini Skirt அணியக் கூடாது..?'
அணிவேன்!
"பொடியளுடன்' சிரித்து
பேசக்கூடாது..?'
பேசுவேன்!
'பொடியளுடன் சிரித்துக்கிரித்து
சல்லாபிக்கக் கூடாது.'
சல்லாபிப்பேன்.

'காதல் கீதல் பண்ணக்கூடாது..?'
பண்ணுவேன்!

ஆகவே, காதல் பண்ணினாள், சசிவாணி. சிக்கல் ஏதெனில், பலரை காதல் பண்ணினாள். இன்னும் சிக்கலான விவகாரம் ஏதெனில், ஒரே நேரத்தில் இரண்டு பேரை 'காதல்' பண்ணியிருக்கிறாள். ஒன்றே கூடாதென்று புசத்தும் ஊருக்கு இரண்டென்றால்;.?? கேட்கவா வேண்டும்..???

**'உதட்டுச்சாயம் பூசக்கூடாது..?'**
**பூசுவேன்!**
**'Mini Skirt அணியக் கூடாது..?'**
**அணிவேன்!**
**"பொடியளுடன்' சிரித்து**
**பேசக்கூடாது..?'**
**பேசுவேன்!**
**'பொடியளுடன் சிரித்துக்கிரித்து**
**சல்லாபிக்கக் கூடாது.'**
**சல்லாபிப்பேன்.**

**'காதல் கீதல்**
**பண்ணக்கூடாது..?'**
**பண்ணுவேன்!**

**ஆகவே, காதல் பண்ணினாள், சசிவாணி.**

**சிக்கல் ஏதெனில், பலரை காதல் பண்ணினாள்.**

**இன்னும் சிக்கலான விவகாரம் ஏதெனில், ஒரே நேரத்தில் இரண்டு பேரை 'காதல்' பண்ணியிருக்கிறாள்.**

பறை பறை, என்று பறைந்தது ஊர் கேவலமாய்த்தான். படு, படு(ஊ) அஸ்ஸ்ஸ்ஸிங்கமாயும். 'ஆட்டக்காறத் தேவடியாள்'. 'குண்டி காட்டி'. 'கண்டவனை '??' (இங்கு முதலாவது வினாக்குறி = தமிழ் நெடுங்கணக்கில் பதினோராவது எழுத்து. இரண்டாவது வினாக்குறி - நூற்று தொண்ணூற்று ஒன்பதாவது எழுத்து ஆகும்.). 'நாத்தல் '??' (இங்கு முதலாவது வினாக்குறி தமிழில் நூற்று எண்பத்து மூன்றாவது எழுத்து.இரண்டாவது வினாக்குறி = நாற்பத்து ஒன்பதாவது எழுத்து ஆகும்.)

'பிசாசு'.
'பிண்டத்தின் அச்சி'. இன்னும் இன்னும்;;!!

ஊர் எல்லாம் பறையும்.

சும்மா ஒரு உதாரணம்॰ ஊரிலிருந்து நகரத்துக்கு போன bus இல் ஊரிலிருந்து நகரத்துக்கு போன சசிவாணியை ஊரிலிருந்து நகரத்துக்கு யாரோ பின் தொடர்ந்திருக்கிறார்கள்..!! ஊரில், யாரோதான் இதை ஏவியிருக்கிறார்கள். அது யார் என்று தெரியாது. யார் பின் தொடர்ந்தவர், என்றும் தெரியாது ஆனால், சசிவாணி, Bus தரிப்பு நிலையத்தில், யாரோ ஒரு முடி கஞ்சலாய் நீள வளர்த்த, மூஞ்சி கறுத்த, கன்னக்கிருதா பையனுடன் சிரித்துச் சிரித்து குசாலாக சல்லாபப் பேச்சு பேசியபின், அவன் போக,- இன்னொரு குறு சிறு முடி கொண்ட, மூஞ்சி சிவந்த, முழுச்சவரம் செய்த பையனுடன் ஐஸ்கிறீம் கடைக்குள் 'அங்கால் இங்கால்' பார்த்து வெருண்டபடி,- குசுகுசுத்தபடி புகுந்த சுவாரஸ்ய தகவல் மட்டும் தெட்ட துல்லியமாய் தெரியும்.

இதெல்லாம் ஒரு கரையில் ஒதுங்க,- சசிவாணி திருமண வயதுக்கு வந்தபோது, பெரீய்ய்ய சிக்கலாய்ப்

போயிற்று.

'ஆட்டக்காறத் தேவடியாள்- '??..??'- பிசாசுக்கு' யார் மாப்பிள்ளை தருவார்;.??!! சொந்த ஊரை விட்டாலும், அருகு ஊர்களிலும் அதே நிலபரந்தான். ஊர்க்கதை ஊரூரெல்லாம் ஊரும். இதில் கொடிச் சிவாலிக்கிழவிக்கு பெரும் பங்கு இருந்தது. ஒன்றை ஒன்பதாக்கி, ஒன்பதை ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து எழுநூற்று ஐம்பத்தெட்டாக்கி கிழவி, படு இலாவகமாய் ஊராரெல்லாம் வதந்தித்தது. ஊர்,- அரிசி, வெங்காயம், கறி, புளி வாங்க, பலமாய் மண்டையை உடைத்தாலும், வதந்தியை வாங்க சூழ அலைந்து முன்னிற்கும். ஊரில், அயலில், வரன் வராது, என்று உறுதியாகிப் போனதால், ஊராவீடெல்லாம் தாண்டி, தூர இடங்களில் மாப்பிள்ளை பார்க்க வேண்டியதாயிற்று. என்ன ஆனாலும், யார் ஆனாலும் ஆயிரங்காலத்துப் பயிரை வளர்க்கவென்று கிளம்பினால், விதை விசிறும் நாற்றங்கால் பசளை கொண்டதாகத்தான் இருக்க வேண்டும். நீள் வாழ் பயிருக்கு பசளை உரமான நாற்றங்கால் தான் அத்திவாரம்.

தூர ஊரில்தான், சசிவாணிக்கு மாப்பிள்ளை பிடித்தனர். பசுவைச் சினைப்படுத்தும் கைங்கர்யமாயும், காலாகாலமாய் இவ்விவகாரங்கள் ஊர்களில் பார்க்கப்படுவது கூட உண்டு. சங்கத்து 'மலை படு கடாமில்' வரும், 'நல்லேறு பொரூஉம் கல்லின் கம்பலை,' எனும் ஏறு தழுவல். மஞ்சு விரட்டு ஆய ஜல்லிக்கட்டு வேறு சமாச்சாரம்.

அந்த மாப்பிள்ளையின் வரலாறு, ஒரு வகையில் அதிர்ச்சிப்பது. அதை முழு ஊரும் அறியுமோ, என்பது பற்றியும் தெரியாது. ஆனால், ஒன்று நிச்சயமாகத் தெரியும். ஆவளைப்பிள்ளையார் கோவிலுக்கும் அந்த வரலாற்றுக்கும் சம்பந்தமுண்டு. ஆச்சர்யகரமாக, அதில் கொடிச்சாவாலிக்கிழவிக்கும் இரத்த 'உருத்து' உண்டு..!!

இங்கு...

முதலில் இருவர்தான் வந்திருக்கின்றனர். ஆளுக் கொன்றாக, இரண்டு bicycles இல் தான் வந்தனர். பனையோலை வார்ந்தெடுத்த நெட்டியினால் இழைத்த ஜோல்னாப்பை போன்ற ஒரு சிறு பறியை ஒருவன் தன் பைசிக்கிள் handle மத்தி தண்டில் கொழுவியிருந்தான். அதனுள்ளேதான் அவனது துப்பாக்கி இருந்தது. மற்றவன், தனது துப்பாக்கியை வெளியில் எல்லோர்க்கும் தெரியுமாற்போல இடுப்புப்பட்டியின் வார் பட்டையில் வைத்திருந்தான். அதற்கு விபரிக்க முடியாததொரு ஈர்ப்பு இருந்தது. ஆயுத மோகம் மனுஷ அடிக்குணம். இடுப்புப் பட்டைக்காரன் காட்டும் 'துவக்கு பட'- படாடோபத்தினால் சனம் அவனை வியப்புடனும் பயத்துடனும் பார்ப்பதுண்டு. தெருவில் குரங்கு விளையாட்டுக்காரனோ அரிதாக, கோமாளித்தனமாய், பூத்தொப்பி போட்ட குதிரைக்காரனோ போகிறபோது சிறுவர் நின்று, வியப்பில் அதிர்ந்து மிலாந்துவது போலத்தான் துவக்கு தூக்கிய ஆளுக்கும் வியப்புடன் மிலாந்துவார்கள். கத்தி,

அதனுள்ளேதான் அவனது துப்பாக்கி இருந்தது. மற்றவன், தனது துப்பாக்கியை வெளியில் எல்லோர்க்கும் தெரியுமாற்போல இடுப்புப்பட்டியின் வார் பட்டையில் வைத்திருந்தான். அதற்கு விபரிக்க முடியாததொரு ஈர்ப்பு இருந்தது.

ஆயுத மோகம் மனுஷ அடிக்குணம்.

இடுப்புப் பட்டைக்காரன் காட்டும் 'துவக்கு பட': படாடோபத்தினால் சனம் அவனை வியப்புடனும் பயத்துடனும் பார்ப்பதுண்டு.

கட்டாரி, கதை, அம்பு, சூலம், பொல், வேல், வாள்;.இன்ன பிற என்ற பல கொலைக் கருவிகள் எல்லாவற்றிற்குமே மனுஷ சரிதம் பூரா பய்ய்ய்யங்ங்கர மரியாதை இருந்திருக்கிறது தான்;.!!!!

ஆள் 'நம்பர் வண்' வெருளியானாலென்ன, முதல் தர அயோக்கியனாக, தூமை நாராணி மொக்கரக்கனாக இருந்தாலென்ன, அறிவை ஏதென்று அறியாத சின்ன பையனாக இருந்தாலென்ன, துவக்கு இருந்தால் பெரிய ஆள்தான். எவ்வளவு பெரிய அறிவு ஜீவியையும் குற்றமறியா தோட்டாக்கள் ஒன்றிரண்டு மூலம் போட்டுத் தள்ளலாம். சாவிலும் வாழ்வு படு உயரியதென்பதை உலோகக் குண்டுகள் அறியா.

'ஆளை வெளியிலை ஒருக்கால் வரச் சொல்லுங்கோ. கதைக்க வேணும்' என்று இங்கிதமாகத்தான், ஆரம்பத்தில் கேட்டிருக்கிறார்கள்.

இவ்வாறான அர்த்தம் படத்தான் குட்டி ஓலாவின் கதைத்துவக்கம் இருந்தது. ஆச்சர்யகரமாக, 'பொட்டையான குட்டி' உஸோமியும் 'பொடியளான' குட்டிகளும் அக்ஷுதுº விலா-பீலா-ஓலா குந்தியிருந்தனர். இவ்வாறு நிகழ்வது படு அரிது. அதே bar தான். இவனுக்கும் அதற்கும் நல்ல ராஸி. ராஸி என்றால், ஏதோ அதிஸ்டம், வருமானம், அமைதி தருகிற ஒரு உருளைக்கிழங்கும் கிடையாது. 'நீ காசு கொடுக்கிறாய் வேலையாட்களுடன் இங்கிதமாக குஸாலடிக்காறாய் alcohol தரும் குஷியில் கிளர்கிறாய் அதுசார் தனிவாழ் விவகாரங்களில் குறு காலம் சுகிக்கிறாய்.' அவ்வளவு தான். அதற்கு மேல் எதைத்தான் எதிர்பார்ப்பது..??!!

இவணில் ஒரு மிக்க நல்ல குணாம்ஸம் உண்டு. ரொம்ப ரொம்ப விசுவாசமான ஆள், இவண். அது நண்பர், தெரிந்தோர், வாழ் தேஸம், தொழில் தோழர் என்று எவராயினும் எதுவாயினும் சரி. வேறு இடங்களுக்குப் போய், புதிர்காண் படலத்தில் ஆசை இருப்பது போலவே, பழக்கப்பட்ட இடத்துக்கு அடிக்கடி போவதிலும் பெரு விருப்பு உண்டு.

தெரிந்த மனுஷ முகங்களை அடிக்கடி பார்க்க விழைவதும் பார்ப்பதும் மனுஷ நட்பு சார்ந்து தான்.

குட்டி ஓலாவின் கதையின்படி; ,தொடர்ச்சி...

'ஆளெங்கை;??!!'

'இஞ்சை இப்ப இல்லை, ராசா. எங்கையோ கூட்டாளிகளோடை tuition எண்டு போய்ட்டான்.' 'எப்ப வந்தாலும், இதைத்தானே சொல்லுறாய், கிழவி..!!' கிழவி, குட்டி ஓலாவின் பேர்த்தி-தாயின் தாய். அவளில், பார்வைக்கு வேதனை தரும் நடுக்கம் தெரிந்தது. அதைப்பற்றி துவக்குக்காரருக்கு அனுதாபம் கிடையாது. அதுவரை சாதாரணமாக இருந்த ஒருயிரை கணப்பிளவுள் இரத்தம் குபீரடியெனச்சீற, உயிரற்ற சவமாக்கும் துவக்குதாரிகளுக்கு முதியோள் ஒருத்தியின் மூப்பு நடுக்கம் , என்ன செய்யும்..??!!

'ராசா..! நாங்கள் கஸ்ரப்பட்ட ஆக்கள். பெரியாம்பி தான் மூத்தவன். அவன் படிச்சு, நாலு காசு உழைச்சு குடும்பத்தை கரை சேர்ப்பான், எண்டு நம்பித்தான் நாங்களெல்லாரும் இருக்கிறம்.'

'இப்பிடித்தானே எல்லாரும் சொல்லுறீங்கள். ஆளுக்காள் இப்பிடி ஒளிச்சால் ஆர் எங்களுக்கு சுதந்திரம் பிடிச்சுத்தாறது..?? வீட்டுக்கு ஒரு ஆள் வந்து போராட வேணும், எண்டு தலைவரே சொல்லியிருக்கிறார்,' என்றான் இடுப்பில் துவக்கு கட்டிய-காட்டிய ஆள். அவனை ஆள் என்று சொல்கிறபோது, ஏதோ ஒரு பெரிய படம் போடப்பட்டு விடுகிறது. அப்படி ஒரு உருளைக்கிழங்கும் கிடையவே கிடையாது. 'ஆளுக்கு' ஒரு இருபது, இருபத்திரண்டு வயது தான் தேறும். சுதந்திரம் 'பிடிக்க' வெளிக்கிட்ட அவனுக்கு, சுதந்திரமென்றால் என்னவென்று தெரியாது, என்பது நிஜம். ஆனால், சுடத் தெரியும். சாகும் ஆள் யார், எத்துணை புத்திஜீவி, சேவையாளர் என்பதெல்லாம்பார்க்காமல்பிடரியில் சுடத்தெரியும். சாத்தறுவாயில் துடிக்கும் ஒரு ஆளிலிருந்து சிதறும் குருதி அவனை எப்பனும் கிறுங்க வைக்காது. 'ராசா;, அவனுக்கு கீழை மூண்டு குஞ்சு குருமானுகள். உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறன். பெரியாம்பியை விட்டிடுங்கோ. தகப்பன்காறனும் இல்லை. நாங்கள் என்ன செய்யிறது ;!!'

**எத்தனை நாள்தான் குட்டி ஓலாவை ஒளித்து வைப்பது..? தலைவரின் 'உயரிய' ஆணையை நிறைவேற்ற, படு முக்கு செய்யும், வால் தளபதிகளின் காலாட்படையான, bicycle துவக்காளிகளுடன் தொடர்ந்து மல்லுக்கட்ட முடியாது.**

'அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது. என்னெண்டு சுதந்திரம் பிடிக்கிறது..?? அவனுக்கு தம்பிக்காறன் இருக்கிறான் தானே. அவனை விடுகிறோம். ஆனால், மூத்தவன் இயக்கத்துக்கு வந்தே ஆகவேணும்.' இப்படியே வாதம் இழுபட்டாலும் பேசத்தெரியாத துப்பாக்கி தான் ஈற்று, வாத வெற்றியை காணும். ஆனால், அது நிரந்தரமானதில்லை, என்பது வேறு சமாச்சாரம்..!!

எத்தனை நாள்தான் குட்டி ஓலாவை ஒளித்து வைப்பது..? தலைவரின் 'உயரிய' ஆணையை நிறைவேற்ற, படு முக்கு செய்யும், வால் தளபதிகளின் காலாட்படையான, bicycle துவக்காளிகளுடன் தொடர்ந்து மல்லுக்கட்ட முடியாது.

இன்னொரு தடவை திடுக்கு புடுக்கென்று, நினையாப் பிரகாரமாய் துவக்குக்காரர் வந்தாலும், இன்னும் நினையா அலுவலாய், குட்டி ஓலா வீட்டை விட்டோடி ஒளித்திருந்தான். புளியடி வீட்டு குஞ்சன் பொடியன், 'துவக்கு பொடியங்கள் வாறாங்கள்,' என்று 'வேர்க்க வியர்க்க' ஓடி வந்து சொன்னதில், குட்டி ஓலா, வீட்டு பின்வேலி பாய்ந்து, தெற்குப் பக்கமாய் வெறுங்காணிகளைத் தாண்டி ஓடியிருந்தான். கொல்லப்பரின் வெங்காயப்பாத்திகள், கரை வரம்பில் ஊன்றி நின்ற பாற்கிளுவைகளில் சுற்றி நின்ற மோதக வள்ளிக்கொடிகள் கொண்ட தோட்டங்கள் எல்லாவற்றினையும் இடறிக்கடந்து, பாய்ந்தோடி, தெருவில் ஏறி, திரும்பி மேற்குப் பக்கமாய் வியர்க்க விறுவிறுக்க எகிறி, பெரிய தம்பிரான் கோவிலை மடக்கித் தாண்டி, வாப்புரத்தாரின் மரவள்ளிக்கூடலுக்குள் ஒதுங்கி, நிம்மதிப் பெருமூச்சு விட்டு, 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று எண்ணத் தலைப்பட, திடுக்கடீரென்று முன்னே தோன்றிய, bicycle துவக்குக்காரர் இருவரும், 'எங்கையெடா தப்பி ஓடலாம், எண்டு நினைக்கிறாய், மவனே;!!' என்று கத்தியபடி, துவக்கை உருவி, அவன் கழுத்துப்பட்டையை பிடித்தனர்.

அங்கும் இங்கும்...

அங்கு இடுப்பில் துவக்கு கொழுவிய பையன் குரூரமான ஆள் போலவே தோற்றினான். எக்கணமும் எவரையும் எது காரணமுமின்றிக்கூட கொல்லத்தயங்காத ஒரு கொடுபெரு பிரகிருதியாகவே அவன் பட்டான். 'எங்கையெடா ஓடுவாய், பு;.. மேனே..?? எங்களிட்டை இருந்து..?? வா. நீ காட்டிய திருவிளையாடலுக்கு கொண்டு போய் நல்லாய் சாத்துகிறமோ இல்லையோ, பார்,' என்று அவன் குட்டி விலாவின் கழுத்தாங்குத்தியை இடுக்குப்பிடியாய் நன்னிப்பிடித்த அதே கணத்தில்;..

இங்கு...

தொபுக்கடீரென்று, bar இன் வளை தட்டில் இரு முழங்கைகளையும் கிடையாய் ஊன்றி, தலை மேல் இரு உள்ளங்கைகளையும் குவித்து அரைகுறை சுவாதீனத்திலிருந்த குட்டி ஓலா, கீழே விழுந்தான். அவன் குந்தியிந்த நாற்காலி போலான, நெடிதுயர்ந்த முக்காலியும் தொபுக்கடீரென்று கிடையாய் நிலத்தில் விழுந்தது.

அவன் குடி தந்த போதையில் விழுந்தானா? அல்லது bicycle துவக்குக்காரர் கொண்டு போய் சித்திரவதை செய்வார்களே, என்ற பயத்தில் விழுந்தானா? என்பது இவனுக்கு தெரிந்திருக்கவில்லை;.!!!!

,இன்னும் வர உண்டு.

# ‘சிதைப்பு’

## அல்லது பதினோராவது அவதாரம்

அதிகாரம் 08

எல்லா இடமும் நீர்ர்ர்!!

முடிவற்ற சமுத்திரம் என்றும் சொல்லலாம்.

‘வெளி = நீர்‘.

அதன் எங்கோவிருந்து ஏதோவொன்று திடுமென தன் முன் அவயவத்தை தூக்கிக் கொண்டு வந்தது.

அது அளவிட முடியாத ப்ரம்ம்ம்மாண்ண்ண்டமானது.

அது முழு நீரையும் உறிஞ்சியபோது,
‘மீன்:மாதிரி‘ ‘ஆமை:மாதிரி‘ ‘பன்றி:மாதிரி‘.
போன்றவை யாவும் செத்தன!!!

எல்லையற்ற வெளி உருவாயிற்று.

எங்கும் இருள்ள்ள்...!!!

வெளியையோ இருளையோ எவரும்.

எதுவும் படைக்கவில்லை.

அவை எப்போதுமே இருந்தன.

அந்த ‘வந்த‘ ‘ஒன்று‘ கடவுளைப் படைத்தது.

பிறகு தான் எல்லாம்.

‘நீ ஆச்சு!!! உன் பிரபஞ்சம் ஆச்சு!!!,‘ என்றது ‘கஜாவதாரம்‘!!!!!

# “RUIN”

## [Or, eleventh incarnation/avatar.]

**Chapter: 08**

Everywhere—
“waterrr”…!!!

It could be called an ocean.

“Space = water.”

From that,-

from somewhere, something came out,
lifting its front limb.

That was immeasurably immmmenssse.
When it sucked the whole water,-
the ‘fish-like’,
the ‘turtle -like,
the ‘boar-like,…
all similar died…!!!

Infinite space came to be.

Everywhere—
darknessss…!!!

Nobody/nothing created
neither space nor darkness.

That “came out one” created god.

“You…! And your universe,”

said “Elephantine ‘Avatar’”…!!!!!



# A Death by thousand paper cuts

# பத்திரிகையியலின் மரண அறிவித்தல்

## Obituary of Print Journalism

ஜோர்ஜ் இ.

நான் நினைவு தெரிந்து வாசிக்கத் தெரிந்த காலத்தில் இருந்தே, பத்திரிகைகள் வாசித்துக் கொண்டிருக்கிறேன். அந்த வாசிப்புப் பழக்கம் என்னை வளர்த்த அப்பா எனக்குத் தந்தது. ஓலைக் குடிசை வாழ்க்கையில், அந்த வறுமைக்குள்ளும், அப்பா பத்திரிகைகள் வாங்கிக் கொண்டிருந்தார்.

அதுவும் தினசரி ஒரு பத்திரிகையாக இருந்ததுமில்லை. தினசரி ஈழநாடு, வீரகேசரி, மித்திரன் என்ற இலங்கைத் தினசரிகள் மட்டும் அன்றி, கல்கி, குமுதம் போன்றவற்றுடன் உதயசூரியன் என்ற திராவிடச் சஞ்சிகை கூட எங்கள் வீட்டில் இருந்தன. அப்போது காமராஜர், இந்திரா பிரிவு எல்லாம் எனக்கு அந்த புரியாத வயதிலும் அத்துபடி. (இன்டிகேட், சின்டிகேட் என்றெல்லாம் வாசித்த நினைவு.)

ஐயா என்று அழைக்கிற என் தந்தை கூட, சந்தைக்கு மரக்கறி விற்கப் போய் வரும்போது, ஞாயிற்றுக்கிழமைகளில் சிந்தாமணிப் பத்திரிகை வாங்கி வருவார்.

கிட்டத்தட்ட எங்கள் வீடு வாசிகசாலை எனப்படும் நூல் நிலையம் போலத் தான் இருந்தது. பத்திரிகை வாசிக்க ஊரில் உள்ளோர் எங்கள் வீட்டு முற்றத்தில் இருந்த மரக்கட்டிலில் உட்கார்ந்தபடி பரவிக் கிடக்கும் பத்திரிகைகளை வாசிப்பது இப்போதும் எனக்கு நினைவில் இருக்கிறது. வீட்டில் கதிரை எல்லாம் கிடையாது.

வழமையான அந்த வாசகர்களுக்கு தேனீர் சப்ளை வேறு நடந்து கொண்டிருந்தது. (பிறகு ஒரு காலத்தில் ஊருக்குள்யே எங்கள் வீட்டில் கலர் டிவி வந்த போது, மற்ற கலர் டிவி வீட்டில் அனுமதிக்க மாட்டார்கள் என்று, புதன் கிழமை படங்களின் போது படம் பார்க்க வந்த ரசிகர்களுக்கும் தேனீர் சப்ளை நடந்தது தனிக்கதை.)

இத்தனைக்கு இந்த வீடு எங்கள் சொந்த வீடும் இல்லை.

வீடிழந்து சொந்த வீடில்லாமல், இன்னொரு குடும்பத்தினரின் காணிக்குள் கட்டப்பட்டிருந்த அந்தக் குடிசையிலிருந்து எங்களை

வெளியேற்றுவதற்காக அதைத் தீயிட்டுக் கொளுத்தி வீடிழந்து அலைந்த போதும், பத்திரிகை வாங்குவதை அப்பா நிறுத்தியதில்லை. அந்தத் தீயில் சேர்த்து வைத்திருந்த சஞ்சிகைக் கட்டுக்கள் எரிந்து போய் விட்டன... யாழ்ப்பாணம் நூல் நிலையம் மாதிரி!

அத்தோடு வெங்காயக் கூடு இழைக்கும் போட்டியில் என் அக்காமார் பெற்ற பரிசான எனது பாடசாலைப் பை ஒன்றும் அந்தத் தீயில் எரிந்திருந்தது.

வீடு எரிந்து நடு ரோட்டில் நின்ற என் சகோதரர்களின் பெயரோடு என் பெயரையும் போட்டு, ‘ஸ்டாலின், லெனின், குருஷேவ் மூவரும் நடுத்தெருவில்’ என்று மித்திரன் அப்போது செய்தி வெளியிட்டு, எங்களுக்கும் பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்தது.

திரும்பவும் கிடைத்த குடிசை வாழ்விலும் தொடர்ச்சியாக பத்திரிகைகள் எங்கள் வாசிப்புக்கு கிடைத்தபடியே இருந்தன.

எங்கள் ஊரிற்குள் எல்லோரும் வாசிக்க வேண்டும் என்பதற்காக ஒரு வாசிகசாலை அமைக்க வேண்டும் என்று தொடங்கியவர்களில் அப்பாவும் ஐயாவும் முக்கியமானவர்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட வாசிகசாலையில் பின்னாளில் என் மூத்த அண்ணனும் முக்கியமானவராக இருந்தார்.

அவ்வப்போது பொருளாதார நிலைமை காரணமாக, பத்திரிகை வாங்குவது நிறுத்தப்பட்டாலும், அந்த வாசிப்பு ஆர்வம் காரணமாக, ஊருக்குள் அப்பால் இருந்த வாசிகசாலைகளுக்கு மைல்கணக்கில் நடந்து போய் வாசித்து வருவதுண்டு. அப்போது விகடன், குமுதம், கல்கி, கலைமகள் போன்றவற்றின் தீவிர வாசகனாகியிருந்தேன்.

நகரத்தில் படிக்கப் போனபோது, எங்கள் கல்லூரி நூலகத்தில் இரண்டாம் யுத்த காலத்திற்குப் பிந்திய நூல்கள் இருந்ததில்லை. தமிழ்ப் புத்தகங்கள் மருந்துக்கும் கிடையாது.

48 ம் ஆண்டு வெளிவந்த சஞ்சிகை ஒன்றில், புகைப்படக் கலை சம்பந்தமாக தபால் மூலம் கற்பிக்கும் நிறுவனம் ஒன்றின் விளம்பரத்தைப் பார்த்து, புகைப்படக் கலை கற்க வேண்டும் என்று, கலியாண வீடுகளில் பெட்டிக்கமெராக்களில் மின்னிய பிளாஷ்களின் குமிழ்கள் வெடித்துச் சிதற, அவை கழன்று விழுந்ததும் பொறுக்கித் திரிந்ததைத் தவிர, வாழ்நாளில் கமெராவையே நேரில் கண்டிராத நான், நியூயோர்க்கில் உள்ள அந்த நிறுவன விலாசத்திற்கு, 78ம் ஆண்டு அறுபத்தைந்து சதம் செலவழித்து எயர்மெயில் கடிதம் அனுப்பி, அந்த விலாசம் இல்லை என்று கடிதம் திரும்பி வந்திருந்தது. அப்படித் தான் அந்த நிறுவனம் இருந்திருந்தாலும், அந்தப் பாடங்களுக்காக அனுப்புவதற்கு என்னிடம் பணமே இருந்ததில்லை. வெறும் கனவுகள் மட்டும் தான் இருந்தன.

அந்த நூலகத்தில் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்று எதுவும் இருந்ததில்லை. தமிழ் யுனெஸ்கோ கூரியரைக் கண்ட ஞாபகம்.

வாழ்நாளில் வாசிப்பில் ஆர்வமில்லாத என் வகுப்பு மாணவன் ராஜ்குமார் கொண்டு வந்த கலைமகளை ஆர்வக் கோளாறால் பாடக்கொப்பிக்குள் வைத்து வாசித்துக் கொண்டிருக்க, எங்களுக்கு படிப்பித்துக் கொண்டிருந்த அதிபர் ‘நஞ்சப்பன்’ பிரான்சிஸ் சுவாமியார் நான் பாடத்தைக் கவனிக்காமல், களவாக வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்து பறித்து, அந்த நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்ததால் அது மட்டும் அங்குள்ள ஒரே தமிழ் சஞ்சிகையாக நீண்ட காலம் இழுபட்டது.

அந்த சஞ்சிகையைப் பறிகொடுத்ததால், நான் ராஜ்குமாரோடு அதை விட நீண்ட காலம் இழுபறிப்பட வேண்டியிருந்தது. இங்கே வந்து நீண்ட நாட்களின் பின்னால் வகுப்பு மாணவர்கள் சந்தித்த பார்ட்டியில் கண்டபோது, என்னுடைய நல்ல காலம், அது நினைவு வராதபடிக்கு நாங்கள் இரண்டு பேரும் நல்ல வெறியில் இருந்தோம்.

அப்போது யாழ் மாநகரசபை நூலகம் தான் என் வாசிப்புக்குத் தீனி போட்டது. அங்கேயும் சகல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மட்டுமன்றி, ஆங்கிலச் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இருந்தன. ரைம், நியூஸ்வீக், கார்டியன், இலஸ்ட்ரேட்டட் வீக்லி என்று கண்டதும் கற்க வழிகோலிய இடம் அது.

எரித்த நூலகம் ஒரு பக்கம் திறந்து செயற்பட்டபோதும், நான் அங்கு போகத் தவறியதில்லை.

ஜேர்மனியில் இருந்த காலம் ஒன்று தான் நான் பத்திரிகைகள் வாசிக்காமல் இருந்த காலம். பிபிசி செய்திகளும், இயக்கங்கள் நடத்திய தொலைபேசி பதிலளிக்கும் இயந்திரச் செய்திச் சேவையும் தான் எங்களுக்கான செய்தி ஊடகங்களாக இருந்தன.



கனடா வந்து மொன்றியலில் இருந்தபோது, காலையில் பத்திரிகை வினியோகம் செய்த நண்பர்கள் கொண்டு வருவதும், பஸ்ஸில் யாரோ விட்டுப் போகின்றதுமான மொன்றியல் கசட்டில் தொடங்கிய வாசிப்பு ரொறன்ரோ வந்து, ரைம், நியூஸ்வீக், ரீடர்ஸ் டைஜஸ்ட் மூன்றுக்கும் சந்தா கட்டும் அளவுக்கு வந்தது. பிறகு நீண்ட காலம் ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகைக்கு சந்தாப் பணம் கட்டி அதிகாலை டெலிவரி கிடைக்கும். வேலைக்குப் போகும் போது கொண்டு போய், பயணத்தின் போதும், நண்பகல் உணவு நேரத்தின் போதும் வாசிப்பு தொடரும்.

இதற்குள் குளோப் அன்ட் மெயில் பத்திரிகை வினியோகித்த நண்பர் தினசரி அதிகாலை கொண்டு வந்து தருவார். வேலையிடத்தில் ரொறன்ரோ சண்ணின் மூன்றாம் பக்க அரைநிர்வாண அழகிக்காகவும், விளையாட்டுச் செய்திகளுக்காகவும், குறுக்கெழுத்துப் போட்டி களுக்காகவும் வாங்குவோர் அது முடிய வேலையிடத்து உணவு அறையில் விட்டுப் போனால் அது வாசினைக்கு வரும். இதைவிட ரொறன்ரோவின் மாற்றுப்பத்திரிகை எனப்படும் Now என்ற வார சஞ்சிகை வேறு.

அதை விட, மாதாந்தம் மூன்று இலவச கம்பியூட்டர் சஞ்சிகைகள். தேடிப் பிடித்துச் சேர்த்த அவை தொகுப்பாக என்னிடம் நீண்ட காலம் இருந்தன.

அச்சு வாசிப்பு என்பது ஒரு போதை என்ற அளவில் தான், நான் ஒரு News Junkie ஆகத் தான் என் வாழ்க்கை பூராவும் இருக்கிறது. வெறும் சில 'மேற்கோள்களோடு' செய்தியைத் தரும் தொலைக்காட்சியை விட, அச்சு ஊடகங்களின் ஆழமான செய்திகளும் விபரமான கட்டுரைகளும் என்னை மிகவும் கவர்ந்திருந்தன.

ரொறன்ரோ ஸ்டாரில் விளையாட்டுச் செய்தி தவிர, எல்லாமே வாசித்து முடிய நீண்ட நேரம் எடுக்கும். ஆனாலும் எதையும் தவற விடுவதில்லை.




போதாக்குறைக்கு இந்தப் பத்திரிகைகள் அமெரிக்க வால் ஸ்ட்ரீட் ஜேணல், நியு யோர்க் ரைம்ஸ் பத்திரிகைகளுடன் இணைந்து வாராந்தம் அனுபந்தங்கள் வேறு வெளியிடும்.

சனிக்கிழமைகளில் அதிகாலை எழுந்தால், வாசித்து முடிய நான்கு மணி நேரமாவது எடுக்கும் அளவுக்கு பத்திரிகை ஒரு பெரிய கட்டாக இருக்கும். அது வாசித்து முடியும் வரைக்கும் நான் வேறு எதுவுமே செய்வதில்லை.

அதில் செய்திகள், வர்த்தகம், கலை, வாழ்வு, விளையாட்டு என்று ஒவ்வொன்றும் தனித்தனியாகவே எங்கள் ஊர் பத்திரிகைகளை விட பெரிய சைஸில் இருக்கும்.

பின்னர் இணையம் வந்து செய்திகள் அங்கு படிக்கக் கூடியதாக வந்த பின்னால், நீண்ட காலம் இந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கான சந்தாக்களை நிறுத்தியிருந்தேன்.

முன்னம் ஒரு காலத்தில் தவிர்க்க முடியாத போதையாக இருந்த விடயம் ஒன்றை, அது இல்லாமலும் வாழ முடியும் என்ற நினைப்பே வராமல் இருக்கும் அளவுக்கு மறந்து போயிருந்தேன். என்னுடைய வாசிப்பும் காகிதத்தில் இருந்து கணினித் திரைக்குப் போய் இப்போது தொடுதிரைக்கு வந்து விட்டது.

நீண்ட நாட்களின் பின்னால், எனது புதிய வேலையிடத்தில் உணவு அறையில் இந்தப் பத்திரிகைகளைக் கண்ட போது...
'பட்டினி கிடந்து, பசியால் மெலிந்து பாழ்பட்ட'வர்களைப் போல,
they have become caricatures of their former selves.

தொண்ணூறுகள் தான் இங்கே பத்திரிகை உலகின் பொற்காலமாக இருந்தன. அந்தக் காலத்தில், கனடியப் பத்திரிகைகள் எல்லாமே கறுப்பு வெள்ளை அச்சிடல் தான். சஞ்சிகைகளைப் போல, பத்திரிகைகள் வண்ணங்களில் அச்சிடப்பட்டதில்லை.

பொருளாதார வளர்ச்சி பெரிதாகிக் கொண்டு போன அந்தக் காலத்தில், பங்குச்சந்தை நிலவரம் பெரும் பரபரப்பாகப் பரப்பப்பட்ட காலம். பங்குசந்தையின் சுட்டெண் பத்தாயிரத்தைத் தாண்டப் போகிறது என்பதே பெரும் செய்தியாக இருந்த காலம். பெரும்நிறுவனங்கள் ஒன்றை ஒன்று விழுங்கி, மிகப் பெரும் நிறுவனங்களாவது (Takeover mania) என்பதே முன்பக்கச் செய்திகளாக வரும் அளவுக்கு பொருளாதார வளர்ச்சி பெரிதாக இருந்தது.

குளோப் அன்ட் மெயில் பத்திரிகை வினியோகித்து, என்னைப் போலவே அதன் Report On Business பக்கங்களை ஆர்வமாக வாசிக்கும், என் நண்பர் தயா அண்ணை, அதிகாலை எனக்கு எனக்கு ஒரு பத்திரிகையைக் கொண்டு வந்து, கனிப்பொருள் தோண்டும் FalconBridge என்ற நிறுவனத்தை இன்னொரு கனிப்பொருள் நிறுவனமான Noranda

வாங்கியிருக்கிறது என்ற செய்தியைச் சொல்வதற்காக என்னைத் தட்டி எழுப்பியபோது, 'ஐயா, ஏற்கனவே தெரியும்' என்றேன்.

'எப்படி, ஐயா?'. அவருக்கு ஆச்சரியம்.

'நள்ளிரவு வேலை முடிந்து வந்து டிவியில் பார்த்தேன்'.

செய்திகளை வசனங்களாகத் தரும் தொலைக்காட்சிச் சனல் அது. அது குளோப் அன்ட் மெயிலில் முன்பக்கச் செய்தி. எங்களுக்குச் சம்பந்தம் இல்லாதவை என்றாலும், ஆர்வத்தோடு வாசித்தோம்.

பத்திரிகை நிறுவனங்கள் பெரும் லாபகரமான தொழில்முயற்சிகளாகத் தான் இயங்கி வந்தன.

பத்திரிகைகளின் விற்பனை அதிகமாக, அதனால் விளம்பரங்கள் அதிகமாக, பத்திரிகைகளின் பக்கங்களும் அதிகமாகி, லாபம் பார்த்ததால் பெரும் பண முதலைகள் பத்திரிகைத் துறையில் பணத்தை முதலீடு செய்யத் தொடங்கினார்கள்.

உலகின் நீண்ட வீதி எனப்படுகின்ற யங் வீதி ஒன்ராறியோ ஏரியில் தொடங்கும் பகுதியில் 1 யங் வீதி என்ற விலாசத்தில் பத்து மாடிக் கட்டடமாக இருந்தது ரொறன்ரோ ஸ்டார். நகர மத்திக்குள் அப்போது இருந்த உயரமான கட்டடங்களில் அதுவும் ஒன்று. உச்சியில் தனது பெயரைப் பொறித்து எங்கிருந்தாலும் கண்ணில் படக் கூடியதாக இருந்தது. பெருந்தெருவில் பயணம் செய்யும்போது துலாம்பரமாகத் தெரிந்த கட்டடம் அது.

குளோப், சண் இரண்டுமே நகர மத்திக்குள் தான் தங்கள் அலுவலகங்களையும் கொண்டிருந்தன.

ரொறன்ரோ ஸ்டார் ஒரு ட்ரஸ்ட் வகையான தொழில் முயற்சியாக இருந்தது. லிபரல் தன்மையோடு, சமூக நீதி சார்ந்த போக்கை அது கொண்டிருந்தது. தனியார் அதை வசப்படுத்தி, தாங்கள் நினைத்தது போல அதன் அரசியல் சார்பை மாற்றி விடக் கூடாது என்பதற்காக அதன் ஸ்தாபகர்கள் செய்த முயற்சி அது.

ஆழமான பார்வையோடான நீண்ட கட்டுரைகளும் பத்தி எழுத்தாளர்களும் என பிரபலமாக இருந்த பத்திரிகை அது. அதன் பத்தியாளர்கள் பலர் நான் ஆர்வத்தோடு வாசிப்பவர்கள்.

குளோப் முழுக்க முழுக்க வர்த்தக, வியாபாரம் சார்ந்த போக்கோடு, தொம்சன் குடும்பத்தினருக்குச் சொந்தமான நிறுவனமாக இருந்தது. அந்த தொம்சன் குடும்பத்தினர் கனடாவில் பெரும் பணக்காரர்களில் வரிசைப்படுத்தப்படுகிறவர்கள். அவர்கள் ராய்ட்டர் செய்தி நிறுவனத்தை வாங்கி அதனோடு இணைந்த நிறுவனமாக மாறியிருந்தனர். வானொலி, பத்திரிகை எனத் தொடங்கிய அவர்களின் சாம்ராஜ்யம் இன்று பல்வேறு துறைகளில் முதலீடு செய்திருக்கிறது.

ரொறன்ரோ சண் உழைக்கும் வர்க்கத்திற்கான பத்திரிகை. படுமோசமான பிற்போக்குத் தனமான பழமைவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்த பத்தியாளர்கள், மூன்றாம் பக்க அரைகுறை சூரிய அழகிக் கவர்ச்சிப் படம், விளையாட்டுக்கள் பற்றி அதிக பக்கங்கள், சொற்ப நேர வாசிப்புக்கான சிறு செய்திக் குறிப்புகள், விளிம்புநிலை மக்கள் மீதான காழ்ப்புணர்வு, சட்டமும் ஒழுங்கும் கறுப்பர்களால் தான் மீறப்படுகிறது என்பது போல அதிக செய்திகளை வெளியிட்டு, இனவெறியை எங்களுக்குத் தெரியாமலேயே ஊட்டுதல் என, பணக்காரர்களுக்கான வரிவிதிப்பைக் குறைப்பதற்காக, சாதாரண மக்களை பிரஜைகள் என்று குறிப்பிடாமல் வரியிறுப்பாளர்கள் என்று உசுப்பேத்தும் கன்சர்வேட்டிவ் அரசியலை தீவிரமாக ஆதரித்த பத்திரிகை.

இந்தப் பத்திரிகைகள் பெரும் லாபமீட்டும் தொழில்களாகவே இருந்ததால், அந்தத் தொழிலை விரிவுபடுத்த முதலீடுகள் செய்வதில் முனைப்பு காட்டினார்கள்.

அப்போது தான் தங்கள் பத்திரிகைகளை வண்ணத்தில் அச்சிட இந்தப் பத்திரிகைகள் முயன்றன. பெரும் லாபம் தரும் முதலீடு என்பதுடன் வியாபாரப் போட்டியும் இதற்கான காரணம். இதற்காகவே, பெரியதொரு இடத்தை வாங்கி, மிகப் பெரிய தொழிற்சாலை போன்ற அச்சகத்தை உருவாக்கி, பத்திரிகையை மீள் வடிவமைப்புச் செய்து ரொறன்ரோ ஸ்டார் புதிய பிறப்புக் கண்டது.

அதன் பின்னால், நீண்ட காலம் வண்ணத்துக்கு மாறாமலேயே இழுத்தடித்துக் கொண்டிருந்த குளோப் அன்ட் மெயிலும் வண்ணப் பத்திரிகை வெளியிட்டது.

இதற்குள் கனடாவில் லிபரல் கட்சியினர் மூன்று தடவைகள் ஆட்சிக்கு வந்து, இங்கிலாந்தில் டெயிலி டெலிகிராப்,



இஸ்ரேலில் ஜெருசலேம் போஸ்ட் போன்றவற்றின் உரிமையாளரான கனடியர் கொன்ராட் பிளாக்கிற்கு, சேர் பட்டம் கொடுக்க, அவரது கனடியப் பிரஜா உரிமையைக் காரணம் காட்டி, பிரதமர் கிரெட்ஷியன் தடுத்ததால், கோபம் கொண்டு, நஷனல் போஸ்ட் என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அது இங்கிலாந்தில் வர்த்தகத் தினசரியான பைனான்சியல் போஸ்ட் பாணியில், குளோப் அன்ட் மெயிலுக்குப் போட்டியாக வந்தாலும், குளோப் அன்ட் மெயிலின் செல்வாக்கை இன்று வரைக்கும் உடைக்க முடியவில்லை. அதன் பத்தியாளர்கள் பலர் முழுக்க முழுக்க பிற்போக்குத்தனமான கன்சர்வேட்டிவ் சிந்தனை கொண்டவர்கள்.

தொண்ணூறுகளில் பெரும் கோப்பரேட் நிறுவனங்கள் எங்கெங்கு லாபம் காண முடியுமோ, அங்கங்கு எல்லாம் நிறுவனங்களை வாங்கிப் பெருத்துக் கொண்டிருந்தன.

கணினிப் புரட்சி தொழில்நுட்ப, வர்த்த உலகில் செய்தது போலவே, ஊடக நிறுவனங்களும் இவ்வாறு சேர்ந்து கொள்வதன் மூலம் பெரு நிறுவனங்களாகி, பங்கு சந்தையில் பங்குமுதலீட்டாளர்களைக் கவரத் தொடங்கின. பங்குச் சந்தையில் இவற்றின் பெறுமதி ஊதிப் பெருத்தது. அல்லது பெருப்பிக்கப்பட்டது.

வட அமெரிக்காவில் பத்திரிகை நிறுவனங்களாக இருந்தவைகள், வானொலி,




தொலைக்காட்சி நிறுவனங்களோடு சேர்க்கப்பட்டு, ஊடகக் குழுமங்கள் உருவாக்கப்பட்டன. இப்படி ஊடக நிறுவனங்களை ஊடக நிறுவனங்கள் வாங்குவதே தலையங்கமாகும் அளவுக்கு பெரும் பொற்காலமாக அது இருந்தது.

இந்த ஊடகக் குழுமம் ஆக்கல் போட்டி கூட சுவாரஷ்யமானது. சமூகநீதி பற்றி அக்கறை கொண்ட ரொறன்ரோ ஸ்டார், கன்சர்வேட்டிவ் பத்திரிகைக் குழுமமான சண் பத்திரிகையை வாங்க முயற்சித்தபோது, கியூபெக்கோர் அதற்கு கிட்டத்தட்ட ஒரு பில்லியன் டொலர் கொடுத்து வாங்கிக் கொண்டது. ஸ்டார் அதை லாபம் தரும் முதலீடாகத் தான் பார்த்தது.

இதைவிட சுவாரஷ்யமாக விடயங்களும் நடந்தேறின. ரொறன்ரோ சண் பிற்போக்கு பழமைவாதப் போக்கினைக் கொண்டிருந்ததால், அதன் பத்தியாளர்கள் பலர் கியூபெக் பிரிவினை வாதத்தை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ரொறன்ரோ சண்ணை வாங்கிய கியூபெக்கில் உள்ள பெரும் ஊடக நிறுவனமான கியூபெக்கோர், கியூபெக்கோர் ரொறன்ரோ சண்ணை விலைக்கு வாங்கி விட்டது. அது பிரிவினைக்கு ஆதரவானவர்களின் நிறுவனம்.

பிறகென்ன?

படிப்படியாக அந்த பிரெஞ்சு எதிர்ப்பாளர்களை வேலைநீக்கம் செய்து விட்டார்கள். இப்படி எஜமானர்களுக்காக குரைக்கிற நாய்கள் எஜமான் மாறும்போது அல்லல்பட நேரிடும் என்பதை புரிந்து கொள்வதேயில்லை.

இதற்குள் ஐரோப்பாவில் பிரபலமாக இருந்த, காலை நேரப் பயணத்தில் வாசிக்கக் கூடிய இலவசப் பத்திரிகையான மெட்ரோ கனடாவில் ஆரம்பிக்கப்பட்டது. இலவசப் பத்திரிகை என்பதால் அதற்கு விளம்பரங்கள் போவதால் தங்களுக்கு நட்டம் ஏற்படக் கூடும் என்ற எண்ணம் பெரும் பத்திரிகைகளுக்கு இருந்தது. வெளிவரப் போகும் தகவலை அறிந்ததும் உடனடியாகவே ரொறன்ரோ ஸ்டார் தானும் ஒரு இலவசப் பத்திரிகையை வெளியிட்டு அதே தினத்தில் போக்குவரத்து நிலையங்களில் இலவசமாக பெட்டிகளில் வினியோகித்தது. ரொறன்ரோ சண்ணும் தானும் ஒரு இலவசப் பத்திரிகையைக் கொண்டு வந்தது.

அப்போது எல்லாம் பொதுப்போக்குவரத்தில் மக்கள் வாசித்து விட்டு வீசி எறிந்த பத்திரிகைகள் குப்பையாகவே கிடக்கும். இந்தக் கண்டதும் கற்கும் பண்டிதனுக்கு ஒரே வேட்டை தான்.

பின்னர் ரொறன்ரோ ஸ்டார் தன்னுடைய போக்குவரத்துப் பத்திரிகையை நிறுத்தி விட்டு, மெட்ரோ பத்திரிகையில் முதலீடு செய்து சேர்ந்து வெளியிட்டது.

இதற்குள் ரொறன்ரோவில் வந்தேறிகளின் தொகை அதிகரித்து அவர்களுக்கான பத்திரிகைகள் பல வெளிவரத் தொடங்கின. அதிபுத்திசாலிகள் அதிகமாக உள்ள இனங்களான தமிழர்கள், பஞ்சாபிகள் தங்கள் இனத்தொகைக்கு தகாத விகிதத்தில் பத்திரிகைகள் வெளியிட்டனர். மற்றும்படி ரொறன்ரோவில் உள்ள சகல வந்தேறிகளுக்கும் கிட்டத்தட்ட அவர்களின் மொழிப் பத்திரிகைகள் இருந்தன.

புலிகளின் பத்திரிகையான உலகத்தமிழர் கூட அவ்வப்போது வந்தபோது, அந்தக் காலத்தின் தான் தாயகத்தை நான் வார இதழாக வெளியிட்டிருந்தேன். விற்பனை செய்யப்பட்ட தாயகம் நின்று போன பின்னால் தமிழில் பல பத்திரிகைகள் இலவசமாக விளம்பரங்களை மட்டும் நம்பி வெளிவந்தன. பல தலைமறைவாகின.

இந்த வந்தேறிகளின் பத்திரிகைகளுக்கான சங்கம் கூட இருந்தது. அதில் முதலில் சேர்ந்து கொண்ட தமிழ்ப் பத்திரிகை தாயகம் தான். வந்தேறிகளின் பத்திரிகைகளை அச்சிடுவதற்காக கொரியன் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட நிறுவனம் அச்சகமே வைத்திருந்தது.

அந்த நேரத்தில்,

அவ்வப்போது உடனடியாக வானொலியில் பிரேக்கிங் நியூஸ், பின்னர் மாலை தொலைக்காட்சி செய்திகள், மறுநாள் பத்திரிகையில் விவரமான செய்திகள், பின்னர் வாராந்த சஞ்சிகைகளில் ஆழமான ஆய்வுகள்.

இப்படித் தான் செய்திகள் நுகரப்பட்டுக் கொண்டிருந்தன.

இதற்குள் சி.என்.என் முழுநேரச் செய்தி நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது தான் பத்திரிகைகள் சரிவுக்கான முதல் தொடக்கமாக இருக்க வேண்டும். மாலை நேரம் வரைக்கும் விபரங்களுக்காகக் காத்திருக்காமல், உடனுக்குடன் செய்திகளை நேரடியாக காண்பதற்கு வசதி வந்தவுடன் வானொலிக்கும், அச்சு ஊடகங்களுக்குமான தேவை குறையத் தொடங்கியது.

ஓ.ஜே.சிம்சன் கொலை விசாரணை உட்பட்ட பல்வேறு பரபரப்புச் செய்திகள் இந்த 24 மணி நேர செய்திகளை ஒளிபரப்பும் கேபிள் தொலைக்காட்சிகளின் செல்வாக்கை அதிகரிக்கத் தொடங்கின.

அடுத்து ரூபேட் மேர்டோக்கின் ஃபொக்ஸ் நியூஸ் முழுநேரமாக கன்சர்வேட்டிவ் வேலைத் திட்டத்துடன் செய்தி நிறுவனமாக வருகிறது. அதையடுத்து அமெரிக்காவின் பெரும் தொலைக்காட்சி நிறுவனங்களான சிபிஎஸ், என்பிசி, ஏபிசி எல்லாம் செய்தியை முதன்மைப்படுத்தி களத்தில் குதிக்கின்றன. பிபிசி உலகளாவியளவில் பெரும் பெயர் பெற்றிருந்தாலும், அமெரிக்க சந்தையில் அதன் தாக்கம் குறைவு. பின்னர் அல் ஜசீரா களத்தில் இறங்குகிறது. கனடிய தொலைக்காட்சியின் நியூஸ்வேர்ல்ட் முழுநேரச் செய்திநிறுவனமாகிறது.

வானலைச் செய்திகளைத் தரும் சிறுநகரங்களுக்கான தொலைக்காட்சிச் சேவைகளின் தொகுப்பாக (Network) இருந்தவற்றை விட, கேபிள் செய்தித் தொலைக்காட்சி அலைவரிசைகள் முதன்மை பெறத் தொடங்கின.




இப்போது செய்தி என்பதற்கான ஊடகமாக அச்சு ஊடகம் என்பதிலிருந்து, தொலைக்காட்சி மாற்றம் பெறுகிறது. அதுவரை நாளும் தொலைக்காட்சி என்பது கேளிக்கைக்கானதாகத் தான் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் முதல் பலி, வார சஞ்சிகைகள்.

24 மணி நேரமும் ஒரே செய்திகளைத் திருப்பித் திருப்பி மறுசுழற்சி செய்ய முடியாது. எல்லா பரபரப்புச் செய்திகள் குறித்தும் தொடர்ந்தும் நேயர்களின் கவனத்தை வைத்திருக்க, துறைசார் நிபுணர்கள், ஆய்வாளர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவுக்கு கேபிள் செய்தி நிகழ்ச்சிகளுக்கு நேரம் இருந்தன. நெட்வோர்க் தொலைக்காட்சிகளில் பின்னேரச் செய்தி மட்டுமே முக்கியமானதாக இருந்தது. அந்த நேரத்திற்குள் எல்லாவற்றையும் சிலாவி அடிக்க வேண்டிய தேவை இருந்ததால், ஆழமான ஆய்வுகளுக்கு அங்கு இடம் இருக்கவில்லை.

இதனால், விற்பனையில் வீழ்ச்சி தொடங்கியதால், அமெரிக்காவின் முதன்மைச் செய்திச் சஞ்சிகைகளான ரைம், நியூஸ்வீக் இரண்டிலும், நியூஸ் வீக் தனது அச்சுவெளியீட்டை நிறுத்திக் கொள்கிறது. ரைம் படிப்படியாக நலிந்து போகிறது.

பின்னர் தொண்ணூறுகளில் ஆரம்பித்த இணையம், செய்தித் தொழிலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியது.

வானொலியிலும் தொலைக் காட்சியிலும் அந்தந்த நேரத்தில் தவற விடாமல் உட்கார்ந்து கேட்க வேண்டிய தேவை இல்லாமல்,



விரும்பிய நேரத்தில் இணையத்தில் நுழைந்து செய்திகளைப் படிப்பதற்கு வசதி வந்து விட்டது.

வாசகர்கள் இணையத்திற்கு மாறி விட்டதால், விரும்பியோ விரும்பாமலோ பத்திரிகைத் துறையினரும் அதைத் தழுவிக் கொள்ள வேண்டிய கட்டாயம்.

ஆனாலும், இணையம் என்ற விடயம், எவ்வாறான மாற்றங்களைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்க முடியாத நிலையிலும், தங்கள் பாரம்பரிய கட்டமைப்புகளை விட்டு உடனடியாக விலக முடியாமலும் இந்தப் பத்திரிகை நிறுவனங்கள் இணையத்தின் வருகையை எதிர்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருந்தன.

இணையத்தின் மூலம் பரவலாக, தங்கள் நகர எல்லைகளுக்கு அப்பால், உலகின் எப்பாகத்திற்கும் பலரையும் சென்றடையலாம் என்றாலும், அதை வைத்து எப்படிப் பணம் சம்பாதிப்பது என்பது குறித்து இந்த நிறுவனங்களுக்கு சரியான கருத்தும் இருக்கவில்லை. லாப நோக்கம் கருதிய முதலீடாக இருந்ததால், பணம் சம்பாதிப்பதே அவர்களின் முழுமையான நோக்கம்.

இணையத்தில் வர்த்தக நிறுவனங்கள் விளம்பரங்கள் செய்வதும் பரவலானதாக இருக்கவில்லை. சந்தா விற்பனையும் எதிர்பார்த்த அளவுக்கு கிடைக்கவில்லை.

தொலைக்காட்சியின் பாவனை குறையாதபடிக்கு செய்தி ஒளிபரப்புகளும், பிரபலமான றியலிட்டி டெலிவிஷன் தொலைக்காட்சித் திரைப்படத் தொடர் நிகழ்ச்சிகளும் நேயர்களை திரைகளோடு ஒட்ட வைத்துக் கொண்டிருந்தன.

ஏதோ வகையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இலவசமானவை என்ற பொது எண்ணம் வேறு. அந்தத் தொலைக்காட்சிச் சேவைக்கான கேபிள் வசதிக்கு மாதாந்தப் பணம் செலுத்த வேண்டி இருந்தாலும், அது பொருட்டாக கருதப்பட்டதில்லை.

ஆனால், பத்திரிகைக்கு தினசரி பணம் செலுத்தியே ஆக வேண்டும் என்ற எண்ணம் வந்ததும் படிப்படியாக சந்தாக்கள் குறைந்து, விற்பனைகள் சரியத் தொடங்கின.

பணம் செலுத்தி கைகளில் கட்டான பத்திரிகையைப் பெறும் உணர்வு, சந்தா செலுத்தி இணையத்தில் வாசிப்பதில் இருக்கவில்லை. அதற்கான பெறுமதி இருப்பதாக பொதுவெளியில் உணராதபடிக்கு இணையத்தில் எல்லாம் இலவசமாகவே கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வேறு ஆரம்பத்தில் இருந்தது. யாரும் பணம் செலுத்தி செய்தி வாசிக்கும் அளவில் இல்லை.

நீண்ட நாள் சந்தாதாரனான நானே நிறுத்தி விட்டிருந்தேன்.

மெதுவாக பத்திரிகையியலின் இறப்பு ஆரம்பிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

இணையத்தின் வருகையால், ஊடகங்களோடு சம்பந்தமில்லாத பெல் கனடா போன்ற தொலைபேசி, கேபிள் வினியோக நிறுவனங்கள் எல்லாம், இணையத்தில் பெரும் பணம் சம்பாதிக்க முடியும் என்ற நினைப்பில் பல்வேறு சம்பந்தமில்லாத நிறுவனங்களை வாங்கத் தொடங்கின. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற ஊடகங்களை மட்டுமல்லாமல், அவற்றில் அதிகம் இடம் பெறுகிற விளையாட்டுக் குழுக்கள், திரைப்பட நிறுவனங்கள் என்றெல்லாம் வாங்குவதன் மூலம் வேறு யாருக்கும் பணம் செலுத்தத் தேவையில்லாமல் முழு இலாபத்தையும் தாங்களே கைக்குள் போட முடியும் என்ற எண்ணத்தில், ஊடகங்களை ஒன்றிணைக்கும் Media consolidation முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

> **பணம் செலுத்தி கைகளில் கட்டான பத்திரிகையைப் பெறும் உணர்வு, சந்தா செலுத்தி இணையத்தில் வாசிப்பதில் இருக்கவில்லை. அதற்கான பெறுமதி இருப்பதாக பொதுவெளியில் உணராதபடிக்கு இணையத்தில் எல்லாம் இலவசமாகவே கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வேறு ஆரம்பத்தில் இருந்தது. யாரும் பணம் செலுத்தி செய்தி வாசிக்கும் அளவில் இல்லை. நீண்ட நாள் சந்தாதாரனான நானே நிறுத்தி விட்டிருந்தேன்.**

இதுவரை காலமும் பத்திரிகை நிறுவனங்களே பத்திரிகை நிறுவனங்களை வாங்கிய காலம் போய், பெரும் ஊடக நிறுனங்கள் ஆகும் முயற்சியில் இப்படிப் பல்வேறு நிறுவனங்கள் Media conglomerates எனப்படும் பெரும் குழுமங்களை உருவாக்கத் தொடங்கின.

எல்லா ஊடகங்களுக்குமே இணையத்தில் விரும்பியோ, விரும்பாமலோ தங்கள் பிரசன்னத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இதனால், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத் தளங்கள் என எல்லாவற்றையும் ஒரே நிறுவனமாக ஒருங்கிணைத்தால், ஒரே செய்திச் சேகரிப்புச் செலவோடு எல்லா ஊடகங்களிலும் செய்திகளை வழங்கலாம் என்ற எண்ணமே இதன் அடிப்படை. முதலாளித்துவத்தின் நோக்கமே, ஊதியத்தைக் குறைத்து லாபத்தைப் பெருக்குவது தானே!?

இப்படி ஒரே குடையின் கீழ் சகல ஊடகங்களையும் கொண்டு வரும் முயற்சிகளால் பல பத்திரிகை நிறுவனங்கள் மற்ற பெரும் ஊடக நிறுவனங்களின் ஒரு வெறும் பிரிவாக வந்து சேர்ந்து முடிந்தன. தனிக்காட்டு ராஜாக்கள், கிஸ்தி கட்டும் சிற்றரசர்களாக மாறி விட்டனர்.

இணையம் வந்து சேர்ந்ததில், ஏற்கனவே அச்சு ஊடக வாசகர்களாக இருந்தவர்கள் சந்தா கட்டாத இணைய வாசகர்கள் ஆகி விட்டனர்.

இதன் பின்னால் கூகிள், யாகூ போன்ற தேடுபொறிகள் வந்தது செய்திகளுக்கான வாயிலை பெரிதாகத் திறந்து விட்டது. செய்திகளை நாங்கள் தேடி அலையாமலேயே எங்கள் ஆர்வங்களை அறிந்து, அதற்குப் பொருத்தமான செய்திகளை எங்கள் கண் முன்னாலேயே இந்தத் தேடுபொறிகளின் algorithms

கள் கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருக்கின்றன.

கடைசி உலக யுத்தத்தின் பின்னால் பிறந்த பூமர்கள் எனப்படுவோர் தேடுபொறிகளின் செய்திப் பொறிகளுக்குள் அகப்பட, ஜெனரேஷன் எக்ஸ் எனப்படும் தொண்ணூறுகளில் பிறந்தவர்கள், மில்லெனியல்ஸ் எனப்படும் இரண்டாயிரங்களில் பிறந்தவர்களுக்கு சமூக வலைத்தளங்கள் தான் இணையமாக இருக்கிறது. சமூக வலைத்தளங்கள் அவர்கள் தேடுவதற்கான தேவையில்லாமல் செய்திகள் அவர்களைத் தேடி வந்து கொண்டிருக்கின்றன.

இந்த இணையத்தினதும், சமூக வலைத்தளங்களினதும் வருகை பத்திரிகைத் துறைக்கு மரண அடியாக வந்துவிட்டது.

சமூக வலைத்தளங்களின் வருகை, பாரம்பரிய செய்தி நிறுவனங்களுக்கான தேவை இல்லாமல், சிட்டிஸன் ஜேர்னலிசம் எனப்படுகின்ற, சாதாரண மக்களே செய்திகளைச் சேர்த்து அளிக்கும் வசதியை ஏற்படுத்தியிருக்கிறது. அது பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டாலும், அது பொய்ச் செய்திகளுக்கு வழிவகுத்தது தனியாக எழுதப்பட வேண்டியது.

இப்படி நலிந்து போயிருந்த பத்திரிகைகளுக்கான பிணப் பெட்டியின் இறுதி ஆணியை கோவிட் அடித்து இறுக்கி விட்டிருக்கிறது. கோவிட் தொடரான பொருளாதார மந்த நிலை விளம்பரங்களை முற்றுமுழுதாக நிறுத்தி பத்திரிகைத் துறையை இனிமேல் மீளமுடியாத ஒரு நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

பத்திரிகையியலின் இறுதி நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பத்திரிகைகளை வாங்கி, பெரும் நிறுவனங்களாக முயன்ற கொன்ராட் பிளாக்கின் நிறுவனம் உட்பட பல பெரும் பத்திரிகை ஊடக நிறுவனங்கள், தங்கள் முதலீடுகளுக்காக வாங்கிய கடன்களில் மூழ்கி காணாமல் போய் விட்டன. கொன்ராட் பிளாக் பங்குச் சந்தை மோசடிக்காக சிறை மீண்ட செம்மலாகி விட்டார். தான் தொடங்கிய தன் சொந்தப் பத்திரிகையில் அவர் பத்தியாளராக இருக்கிறார். கியுபெக்கோர் ரொறன்ரோ சண் குழுமத்தை நஷனல் போஸ்ட் நிறுவனத்திற்கு 300 மில்லியனுக்கு விற்றிருக்கிறது. அரை பில்லியனுக்கு மேல் பெறுமதி குறைந்திருந்தது.

இலவசமாக இங்கே வெளியிடப்பட்ட காலைப் போக்குவரத்துப் பத்திரிகைகள் காணாமல் போய் விட்டன. அதற்கு முன்னாலேயே ரொறன்ரோவில் வெளிவந்து கொண்டிருந்த மூன்று கம்பியூட்டர் பற்றிய சஞ்சிகைகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

வாரா வாரம் வெளிவந்த மாற்றுப் பத்திரிகையான Now சஞ்சிகை அச்சு வெளியீட்டை நிறுத்தி இணையத்திற்கு மாறி விட்டது.

ஒவ்வொரு வாரமும் கனடியப்




பெருநகரங்களில் வீடுகளுக்கு வணிக விளம்பரப் பிரசுரங்களை உள்ளே வைத்து இலவசமாக வினியோகிக்கும் Community Newspapers எனப்படும் பத்திரிகைகள் பெரும்பாலும் மூடப்பட்டு விட்டன. இவை எல்லாம் ரொறன்ரோ ஸ்டார் போன்ற பெரும்பத்திரிகைகளால் ஒருகாலத்தில் வாங்கப்பட்டு உள்வாங்கப்பட்டவை.

ரொறன்ரோ ஸ்டார் தொண்ணூறுகளில் பெரும் ஆரவாரத்தோடு நிர்மாணித்த அச்சகம் மூடப்பட்டு, தற்போது அது குளோப் அன்ட் மெயில் அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.

ரொறன்ரோ சண்ணை கியூபெக்கோர் நஷனல் போஸ்ட்டுக்கு விற்றுவிட்டதால், இரண்டும் தற்போது ஒரே அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

ரொறன்ரோ ஸ்டாரின் பிரபலமான 1 யங் வீதிக் கட்டடம் இருந்த நிலம் விற்கப்பட்டு, அதன் உச்சியிலிருந்த பிரபல பெயர்ப்பலகை அகற்றப்பட்டு விட்டது. அந்தக் கட்டடம் உடைக்கப்பட்டு பல மாடிக் குடியிருப்புக் கட்டடம் கட்டும் திட்டம் வந்து விட்டது.

குளோப் அன்ட் மெயில் ராய்ட்டர் நிறுவனத்தை வைத்திருப்பதால், அதன் செய்திகளுக்கும் தகவல்களுக்குமான மவுசு இன்னமும் வியாபார, வர்த்தக மட்டங்களில் உண்டு. அது மெலிந்து போயிருந்தாலும், ரொய்ட்டர் நிறுவனம் மூலமாக அது லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

தாயகத்தை அச்சிட்ட கொரியன் ரைம்ஸ் அச்சக நிலம் விற்கப்பட்டு அங்கே வீடுகள் கட்டப்பட்டிருந்ததை நீண்ட நட்களின் பின் அந்தப் பக்கமாய் போனபோது கண்டேன். இப்போது ஒரு சீனக் குடும்பத்தினர் நடத்துகின்ற ஒரு அச்சகம் தான் வந்தேறிகளின் பத்திரிகைகளை அச்சிடுகிறது.

கனடியத் தமிழ்ப் பத்திரிகைகள் காணாமல் போய், எஞ்சியிருப்பவையும் நடைமெலிந்தோரூர் நண்ணுகின்றன. அதன் எடிட்டர் இன் சீப்புகளும் இனிமேல் செல்போன்களுடன்

ஊடக குழுமம் நடத்த வேண்டியது தான். அச்சுச்செலவீனங்களைச் சமாளிக்கும் அளவுக்கு கிடைக்கும் விளம்பரங்களுக்கு பணம் வழங்கக் கூடிய அளவுக்கு நேர்மையான தமிழ் யாவாரிமாரும் இல்லை. மற்றவர்களும் நிறுத்தி விடுவார்களே என்றபயத்தில்பணம்தராவிட்டாலும், தங்கள் பத்திரிகைகளில் விளம்பரம் வருவதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயம். அதைவிட, ஊடகவியலாளர்கள் என்று ஊருக்குள் நடன அரங்கேற்றமும் புத்தக வெளியீடும் நடத்துவோர் அவையத்து முந்தியிருப்பச் செய்வதை விட்டுவிடவும் இந்த எடிட்டர் இன் சீப்புகளுக்கும் விருப்பம் இல்லை.

இவற்றில் சில தற்போது கனடிய அரசு பத்திரிகைகளுக்காக வழங்கும் நிதி உதவியைப் பெற்றே தொடர்ந்தும் வெளிவருகின்றன. அந்த நிதி உதவி பெறுவதற்கான ஆதாரமாக இவை முன்பக்கத்தில் அது பற்றிய குறிப்பு ஒன்றை கனடிய அரசுக் கொடி முத்திரையுடன் பிரசுரித்தே வெளியிட்டு வருகின்றன. இந்த உதவி இல்லாவிட்டால், கோவிட்டின் பின்னால் பல பத்திரிகைகள் காணாமல் போயிருக்கும். அந்த இலவச உதவிப் பணத்தைப் பெறுவதற்காகவே இந்தப் பத்திரிகைகள் தொடர்ந்தும் நடத்தப்படுகின்றன.

பத்திரிகைத் துறையின் எதிர்காலம் என்பது இன்றைக்குப் பெரும் நம்பிக்கை தரக்கூடிய ஒன்றாக இல்லை.

செய்தி சேகரிப்பும், பத்தியாளர்களின் பத்திகளும் பெரும் செலவுக்கானவை. முழுநேரமாகப் பணிபுரிந்த பத்தியாளர்கள் பலர், தற்போது பத்திகளுக்கு மட்டுமே கொடுப்பனவு பெறுகிறார்கள்.

இரண்டாயிரம் ஆண்டு பிறந்த போது, தங்களுடைய பெண் பத்திரிகையாளர் ஒருவரை அது முதன் முதலாக பிறக்கும் நேரத்தில் செய்தி வெளியிட வேண்டும் என்று ரொறன்ரோ ஸ்டார் பசிபிக்கில் உள்ள ஆளில்லாத தீவு ஒன்றுக்கு வள்ளம் வாடகைக்கு எடுத்து அனுப்பி செய்தி வெளியிட்டிருந்தது.

வருடாந்தம் ஒரு பத்திரிகையாளருக்கு சமூகநீதி சம்பந்தமான ஆய்வு ஒன்றை நடத்த ஒரு லட்சம் ரூபா புலமைப்பரிசில் கொடுத்து அவர்கள் எழுதும் தொடரை வெளியிட்டு வந்த ஸ்டார் இப்போது அப்படியெல்லாம் செய்வதில்லை.

**என்னுடைய வாசிப்புப் பரப்பை அறிந்து கூகிளும் பேஸ்புக்கும் போட்டுக் கொடுத்ததால், சவுத் சைனா மோர்ணிங் போஸ்ட், பிரெஞ்சு Le Monde, New York Times பத்திரிகைகள் மட்டுமன்றி, நியூயோர்க்கர், Wired போன்ற சஞ்சிகைகளும் என்னை ஆசை காட்டி மோசம் செய்யும் நோக்கில் பேஸ்புக்கில் எனக்கு தங்கள் செய்திகளைத் தந்து கொண்டிருக்கின்றன.**

இரண்டாயிரம் தொடக்கங்களில் பில்லியன் டொலர் பெறுமதியாக இருந்த ரொறன்ரோ ஸ்டார் 52 மில்லியன் டொலர்களுக்கு தனியார் முதலீட்டு நிறுவனத்திற்கு விற்கப்பட்டது. அதன் எதிர்காலமும் அரசியல் போக்கும் குறித்து அதை வாங்கியவர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்ட செய்திகள் வெளிவந்திருந்தன. ஸ்டாரும் நஷனல் போஸ்டும் இணைய எடுத்த முயற்சிகள் முறிந்து விட்டன.

முன்பு எல்லாம் இந்தப் பத்திரிகைகளுக்கு உலகெங்கும் அலுவலகங்களும் (Bureau chief) செய்தியாளர்களும் இருந்தார்கள். அப்படியெல்லாம் இப்போது பணம் செலவிட்டுச்செய்தி எடுக்கும் அளவில் எந்தப் பத்திரிகை நிறுவனமும் இல்லை. செய்தி நிறுவனங்களான ஏபி, ரொய்ட்டர் போன்றவற்றின் செய்தித்துணுக்குகளை வாங்கி வெட்டி ஒட்டித் தான் சர்வதேசச் செய்திகள் பெரும்பாலும் வெளிவருகின்றன.

முன்பு செய்திகள், உலகச் செய்திகள் வெளிவந்த பகுதியின் சைஸில் தான் இன்றைய ரொறன்ரோ ஸ்டாரின் முழுப் பத்திரிகையும் இருக்கிறது. விளம்பரங்கள் அருகி விட்டன.

இணையத்துப் பிரசன்னத்தையும் தவிர்க்க முடியாது. ஆனால் அதை இலவசமாகக் கொடுக்கும் அளவுக்கு அங்கு விளம்பரங்கள் போதாது. பத்திரிகை எழுத்துக்களை விட, வீடியோச் செய்திகளைக் கூட பத்திரிகைகள் முயன்று பார்க்கின்றன. ஆனால், தொலைக்காட்சி நிறுவனங்கள் அவ்வாறான வீடியோக்களை தங்கள் இணையத்தளங்களிலேயே வெளியிட்டும் விடுகின்றன. இதனால் பத்திரிகைகளால் அவற்றோடு போட்டி போடவும் முடியவில்லை. ரொறன்ரோ சண் ஒரு கன்சர்வேட்டிவ் கேபிள் அலைவரிசையை நடத்துகிறது. அதன் பார்வையாளர்கள் கன்சர்வேட்டிவ் ஆதரவாளர்கள் மட்டும் தான். அவர்களைக் குஷிப்படுத்தும் முயற்சியில் தான் சண் டிவி இருக்கிறது.

பத்திரிகைள் தற்போது paywall எனப்படும் மதில்களுக்குப் பின்னால் தங்கள் செய்திகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. மாதாந்தம் குறிப்பிட்ட சில செய்திகளை மட்டும் இலவசமாகத் தந்து விட்டு, மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தும்படி வற்புறுத்துகின்றன. தொலைக்காட்சியின் soundbites இல் திருப்தி அடையாத ஆழமான தீவிர செய்தி ஆர்வலர்களுக்கு அது பொருத்தமானதாக இருக்கக் கூடும். ஆனால், தாக்குப்பிடிக்கக் கூடிய அளவுக்கு பரவலான வாசகர்களைப் பெற முடியுமா என்பது பெரும் சந்தேகமே.

இணையத்தின் வருகை பத்திரிகைகள், சஞ்சிகைகளை தங்கள் நாட்டு எல்லைகளுக்குள் நிறுத்திவிடாமல், உலகெங்கும் பரவலாக சென்றடைய வழிவகுத்திருக்கின்றது உண்மையாக இருந்தாலும், அவை முன்னையது போல, தங்களது நாட்டுச் சந்தையை விட, உலகளாவிய அளவில் போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இணையத்தில் வாசிக்க விரும்பும் வாசகர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லும் நிலையில், அவர்களைக் கவர்வதற்காக உலகளாவிய போட்டியை எதிர்கொள்ள வேண்டி வருகிறது.

என்னுடைய வாசிப்புப் பரப்பை அறிந்து கூகிளும் பேஸ்புக்கும் போட்டுக் கொடுத்ததால், சவுத் சைனா மோர்ணிங் போஸ்ட், பிரெஞ்சு Le Monde, New York Times பத்திரிகைகள் மட்டுமன்றி, நியூயோர்க்கர், Wired போன்ற சஞ்சிகைகளும் என்னை ஆசை காட்டி மோசம் செய்யும் நோக்கில் பேஸ்புக்கில் எனக்கு தங்கள் செய்திகளைத் தந்து கொண்டிருக்கின்றன.

செய்தித் தொலைக் காட்சிகள் வேறு செய்திப் பத்திரிகைகள் போலவே தங்கள் இணையத்தளங்களை இலவசமாக வெறியிடுகின்றன. பிபிசி, அல் ஜசீரா இணையத்தளங்கள் பத்திரிகைகளை விடச் சிறப்பாக இயங்குகின்றன. இலவசமாகக் கிடைகின்ற இவற்றோடு பத்திரிகைகள் போட்டி போட வேண்டியிருக்கிறது.

இங்கே தற்போது றீடர்ஸ் டைஜஸ்ட் நீண்ட காலத்தின் பின்னால் தனது அச்சு வெளியீட்டை நிறுத்துகிறது. இங்கே வைத்தியர்களின் காத்திருப்பு அறையில் கட்டாயம் இருப்பவை அவை. அங்கே கூட இனிமேல் கிடைக்காது.

நஷனல் ஜோக்கிரபிக் சஞ்சிகை தனது அச்சுப் பதிப்பை நிறுத்துகிறது.

இப்படி பெரும் சஞ்சிகைகள் எல்லாம் தாக்குப்பிடிக்க முடியாமல் மூழ்கிப் போகின்றன.

பாரம்பரிய பத்திரிகைகள் தொடர முடியாவிட்டாலும், செய்திகளுக்கான சிறிய இணையத்தளங்கள் பரவலாகிக் கொண்டு தான் வருகின்றன. அவை சந்தாவை விட, விளம்பரங்களை முதன்மைப்படுத்துகின்றன. அவை பாரம்பரிய பத்திரிகைகளுக்கான பெரும் கட்டமைப்பும் பெருமளவு செலவீனங்களும் இல்லாவிட்டாலும், அவற்றுக்குமான செலவுகளும் சம்பளங்களும் இருக்கத் தான் செய்கின்றன. இருந்தாலும், அந்தத் தொகை சிறிய அளவில் இருப்பதால் (low overhead) அவற்றால் லாபம் பார்க்க முடிகிறது.

ஆனால், அவற்றால் ஒரு பாரம்பரியப் பத்திரிகை செய்யக் கூடிய இன்வெஸ்டிகேட்டிவ் ஜேர்ணலிசத்தைச் செய்யக் கூடிய அளவுக்கு வளங்கள் இல்லை. இப்படி லாபம் பெறுகிற இணையத் தளங்களையும் பாரம்பரிய ஊடக பெருநிறுவனங்கள் விழுங்கிக் கொள்கின்றன. அதன் மூலம் தங்கள் இணையப் பிரசன்னத்தை விஸ்தரிக்க முயல்கின்றன. இப்படி நியூயோர்க் ரைம்ஸ் உட்பட்ட பல பெரிய நிறுவனங்கள் தொழில்நுட்பம் பற்றிய செய்திகளை வெளியிடும் இணையத்தளங்களை வாங்கியிருக்கின்றன.

சமூக வலைத்தளங்கள் வந்து, சிட்டிசன் ஜேர்ணலிசம் வரும் என்ற நம்பிக்கை கூட தகர்க்கப்படும் அளவுக்கு, வலைத்தளங்கள் பொய்ச் செய்திகளுக்கானதாகத் தான் இருக்கிறது. இன்றைக்கு செய்திகள் உண்மையா, பொய்யா என்று தெரியாத அளவில் இருக்கும் நிலையில், நோக்கங்கள் கருதி பொய்களைப் பரப்புவோருக்கு செய்தி வடிவில் அவற்றைப் பரப்புவதும் இலகுவாக இருக்கிறது.

அச்சில் வந்தால் உண்மையாக இருக்கும் என்ற நிலை போய், வட்சப்பில் வந்ததெல்லாம் உண்மையாக வந்து முடிந்திருக்கிறது.

ஒரு காலத்தில் பத்திரிகைகளில் வந்ததை சமூக வலைத்தளங்களிலும் வட்சப்பிலும் பகிர்ந்த காலம் போய், இன்றைக்கு வட்சப்பில் வந்ததை உண்மையாக செய்தி வெளியிடும் அளவில் இந்தியாவில் நிலைமை இருக்கிறது.

ஏதோ நல்ல காலம் இங்கே வட அமெரிக்காவில் அந்த நிலைமை இன்னமும் வரவில்லை. ஆனால், சமூக வலைத்தளங்களை தொழில்நுட்ப உதவியுடன் பொய்ச் செய்திகளைப் பரப்ப பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஜனாதிபதி தெரிவு வரைக்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அளவில் இருக்கிறது. அது தனியே எழுதப்பட வேண்டிய விடயம்.

**சமூக வலைத்தளங்கள் வந்து, சிட்டிசன் ஜேர்ணலிசம் வரும் என்ற நம்பிக்கை கூட தகர்க்கப்படும் அளவுக்கு, வலைத்தளங்கள் பொய்ச் செய்திகளுக்கானதாகத் தான் இருக்கிறது. இன்றைக்கு செய்திகள் உண்மையா, பொய்யா என்று தெரியாத அளவில் இருக்கும் நிலையில், நோக்கங்கள் கருதி பொய்களைப் பரப்புவோருக்கு செய்தி வடிவில் அவற்றைப் பரப்புவதும் இலகுவாக இருக்கிறது.**

**அச்சில் வந்தால் உண்மையாக இருக்கும் என்ற நிலை போய், வட்சப்பில் வந்ததெல்லாம் உண்மையாக வந்து முடிந்திருக்கிறது.**

அச்சில் வந்தால், உண்மையாக இருக்கும் என்ற சிந்தனை ஒரு காலத்தில் உண்மையாக இருந்தது. இங்கேயுள்ள பாரம்பரிய பத்திரிகைகளின் செய்தி சேகரிப்பும் பல்வேறு விதிகளுக்கும் அறங்களுக்கும் உட்பட்டது. அதில் fact checking எனப்படும் உண்மையை உறுதி செய்து கொள்வது மிகவும் முக்கியமான விடயம்.

இங்கேயுள்ள ஊடகக் கல்லூரிகளில் Ryerson University மிகவும் முக்கியமானது. அதன் பத்திரிகையியல் கல்லூரியில் பயின்ற பெண் ஒருவர் அந்தக் கல்லூரியின் ஊடகவியல் பிரிவு வெளியிட்ட சஞ்சிகையில், ரொறன்ரோவில் வெளிவந்த மாற்றுத் தமிழ்ப் பத்திரிகைகள், புலிகள் அவற்றின்

**பத்திரிகையியலின் மரணம் என்பது வெறுமனே என் போன்ற வாசிப்பு ஆர்வலர்களுக்கான இழப்பு மட்டுமல்ல, முழுச் சமூகத்திற்குமான இழப்பு.**

**வேறு எந்த ஊடகமும் எந்தப் பிரச்சனை குறித்தும் ஆழமான ஆய்வுகளுடன் செய்திகளை வெளிக்கொணர்வதில்லை. செய்தித் தொலைக்காட்சிகள் கூட, தங்கள் நேரக் கட்டுப்பாடு காரணமாகவும், பார்வையாளர்களின் கவனத்தைத் தொடர்ச்சியாக வைத்திருக்கவும் சிறிய நேரத்திற்குள்ளேயே செய்திகளை முடிக்க முயல்கின்றன.**

**அச்சு ஊடகங்கள் அப்படியல்ல. சாவகாசமாக உட்கார்ந்து வாசிப்பில் ஆழ்ந்து போக வைக்கும் திறமை அவற்றுக்குத் தான் உண்டு. அவசர உலகில் பிரச்சனைகளை சமூக வலைத்தள வேகத்தில் பரபரப்பும், அறச்சீற்றமும், மறத்தலும், புதிய பரபரப்புமான சுழற்சிக்குள் சமூகம் இயங்கும்போது, சமூகம் informed opinions ஐ பெற முடியாது. சரியான ஆய்வுக்குள்ளாகாத அபிப்பிராயங்கள் உணர்வுகளால் ஆட்கொள்ளப்படும்போது, அந்த சமூகம் தெரிவு செய்யும் அரசியல் தலைமைகள் எவ்வாறானதாக இருக்கும் என்பது இன்றைக்கு உலகெங்கும் நாம் காண்பதுதான்.**

**இப்படி முழு மானிடத்திற்குமே அச்சு ஊடகத்தின் மரணம் பெரும் இழப்பாகத் தான் இருக்கப் போகிறது.**

---

மீது நடத்திய அடாவடித் தனங்கள் பற்றிய பெரும் ஆய்வுக்கட்டுரையை எழுதியபோது, என்னையும் பேட்டி கண்டு எழுதியிருந்தார். அவர் என் வீட்டுக்கு வந்த போது, என் வீட்டுக் கொல்லைப்புறத்தைக் காட்டி, நான் வளர்க்கும் பழமரங்கள் பற்றி விபரித்திருந்தேன். அவர் அந்தக் கட்டுரையில் என்னைப் பற்றிச் சொல்லும்போது, அதைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

அதை உறுதி செய்வதற்காக அந்த சஞ்சிகை அலுவலகத்தில் இருந்து என்னுடன் தொடர்பு கொண்டு என்னிடம் கேட்ட விடயங்கள் உண்மையா என்று உறுதி செய்து கொண்டிருந்தபோது, நான் வளர்க்கும் பழமரங்களின் பட்டியலையும் உண்மையா என்று கேட்டு உறுதி செய்த பின்னரே வெளியிட்டிருந்தார்கள்.

எங்கள் பக்கம் அதெல்லாம் கிடையாது. உட்கார்ந்திருந்த இடத்திலேயே தங்களுக்கு பிடித்ததை அவிழ்த்துவிடுகிற தமிழ்த்தேசிய, யாழ்ப்பாணத் தமிழ்த்தேசிய, திராவிட, சங்கி ஊடகவியலாளர்கள் இருக்கிறார்கள். பொய்களும் அவதூறுகளும் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றவையாக உள்ளன.

அவர்களுக்கு எல்லாம் உண்மை என்பதை விட, நம்பிக்கைகள் குறித்த பிரசாரங்கள் தான் செய்தியாகின்றன. வட்சப் வதந்திகளை எல்லாம் செய்திகளாக வெளியிடும் கேவலம் கூட நடக்கிறது.

பத்திரிகையியலின் மரணம் என்பது வெறுமனே என் போன்ற வாசிப்பு ஆர்வலர்களுக்கான இழப்பு மட்டுமல்ல, முழுச் சமூகத்திற்குமான இழப்பு.

வேறு எந்த ஊடகமும் எந்தப் பிரச்சனை குறித்தும் ஆழமான ஆய்வுகளுடன் செய்திகளை வெளிக்கொணர்வதில்லை. செய்தித் தொலைக்காட்சிகள் கூட, தங்கள் நேரக் கட்டுப்பாடு காரணமாகவும், பார்வையாளர்களின் கவனத்தைத் தொடர்ச்சியாக வைத்திருக்கவும் சிறிய நேரத்திற்குள்ளேயே




செய்திகளை முடிக்க முயல்கின்றன.

அச்சு ஊடகங்கள் அப்படியல்ல. சாவகாசமாக உட்கார்ந்து வாசிப்பில் ஆழ்ந்து போக வைக்கும் திறமை அவற்றுக்குத் தான் உண்டு. அவசர உலகில் பிரச்சனைகளை சமூக வலைத்தள வேகத்தில் பரபரப்பும், அறச்சீற்றமும், மறத்தலும், புதிய பரபரப்புமான சுழற்சிக்குள் சமூகம் இயங்கும்போது, சமூகம் informed opinions ஐ பெற முடியாது. சரியான ஆய்வுக்குள்ளாகாத அபிப்பிராயங்கள் உணர்வுகளால் ஆட்கொள்ளப்படும்போது, அந்த சமூகம் தெரிவு செய்யும் அரசியல் தலைமைகள் எவ்வாறானதாக இருக்கும் என்பது இன்றைக்கு உலகெங்கும் நாம் காண்பதுதான்.

இப்படி முழு மானிடத்திற்குமே அச்சு ஊடகத்தின் மரணம் பெரும் இழப்பாகத் தான் இருக்கப் போகிறது.

மரணப் படுக்கையில் உள்ள இந்த செய்தி ஊடகங்களுக்கு உயிர் காப்பு (Life support) முயற்சியில் அரசுகள் ஈடுபட்டு வருகின்றன. இணையத்தினதும், சமூக வலைத்தளங்களினதும் வருகை பத்திரிகைத் துறையில் ஏற்படுத்திய பாதிப்பு அதிகம்.

தங்கள் பெரும் செலவிட்டுச்

சேகரித்த செய்திகளை கூகிள் போன்ற தேடுபொறிகளும், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களும் இலவசமாக வெளியிட்டு பெரும் லாபம் பெறுவது குறித்து பத்திரிகைகள் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன. கனடிய அரசு Online News Act c-18 என்றதொரு புதிய சட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறது. அதன்படி கூகிள், பேஸ்புக் போன்ற செய்திகளை உருவாக்காமல், அதில் லாபம் பார்க்கிற இடைத்தரகர்கள் இந்தச் செய்திகளுக்காக அந்த பத்திரிகை நிறுவனங்களுக்குப் பணம் செலுத்த வேண்டும்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த பேஸ்புக் செய்திகளை தனது பக்கத்தில் வெளியிடுவதை நிறுத்திக் கொண்டது. இந்தத் தொல்லையால், நாங்கள் வாசிக்கும் எந்த செய்தி நிறுவனச் செய்தியையும் பேஸ்புக்கில் பகிர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கூகிள் இதுவரை காலமும் தனித்தனியே பெரும் செய்தி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து பணம் செலுத்தி வந்தது. சிறிய நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு கொண்டு வந்த சட்டத்தின் அடிப்படையில் கூகிள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டது. இறுதியில் வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்த கூகிள் சம்மதித்திருக்கிறது.

ஆனால், விரும்பியோ விரும்பாமலோ பத்திரிகைத் துறையினருக்கு இணையமும் சமூக வலைத்தளங்களும் அத்தியாவசியமான தீமைகள். Necessary evil.

பத்திரிகைகளின் இணையத் தளங்களுக்கு வாசகர்களை அனுப்புவதற்கு இந்த இரண்டு பெரிய நிறுவனங்களும் முக்கியமானவை. அரசு சட்டம் கொண்டு வர முயற்சித்ததும் இந்த நிறுவனங்கள் செய்திகளுக்கான இணைப்புகளை வழங்க மறுத்ததால், பத்திரிகைகள் பாரிய இழப்பைச் சந்தித்தன.

அரசு உதவி செய்யப்போய் உபத்திரவம் செய்கிறது என்ற எதிர்ப்பும் எழுந்தது.

உலகெங்கும் பல்வேறு அரசுகள் பத்திரிகைத் துறையைக் காப்பாற்றுவதற்காக இவ்வாறான சட்டங்களைக் கொண்டுவர முயற்சிக்கின்றன.

ஆனால், இதெல்லாம் வாசிப்பதில் ஆர்வம் உள்ள தலைமுறை இருந்தால் மட்டுமே சாத்தியம். புதிய தலைமுறைகளின் வாசிப்பும், கவனமும் (Attention span) அருகிக் குறுகிக் கொண்டே வருகின்றன. அதற்கான ஆதாரங்களாக டிக்டொக்கும் இன்ஸ்டாகிராமும் ட்விட்டரும் உள்ளன. வாசிப்பு அச்சு ஊடகங்களில் இருந்து மின்திரைகளுக்கு மாற்றம் பெற்று பத்திரிகை விற்பனை சரிந்து கொண்டே இருக்கும்.

தொலைக்காட்சியும் வானொலியும் ஏதோ வகையில் பொதுவெளியில் தங்கள் இருப்பை அவசியமானதாக்கிக் கொண்டிருக்கின்றன. பயணங்களிலும், வேலை செய்யும் நேரங்களிலும் பின்னணியில் ஓடிக் கொண்டிருக்க வானொலி பயன்பட்டுக் கொண்டே இருக்கும். தொலைக்காட்சியும் எப்போதும் கேளிக்கை நுகர்வுக்கான சாதனமாகிக் கொண்டே வருகிறது. தியேட்டர்கள் இல்லாது போனாலும், வீட்டுத் தொலைக்காட்சி கேளிக்கை வினியோகத்திற்கான வழியாக என்றைக்குமே இருக்கும். இணையப் பாவனை வந்த பின்னாலும், தொலைக்காட்சி தன்னுடைய முக்கியத்துவத்தை இன்னமும் இழக்கவில்லை.

நீண்ட, ஆழமான வாசிப்புக்கான வாசகக் கூட்டம் இல்லாதவரைக்கும் அவ்வாறான ஆய்வுச் செய்திகளுக்கும் கட்டுரைகளுக்கும் பத்திரிகைகள் பணம் செலவிடுவது, லாபம் மட்டும் எதிர்பார்க்கும் முதலாளித்துவத்தில் சாத்தியமில்லை.

ஆயிரம் புத்தகங்கள் கூட விற்காமல் தங்களை நம்பர் வண் என்பதும், முப்பது வருடத்தில் அறுபது இதழ் காலாண்டு இதழ் வெளியிட்டு இலக்கியச் சாதனை நிகழ்த்துவதும் எங்கள் இலக்கிய உலகத்து பெருமகனார்களின் ஈகோக்களை குஷிப்படுத்த உதவலாம். முதலாளித்துவம் அந்த ஈகோக்கள் குறித்து அக்கறைப்படுவதில்லை.

முதலாளித்துவம் அங்கீகாரம் எனப்படும் abstract thing இல் குஷிப்படாமல், எப்போதுமே tangible எனப்படும் தொட்டுப் பார்க்கக் கூடிய, நிஜமான லாபங்களுக்காக மட்டுமே செயற்படும். லாபம் வராது என்று முடிவாகத் தெரிந்த பின்னால், தொடர்ந்தும் தேவையில்லாமல் நட்டத்தில் இயங்காமல், இழுத்து மூடுவது என்பது ஏற்கனவே இந்த பெரும் பத்திரிகை ஊடக நிறுவனங்களிடம் கண் முன்னால் கண்டது தான். தொண்ணூறுகளின் பல பெரும் ஊடக நிறுவனங்கள் வங்குரோத்தாகி காணாமலேயே போய் விட்டன.

தாலிக்கொடியை அடைவு வைத்து, ஆயிரம் பிரதி அடித்து வெளியீட்டு விழாவின் பின்னால் மிஞ்சியதைப் பரணில் கட்டித் தொங்க விடும் வேலை எல்லாம் முதலாளித்துவத்தில் சரிப்பட்டு வருவதில்லை.

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர், மார்க் ட்வெய்ன் இறந்ததாக கேள்விப்பட்ட செய்தி குறித்து மார்க் ட்வெய்னிடமே தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் 'The report of my death was an exaggeration' என்று சொன்னதாக ஒரு கதை உண்டு. இப்படி, பத்திரிகைகளின் மரண அறிவித்தலும் ஒரு அவசரப்பட்ட மிகைப்படுத்தல் என்று சொல்லப்பட முடியாதபடிக்கு, பத்திரிகைகளின் மரணம் உறுதியாக்கப்பட்டு விட்டது.

உயிர் பிழைக்குமா? என்பதை விட, மரணம் எப்போது என்பது தான் தற்போதைய கேள்வி.

இப்படி படப்பிடிப்புச் சுருள், தட்டச்சு இயந்திரம் மாதிரி, பத்திரிகைகளும் தங்கள் பயன்படு கால shelf life முடிந்து பயனற்றுப்போன (obsolete ) புராதனப் பழம்பொருள் போல, அருட்பொருட் காட்சியகப் பொருளாக முடிந்து விடப் போகின்றன...

எங்கள் இலக்கியவாதிகளின் உலக மகா காவியங்கள் மாதிரி!

# எதிரொலி



AI art: PK

பூங்கோதை

‘அப்ப மருமோன் இலண்டனில என்ன வேலை செய்யிறீங்கள்? நான் கேட்கேல்ல, ஊருக்க அப்பப்ப கேட்கினம், அது தான் சும்மா கேட்டனான்.‘ தவமணியும் விடாமல் கேட்டும் தீபன் பெரிதாய் எதுவும் சொல்லிவிடவில்லை.

‘அது மாமி, இப்ப ஃபோனில சொல்ல முடியாமல் இருக்கு, நீங்கள் இங்க வரத்தானே போறீங்கள்? வந்து பாருங்கோவன் உங்கட மருமோனின்ர விலாசத்தை!‘ இப்படி இடையிடையே தீபன் சொல்லும் போது தவமணிக்குக் காலும் ஓடாது, கையும் ஓடாது.

சில நாட்களில் அல்லது ஒரு சில வாரங்களுக்குத் தீபனிடமிருந்து எந்தத் தகவலும் இருக்காது. அவன் வேலையோடு மூழ்கிப் போவான்.

மீண்டும் பேசும் போது, தவமணிக்கு நாக்கு வரை வந்து போகும் கேள்விகளுக்கு எல்லாம் தீபன் பதில் சொல்லி அலட்டிக்கொள்ளவில்லை. பதிலாக

ஐந்து அல்லது ஆறு சொற்களில் பதில் சொல்லிக்கொண்டான்.

'வேலை விசயம், வெளியில கதைக்கேலாது மாமி.'

'கதைச்சால்பிரச்சினைமாமி.'

'நீங்கள் ஏன் கவலைப்படுறியள்? '

இப்படித் தான் ஏதாவது மாறி மாறி சொல்லிக்கொண்டான். அதன் பிறகும் கேட்பது அநாகரீகம் என்பதால் தவமணி பெரிதாய் ஒன்றும் கேட்க முடியவில்லை.

'மருமோன் ஏதோ கவர்மெண்டு உத்தியோகம் போல கிடக்கு, ஒண்டும் இப்போதைக்கு சொல்ல மாட்டன் எண்டு அடம் பிடிக்கிறார்.' தவமணி மகள் மாதுரிக்குக் கூறும் போதெல்லாம் அவளும் அதைக் கொண்டாடிக் கொண்டாள்.

இப்படியாகப் போன சில வருடங்களில் ஆனந்தன் காலமாகி விட, தவமணியும் மாதுரியும் தனித்துப் போனார்கள். இருந்தாலும் தீபன் அவர்களுடனான தொடர்பை விடாமல் இருந்தது தவமணிக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

•••

வீட்டினில் கவிழ்ந்திருந்த நள்ளிரவின் அமைதியைக் குலைத்தபடி முன் முற்றத்தில் வாகனம் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அநேகமான நாட்களில் நடக்கும் சம்பவம் தான் என்றாலும் தவமணிக்கு அதன் பின் தூக்கம் தொலைந்து விடும்.

வெளியே பனிக்காற்றின் தீவிரம் மரங்களைச் சட சடக்க வைப்பது கேட்டது. வீட்டினுள் அந்தக் குளிர் தெரியாது வெப்பமாக்கிகள் தமது கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தன. தவமணி தன் கைகளை அவற்றின் மீது வைத்து வெப்பத்தை பரீட்சித்துக் கொண்டார். தன்னுடைய அறையின் சாளரத்தின் திரையைத் தன் கண்களுக்கு ஏற்றபடி சின்னதாய் விலக்கி அதனூடே பார்த்த போது தீபன் ஒரு காரிலிருந்து இறங்குவது தெரிந்தது. அவன் காரோட்டி கையசைத்தபடி போவதும் தெரிந்தது. வாரத்தில் இரண்டோ மூன்றோ நாட்களில் இவ்வாறு தான் தீபன் வீடு வந்து சேருவான்.

'பிள்ளை;, பிள்ளை மாதுரி...' தவமணி மெதுவாகத் தன் மகளைக் கூப்பிட்டார். இரண்டு தடவைகள் கூப்பிட்டும் மகளது அறையிலிருந்து எந்த அசமந்தமும் இல்லாதது கண்டு, தானே கட்டிலை விட்டு இறங்கினார். தீபன் வீட்டுச் சாவியை மேசையில் வைக்கும் சத்தமும் கீழே கேட்டது.

அவருக்குத் தன் மருமகன் தீபன் மீது அத்தனை பிரியம். வெறுமனே அவரது மகளைத் திருமணம் செய்ததால் மட்டுமல்ல, அவன் அவரது ஒரே அண்ணனின் ஏக புத்திரன் என்பதும் அவனைச் சிறுவயது முதலே தூக்கி வளர்த்த அத்தை அவர் என்பதும் அந்த அதீதப் பிரியத்திற்குக் காரணங்கள் ஆயின.

தவமணி தன் முகத்தில் பூசியிருந்த தூக்கக் கலக்கத்தைத் துடைத்துக் கொண்டே படிகளில் இறங்கினார். தீபனுக்கு அவர் அப்படி சாமத்தில் எழுந்து வந்து உணவு பரிமாறுவது பிடிக்காது என்பதைப் பல தடவைகள் கூறியும் அவர் அதைத் தன் காதுகளில் விழுத்தினார் இல்லை.

'மருமோன், சாப்பாடு போடட்டே?'

'மாமி, என்னத்துக்கு இப்ப சாமத்தில எழும்பி வாறியள்? நான் போட்டுச் சாப்பிட மாட்டனோ?' தீபன் உரிமையுடன் கடிந்து கொண்டான்.

'இதில என்ன ராசா இருக்கு? நான் வேற என்ன இங்க செய்யிறன்?' தவமணி தன் மனதில் இருந்ததைக் கொட்டினார்.

'சரி, சரி மாமி, நீங்கள் சாப்பாட்டைச் சூடாக்குங்கோ நான் போய் குளிச்சிட்டு வாறன்.' தீபன் கூறியவாறே குளியல் அறைக்குப் புறப்பட, தவமணி தன் வழமையான கேள்வியை அவனை நோக்கி எறிந்தார்.

'மருமோனுக்கு முட்டையைப் பொரிக்கவோ அவிக்கவோ?'

'பொரிச்சால் நல்லது மாமி...' தீபனுக்குத் தன் களைப்பெல்லாம் ஆறிப்போனது அந்தக் கேள்வியோடு. சிறுவயது முதலே தவமணியின் அன்பிற்குப் பாத்திரமான தீபனுக்கு அந்தக் கேள்வி ஒன்றும் புதிதானதும் அல்ல.

இத்தனை ஆரவாரத்திற்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாதது போல தூக்கத்தில் தொலைந்திருக்கும் மகள் மாதுரியை எண்ணிச் சற்றே கோபம் வந்தாலும், அவள் கைக்குழந்தைக்காரி என்ற எண்ணமும் தலை தூக்கி தவமணியை ஆசுவாசப்படுத்தியது.

•••

எண்பதுகளின் இறுதிப் பகுதிகளிற்கு தவமணியைக் கேளாமலே அவர் மனம் அவரை அங்கே இழுத்துச் சென்றது.

தவமணிக்குத் தன் மருமகன் தீபன் இப்படிச் சொல்லாமற் கொள்ளாமல் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், ஊரில் இருந்த எத்தனையோ இளையவர்கள் இப்படியாகப் போய் விட்டதை நினைத்துத் தன் மனதைத் தேற்றிக் கொண்டார். அவர் கணவன் ஆனந்தனுக்கும் இது குறித்து உள்ளூறக் கவலை இருந்தாலும் அவர் அதை வெளிக்காட்டாமல் இருந்து கொண்டார்.

எல்லாம் ஒரு முடிவுக்கு வரும், தமிழ் ஈழம் மலர்ந்ததும் தீபனும் வீடு வந்து சேர்ந்து விடுவான் என்னும் மாயக் கனவொன்றில் அவர்கள் இருவரும் தீபனின் வீட்டார் போலவே மிதந்து கொண்டிருந்தனர்

தவமணிக்குத் தன் மகள் மாதுரியைத் தன் மருமகனுக்குத் தான் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், தீபன் போராட எனப் போன போதும் மாறவில்லை. அதை அடிக்கடி தன் அண்ணன், அவன் மனைவி நல்லம்மாவிற்கும் நினைவூட்டத் தவறவில்லை.

'பொடியள் எல்லாத்தையும் அடிச்சிப் பறிச்சிப் போடுவாங்கள். அதுக்குப் பிறகு அவன் என்ன செய்யிறது அங்க? வீட்டுக்குத் தானே வர வேணும்? மச்சாள் ஒருத்தி காத்திருக்க, வீடும் வளவும் பாத்திருக்க அவனுக்கு என்ன குறை?'

தவமணிக்கு நாட்டின் அரசியல் போக்கு, இயக்க நிலைமைகள் அனைத்தும் தன் சுட்டு விரலில் தான் என்ற அகம்பாவம் வேறு இருந்ததில் அவள் பேச்சுக்கு ஒருவரும் மறு பேச்சுப் பேசவில்லை. இவளது கதையை

அவ்வப்போது கேட்ட மாதுரிக்கும் பாடசாலைக் கல்வி என்பது தேவையற்ற ஒன்றாய்த் தெரிந்தது மட்டுமல்ல, அவளுக்கு வேறு எந்தத் துறையிலும் நாட்டம் ஏற்படவில்லை.

தன் மச்சான் இடைக்கிடையே ஊருக்குப் பஞ்சாயத்து அது இதுவென்று மோட்டார் சைக்கிளில் உறுமியபடியே வரும் போது அவனை அவள் தன் கண்களுக்குள் வைக்கத் தவறவுமில்லை.

அவளோடு படித்த பெண்களில் சிலர் பல்வேறு இயக்கங்களில் இணைந்து ஆயுதப் பயிற்சிக்கும், மிகுதிப் பெண்கள் எல்லாம் ஏதோ தம்மால் முடிந்தவரையில் தையல், சமையல், தட்டச்சுப் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி என, ஊரில் இருந்த போர்க்காலச் சூழலில் கூட தமக்கு முடிந்ததை எல்லாம் கற்ற போது மாதுரி மாத்திரம் தேன் அருந்திய குளவி போல, தன் தாயின் மந்திரச் சொற்களில் மயங்கித் தன் மச்சானை நினைத்துருகிய படியே வீட்டில் பொழுதைப் போக்கினாள்.

'தீபனுக்கும் வாய்ப்பக்கம் சரியில்லை ஊரில எண்டு கதைக்கினம். எப்ப பார்த்தாலும் அவன் ஊருக்குள்ள வாற நேரமெல்லாம் யாரோடையும் சொறியிறது தானாம் வேலை. இவனுக்கு ஏன் உந்தப் பொல்லாப்பு?' ஆனந்தன் தன் காதுகளில் விழுவதைத் தவமணியின் காதுகளிலும் விழுத்தினார்.

'என்ர மருமோனின்ர கெட்டித் தனத்தில ஊர்ச்சனங்களுக்கு ஒரே பொறாமை. அவன் தானே பக்கத்து ஊர் எல்லாம் சேர்த்து முழு ஏரியாவும் கண்காணிக்கிறான். போன முறை ஊருக்க வந்து போகேக்க என்னையும் எட்டிப் பார்த்தவன் எல்லே. நான் கேட்டனான், என்ன பதவியில மருமோன் இருக்கிறியள் எண்டு .' தவமணி ஏகப் பெருமையில் திளைத்திருந்தார்.

தீபனும் அவ்வப்போது ஒரு மோட்டார் சைக்கிள், இடுப்பில் சின்னதாய் ஒரு பிஸ்டல் இருப்பதாய் உருவகித்தபடி, தனக்குத் துணையாய் ஒரு படைவீரன் சகிதம் தவமணிக்கு இடையிடையே காட்சியளித்து, தன் பதவி நிலையை நிரூபித்துக் கொண்டான்.

'சரி, ஏதோ மாமியும் மருமோனும் பட்டது பாடு, நான் சொல்லி யாரோ நம்பப் போறியளே?' ஆனந்தன் ஒதுங்கிக் கொண்டார்.

இந்நிலையில் தான் ஊரில் இயக்கங்களுக்குள் இடையேயான கருத்து வேறுபாடுகள் வெடித்தன. மோதல்கள் ஆரம்பித்து, வளர்ந்து, தமக்கிடையேயான நேரடி மோதல்கள் ஆரம்பித்தன. ஜனநாயகப் பண்புகள் எல்லாம் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு, மனித உயிர்கள் இழி நிலைக்குத் தள்ளப்பட்டன.

•••

தவமணிக்கும் ஆனந்தனுக்கும் ஊரில் இயக்க நிலைமைகள் சரியில்லை என்பதால் மட்டுமல்ல, தீபனின் நிலை என்னவென்பது குறித்த நிலைமையும் தெரியாததால் அவர்கள் விசனமும் அதிகரித்துச் சென்றது. யாரிடமும் எதுவும் விசாரிக்க முடியவில்லை. யார் யாரைக் காட்டிக் கொடுக்கிறார்கள், யாரால் யாருக்கு கேடு என்கின்ற கணக்கும் அவர்களுக்குப் புரியவில்லை. பலவிதமான நாராசமான செய்திகள் நாளும் பொழுதும் காட்டுத் தீயாய்ப் பரவியபடி இருந்தன.

இப்படியாகக் காலம் நகர்ந்த ஒரு நாள் மாலையில் தவமணி பக்கத்து வளவில் ஆடுகளுக்குக் குழை வெட்டிக் கொண்டு வீடு வந்த போது அவருக்கொரு அதிர்ச்சி காத்திருந்தது. அவர்களது விறாந்தையின் ஓரமாக ஒரு உருவம் தலை கவிழ்ந்து குந்தியிருந்தது. மூச்சு பெரும் இரைச்சலாய் வந்தாலும், அவ்விரைச்சலைக் கட்டுப்படுத்துமாற் போல அவ்வுருவத்தின் கைகள் இரண்டும் அதன் வாயை மூடிக்கொள்ள பிரயத்தனப்பட்டன. அதன் உடை பல துண்டுகளாகக் கிழிந்தபடி தொங்கின. அதன் முதுகெல்லாம் வீங்கி, இரத்தமும் கீறல்களுமாய் இருந்ததில், அதன் முகம் தெரியும் வரையில் அவருக்கு அது யார் என்று அறிந்து கொள்ள முடியவில்லை.

'ஐயோ...யாரிது?' பலமாகக் கத்தி, தன் கணவரைக் கூப்பிட நினைத்தும் சத்தம் அவரது தொண்டைக் குழியைத் தாண்டி வர மறுத்தது. பல தடவைகள் முயன்ற பின் கேட்க நினைத்தது மெதுவாக ஒரு இரகசியம் போல வெளியே கேட்டது.

'மாமி... மாமி... நான் தான் தீபன்...'

'தீபனோ ? என்ன மருமோன் இந்தக் கோலம்?'

அவருடைய குரல் வெளியே யாருக்கும் கேட்கக் கூடாது என்ற பயம் தீபனின் குரலில் மீண்டும் கலந்திருந்தது.

'ஓம் மாமி, நான் தான் தீபன், சத்தம் கித்தம் போடாதையுங்கோ. இயக்க நிலைமைகள் மோசமாய்ப் போய்க் கொண்டிருக்கு. என்னையும் எந்த நேரமும் தேடி வருவாங்கள்.'

'இதென்ன கோலம் ஐயா, என்ர கடவுளே...' தவமணிக்கு தீபனின் முகத்தைக் கூட சரியாகக் கண்டு பிடிக்க முடியவில்லை.

தவமணிக்கு மூளை அவசரத்திற்கேற்றார் போல வேலை செய்யத் தொடங்கியது. அப்போது தான் வெளியே போயிருந்த ஆனந்தன் வீடு வந்து, நிலைமையை உடனடியாகப் புரிந்து கொண்டார்.

'என்னப்பா, நான் சொல்லிறதைக் கொஞ்சம் கவனமாய்க் கேளுங்கோ. மருமோனைத் தேடிப் போறதெண்டால் அண்ணர் வீட்டை தான் போவாங்கள். நீங்கள் ஒருத்தரோடையும் எதுவும் கதைக்கப்படாது. வழமையான தோட்ட வேலைகள், சந்தைக்குப் போய் வாறதெண்டு சாதாரணமாய் இருங்கோ.' ஆனந்தருக்கு உத்தரவு போடப்பட்டது.

மூளையைக் கசக்கி யோசித்ததில் தன்னுடைய பெறா மகன் ஒருவன் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமாய் இலங்கைப் போக்குவரத்துச் சேவைக்கான பேருந்து வண்டிகளுக்கு உதிரிப்பாகங்கள், சக்கரங்கள், இன்ன பிற தேவைகளுக்காக பெரும் வாகனமொன்றை ஓடித்திரிபவன் என்பது ஞாபகத்திற்கு வந்தது.

அவனுக்கு அந்த வேலையை வாங்கிக் கொடுத்ததில் ஆனந்தனுக்கும் தவமணிக்கும் பாரிய பங்கிருந்தது. அதை மையமாக வைத்து அவனோடு காதும் காதும் வைத்தது போல வேலையைக் கச்சிதமாகத் திட்டமிட்டனர் இருவரும்.

'மருமோன் ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம். நான் உங்களை வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டுத் தான் மற்ற வேலை.' உறுதியாக வார்த்தைகள் வந்தன தவமணியிடமிருந்து.

தவமணியும் தீபனோடு கொழும்பு வரை போய் நின்று, அவனை இந்தியா வரை அனுப்பிவிட்டு வந்தது மட்டுமல்ல தன் அண்ணனோடு சேர்ந்து நகை நட்டெல்லாம் அடகு வைத்து, உருண்டு பிரண்டு பலமான பிரயத்தனத்திற்குப் பின் தீபனை அப்படியே சில மாதங்களில் இலண்டன் வரை அனுப்பி வைத்தார்.

மாதங்கள் வருடங்களாய் உருண்டோடியதில் ஆனந்தனுக்கும் வயது போய் நோய் வாய்ப்பட்ட போது தவமணி அவருக்கு எந்தக் கவலையும் இல்லாது பார்த்துக் கொண்டார். மாதுரியும் மெல்ல மெல்ல இலண்டனில் இருக்கும் தன் மச்சானிடம் போக ஆயத்தமானாள். அதற்கும் தவமணியின் பங்கு இல்லாமல் இல்லை. தீபனுக்கு வாரத்தில் குறைந்தது இரு தடவைகள் தொலைபேசிக் கொண்டார்.

•••

ஊரில் இருந்த சொத்துக்களில் சிலதை விற்றும், அத்தோடு தானும் ஒரு பங்கு போடுவதாகச் சொன்ன மருமோனின் நேர்மையிலும் அன்பிலும் குளிர்ந்து போன தவமணியும் மகள் மாதுரியும் ஏஜென்சி மூலமாக இலண்டன் வந்து சேர்ந்த போது தீபன் ஒரு தனி வீட்டில் வாழ்ந்திருந்தான்.

தீபனுக்குத் தனது வேலை காரணமாக மிகவும் கடினமாக உழைக்க வேண்டியிருந்ததால் பெரிதாக நட்புகள் எவரையும் தேடியிருக்கவில்லை. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மனிதர்களோடு மாதுரிக்கும் அவனுக்கும் பதிவுத் திருமணம் நடந்ததோடு அவர்கள் வாழ்வு ஆரம்பித்தது. இது மாதுரிக்குப் பெரும் கவலையாக இருந்தாலும், அவர்கள் இருவரும் ஊரில் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைத் தவமணி அடிக்கடி சொல்லிக் காட்டியதில் அதுவும் சரிதான் என மாதுரி சமாதானமானாள்.

அவனுக்கான ஒரு அலுவலக அறையும் அதற்கான வசதிகளும் அங்கு காணப்பட்டன. அதை விட அவர்கள் இருவருக்குமான அறையும், அதோடு தவமணிக்கென ஒரு சிறு அறையும் இருந்ததில் மாதுரிக்குத் தன் புதிய வாழ்க்கை குறித்து மிகவும் பெருமையாக இருந்தது.

•••

வழமையான ஒரு விடிகாலையில் தவமணி தீபனுக்கு தேனீர் தயாரித்துக் கொண்டிருந்தார். மாதுரி தூக்கத்திலிருந்து எழும்ப எட்டு மணியாகிவிடும். குழந்தை பிறந்து இரண்டு வயதாகிறது, இவளுக்கென்ன இன்னும் பிள்ளை பெற்ற களைப்பு என எண்ணியவாறே தன் சமையல் வேலையை அரம்பித்த போது, சுவர் மணிக்கூட்டில் மணி ஆறு எனக் காட்டியது.

'மாமி, நீங்கள் ஊரில இருக்கேக்க அடிக்கடி கேட்கிறானீங்கள் நான் எங்க வேலை செய்யிறன் எண்டு. நானும் இங்க வந்தால் பிறகு சொல்லுறன் எண்டு சொல்லியிருக்கிறன். வடிவாய்க் கேளுங்கோ, நான் ஒரு பப்ளிக் சேர்வன்ட் (Puplic servant) மாத்திரமில்லை, ஒரு புலனாய்வு அதிகாரி. அதனால தான் எனக்கு கார், ட்ரைவர் எல்லாரும் இருக்கினம். வெளியில ஒருத்தருக்கும் தெரியப்படாது.' கூறியவாறே தனது பணி சார்ந்த அறிமுக அட்டையைக் காட்டிய போது தவமணியின் முகத்தில் தோன்றிய ஒளியின் பிரகாசத்தில் அறிமுக அட்டையில் இருந்த எழுத்துக்கள் மங்கலாகின.

'என்ர வேலைக்கு வசதியாய் இந்த அறையை வைச்சிருக்கிறன். என்னோட வேலை செய்யிற வேலை அதிகாரிகள் மாத்திரம் மீட்டிங் வைக்க வருவினம். இதை நான் எப்பவும் பூட்டித் தான் வைக்கிறனான். இப்ப நீங்கள் இரண்டு பேரும் வீட்டில இருந்தாலும், யாரும் இதைக் குறி வைச்சு வந்தால் ஒண்டும் செய்யேலாது. ஆனபடியால் தான் பூட்டி வைக்கிறனான்.' தீபன் சொன்னதை தவமணி தலை அசைத்துக் கேட்டுக்கொண்டதை மாதுரியும் பார்த்தாள்.

'மருமோன் இவ்வளவு காலமும் கவர்மெண்டு உத்தியோகம் பார்க்கிறீங்கள், ஒரு கார் வேண்டியிருந்தால் நல்லாய் இருந்திருக்கும்...' தவமணி இழுத்த போது தீபனிடம் அதற்கும் பதில் இருந்தது.

'எனக்கு ஊரில இருக்கேக்க சும்மா கிடைச்ச மோட்டார் சைக்கிளோட, அதை ஓடுறதுக்கு இயக்கத்தோழர் ஒருவர் இருந்த மாதிரியே இங்கயும் எனக்கு ஓசியில காரும் அதை ஓட வெண்டு ஒருத்தரும் இருக்கேக்க எனக்கு ஏன் கார் மாமி?'

'இல்லை, இனி நாங்களும் இரண்டு பேர், குழந்தையும் வளருறான், எல்லாருமே வெளிவாசலுக்குப் போய் வர வேண்டாமே...' தவமணியின் இழுப்புக்கு தீபன் பதில் சொல்லவில்லை.

ஆனால் நாட்கள், வாரங்கள், மாதங்கள் செல்லச் செல்ல தவமணியின் நச்சரிப்புக்கு ஆதரவாக அவர்களுக்கு அடிக்கடி குழந்தையின் சுகயீனம் கருதி வைத்தியசாலைக்குப் போக வேண்டி வந்த போது, தீபனுக்கும் தான் ஒரு கார் வாங்கியிருந்தால் நல்லதென்ற யோசனை தொட்டது.

•••

இதோ இன்று எல்லோரும் குடும்பமாக, இரு வாரங்கள் ஒரு விடுமுறை வீடொன்றில் (Holiday Home) தங்கியிருந்து விட்டு வீடு திரும்புகிறார்கள். அவர்களது வீடு அண்மித்துக் கொண்டிருந்தது. தீபன் தானே தன் காரை ஓட்டி வருவது வேறு தவமணிக்கு மிகப் பெருமையாய் இருக்க, அப்போது தான் அந்த சம்பவம் ஏற்பட்டது. அவருக்கு என்ன ஏதென்று எதுவும் புரியவில்லை. நல்ல காலம், மாதுரி ஆங்கில வகுப்புகளுக்குப் போனதில் ஆங்கிலம் ஓரளவு பேசவும், புரிந்து கொள்ளவும் முடிந்திருக்கிறது.

காவல் அதிகாரிகள் தமது வாகனத்தை நீல வெளிச்சம் பாய்ச்சியபடியே வந்து தீபனது வாகனத்தின் முன் நிறுத்துகிறார்கள். அவனை ஏதோ கேட்கிறார்கள். தீபனோ எதுவும் பேசாமல் தன் தலையைத் தாழ்த்தியபடியே இருக்கிறான்.

'மருமோன் உங்கட ஐடென்டி கார்டை உவங்களுக்குக்

காட்டுங்கோவன். ஒரு பிரச்சனையும் இல்லாமல் விட்டுடுவாங்கள். அண்டர் கவர் பொலிஸ் எண்டது உங்களுக்குத் தெரியாது போல?' தவமணி பிரச்சனையின் உச்சம் புரியாது பேசுகிறார்.

காவல் அதிகாரிகள் அனைவரையும் வாகனத்திலிருந்து இறங்கும் படி மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறார்கள். தீபனைத் தனியாக அழைத்துச் செல்கிறார்கள். தீபன் ஒருவரையும் பார்க்காது அவர்களோடு நடந்து அவர்கள் வாகனத்திற்குச் செல்கிறான்.

'குழந்தை அழகாக இருக்கிறாள். எத்தனை வயதாகிறது?' பெண் காவல் அதிகாரி மாதுரியிடம் அன்போடு விசாரிக்கிறார்.

'உங்கள் அனைவரையும் குழந்தையோடு இருப்பதால், உங்கள் வீட்டுக்கு வாடகைக் கார் ஒன்றில் அனுப்பி வைக்கிறோம். பயப்பிட வேண்டாம். ஒரு சமூக நல பணியாளர் (social worker) உங்களை வெகு விரைவில் சந்தித்து ஆவன செய்வார்.'

சில நிமிடங்களில் மாதுரியும் தவமணியும் திகைத்தபடியே வாடகைக் காரில் ஏறுகிறார்கள். அதன் பின் தான் அனைத்தும் அவர்களுக்கும் வெளிச்சத்திற்கு வருகிறது.

•••

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் தீபன் இலண்டன் வந்த போதே மன நிலை பாதிக்கப்பட்டு மிக மோசமான காலத்தை இலண்டன் மன நல மருத்துவமனையில் கழித்தவன். மருந்துகள் இல்லாவிட்டால் அவனது மனநிலை அவனைச் சிறிது சிறிதாக வெறி பிடித்தவனாக மாற்றி விடும். தனக்கான ஒரு உலகில் சஞ்சரிப்பதும், இல்லாத ஒன்றைக் காண்பதும், வினோதமான சத்தங்களைக் கேட்பதும் என ஒருவரை வெகுவாகப் பாதிக்கும் ஸ்கிட்சோஃபீறினியா (Schizophrenia) எனப்படும் ஒருவகை மன நல நோயினால் பாதிக்கப்பட்டிருந்தான்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் ஊரில் இயக்க மோதல்களில் அகப்பட்டு உடலாலும் மனதாலும் பாரிய தாக்கத்தை உள்வாங்கியதன் விளைவாக அவனது மனநிலை பாதிக்கப்பட்டிருந்தது. அதை தகுந்த சிகிச்சைகளினால் மருத்துவர்கள் போராடி ஒரு கட்டுக்குள் கொண்டு வந்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து அவன் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் அவனுக்கான சமூக நல அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்டது. காலங்கள் கடந்த போது தீபனின் மனநிலையில் மெச்சத்தக்க முன்னேற்றம் கண்டு அவனுக்கான ஒரு வீடும் வழங்கப்பட்டது.

வார நாட்களில் தியானம், யோகாசனப் பயிற்சி போன்ற அவனுக்கான சிகிச்சைக்கு வெளியேயான வெவ்வேறு செயற் திட்டங்களில் (complimentary therapies) அவனை ஈடுபடுத்தும் ஊக்கத்தை சமூக நல இலாகா கொடுத்தது. அவனது கால் எலும்புகளில் ஏற்பட்டிருந்த பலத்த சேதத்தை ஒருவாறு சரிப்படுத்தி இருந்தாலும், அறுவைச் சிகிச்சையின் பின்னர் அவனுக்கு வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டது. அவனை வீட்டில் வந்து ஏற்றவும், சிகிச்சை முடிந்து இரவில் தங்குவதற்கும், அல்லது வீட்டுக்கு போக நினைத்தால் அவனை வாகனத்தில் வந்து இறக்கி விடுவதற்குமான பல வசதிகள் அவனுக்கிருந்தன.

நாளடைவில் அவன் ஆரோக்கியம் மருத்துவர்களுக்கு ஆறுதல் அளித்தது. அவன் தனக்காக ஒரு காதலி இலங்கையிலிருந்து வருகிறாள் என்ற போது அவனது மருத்துவக்குழு ஆச்சரியப்பட்டது.

சட்ட ரீதியாக ஒருவரது நோய், சிகிச்சை, மருத்துவம் சார்ந்த விடயங்களை அவரது அனுமதியின்றி வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ள முடியாததால் அவர்களுக்கு அவன் கூறுவதைக் கேட்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. இருந்தாலும் அவனது மன நிலை மாற்றங்கள் குறித்து அவன் காதலிக்குத் தெரியுமா எனக் கேட்ட போது, தீபன் அவளுக்கு எல்லாமே தெரியும் எனக் கூறியிருந்தான். அதுவும் போக அவனால் பெரும் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது என்ற மருத்துவ மதிப்பீடொன்றை (medical assessment ) செய்த பின்னரே அவன் தன் வீட்டில் தனியே வாழ ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் அவர்களுக்கும் மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை .

அவன் வாரந்தோறும் மனநல முன்னேற்றத்திற்கான சமூக நிலையமொன்றிற்கு (community centre) வரப் பணிக்கப்பட்டிருந்தான். அவனை இரு வாரத்திற்கொரு தடவை அவனது மேற்பார்வை அதிகாரி சந்தித்து கலந்துரையாடினார். எல்லாமே சரியாகத் தான் போய்க் கொண்டிருந்தது, அவன் தானே வாகனம் ஒன்றை ஓட்டும் வரையில்!

அத்தோடு வாரந்தோறும் தீபன் வைக்க வேண்டிய கை எழுத்தையும் அவர்கள் காணவில்லை, ஆளையும் காணவில்லை. காவல் அதிகாரிகளுக்கும் செய்தி அறிவிக்கப்பட்டு, தேடுதல் வேட்டை ஆரம்பித்தது.

சமூக நல அதிகாரி அவர்கள் வீட்டைத் தட்டிய போது தவமணியும் மாதுரியும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை என்பதை அவர்கள் முகங்கள் காட்டின.

'எனது பெயர் ஸ்டெஃபனி, ஸ்டெஃப் எண்டு கூப்பிடலாம்.' சிநேகிதமாகத் தன்னை அறிமுகப்படுத்தியபடியே உள்ளே வந்த இளம் ஆங்கிலப் பெண்ணை மாதுரி சிரமப்பட்டு வரவழைத்த சிறு புன்னகையோடு வரவேற்றாள்.

மாதுரியும் அவள் தாயும் தீபனுடைய அறைக்குள் போவதே இல்லை என்பது ஸ்டெஃப்னிக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர்கள் இருவரும் அப்போது தான் முதன் முறையாக அந்த அறைக்குள் வந்தனர். அவனது அலுவலக அறை எனச் சொல்லப்பட்ட அந்த அறையில் அவனது சிகிச்சை சம்பந்தமான கடிதங்கள், அது குறித்த விபரங்கள் அடங்கிய கோப்புகள், கோப்புறைகள், அவன் தினசரி எடுக்க வேண்டிய பல மருந்துகள் அனைத்தும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கப்பட்டிருந்தன. தாயும் மகளும் ஒருவரை ஒருவர் தாங்கிப் பிடித்ததைக் கண்ட ஸ்டெஃப்னி அவர்களை ஆசுவாசப்படுத்தினாள். அ

## மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:

### வரலாற்று தேடல்கள் 12



# அரசகரும மொழிச் (சிங்களம் மட்டும்) சட்டம்

**ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற யாழ்ப்பாண அடிப்படைவாதிகளின் அன்னிய மொழி (ஆங்கிலம்) மீதான விசுவாசமும் தமிழ் குறித்த அக்கறையின்மையும் பற்றியும் அவர்கள் சுயபாஷைகளை அமுலாக்குவதற்கு காட்டிவந்த எதிர்ப்புகளும் இன்றைய பரம்பரைகள் அறியாதனவாகும்.**

**எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்**

*1920 களில் இருந்து இலங்கையில் உருவான சுயபாஷைகளுக்கான இயக்கம் நீண்ட நெடிய வரலாறு கொண்டது. அதன் செயட்பாடுகள் குறித்துகடந்ததொடரில்பார்த்தோம். இவ்வியக்கமானது காலப்போக்கில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, மத,கலாசார நெருக்கடிகளினாலும் தேர்தல் அரசியலை நோக்கிய தமிழ் சிங்கள அரசியல்வாதிகளின் குறுகிய நலன்களினாலும் உருமாறி சிங்களத்துக்கு மட்டுமானதாக குறுக்கப்பட்டு இறுதியில் 1956 ஆம் ஆண்டில் அரசகரும மொழிச்சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இதனையே தனிச்சிங்களச்சட்டம் எனவும் சிங்கள பேரினவாதத்தின் தமிழின அழிப்புச் செயற்பாடாகவும் தமிழ் தலைமைகள் இன்றுவரை வர்ணித்து வருகின்றன. இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டமையும் அதனை தமிழ் தலைமைகள் எதிர்கொண்ட விதமும் தொடர்ந்து வந்த இலங்கை அரசியலில் பாரிய விளைவுகளுக்கும் மாற்றங்களுக்கும் இட்டுச்சென்றது.*

*1946 ஆம் ஆண்டு பண்டார நாயக்காவினுடைய 'சிங்கள மகாசபா' முன்வைத்த தீர்மானங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன. "கல்வி, சுகாதாரம்,வீடு,தொழில் ஆகிய துறைகளில் தீர்திருத்தம் கொண்டு வரப்படவேண்டும்,நாட்டில் இரு தேசியமொழிகளுக்கும் அரச அந்தஸ்து அளிக்கப்படவேண்டும்". மேற்படி தீர்மானங்களை நோக்குமிடத்தில் சிங்கள மகாசபா இலங்கை சுதேச மக்களின் நலனிலும் இரு மொழிகளின் தேவையிலும் இனவாதமற்ற மிகத்தெளிவான நோக்கினைக்*

கொண்டிருந்தமை புலப்படுகின்றது.

இனவாதமற்ற வகையில் சுயபாஷைகளுக்கான (சிங்களம், தமிழ்) கோரிக்கைகளை ஏற்று ஆதரித்து குரல்கொடுத்து வந்த பண்டாரநாயக்கா போன்ற தேசியத் தலைமைகள் காலப்போக்கில் *1956*ஆம் ஆண்டு சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கி நிறைவேற்ற முன்வந்தமைக்கு காரணம் யாது? அந்நிலையை நோக்கி சிங்களத் தலைமைகள் தள்ளப்பட்டமைக்கான வரலாற்றுப் பின்புலன்கள் என்ன? என்பது குறித்த ஆய்வுகள் அவசியமாகின்றது.

ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு சில சிறிய அமைப்புகள் அதாவது வடமாகாண ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் போன்றவை சிங்களப் பகுதியில் இருந்து வெளிப்பட்ட சுய பாஷைகளுக்கான இயக்கத்தினருடன் சேர்ந்து செயற்பட்டனர். மட்டக்களப்பின் நல்லையா போன்ற அரசியல் பிரதிநிதிகளும் இந்த இரண்டு மொழிகளையும் கொண்ட கோரிக்கைகளை வலுப்படுத்த முன்னின்று குரல் கொடுத்தனர். அதேபோன்று சிங்களப் பகுதியில் எல்லாவிதமான பாராளுமன்ற அரசியல் பிரதிநிதிகளும் இந்த இரட்டை தேசியமொழிக் கொள்கையினை ஏககாலத்தில் அங்கீகரிக்கும் நிலையும் காணப்பட்டது. முஸ்லிம் தலைவர்கள்கூட இந்த இருமொழிக் கொள்கையை வரவேற்றிருந்தனர்.

ஆனால் ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற யாழ்ப்பாண அடிப்படைவாதிகளின் அன்னிய மொழி (ஆங்கிலம்) மீதான விசுவாசமும் தமிழ் குறித்த அக்கறையின்மையும் பற்றியும் அவர்கள் சுயபாஷைகளை அமுலாக்குவதற்கு காட்டிவந்த எதிர்ப்புகளும் இன்றைய பரம்பரைகள் அறியாதனவாகும்.

அக்காலத்தில் இலங்கையின் சகல பாகங்களிலும் அதிகார வர்க்கமாக ஆங்கில புலமைகொண்ட யாழ்-மேட்டுக் குடிகளே கோலோச்சி வந்தனர். இதன்காரணமாகவே ஆங்கிலம் அரச மொழி அந்தஸ்திலிருந்து அகற்றப்படுவதை தமிழ் தலைவர்கள் எதிர்த்தனர். அவர்கள் கடைப்பிடித்த தலைவர்களது ஆங்கிலத்தைக் காப்பாற்றும் குள்ளநோக்கமே தமிழர்கள் மீது சிங்கள மக்கள் அதிருப்தி கொள்ளும் நிலைக்கு இட்டுச்சென்றது. 'தமிழர்கள் ஆங்கிலத்தின் பிடியிலிருந்து இலங்கையை விடுவிக்க விருப்பமின்மையைக் கொண்டுள்ளார்கள்.' 'தமிழர்கள் ஏகாதிபத்தியத்தின் அருவருடிகளாக இருக்கின்றனர்.' அதனால்தான் சுயபாஷைகளுக்கான இயக்கத்தை ஆதரிக்காது ஆங்கிலத்தை தொடர்ந்து அரச மொழியாக வைத்திருப்பதற்காக குரல்கொடுத்து வருகின்றனர் என்கின்ற தோற்றப்பாட்டை சிங்கள மக்களுக்கு அது தந்தது.

தமிழர்கள் ஆங்கிலத்தின் பிடியிலிருந்து இலங்கையை விடுவிக்க விருப்பமின்மையைக் கொண்டுள்ளார்கள்.' 'தமிழர்கள் ஏகாதிபத்தியத்தின் அருவருடிகளாக இருக்கின்றனர்.' அதனால்தான் சுயபாஷைகளுக்கான இயக்கத்தை ஆதரிக்காது ஆங்கிலத்தை தொடர்ந்து அரச மொழியாக வைத்திருப்பதற்காக குரல்கொடுத்து வருகின்றனர் என்கின்ற தோற்றப்பாட்டை சிங்கள மக்களுக்கு அது தந்தது.

இவ் வேளையில் தான் இலங்கை *1948*ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது. சுதந்திரத்தின் பின்னர் ஆங்கிலம் அகற்றப்பட வேண்டும் என்னும் கோரிக்கை தென்னிலங்கையில் வலுப்பெறத் தொடங்கியது. ஆனால் ஆங்கிலத்தை தொடர்ந்து அரச கரும மொழியாக பேணிவந்த யு.என்.பி அரசின் ஏகாதிபத்திய ஆதரவு போக்குடன் உடன்படாத பிரிவினரான சிங்கள மகாசபாவினர் *1951* ஆம் ஆண்டில் அக்கட்சியிலிருந்து வெளியேறினர். அவர்களே எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியாக புதிய பரிணாமம் பெற்றனர். அதன்காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த முக்கிய அரசியல் கோரிக்கையில் ஒன்றாக மொழியுரிமை இருந்தது. எனவேதான் தமிழை விடுத்து சிங்களத்தை மட்டுமாவது அரச மொழியாக்கவேண்டும் என்னும் நிலைக்கு அக்கட்சி வந்தது.

இவை அனைத்தும் சேர்ந்தே சுயபாஷைகளுக்கான போராட்டத்தினை தனிச்சிங்கள மொழிக்கானதாக குறுக்கி சீரழித்துவிடும் வாய்ப்புகளை வழங்கின. இதுபோன்ற புறச்சூழ்நிலைகளுடன் ஒரு தேர்தல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய யு.என்.பியுடனான அதிகாரப் போட்டி என்பனவும் சேர்ந்து எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவை சிங்களம் மட்டும் என குரல் எழுப்பும் நிலைக்கு இட்டுச் சென்றன.

அத்தோடு இணைந்ததாக அக்கால கட்டத்தில் இலங்கையில் நிலவிய அரசியல் பொருளாதாரச் சூழலும் சுதேச மொழி, சுதேச பொருளாதாரம் போன்றவற்றை நோக்கி சிங்கள மக்களை மென்மேலும் அணிதிரளச் செய்வதில் பெரும் பங்கு வகித்தன.

## அரிசிப் போராட்டம்

இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா *1952* ஆம் ஆண்டிலே குதிரையிலிருந்து வீழ்ந்து மரணமானதைத் தொடர்ந்து அவரது மகன் டட்லி சேனநாயக்கா இரண்டாவது பிரதமராக நியமனமானார். அவர் உடனடியாகவே புதிய தேர்தலை நடாத்தி அதில் வெற்றியீட்டியதன் ஊடாக தனது பதவியை உறுதிப்படுத்திக் கொண்டார். எனினும் இவரது ஆட்சியின் முதலாம் ஆண்டு காலத்திலேயே

பெரும் பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுக்க நேரிட்டது.

நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியை சமாளிக்க முடியாமல் டட்லியின் யு.என்.பி. அரசு திண்டாடியது. மாணவர்களுக்கான மதியபோசனம் நிறுத்தப்பட்டது. ரெயில்வே, தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. ஏழை மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களான சீனியினதும் அரிசியினதும் விலைகள் உயர்த்தப்பட்டன. குறிப்பாக அரிசி விலை மூன்று மடங்கு திடீரென அதிகரித்தது. அதாவது இறாத்தல் 25 சதத்திலிருந்து 70 சதமாக உயர்த்தப்பட்டது.

அரசாங்கத்தினுடைய இச்செய்கை பாமர மக்களைக் கடும் கோபத்துக்குள்ளாக்கியது. இதன்காரணமாக உருவாகிய ஏழை மக்களின் எதிர்ப்புணர்வுகள் அரிசிப்போராட்டம் என்னும் பெயரில் மாபெரும் ஹர்த்தாலாக வெடித்தது. இந்த எழிச்சியினை அடக்குவதற்காக டட்லியின் அரசாங்கம் காவல்துறையினை ஏவிவிட்டது. பொலிஸாரின் அடக்கு முறையில் இருந்து தப்பிக்க பொலிசாரையும் பொலிஸ் நிலையங்களையும் தாக்குமளவிற்கு மக்கள் சென்றதனால் நாட்டினதும் அரசியல் தலைவர்களினதும் பாதுகாப்பே கேள்விக்குறியானது. டட்லி சேனநாயக்கா தனது அமைச்சரவைக் கூட்டத்தை கொழும்பு துறைமுகத்துக்குள் தரித்து நின்ற கப்பலொன்றில் வைத்து நடத்துமளவிற்கு நெருக்கடிக்கு உள்ளானார். அண்மையில் இடம்பெற்ற அரகலயாவை போன்றல்லாமல் இவ்வரிசிப் போராட்டமானது இறுதிவரை அந்நிய சக்திகளின் சதிவலைகளுக்குள் அகப்படாமல் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. இறுதியாக பிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்யுமளவிற்குத் தள்ளப்பட்டார். இந்த மக்கள் எழுச்சியை தலைமையேற்று நடத்துவதில் இடதுசாரிகளும் தொழிற் சங்கங்களும் பெரும் பங்கு வகித்தன.



டட்லி சேனநாயக்காவின் ராஜினாமாவைத் தொடர்ந்து 1953இல் தற்காலிக பிரதமராக பதவியேற்ற சேர்.ஜோன்.கொத்தலாவல அரச எதிர்ப்பு போராட்டங்களுக்கு தலைமையேற்று மக்களை வழிநடத்திய கம்யூனிஸ்ட்டுகளை அடக்கி அழிப்பதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டார். கம்யூனிச நூல்களுக்கு அவரால் தடைஉத்தரவுகளும் போடப்பட்டன. இந்தத் தடை உத்தரவுகள் இடதுசாரிகள் சார்ந்திருந்த உள் நாட்டின் மரபார்ந்த அமைப்புகளையும் பாதித்தது.

**இளைஞர் சக்திகளை தம்வசம் இழுப்பதற்காக அவர்களுக்கான எதிர்கால நம்பிக்கையைத் தரக்கூடிய பெரும் தலைவராகவும் சிங்களத் தேசியத்தின் காப்பாளராகவும் எஸ். டபிள்யு.ஆர்.டிபண்டாரநாயக்கா தன்னைப் பிரகடனப்படுத்திக்கொள்ள முயன்றார்.**

**இந்நிலைமைகள் அனைத்தினதும் பின்னணியில்தான் (அவர் எதிர்கொண்டிருந்த) 1956 ஆம் ஆண்டுத் தேர்தலை ஒட்டிய அவரது நகர்வுகள் அமைந்திருந்தன.**

ஜோன்.கொத்தலாவல அவரது தனிப்பட்ட வாழ்வுமுறையிலும் ஐரோப்பிய கலாசாரத்தினை அதிகம் பின்பற்றுபவர் என்னும் காரணத்தினால் தென்னிலங்கையில் மரபுசார்ந்த காப்பாளர்களாகத் திகழ்ந்த சுதேச அமைப்பினர்கள் இவர் மீது இரட்டைக்கோபம் கொண்டனர். இலங்கையின் பாரம்பரிய பழக்கவழக்கத்தில் ஊறியிருந்த பௌத்த பீடங்களும் அதன் வழிபாட்டாளர்களும் இவருக்கெதிராக கிளர்ந்தெழத் தொடங்கினர்.பௌத்தம் குறித்தும் சிங்கள மொழி குறித்தும் தீவிரமாக செயற்பட்டுவந்த மரபு சார்ந்த அமைப்பினர் பலதரப்பட்டோரின் ஒன்றிணைப்பில் 'லங்கா ஜாதிக குருசங்கமய' எனும் மத அமைப்பு களத்தில் இறங்கியது. ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், விவசாயிகள், ஆயுள்வேத வைத்தியர்கள், பௌத்த பிக்குகள் போன்ற சமூகத்தின் ஐந்து பிரதான சமூகப் பிரிவினரையும் ஒன்றிணைத்து 1954 ஆம் ஆண்டு செப்ரம்பர் 4 ம் திகதி 'பஞ்ச மகாபல மண்டலய' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்த வேளையில் அதாவது 1950 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச ரீதியாக புத்தபகவானுடைய 2500 ஆவது வருட பிறந்த நாள் கொண்டாட்டங்கள் விமரிசையாக நினைவுகூரப் பட்டுக்கொண்டிருந்தன. இந்தியா, சீனா,ஜப்பான், தாய்லாந்து என்று பௌத்த மாநாடுகளும் நினைவரங்கங்களும் இடம்பெற்று வந்தன. இந்தியாவிலும் அம்பேத்கார் தலைமையில் ஐந்து லட்ஷம் ஒடுக்கப்பட்ட மக்கள் பௌத்தம் தழுவும் ஏற்பாடுகள் பெரும் பரபரப்பாக இடம்பெறத் தொடங்கின.

இவையனைத்தும் இலங்கை யிலும் மிகப்பெரிய பௌத்த எழிச்சியொன்றை உருவாக்கின. இலங்கையிலும் இடம்பெற்ற நிகழ்வுகளில் இடம்பெற்ற உரைகளும் வெளியிடப்பட்ட நூல்களும் ஒரு மிகப்பெரிய பௌத்த எழுச்சியை சிங்கள மக்களிடையே தோற்றுவித்திருந்தது. இவ்வாறான பௌத்தம் குறித்த தீவிரமான

உந்துசக்தியை சிங்களமக்களிடம் அது ஏற்படுத்தியது.

இதன் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் தமது மதம் மற்றும் மொழி சார்ந்த கோரிக்கைகள் மென்மேலும் அதிகரித்த வண்ணம் இருந்தன. இந்த நிலையில் சிங்களப் புத்திஜீவிகளான ஆனந்தா கல்லூரி அதிபரான எல்.எச்.மெத்தானந்தா, லேக் ஹவுஸ் உரிமையாளர் டி.ஆர்.விஜய வர்த்தனா (ரணில் விக்கிரமசிங்காவின் பாட்டனார்) போன்றவர்கள் மேலும் தமது எழுத்துகளிலும் பேச்சுகளிலும் சிங்கள மொழி, பௌத்தம் போன்றவை குறித்து உணர்ச்சியூட்டும் வகையில் செயற்பட்டனர்.

இத்தகைய சிங்கள தேசியத்தின் எழுச்சியொன்றிற்குத் தலைமை ஏற்கவேண்டிய வரலாற்றுக்கடமை ஒன்று தமக்கேயுரியதாக புதிய கட்சியான சிறிலங்கா சுதந்திர கட்சி தன்னை வரித்துக் கொண்டது. அக்கட்சியானது தனது முதலாவது தேர்தலை சந்திக்கத் தயாரானது. அதுமட்டுமன்றி 1945 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலவசக்கல்வி காரணமாக பெருந்திரளாக ஆரம்பக்கல்விக்குள் நுழைந்த சிங்கள மாணவர்கள் பத்து வருடங்கள் கடந்த நிலையில் (1955 ஆண்டு) படித்த இளைஞர் குழாமாக பாடசாலைகளில் இருந்து வெளியேறி வேலை வாய்ப்புகளுக்காகக் காத்திருந்தனர். 1945 ஆம் ஆண்டு சுமார் 21336 ஆக இருந்த வேலையில்லாதோர் தொகை இலவசக் கல்வியின் பலனாக 10 வருட இடைவேளையில் 71010 ஆக உயர்ந்தது. கிட்டத்தட்ட மூன்றரை மடங்கு உயர்வை எட்டியிருந்த வேலையற்றோர் தொகை அதீத வளர்ச்சியின் அறிகுறியாகும்.

இந்த இளைஞர் சக்திகளை தம்வசம் இழுப்பதற்காக அவர்களுக்கான எதிர்கால நம்பிக்கையைத் தரக்கூடிய பெரும் தலைவராகவும் சிங்களத் தேசியத்தின் காப்பாளராகவும் எஸ்.டபிள்யு. ஆர்.டிபண்டாரநாயக்கா தன்னைப் பிரகடனப் படுத்திக்கொள்ள முயன்றார். இந்நிலைமைகள் அனைத்தினதும் பின்னணியில்தான் (அவர் எதிர்கொண்டிருந்த) 1956 ஆம் ஆண்டுத் தேர்தலை ஒட்டிய அவரது நகர்வுகள் அமைந்திருந்தன.

பாராளுமன்றம் கலைக்கப் பட்டதும் வெற்றிவாய்ப்புகளை உறுதிப்படுத்திக் கொள்ள தன்னை சிங்கள பௌத்தர்களின் காவலனாக காட்டிக்கொண்டார். 'அப்பே ஆண்டுவ' கோசத்தின் மூலம் நம்மை நாமே ஆள்வோம் 'சிங்கள மொழியை அரச மொழியாக பிரகடனம் செய்வோம்' என்று வாக்குறுதியளித்தார்.

மறுபுறம் களனியில் கூடிய ஐ.தே.கட்சி மகாநாடும் பண்டாரநாயக்கவுக்குப் போட்டி யாக 'சிங்களம்' அரசகரும மொழியாக்கப் படவேண்டும் என்கின்ற தீர்மானத்தை எடுத்தது. தேர்தலுக்காக இரு பெரும் கட்சிகளும் இனவாதச் சேற்றில் மூழ்கினர்.

எதிர்பார்த்தது போலவே 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசிய அளவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசாங்கமானது ஆங்கிலத்தை அகற்றி சுயபாசைகளில் ஒன்றான சிங்களத்தை அரச அந்தஸ்துக்கு உயர்த்தியது. அதேவேளை சிறுபான்மை மொழியான தமிழுக்கு அது அதிகம் பேசப்படுகின்ற வடகிழக்குப் பகுதிகளில் 'பிராந்திய அந்தஸ்து' என்பதையும் வழங்கியது. இதையே தனிச்சிங்களச் சட்டம் என தமக்கு வசதியான மொழிபெயர்ப்பை இட்டு தமிழரசுக் கட்சியினர் எதிர்த்தனர். இந்த சட்டமூலத்தின் முழுவடிவங்களை மறைத்து சிங்கள எதிர்ப்புப் பிரச்சாரத்தை முன்னிறுத்தினர்.


சேர்.ஜோன்.கொத்தலாவல

## காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம்

இந்த அரச கரும மொழிச்சட்ட மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 05-06-1956 இல் காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சியினர் எதிர்ப்பு சத்தியாக்கிரகம் ஒன்றை நிகழ்த்தினர்.இந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களின் மீது சிங்களக் காடையர்கள் மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தினார்கள்.

அது ஆங்கில காலனித்துவத்தின் புதிய பிரதிநிதிகளான (யாழ்ப்பாணத்) தலைமைகளுக்கு எதிராக சுதேச மொழியுணர்வு கொண்ட (சிங்கள) மக்களால் நடத்தப்பட்ட தாக்குதல் என்பதே இந்த சத்தியாக்கிரகிகள் மீதான தாக்குதலின் சூட்சுமம் ஆகும். ஆனால் இவற்றை தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலாகவும் தமிழ் மொழிக்கெதிரான தாக்குதலாகவும் மடைமாற்றி யாழ்-அதிகார வர்க்கம் தமது பொய் பிரச்சாரத்தை வெற்றிகரமாகச் செய்தனர்

இந்தச் சத்தியாக்கிரகங்களின் பின்னணியில் தமிழர்களுக்கான பொதுநலன்கள் இருக்கவில்லை யென்பதை இந்த சத்தியாக்கிரகிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நடந்தவிதங்கள் எமக்கு இன்றும் உணர்த்துகின்றன. அதாவது தாக்குதலின்போது காடையர்கள்

எனச் சொல்லப்பட்டவர்கள் எழுப்பிய கோசம் ஒன்றே இதுபற்றிய மர்மங்களைத் துலக்க போதுமானதாய் உள்ளது. 'அன்னியர்களே வெளியேறுங்கள்', 'ஏகாதிபத்திய தாசர்கள் ஒழிக' என்று சிங்களவர்கள் போட்ட கோசம் எதை உணர்த்துகிறது என்பதை நுணுகி ஆராய்கின்ற போது இந்த சத்தியாக்கிரகிகள் தமிழர்களின் நலன்களுக்காக போராடவில்லை என்பதையும் அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகளாகவோ ஏன் தமிழர்களாகவோ கூட சிங்களவர்களால் நோக்கப்படவில்லை என்பதையும் அவதானிக்க முடியும். அதாவது ஆங்கிலத்தை காப்பாற்ற அன்னியர்களின் ஆட்சியை வேறுவடிவில் தொடர வழிதேடுகின்ற ஏகாதிபத்தியத்தின் அருவருடிகளாகவே சிங்களவர்கள் அவர்களை நோக்கினர்.

1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சுதேச மொழிச்சட்டத்தை நேர்மையான முறையில் தமிழ் மக்களின் நலனிலிருந்து அணுக திராணியற்ற தமிழரசுக்கட்சி தலைமை 'சிங்களம் படியாதே' எனும் கோஷத்தைக் கிளப்பியது. அதேபோன்று 1957 ல் சிறீ எதிர்ப்பு என்று தொடங்கி சிங்கள 'சிறீ' எழுத்தின் மீது தார் பூசும் கொச்சைத்தனமான அரசியல் நடவடிக்கைகளில் தமிழர்களை ஈடுபடுத்தியதன் மூலம் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சனைகளை சிங்கள மக்களிடையே புரிந்துகொள்ள வைப்பதில் தவறிழைத்தனர். அதுமட்டுமின்றி தமிழ் மக்கள் தமக்கு எதிரானவர்கள் எனும் உணர்வினை சிங்களவர்களிடையே பரப்பும் பணியையே இச்செயற்பாடுகளின் ஊடாக தமிழரசுக்கட்சித் தலைமைகள் செய்தனர்.

**1957 ல் சிறீ எதிர்ப்பு என்று தொடங்கி சிங்கள 'சிறீ' எழுத்தின் மீது தார் பூசும் கொச்சைத்தனமான அரசியல் நடவடிக்கைகளில் தமிழர்களை ஈடுபடுத்தியதன் மூலம் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சனைகளை சிங்கள மக்களிடையே புரிந்துகொள்ள வைப்பதில் தவறிழைத்தனர். அதுமட்டுமின்றி தமிழ் மக்கள் தமக்கு எதிரானவர்கள் எனும் உணர்வினை சிங்களவர்களிடையே பரப்பும் பணியையே இச்செயற்பாடுகளின் ஊடாக தமிழரசுக்கட்சித் தலைமைகள் செய்தனர்.**

தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் தமிழுக்கும் சம அந்தஸ்து கேட்டு போராட முன்வந்தது நியாயமானதொன்று. ஆனால் தமிழ் பேசும் பகுதிகளில் இந்தப் போராட்டம் நியாயமான வடிவங்களில் முன்னெடுக்கப்படவில்லை. 'தனிச்சிங்களச் சட்டம்' என்று திரும்பத் திரும்ப பிரச்சாரப்படுத்தியதன் மூலம் இச்சட்டமானது தமிழ்மொழியை அழித்து சிங்களத்தை மட்டும் இலங்கைவாழ் மக்கள் எல்லோர் மீதும் திணிக்கும் ஒரு சட்டமாக உருவகிக்கப்பட்டது. இந்த உருவகிப்பானது சிங்களப் பெரும்பான்மை இனம்மீது ஒரு அச்ச உணர்வை தமிழ் பேசும் மக்கள் எனும் வகையில் கிழக்கு மாகாணத் தமிழர்களிடமும் ஏற்படுத்தியதில் வியப்பு ஏதும் இல்லை.

இதற்கு வசதியாக வடகிழக்குப் பிராந்தியத்துக்கு வெளியே அரச உத்தியோகத்தர்களாய் இருந்த சிங்களம் தெரியாத பல யாழ்ப்பாணத்தவர்கள் இடைநிறுத்தப்பட்டமை அமைந்தது. விவசாயத்தையும் மீன்பிடியையும் வாழ்வாதாரமாகக் கொண்ட கிழக்கு மாகாண மக்களுக்கும் குறித்த யாழ் மேட்டுக்குடி அதிகார வர்க்கம் எதிர்கொண்ட இந்தப் பிரச்சனைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

அதேபோன்று ஆங்கிலம் தெரியாத சிங்கள பாமர மக்களிடையே பணிபுரிகின்ற அரச உத்தியோகஸ்தர்கள் அம்மக்களுக்குப் புரியக்கூடிய சிங்கள மொழியில் அடிப்படை அறிவு பெற்றிருக்க வேண்டும் என கேட்கப்படுவதில் எவ்வித தவறும் இருக்கமுடியாது. இதையே தமிழ் பகுதியில் பணிபுரிந்தவர்களிடமும் சிங்களத்தைக் கற்க நிர்ப்பந்தித்திருந்தால் அதுவே இனவாதமாக இருக்கமுடியும். அதைவிடுத்து பொத்தாம் பொதுவாக 'சிங்களம் தெரியாவிட்டால் அரசபணி புரியமுடியாது' என்கின்ற நிலை ஏற்பட்டுவிட்டதாக திரிபுபடுத்தல் பிரச்சாரங்களை தமிழரசுக்கட்சி மேற்கொண்டது. இப்படியான ஒரு மாயையை தமிழ் மக்களிடையே பரப்பும் விதமான ஒருபிரச்சாரம் அதிக கல்விபெறாது தமது கிராமிய பொருளாதார வாழ்வினில் நிம்மதியுடன் வாழ்ந்து வந்த கிழக்கிலங்கை மக்களிடத்தில் 'கலவர' மனநிலையை உருவாக்கியது. தமிழ் மொழியின் எதிர்காலப் பாதுகாப்புச் சம்பந்தமாக பாரிய ஆபத்தொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை இருப்பதாக யாழ்ப்பாணத்து அரசியல்வாதிகள் மேற்கொண்ட பிரச்சார யுத்தி கிழக்கிலங்கை மக்களை வெகுவாக அச்சமடையச் செய்தது. சிங்களக் கிராமங்களைக் கொண்ட நீண்ட எல்லைப்புறங்களை உடைய கிழக்கிலங்கை மக்களுக்கு தமது எதிர்காலப் பாதுகாப்பு என்ன என்கின்ற கேள்விகள் எழுந்தது. இதன்காரணமாக தமது பாதுகாப்பு உணர்வினைக் கருத்தில் கொண்டு செயற்படும் பெரும்பான்மை தமிழர்களைக் கொண்ட வடமாகாணத்து அரசியலுடன் இணைந்து கலப்பதே ஒரே வழியென கிழக்கிலங்கை எங்கும் பொதுசன மனநிலையொன்றை தோற்றுவிப்பதில் யாழ்ப்பாணத்து அரசியல்வாதிகள் வெற்றி கண்டனர்.

இந்த குறுகிய நோக்கிலான மொழி வெறிப்பிரச்சாரமானது சிங்கள எதிர்ப்பாகவும் சிறி எதிர்ப்பாகவும் மாறியது. தமிழரசுக் கட்சியினர் வடகிழக்கு எங்கும் பெரும் கலவர சூழ்நிலையொன்றை தோற்றுவித்தனர். இந்தக்

குழப்பங்களின் பின்னணியில் தமிழ்மொழி தேசியமொழியாக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை மறைந்து சிங்கள மொழிக்கு எதிரான ஒரு மனநிலையையே வடகிழக்கு எங்கும் தோற்றுவித்திருந்தது. ஆங்கிலம் அரசகரும அந்தஸ்தில் இருந்து அகற்றப்பட்டுவிடக் கூடாது என்கின்ற அக்கறையே தமிழ் அரசியல்வாதிகளின் உள்நோக்கமாக இருந்தது இதற்குக் காரணமாகும். ஆங்கிலம் அகற்றப்பட்டால் பெரும் சட்ட வல்லுனர்களாகவும் ஆங்கிலப் புலமையாளர்களாகவும் துறைசார் தகமையாளர்களாகவும் இலங்கை எங்கும் பிழைப்பு நடத்திவந்த யாழ் மேட்டுக்குடிகள் தமதும் தமது சகாக்களினதும் உத்தியோகங்கள் அர்த்தமற்றதாகிவிடும் என உணர்ந்தனர். இதுதான் இவர்களது சிங்கள எதிர்ப்புணர்வின் முக்கிய பின்னணியாகும்.

சிறீ எதிர்ப்பு போராட்டம் சத்தியாக்கிரகப் போராட்டம் போன்றவற்றின் பின்னால் கிழக்கிலங்கை மக்களும் கவரப்பட்டனர். இந்தப் போராட்டங்களில் காணப்பட்ட அர்த்தமற்ற சிங்கள எதிர்ப்பும் சிறி எழுத்தை தார்பூசி அழிக்கும் வெறியும் சிங்கள மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களின் மனவுணர்வுகளை தீண்டிவிட்டது. ஏற்கனவே சிங்களப் பகுதிகளில் தீவிர மொழி உணர்வாளர்களாக இருந்த கே.எம்.பி.ராஜரத்தினா போன்றவர்கள் சிங்கள எதிர்ப்புக் கோசத்தினால் தூண்டப்பட்டிருந்த சிங்களமக்களின் மனவுணர்வுகளை தமிழர்கள் மீதான வெறியாக மாற்றி இனக்கலவரங்களை ஏற்படுத்தினர்.

இந்தச் சட்டத்தினால் இலங்கையின் அரசகரும மொழியாக சிங்களம் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் அது காலணித்துவ மொழியான ஆங்கிலத்தை அகற்றும் ஒரு செயற்பாட்டின் இறுதிக்கட்டம் எனும் வகையில் தேசிய சாதனையாகவும் சிறுபான்மை மொழியான தமிழையும் அதே தரத்துடன் அரசகரும மொழியாக்கத் தவறியது எனும் வகையில் குறைபாடுடைய ஒன்றாகவும் மட்டுமே பார்க்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் பாராளுமன்ற விவாதங்களில் ஆங்கிலத்தை தக்க வைப்பதற்காகவே குரல் எழுப்புவதை கடமையாகக் கொண்டிருந்த இவர்கள் தமிழ் மொழி குறித்து கிஞ்சித்தும் அக்கறை கொண்டிருக்கவில்லை. இலங்கையின் ஆட்சி அதிகாரங்களில் ஆங்கிலம் தனது இடத்தை இழந்துவிடக்கூடாது என்பதற்காக சுயபாசைகளின் வரவை ஒட்டுமொத்தமாக எதிர்த்தார்கள். காலப்போக்கில் சுயபாசைகள் என்பது சிங்களம் மட்டுமாகவே சுருங்கிப் போனபோது அதை தாம் எதிர்ப்பதானது தமிழ் மொழிக்கான சம அந்தஸ்தை கோரியே என்கின்ற வகையில் தமது பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டனர். இதில் தமிழ் மொழியைக் காப்பதற்காகவும் தமிழ் மொழியின் உரிமைக்காகவும் தமது போராட்டங்கள் அமைவதாக மேலோட்டமாக இவர்கள் காட்டிக்கொண்டாலும் உண்மையில் இந்த எதிர்ப்பு நடவடிக்கைளின் உள்நோக்கம் அதுவாயிருக்கவில்லை. சிங்களம் அரசகரும மொழி ஆகக் கூடாது என்பதோடு இதன் மறுபக்கம் ஆங்கிலம் அரசகருமமொழி அந்தஸ்தை இழந்துவிடக்கூடாது என்பதாகவே இருக்கிறது. கடந்தகால மொழி விவாதங்களில் ஆங்கிலம் அகற்றப்பட்டுவிடக்கூடாது என்பதில் யாழ்ப்பாணத் தலைமைகள் கொண்டிருந்த குள்ளநோக்கத்தின்

**ஏற்கனவே சிங்களப் பகுதிகளில் தீவிர மொழி உணர்வாளர்களாக இருந்த கே.எம்.பி.ராஜரத்தினா போன்றவர்கள் சிங்கள எதிர்ப்புக் கோசத்தினால் தூண்டப்பட்டிருந்த சிங்களமக்களின் மனவுணர்வுகளை தமிழர்கள் மீதான வெறியாக மாற்றி இனக்கலவரங்களை ஏற்படுத்தினர்.**

தொடர்ச்சியே இந்த தமிழ்மொழிக்காக போராடுவதாக சொல்லிக்கொண்ட வேளைகளிலும் உள்ளோட்டமாக தொடர்ந்தது. இதனை அவ்வேளையில் வடபுலத்தில் கல்வியுரிமை மறுக்கப்பட்டு மேட்டுக்குடிகளால் ஒடுக்கப்பட்ட மக்களோ கிழக்கிலங்கை வாழ் மக்களோ புரிந்து கொண்டிருக்கவில்லை.

தமிழ் மொழிக்கான போராட்டத்தையே யாழ்ப்பாணத் தலைமைகள் மேற்கொள்வதாக இவர்கள் நம்பினர். தாமும் தமிழர்கள் தமது மொழியும் தமிழ் என்பதால் கிழக்கிலங்கைவாழ் முஸ்லிம் தமிழ் சமூகங்கள் இந்தப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர். அவ்வேளைகளில் மட்டக்களப்பு பிரதிநிதிகளாய் இருந்த இராஜவரோதயம்,இராசமாணிக்கம், இராஜதுரை போன்றவர்கள் கூட இத்தகைய யாழ்ப்பாணத் தலைமைகளின் வழிநடத்தல்களின் பின்னே கிழக்கிலங்கை மக்களை அணிதிரட்டினர். இதனூடாக யாழ்ப்பாணத்தின் நரித்தனமான அரசியல் பிரச்சாரங்களில் கிழக்கிலங்கை மக்கள் ஏமாறத் துணைநின்ற வரலாற்றுத் தவறை இவர்கள் தமது மக்களுக்கு இழைத்திருந்தனர்.

அன்று 'சிங்களம் படியாதே, சிங்களம் படியாதே' என்று ஏழைஎளிய மக்களை நோக்கி கோஷமிட்ட யாழ்-மேட்டுக்குடிகள் தொடர்ந்து வந்த ஒரு சில வருடங்களுக்குள்ளாகவே சிங்களத்தை படித்து தற்காலிகமாக இழந்துபோன தத்தமது உத்தியோகங்களை மீளப்பெற்றுக்கொண்டனர். ஆனால் இவர்களின் வாய்ப்பேச்சில் மயங்கிய சாமானிய மக்களோ அன்றிலிருந்து இன்று வரை சிங்களம் படிக்கவில்லை. அதேவேளை 'சிங்களம் படியாதே, சிங்களம் படியாதே' என்று கோஷமிட்ட தலைவர்களின் வாரிசுகளோ 'சிங்களவர்கள்போல் தமக்கும் சிங்களம் பேசத்தெரியும்' என்பதை தலைமைத்துவத்துக்குரிய சிறப்புப் பண்பாக முன்னிறுத்தி தமிழ் தேசியத்தின் புதிய எசமானர்களாக வலம்வருகின்றனர். அ

# ‘பதினொன்று..11’

1. நீ இந்தப்புள்ளியிலிருந்தே சிந்திக்கத் துவங்குவாய்.
நீளாழியின் தொங்கல் கிடைக்கோட்டிலிருந்தே
வானம் தொடங்குவதாய் எண்ணுவாய்.

வானமென்றேதும் கிடையாது!!

2. பிரபஞ்ச பெரு வளையம் பற்றியதை விடு.
நீ நினைக்கும் புள்ளியில் சரிதத்தைக் கோர்ப்பாய்.
அதற்கு முன்னும் அது இருந்தது!!

புரிகிறதா உனக்கு??!!

இவர்களுக்கு முன் அவர்கள் இருந்தனர்.
வெகு காலமுன்.
வானம் ‘அங்கு‘ தொடங்கவில்லை!!

3. முடியாத எதற்கோவாக நீ

அமந்தறையாய் கதறினாலும், அது முடியாது.
முடியவே முடியாது.!!!!

4. சரி. அது போகட்டும். விடு. இரத்தம் அன்பினால் மட்டுமே ஒட்டப்படும். கட்டாரியாலல்ல!!

5. அவர்களது, இவர்களது, உங்களது,
யாபேரது இரத்தமும் சொட்ட
உறைந்து விடுகிறது. அல்லவா..??
இதனால் தான் வெட்ட வேண்டாம், என்றது!!

6. குரோதங்களை குவித்து வைத்து,
அதிலேறி சுவர்க்கம் போக முக்குவோருக்கு, ஏ
ன் அது மலக்குவியல், என்று தெரியாமல் போகிறது??!!

7. வைரம் பதித்த பொன்வேலி உள்ளுள்ள சுவர்க்கத்தின்
கொதி எண்ணைக்கடலில் மிதக்கும் இவ்வுலகத்து மனிதரின்
பிண்டங்களை மிதித்துக் கடந்தால், நரகம் வருகிறது.
அங்கே வசந்த காலம்...!!

8. நரகத்தில் இளைப்பாறும் சாத்தான்களைக் கொண்டு வந்து,
சுவர்கத்தின் எண்ணெய் பிண்டங்களைத் தாங்கும்
கூர்மமான கடவுளிடம் தருவது சாத்தியமில்லை!

9. கற்பைப் புளுகிக் கொண்டே கற்பை விற்று வரும் காசுக்கு கற்பில்லை!!

10. நீ, நீயாக இராதவரை, நான் நானாக எப்படி இருக்க..??

11. ‘பத்து‘ (10) முறை சொல்லியாயிற்று.
பதினோராவது (11) தடவை சொல்லியென்ன பயன்..??!!

**சிறினோ சிறி சிறிசு**

## “ ELEVEN…..11”

1] You would start to think
from this point.
You would assume
that the sky begins
from the horizon
of the long ocean…!!

2] Forget about the ‘universe-ring’.
You would string the history
in the point you fathom.
But, it existed (even) before…!
Do you get it…??!!
They were there before this.
Long time ago.
The sky didn’t begin there…!!

3] It’s impossible,
even after you bawl desperately.
It’s absolutely impossible…!!

4] Ok. Let it go. Forget it.
Blood only can be pasted
by love; not by dagger…!!

5] Theirs, ‘these’ (people’s),
yours, blood of all,
once spills,- clots, doesn’t
it…??!!
This is why (we) say, “don’t cut.”

6] Why it is not known
to these people who heap jealousy
and climb on it to reach the heaven
that the heap is an excrement
pile…??!!

7] Hell comes when,—

“Step and pass on the cadavers
of ‘this world’, which float in
the ‘hot-oil sea’ of the paradise
that is within the
golden fence…!!”
There, it’s spring…!!

8] It’s not possible to give
the satans of the hell
who are relaxing in the spring there,
to the “turtle-god”
which holds the ‘hot-oil corpses’…!!

9] The money that is gotten
from selling chastity
while boasting it
doesn’t have virtue…!!

10] How could i be myself
when you are not ‘you’…??!!

11] It has been said
‘ten’ (10) times..!!
What is there to say
for the eleventh (11) time…??!!!!

# பட்டியலினக் கூட்டத்தின் பெருந் தொல்லை!



## தொடரும் தலையிடி!

### எங்கே போய் முட்ட!

பட்டியல் இனத்தவர்களுக்கு
சலுகைகளும் இட ஒதுக்கீடுகளும்
கிடைக்கிற மாதிரி....

பட்டியல் இலக்கியவாதிகளுக்கும்
ஏதேனும் விசேட சலுகைகள்
கிடைக்கிறதாக இருக்குமோ?

பட்டியலில் விடுபட்டவர்கள்
எப்போதுமே ரொம்பவும்
வருந்துகிறார்களே!?

பேஸ்புக் பதிவு
தை 21, 2024

எழுபதுகளில் இலங்கையில் கிறிஸ்தவ மதம் பரப்பும் குழுக்கள் பெரும் முனைப்போடு செயற்பட்ட காலம் ஒன்றுண்டு. இல்லம் தோறும் நற்செய்தி, சத்தியவசனம் என்று இரண்டு குழுக்கள் பெரும் செயற்பாட்டில் இருந்தன. ஒரேயடியாக யேசுவை ஒட்டுமொத்தமாக விற்றுத் தீர்க்கும் பெரும் முடிவோடு, வீடு வீடாகத் திரிந்து, தங்கள் பிரசுரங்களை வினியோகித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களின் பிரசாரப் பிரசுரங்களில் தபால் செலவு ஏற்கனவே செலுத்தப்பட்ட அஞ்சல் அட்டை மூலமாக, அவர்களின் பாடத்திட்டங்களைக் கற்க வசதி செய்திருந்தார்கள். அதை நிரப்பி அனுப்பினால் வாராந்தம் பாடங்களை அனுப்புவார்கள். அந்தப் பாடங்களுக்கான கேள்விகளுக்குப் பதில் எழுதி திருப்பி அனுப்பினால், அடுத்த பாடத்தை அனுப்புவார்கள். ஒரு ஐந்தாறு பாடங்களுக்கு சரியான பதில்களை அனுப்பினால், ஏதோ படித்துப் பட்டம் பெற்ற மாதிரி சான்றுப்பத்திரம் அனுப்புவார்கள். நீங்கள் முழுவதும் பிழை எடுத்திருந்தாலும், உங்கள் ஆர்வத்தைக் கருத்தில் கொண்டும், உங்கள் மனதைப் புண்படுத்தி

ஜோர்ஜ் இ.

ஒரு ஆன்மாவை ஈடேற்ற முடியாத பாவத்தைச் சுமக்க முடியாமலும் உங்களுக்கும் அந்த சான்றிதழ்களை அனுப்பி வைப்பார்கள்.

நான் ஐந்தாம் வகுப்பு படித்த காலத்திலேயே இல்லம் தோறும் நற்செய்தியின் நான்கு பாடத்திட்டங்களை முடித்து பட்டம் பெற்றிருந்தேன். ஒரே சத்தியவசனத்தை இரண்டு தடவைகள் முடித்து இரண்டு பட்டங்கள் பெற்றிருந்தேன்.

பிரச்சனை என்னவென்றால், இப்படி ஊரில் நான் மட்டுமல்ல, எண்ணுக்கணக்கற்றவர்கள் இப்படி இலவச தபால் செலவோடு பட்டம் பெற்றிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் அந்த சான்று பத்திரங்களைப் பெருமையோடு கொண்டு திரிந்தார்கள்.

எங்களுடைய இலக்கிய உலகிலும் இப்படி விருதுகள் பெற்று அந்த விருதுகளை பெருமையோடு காவித் திரியும் படைப்பாளிகள் அதிகம். விருது வழங்குதல் என்பது ஏற்கனவே கேலிக்கூத்தாகவே வந்து முடிந்திருக்கிறது என்றாலும், இன்றைக்கும் தாங்கள் பணம் செலவிட்டோ, தகுதி பாராமல் தரப்பட்டோ பெற்றுக் கொண்ட விருது என்றாலும் அதை வைத்துக் கொண்டு பெருமை பாராட்டதவர்கள் யாரும் இல்லை. அதற்காக தாங்களே பணம் செலவிட்டு பாராட்டு விழா எடுப்பவர்கள் கூட உண்டு.

ஆனால், நல்ல காலம் இயல் விருது வாங்க வழியனுப்பு விழா இன்னமும் தொடங்காதது கொஞ்சம் மன ஆறுதல் தான்.

'சென்று வா, தலைவா! வென்று வா!'. எஸ். ராமகிருஷ்ணனுக்கு அப்படி ஒன்று எடுக்கப்பட்டதாக யாரோ சொன்ன ஞாபகம். கிடைத்த பின்னால் ரஜினிகாந்த் வந்தது தெரியும். அது தெரியாது.

ஊருக்குள் விருது பெறாத இலக்கியவாதியே இல்லை என்ற நிலை வந்த பின்னாலும், தங்களுக்கு கிடைத்த அங்கீகாரம் பற்றிய புளகாங்கிதத்தோடு பெருமை பேசும் இலக்கியவாதிகளின் எண்ணிக்கை, 'எங்கட பிள்ளை கம்பியூட்டரில கெட்டிக்காரன்' என்று பெருமை பேசும் புலன் பெயர் அம்மாக்களின் எண்ணிக்கையையும், உண்மையிலேயே விருதுகள் பெற்ற, கனடாவில் உள்ள வீடு விற்பனை முகவர்களின் எண்ணிக்கையையும் விடவும் மிகவும் அதிகம்.

விருது பெறுவதை விட, விருது வழங்குவது என்பதே அங்கீகாரத்திற்கான வழியாகிய கேவலம் இலக்கியத் தோட்டத்தில் நடப்பது தான். இப்படி, விருது கொடுப்பது என்பது, தான் வாங்கிய புத்தகங்களைப் படம் பிடித்து பேஸ்புக்கில் போடுவது மாதிரியான நிலையில் தான் வந்து முடிந்திருக்கிறது. தனது புத்தகத்தை யாராவது வாங்கினாலேயே வெற்றிவிழாக் கொண்டாட வேண்டிய நிலையில் தான் புத்தகத் திருவிழாக்களில் நிலையும் இருக்கிறது என்பது தனிக்கதை.

உண்மையில் திறமைக்காகவே விருதுகள் பெற்றவர்கள் கூட வெட்கப்படும் அளவுக்கு விருதுகள் இங்கே நாறிப் போய்க் கிடக்கின்றன. தமிழ்நாட்டில் கொடுக்க ஆள் முடிந்துபோன பின்னால் தானே, இயல் விருதுகள் ஈழத்து இலக்கியவாதிகளுக்கும், முன்பின் தெரியாத சாம்ராஜ்களுக்கும் தர ஆரம்பிக்கப்பட்டன.

இப்படி, விருதுகள், அங்கீகாரம் என அலையும் இலக்கிய உலகில் பட்டியல் என்று இன்னொரு பெரும் தலையிடி அவ்வப்போது தோன்றும்.

இந்தப் பட்டியல் விவகாரம் என்பது, சினிமாப் படங்களின் டைட்டில் கார்டில் வரும் 'மற்றும் பலர்' கூட, தங்களை நட்சத்திரங்களாக நினைக்கும் அளவுக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது.

இதுவரை காலமும் வெளிவந்த, இந்த வருடத்திய, இந்த நூற்றாண்டின் சிறந்த படங்கள் என்று, ஒரு சஞ்சிகையோ, ஒரு சினிமா சார்ந்த பொதுநிறுவனமோ பட்டியல் போடுவது ஓரளவுக்காவது அதற்கான பெறுமதியை நிர்ணயிக்கக் கூடும். ஆனாலும், இப்படி போடப்படும் பல்வேறு பட்டியல்களில் உள்ளவை ஒருபோதும் ஒரே படங்களாக இருப்பதில்லை.

காரணம், தெரிவுக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களின் ரசனை, அந்தக் குழு பார்த்த படங்களின் எண்ணிக்கை போன்ற பல்வேறு காரணிகளாலேயே இதெல்லாம் தீர்மானிக்கப்படுகிறது. இருந்தாலும், இதையெல்லாம் இங்கே வாசிக்கிறவர்கள் 'ஓகோ, அப்படியா?' என்று கடந்து போவார்கள். ஆர்வலர்கள் மட்டும் தாங்கள் கேள்விப்படாத படங்களை 'அப்படி என்ன இருக்கிறது?' என்று தேடிப் பார்ப்பார்கள். அப்படிப் பல படங்களை நானும் தேடிப் பார்த்திருக்கிறேன்.

எவருமே, ஏன் தங்களுக்குப் பிடித்தமான படம் அந்தப் பட்டியலில் வரவில்லை என்று மல்லுக் கட்டுவதில்லை. படம் பார்த்த ரசிகர்களுக்கே அந்த எண்ணம் வருவதில்லை. இப்படி தங்கள் படங்களை உலக மகாகாவியங்கள் என்ற 'நெனப்பில திரியும்' இயக்குனர்கள் கூட பட்டியலில் வந்து விட்டது என்பதற்காக பெருமைப்பட்டு தங்களின் திறமைக்கான ஆதாரமாகக் கொண்டு திரிவதோ, வரவில்லை என்பதற்காகப் போர்க்கொடி தூக்குவதோ இல்லை.

அவரவர் தன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்த சினிமா ஆர்வலர்கள் எங்காவது அதைப் பற்றி எழுதும்போது குறிப்பிடுவார்கள்.

ஹொலிவூட் திரைப்பட நிறுவனங்களின் மார்க்கட்டிங் பிரிவு தான் எங்காவது சிறு பத்திரிகை ஒன்றில் வரும் விமர்சனத்தின் ஒரு வரியை வெட்டி, விளம்பரத்திற்கு மேல் போடுவார்கள். அதைப் பார்த்து மக்கள் கூட்டம் திரளும் என்ற நம்பிக்கை. இதைப் பற்றித் தனியாக எழுத வேண்டும்.

எங்களுடைய பிரச்சனை என்னதான் என்று எனக்குப் புரிவதில்லை.

ஒரு தனிமனிதன் தான் வாசித்தது குறித்துப் பட்டியல் இட்டாலேயே

கலவரம் தொடங்கி விடுகிறது.

ஒரு புறத்தில் அதை ஒரு அங்கீகாரமாகக் கருதி பொதுவெளியில் பெருமையோடு பகிர்கிறார்கள். பட்டியலில் இடம் பெறாதோர் பெரும் போர்க் கொடி தூக்குகிறார்கள்.

அடே, இது ஒரு வெறும் தனிமனிதனின் அபிப்பிராயம், ஒரு சாதாரண வாசகனுக்கு இருக்கும் அபிப்பிராயத்தை விட, இது ஒன்றும் மேலானது அல்ல என்ற எண்ணம் கூட இவர்களுக்கு வருவதில்லை.

விமர்சகர்களாகத் தான் கூட இருந்தாலும், அவர்களும் தாங்கள் வாசித்தவற்றை மட்டும் வைத்துத் தான் கருத்துச் சொல்ல முடியும். தொலைதூர பஸ்களுக்கு ஆட்சேர்த்தது போல, கூவிக் கூவிக் கவிஞர்களை அழைத்து, ஆயிரம் தலைகளை வாங்குகிற அபூர்வ சிந்தாமணிகள் கவிதைத் தொகுப்பு விட்டாலும், விடுபட்டுப் போகிற ஆயிரத்தோராவது கவிஞர்களுக்கு அது ஒரு தன்மானப் பிரச்சனை ஆகி விடுகிறது.

பட்டியல் போடுவோரும் சும்மா இல்லை. இவர்கள் எல்லாம் தாங்கள் வாசித்தவற்றில் தங்களுக்குப் பிடித்தமானவையை மட்டும் தான் பட்டியல் இடுவார்கள் என்று நீங்கள் நம்பினால் அதற்கு நான் பொறுப்பில்லை.

அவர்களுக்கும் உள்அரசியல், நுண்அரசியல், உள்குத்து அரசியல் எல்லாம் உண்டு. தங்களுக்கு வேண்டப்பட்டவர், முகாமைச் சேர்ந்தவர், குஷிப்படுத்த நினைப்பவர், அடுத்த முறை காணும்போது சண்டை வராமல் தவிர்க்க வேண்டும் என்று நினைப்பவர், வேண்டுமென்றே தவிர்த்துக் கடுப்பேற்ற நினைப்பவர், அழகான பெண் கவிஞைகளுக்கு முன்னுரிமையும் அங்கீகாரமும் வழங்கி படுக்க வைக்கலாம் என்று நினைக்கிறவர் என்றெல்லாம் கடந்து தான் தெரிவும் தவிர்ப்புமாகப் பட்டியல்கள் வெளிவருகின்றன.

நான் எழுதிய எத்தனையோ இருக்க, தாயகம் பத்திரிகையில் இடம் நிரப்ப எழுதிய ஏதோ ஒரு 'கவிதையைப் பிரசுரித்து என்னைக் கவிஞனாக்கிய, 'புலம் பெயர் இலக்கியச் சிறப்பிதழ்' வெளியிட்ட சஞ்சிகை உண்டு. இதைப் பற்றிக் கூட எனக்கு எத்தனையோ ஆண்டுகள் கழித்த பின்னால் தான் தெரியவும் வந்தது. இதன் நுண் அரசியல் என் புலி எதிர்ப்பையும், இடையில் நின்று தெரிவு செய்து அனுப்பிய உள்ளூர் நந்திகளின் பொறாமையையும் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

தாங்கள் எழுதுவதை விட, தங்களைப் பற்றி எழுதப்படுவது அதிகமாக இருக்க வேண்டும் என்று, நேர்காணல் செய்ய மாட்டார்களா என்று 'மனம் திறக்க' அலைகிற இந்த இலக்கியப்பெருந்தகைகளுக்கு, இந்தப் பட்டியலில் இடஒதுக்கீடு என்பது பெரும் அங்கீகாரம் என்ற நினைப்பாகத் தான் இருக்கிறது.

தங்களைப் பற்றிய விமர்சனங்களுக்கு, வாயைத் திறந்தால்நாறிப்போகும்என்றுவாயை மூடிக் கொண்டு, 'உதுக்கெல்லாம் பதில் சொல்லேலாது! உதுக்குப் பதில் சொல்லி உவேயைப் பெரிய ஆக்கள் ஆக்கக் கூடாது!' என்ற பெருந்தன்மையோடு இருக்கும் இலக்கிய மேதகுக்கள் கூட, தங்களைப் பற்றி ஒரு சாதாரண ரசிகர் புழுகித் தள்ளினாலேயே அதைப் பெரும் அங்கீகாரமாக நினைத்துக் குஷிப்பட்டுப் பகிர்ந்து கொள்கிறார்கள். வாசகர்கள் கடிதம் அனுப்பினால், தங்கள் தளங்களில் பிரசுரிக்கிறார்கள். அப்படி இளிச்சவாயர்கள் அகப்படா விட்டால், ஃபேக் ஐடிக்களில் தாங்களே எழுதியும் கொள்கிறார்கள்.

பேராசிரியர் அ.ராமசாமி தான் வாசித்த ஈழத்து எழுத்தாளர்கள் பற்றி நிறைய எழுதியிருக்கிறார். அது குறித்து புத்தகமும் வெளியிட்டிருக்கிறார். அதில் ஈழத்து இலக்கியச் செம்மல்கள் குறித்து தான் எழுதியவர்களின் பட்டியலை பேஸ்புக்கில் பகிர்ந்தது தான் இந்த உள்நாட்டுக் கலவரத்தின் காரணம்.

பேராசிரியருடனான கருத்துப் பகிர்வின் போது கூட, அதைப் பற்றி கேட்டிருந்தேன். தங்களுக்குத் தரப்பட்டவையை மட்டுமே வைத்துக் கொண்டு, எந்தத் தேடலும் இல்லாமல் இதுதான் ஈழஇலக்கியம், புலன் பெயர் இலக்கியம் என்று முடிவாகத் தீர்மானிப்பது குறித்து கேள்வியாக இல்லை, குற்றச்சாட்டாக முன்வைத்திருந்தேன். இதனால் தான் அ.முத்துலிங்கம் புலன் பெயர் மூத்த எழுத்தாளர், காலம் தான் புலன் பெயர் இலக்கிய சஞ்சிகை என்றெல்லாம் வர்ணிக்கப்படுவதை கடுமையாக ஆட்சேபிக்கிறோம். உண்மைக்கு முரணான தரவுகள் வரலாறாகி விடக் கூடாது என்பதற்காக.

பேராசிரியர் தன்னை, தான் ஒரு ஆய்வாளர் இல்லை, ஒரு வாசகனாகத் தான் சொல்கிறார். தன்னுடைய வாசிப்புப் பரப்பை மட்டும் வைத்துக்கொண்டு அவர் கருத்துச் சொல்வதில் எந்தத் தப்பும் இல்லை.

அதை தீர்மானமான முடிவாக அவர் நினைத்தாலோ, மற்றவர்கள் நினைப்பதோ தானே தப்பு?

தமிழ்நாட்டு இலக்கிய யோக்கியர்களின் அறம் பற்றி நன்றாகத் தெரிந்த புலன் பெயர் இலக்கியர்களுக்கு தங்கள் படைப்புகளை எப்படி அங்கே கொண்டு போய்ச் சேர்ப்பது என்பது நன்றாகவே தெரியும். இலவச இணைப்புகளான விருதுகளும் விருந்துகளும் விஸ்கிகளும் விமானச்சீட்டுக்களும் என்று நான் அடிக்கடி சொல்வது போல!

நக்கி நாவிழந்தவர்கள் உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கத் தானே வேண்டும். தமிழ்நாட்டு அங்கீகாரம் என்பது இப்படித் தான் இங்கே கிடைக்கிறது. அங்கே யாரும் எதையும் தேடி வாசிக்கவில்லை. கொடுக்கப்பட்டவற்றையும் இலவச பின்னிணைப்புகளையும் நுகர்கிறார்கள். அவைகளைப் பற்றி எழுதுவது குறித்த லாபநட்டங்களை ஆராய்ந்த பின்னால் அது பற்றி எழுதுகிறார்கள். அவ்வளவு தான். இதனால் பலர் தங்களை இலக்கியவாதிகள் என்றே நம்பிக்கொண்டு கெத்தோடு திரிகிறார்கள்.

அதில் அறமும் நேர்மையும் இருக்கிறது என்று எதிர்பார்த்தால், அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் தான் முடியும்.

அவர்களுக்கும் உள் அரசியல் இருக்கிறது. யாரைக் குஷிப்படுத்த வேண்டும், யாரைப் பயன்படுத்த வேண்டும் என்பதெல்லாம் உண்டு.

யாரைப் பற்றி எழுதக் கூடாது, எழுதினால் பலரைப் பகைத்துக் கொள்ள நேரிடும் என்ற அறிவுறுத்தல்களுடனும், கணக்கீடுகளுடனுமான நுண் அரசியலும் உண்டு.

இந்த நேர்மையும் அறமும் பற்றிய புரிதல் எதுவும் இல்லாமல், பட்டியலில் இடம் பெறுதலையும் விடுபடுதலையும் வெடி கொளுத்திய கொண்டாட்டங்களுக்கும், உள் நாட்டுக் கலவரங்களுக்குமான அடிப்படையான காரணமாகக் கொள்வது உண்மையில் புரிவதேயில்லை.

சரி, பட்டியலில் உங்கள் பெயர் வருவதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் எத்தனை பேர் உங்களுடைய சமகால எழுத்தாளர்கள் பற்றி பெருமையோடும் மகிழ்ச்சியோடும் எழுதியிருக்கிறீர்கள் என்று கேட்டால், பரஸ்பர முதுகுசொறிதல் தவிர்த்து பெரும்பாலும் எங்கேயும் இல்லை. இன்னொருவரை வாசித்தேன் என்பதைக் கூட வெளியில் சொல்ல விரும்பாதவர்கள், 'உதெல்லாம் நான் வாசிக்கிறேலை, ஆரோ சொன்னவை' என்று சொல்வதைக் கூட பெருமையாக நினைக்கிறவர்கள் தானே இங்கே இருப்பவர்கள் எல்லாம்?

இன்னொருவரைப் பற்றி சொன்னால், தங்ளை விடப் பெயர் பெற்றுவிடுவார்கள் என்றோ, 'இங்கே எல்லாம் நான் தான், எல்லாப் புகழும் என் ஒருவனுக்கே!' என்ற பொறாமையோடு தானே இவர்களில் பெரும்பாலோர் இருக்கிறார்கள்.

உங்களாலேயே இன்னொருவரை மனம் விட்டுப் பாராட்ட முடியாமல் இருக்கிற போது, உங்களைப் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறத்திற்கோ பண்புக்கோ முரணானது என்று ஒருநாளும் நினைக்க முடியவில்லையா?

இங்கே பெரும்பாலும் பட்டியல் போடுகிறவர்கள் தாங்களும் எழுதுகிறவர்களே. யானை பார்த்த குருடர்கள் போல, எந்தத் தேடலும் இல்லாமல், கண்ணில் பட்டதும், இலவச இணைப்பாக விஸ்கியோடு சேர்த்துத் தரப்பட்டதையும் மட்டும் இலக்கிய உலகமாக காணுகிற வியாதி இங்கே நிறைய உண்டு. 'நான் கற்றது கைம்மண்ணளவு' என்று கூட தன்னடக்கத்தோடு சொல்ல முடியாமல், எல்லாம் படித்த மேதாவிகள் மாதிரிக் கதை விடுவதால் தான் இத்தனை சிக்கலும்.

இதற்குள் எங்கள் யாழ்ப்பாணித் தமிழ்த்தேசிய எழுத்தாளர்கள் தொல்லை தனி. தங்களை சர்வதேசம் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கிறது, தங்களுக்கு எதிராக சர்வதேசம் சதி செய்கிறது, கிடங்குக்குள் கிடந்தாலும் சர்வதேசம் நினைத்துக் கதி கலங்குகிறது என்ற நினைப்போடு சதா திரிகிற யாழ்ப்பாணிகள் மாதிரி, இந்த எழுத்தாளர்களுக்கும் narcissism, paranoia, conspiracy theories எல்லாம் கலந்த கலவையான வியாதி உண்டு.

தன்னுடைய பெயர் விடுபட்டது திட்டமிட்ட செயல், இருந்தாலும் இலக்கிய வரலாற்றில் தனது பெயர் அழிக்க முடியாதது என்ற மாதிரி தமிழ்நதியும், தமிழ்த்தேசிய எழுத்தாளர்களை தவற விட்டதனால் கோபம் கொண்டு பேராசிரியரை முறம் கொண்டு தடுத்தாட் கொண்ட இன்னொரு புறநானூற்றுப் பெண்ணும் என ஒரே தமாஷ் தான்.

கனடா வந்த புதிதில், கப்பலில் சட்டவிரோதமாக தமிழர்கள் அகதிகளாக வந்து சேர்ந்த போது, தமிழர்களின் அமைப்பு என்று புலிவால் அமைப்பு ஒன்றை கனடியத் தொலைக்காட்சி பேட்டி எடுத்தார்கள். அவர்களின் உளறல் பேட்டியுடன் புலிகள் பற்றிய செய்தியும் வெளிவந்ததும், அன்றைக்கு இரவு அந்த அமைப்பு நடத்திய தொலைபேசிச் செய்தியில், 'கனடியத் தொலைக்காட்சி இந்தப் பேட்டியை ஒளிபரப்பியது, தமிழினத்திற்கு கிடைத்த வெற்றியாகவும், புலிகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகவும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்' என்று செய்தி சொன்னார்கள். அந்த அரசியல் அவதானிகள் வேறு யாருமில்லை. அந்தச் செய்தி எழுதி, வாசித்தவர்கள் தான்.

இப்படி யாழ்ப்பாணிகளுக்கு யார் எவரிடமிருந்து கிடைக்கிறதோ, அதெல்லாம் பிரச்சனையில்லை.

அங்கீகாரம் முக்கியம்! அது வைகோ, நெடுமாறனாகத் தான் இருந்தால் என்ன?

கொடுக்கத் தவறினால்...

மின் கம்பத் தண்டனை தான்!

ஓ! இப்போ புலி இல்லையா?

அப்போ, முறம் கொண்டு...!

ஊருக்குள்ளே உள்ள இலக்கிய உலகத்திற்குள்ளேயே இத்தனை குடுமிப்பிடிச் சண்டை இருக்கும்போது, புலன் பெயர் இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த மாதிரிக் கதை சொல்லும்போது, கலவரம் தொடங்குகிறது.

ஆசான் தனக்கு வேண்டப்பட்ட தொண்டரடிப் பொடிகளுக்கு அங்கீகாரம் வழங்குகிறார். கிடைத்தோர் புல்லரிக்கிறார்கள். கிடையாதோர் பொருமுகிறார்கள். ஆசான் எத்தனை பேரை வாசித்திருக்கிறார் என்று எவனாவது கேட்டிருக்கிறானா? ஆசானே நான் இதெல்லாம் வாசிப்பதில்லை என்று சொல்வதையே பெருமையாக நினைக்கிறவர். 'அற்பர்களின்' எழுத்தை அவர் வாசிப்பதேயில்லை. அதாவது, தன்னையும் தன் பக்தகோடிகளையும் தவிர்த்து!

நீ யார்ரா அளவுகோலோடு வாறதுக்கு? என்று கேட்கக் கூடிய தில் எத்தனை பேருக்கு இருக்கிறது?

ஆசான் இந்திய இராணுவத்தை நியாயப்படுத்தினார் என்ற பொங்குதமிழ் யாழ்ப்பாணி தமிழ்த்தேசிய உணர்விலக்கியர்கள் எல்லாம் இன்றைக்கு ஆசானின் விருந்தாளிகள். இன்றைக்கு ஆசானால் அங்கீகரிக்கப்பட்டோர் பட்டியலில் உள்ளவர்கள்.

முன்பு ஆசான் ஈழத்துக் கவிஞர்கள் பற்றி பட்டியல் போட்ட ஞாபகம். மற்றவர்கள் நினைக்காவிட்டாலும்,

ஆசானுக்கு அவருடைய தீர்ப்பே அறுதியானதும் உறுதியானதும் இறுதியானதும். சினிமா நடிகர்கள் கூட தங்கள் நற்பணி மன்ற நிர்வாகிகளை இப்படி புகழ்ந்தேத்துவதில்லை. ஆசான் தன் அடிப்பொடிகளை அவ்வப்போது குஷிப்படுத்திக் கொண்டே இருப்பார். அப்படி என்றால் தானே அவர்களும் ஆசானைப் பல்லக்கில் சுமந்து கொண்டு திரிவார்கள்.

இப்படி எதிர்காலத்தில், அதாவது தான் மறைந்த பின்னால், ஆசான் ஆகக் கூடியவர்கள் பட்டியல் ஒன்றை ஆசான் வெளியிட்டிருந்தார். பட்டியல் போடுவதும் தமிழ் இலக்கிய உலகின் தனிமனித சுதந்திரங்களில் ஒன்று... விருது வழங்குவது மாதிரி!

கருத்துச் சுதந்திரத்தில் கை வைத்தாலும், இதில் நீங்கள் கை வைக்க முடியாது.

இலக்கிய உலகில் நமக்குத் தெரியாத நுண் அரசியலா? ஆசானையும் கிள்ளி, இந்த கிளிப்பிள்ளைகளையும் தொட்டில் ஆட்டி, அவர்களை வாழ்த்தி ஆசானை அங்கீகரித்த மாதிரியும் இல்லாமல், ஆசானைத் திட்டப் போய் அவர்களை கோபப்படுத்திய மாதிரியும் இல்லாமல் குறுக்குச் சந்துகளுக்குள் பலர் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

நமக்கு இதெல்லாம் பிரச்சனை இல்லை.

ஆனால், இம்முறை அனோஜனின் பெயரைக் காணவில்லை. சோபா சக்தியின் புத்தகம் பற்றி அருண் அம்பலவாணர் அகழில் எழுதிய கட்டுரை தொடர்பாகத் திறந்த நெற்றிக்கண் இன்னமும் சாம்பர் பூத்தபடியே இருக்கிறது போல.

ரஷ்யாவில் பொலிட் பீரோவில் படங்களை அழித்த மாதிரி, ஆசானின் பதிவுகளில் அனோஜன் பெயர் நீக்கப்பட்டிருக்கிறதா என்பதை, பல் விளக்க முன்னால் ஆசானின் பக்கத்தை வாசித்து காலைக்கடன் கழிக்கும் இலக்கியவாதிகள் சொன்னால், தெரிஞ்சிக்க வசதியாக இருக்கும்.

சாருவுக்கு பட்டியல் வியாதி இருக்கிறதா என்று தெரிந்து கொள்ளும் அளவுக்கு சாருவை நான் வாசித்ததில்லை. ஆனால், தலைமைச்சீடன் அராத்து மட்டும் தான் பட்டியலில் இருப்பதாக நமது சிற்றறிவு. இலங்கைச் சீடர்கள் 'பேட்டியோவில்' துவைத்தெடுக்கப்பட்டதாக பேஸ்புக்கில் ஒரு பீலிங். இவ்வாறான ஒரு அயோக்கியனை நண்பனாகக் கூட நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். குருவாக ஏற்றுக் கொள்கிறவர்கள் அதற்கான விலையைச் செலுத்தத்தானே வேண்டும்.

அராத்துவும் பிறழ்வு இலக்கியத்தில் குருவை மிஞ்சிய சீடனாகவும் காட்டிக் கொள்ள முடியாது. ஒட்டுண்ணிக்கு பிழைப்பு ஒட்டிக் கொண்டிருக்கும் வரைக்கும் தான். சாருவுக்கும் செலவுக்குப் பணம் வேண்டுமே? துரத்தவும் முடியாது.

அராத்து தன் கதையை Non-fungible Token ஆக வெளியிட்டு காசு பார்த்ததாக உருட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து, சாருவுக்கும் நப்பாசை. போணியாகவில்லைப் போல. உள்ளூரப் பொறாமை. சீடன் தன்னை மிஞ்சினால், குரு அழித்து விடும் வரலாறுகளைக் காட்டி சாரு புலம்பியிருந்தார்.

நண்பர்களாகவும் காட்டிக் கொள்கிறார்கள். உள்ளூரப் பொறாமையிலும் வேகுகிறார்கள். எதுக்கடா இந்த நடிப்பெல்லாம்? நீ உனக்கே உண்மையாய் இல்லாதபோது, உன் இலக்கியம் எப்படிடா உண்மையோடு இருக்கும்?

எதற்கும் தமிழ் இலக்கிய உலகம் சாருவுக்கு சிலி நாட்டுக்கு திரும்பி வராத ஒற்றை டிக்கட் வாங்கி அனுப்பி விடுவது நல்லது. சாரு பாப்லோ நெருடா நினைப்பில் சிலி மீதான கனவில் இருக்கிறார். சிலியின் பாப்லோ நெருடா பெண்ணியவாதிகளால் அகற்றப்பட்டு விட்டார். பெருங்கனவோடு அங்கே போய் பாப்லோ நெருடா பற்றி விசாரிக்கப் போய் துவைத்தெடுக்கப்படட்டும். வடிவேலு கோவணத்தோடு ஓடிய மாதிரி படம் வரும்.

இந்த அங்கீகார வியாதி சனத்தொகையில் பெரும்பகுதியான கவிஞர்களுக்கு மட்டுமன்றி, நம்பர் வண்களுக்கும் இருப்பது தான் எங்கள் இலக்கிய உலகின் அவலம். இந்துவில் இருந்த ஆசைத்தம்பி தேசிமணியின் பதிவு ஒன்று கண்ணில் பட்டு உடனடியாகவே நட்பு அழைப்பு அனுப்பியிருந்தேன். அவர் தற்போது பேஸ்புக்கில் எழுதி வரும் கவிதைகள் வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

நம்பர் வண்கள் கூட தமிழ் இந்து தங்களைக் கணக்கெடுக்கவில்லையே என்று புலம்புகிறார்கள், அதற்காக கவிஞர் ஆசை மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள் என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

இது பொதுவாக மனநோய் என்று தான் நான் நினைக்கிறேன். பெரிய நினைப்புப் பேராண்டிகள் ஏடு இட்டோர் இயலில் நான் சொன்னது இங்கும் பொருந்தும். மற்றவர்கள் எங்களைப் பற்றிப் புகழ முன்னால் 'எங்களை நாங்களே அறிந்து கொள்ள வேண்டும்.'.

நான் ஒரு பெரிய இவன், என்னை ஒருத்தனும் கணக்கெடுக்கிறான் இல்லையே என்பது, ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு மூலையில் இருந்து புலம்பும் வீட்டுப் பெரிசுகளுக்கு உரியது. மதிக்கக் கூடிய அளவுக்கு நீ நடந்திருந்தால், அந்த மரியாதை கிடைத்திருக்கக் கூடும்.

தங்களுடைய புத்தகம் பற்றி விமர்சனம் எழுத வேண்டும் என்ற நச்சரிப்புக்குப் பயந்து எத்தனை பேர் ஓடி ஒளித்துக் கொண்டு இருக்கிறார்கள்? எத்தனை பேர் துன்பம் தாங்காமல் எழுதிக் கொடுக்கிறார்கள்?

இத்தனை அக்கப்போரும் ஆயிரம் பிரதி விற்க முடியாமல் அல்லல்படுகிற நம்பர் வண்களை உள்ளடக்கியது என்பது தான் இங்கே பெரும் வடிவேலுக் காமெடி. நியூ யோர்க் போஸ்டின் ஆறாம் பக்கத்துக் கிசுகிசுவில் கூட, இங்குள்ள இலக்கியர்கள் பற்றி இத்தனை அக்கப்போர் இருக்காது.

எல்லாமே சரக்கு இல்லாத வியாபாரிகளாகத் தான் இருக்கும் போல!

செயற்கை நுண்ணறிவு இன்றைக்கு விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் பயன் படுத்தப்படுகிறது. தற்போது பரவலாக பலரையும் ஓவியர்களாக்கி விட்டிருக்கிறது. முன்பு இதையெல்லாம் செய்வதற்கு போட்டோஷொப் அறிவு வேண்டும். இப்போது சில அறிவுறுத்தல் ஆணைகளுடன் ஒரு படத்தைப் பெற முடியும். அவை போட்டோ போன்ற யதார்த்த வடிவில் வேறு இருக்கின்றன.

இன்றைக்கு பேஸ்புக்கில் இது மலிந்து போயிருக்கிறது. தமிழில் இப்போதுள்ள கவிஞர்களை விட, இந்த ஓவியர்களின் எண்ணிக்கை கொஞ்ச நாளைக்குள் அதிகமாகி விடும்.

லட்சக்கணக்கான படங்களை தரவேற்றி, அவை பற்றிய விளக்கக் குறிப்புகளையும் இணைத்துக் கொண்டதும், செயற்கை நுண்ணறிவு அதை நினைவில் வைத்துக் கொண்டு, உங்கள் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அவற்றைப் பொருத்தி ஒரு படத்தைத் தருகிறது.

ஆனாலும், அதில் இருக்கும் செயற்கைத்தனமான வண்ணச் சேர்க்கையும், அங்கங்களின் பொருத்தமில்லாத விகிதாசாரப் பரிமாணங்களும், சரியாக அவதானிக்க முடிகிறவர்களுக்கு அதில் ஒரு செயற்கைத் தன்மையை தெளிவாகக் காட்டிக் கொண்டே இருக்கும்.

இப்போது வரைக்கும் செயற்கை நுண்ணறிவுக்கு சிக்கலாக இருப்பது விரல்கள். கொடுக்கப்பட்ட விபரங்களில் விரல்கள் சரியாக விபரிக்கப்படாததால், சில நேரங்களில் மூன்று கைகள், கால்கள், ஐந்துக்கு மாறுபட்ட விரல்கள் என்று இந்த உறுப்புகள் செயற்கை நுண்ணறிவுக்குச் சவாலாக இருக்கிறது. அதை வெற்றி கொள்ள முயற்சித்து வருகிறார்கள்.

இந்த செயற்கைநுண்ணறிவின் வருகை ஓவியர்களுக்கும், பட வடிவமைப்பாளர்களுக்குமான தேவையைக் குறைத்து வருகிறது. இப்படி செயற்கை நுண்ணறிவு பிழைப்பைக் கொடுப்பவர்களில் முதன்மையானவர்கள் இந்தத் துறையினர் தான்.

தற்போது ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்றால், அதன் அட்டைப்படத்திற்கு ஓவியரையோ, வடிவமைப்பாளரையோ அணுக வேண்டி ஏற்படும். தற்போது அதற்கான தேவை இல்லை என்றும், அதற்காகச் செலவிடுவது அனாவசியம் என்றுமான முதலாளித்துவச் சிந்தனையில் பலர் உள்ளார்கள். இருந்தாலும், ஒரு உயிருள்ள வடிவமைப்பாளனை செயற்கை நுண்ணறிவு ஒரு போதும் பிரதியீடு செய்ய முடியாது.

யாழ்ப்பாணிகள் அப்படி அல்ல. அவர்களின் சிந்தனை எப்போதுமே, விலையைக் ‘குறைக்க மாட்டியளோ?’ என்பதாகத் தான் இருக்கும். நல்லவன் ஒருவன் இருந்தால் அவனைக் கறந்து முடிப்பதற்கு யாழ்ப்பாணியைக் கேட்டுத் தான். சொந்த அனுபவம் எனக்கு நிறைய உண்டு.

அதிலும் தனக்கு திறமை இல்லாவிட்டாலும், தனக்கு இருப்பதாக நம்பிக் கொள்வது யாழ்ப்பாணியின் இயல்பு. எந்தத் துறை குறித்தும் அடிப்படை அறிவைக் கூட அறிந்து கொள்ள முயற்சிக்காமல், இன்னொருவரால் செய்ய முடிந்தால், தன்னாலும் செய்ய முடியும் என்று நம்புவது யாழ்ப்பாணிய இயல்பு.




தன்னைப் புத்திசாலியாகவும் மற்றவர்களை முட்டாள்களாகவும் நினைக்கும் இந்தச் சிந்தனையால், முட்டாள்களால் செய்யக் கூடியதை புத்திசாலியான தன்னால் செய்ய முடியும் என்பதால் தான், யாழ்ப்பாணிகளுக்குள் எத்தனையோ பத்திரிகைகள் வெளிவருகின்றன. செல்போன் வைத்திருப்பதால் ஊடகவியலாளர்கள் என்றும், வீடியோ கமெரா வைத்திருப்பதால் பாலு மகேந்திரா என்றும் நினைப்போர் யாழ்ப்பாணிகளுக்குள் அதிகம்.

அதற்கு அவர்கள் சொல்லும் விளக்கம், ‘கண் பார்க்க கை செய்யும்.’ என்பது தான். அடிப்படை அறிவு கூடத் தேவைப்படாத அறிவுக் கொழுந்துகள் அவர்கள்.

இதெல்லாம் எதற்கு?

தமிழ்நதி ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அதற்கான அட்டைப்பட வடிவமைப்பு அமெரிக்காவில் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இன்னொரு யாழ்ப்பாணத்தவர். அவர் அடிக்கடி செயற்கை நுண்திறன் படங்களை பேஸ்புக்கில் பிரசுரித்து பெண்கள் மத்தியில் பிரபலமானவர். அட்டைப்படத்தைப் பார்த்தால், அந்தப் பெண் ஏதோ மாற்றுத்திறனாளி போல, குறைபாடுகள் உள்ளவர் போலத் தோற்றம் அளிக்கிறது.

ஒரு வடிவமைப்பாளருக்குச் செலவிடும் பணத்தைச் சேமிக்கும் முயற்சி இது.

வடிவமைப்பு என்பது தனிக்கலை. ஓவியம் என்பது அதை விட அதிகம் திறமை தேவைப்படும் கலை. கணினி பற்றியோ, ஏன் எழுதத் தெரிவதாலோ இது குறித்த ரசனைகளும் திறமையும் இருக்கும் என்பதில்லை. Typography என்று எழுத்து வகைகளைப் பயன்படுத்தும் வடிவமைப்புக் கூடத் தனிக் கலை. கையில் கிடக்கிற பாமினி எழுத்தை வைத்துக் கொண்டு வடிவமைப்புக்குச் செய்யும் அநியாயம் அதிகம்.


‘உதுக்கு ஏன் வீணாய் காசைக் கொடுப்பான்? கண் பார்க்க கை செய்யுது!’ என்று போய் கைகளைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு இயந்திரம் செய்து

கொடுப்பது ஏற்பனவே செய்யப்பட்டவற்றில் இருந்து வெட்டி ஒட்டுவது தான். அது பிராங்கன்ஸ்டைன் பூதம் மாதிரித் தான் இருக்கும்.

உலகில் சிறந்த அழகியை உருவாக்க வேண்டும் என்று சிறிதேவியின் மூக்கையும், ஐஸ்வர்யா ராயின் முகத்தையும், சில்க்கின் கண்களையும் திரிஷாவின் உதடுகளையும், குஷ்புவின் உடலையும், நமீதாவின் மார்புகளையும் பொருத்தி உருவாக்க முயன்றால், கடைசியில், பெண்கள் கிடைக்காததாலோ, பெண்கள் பற்றிய பயத்தினாலோ, பாலியல் வரட்சியுள்ளோர் உடல் உறவுக்குப் பயன்படுத்தும் காற்றடிக்கும் றப்பர் பொம்மைகள் போல வந்து முடியும்.

அபத்தத்தில் வெளிவந்த பேராசிரியர் அ.ராமசாமியின் கருத்துப் பகிர்வு சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தது. நண்பர் வ.ந.கிரிதரன் அது குறித்துப் பல கேள்விகளை எழுப்பியிருந்தார். புலன் பெயர் இலக்கியம் பற்றிய முழுமையான புரிதல் பேராசிரியருக்கு இல்லை என்று புலன் பெயர் இலக்கியம் குறித்து நிறைய அறிந்திருந்தோர் பேஸ்புக்கில் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.



நேர்காணல் என்று வழமையான ரெம்பிளேட் கேள்விகளைக் கேட்டு, புலன் பெயர் இலக்கிய ஆளுமைகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று முடிக்கிற நோக்கம் எதுவும் எங்களுக்கு இருக்கவில்லை. எங்களுடைய கருத்துக்களை வலியுறுத்தி, பேராசிரியரை தண்ணீரால் ஞானஸ்நானம் செய்து, எங்களுடைய நம்பிக்கைகளுக்கு மாற்றி விட வேண்டும் என்றோ, எங்களைப் பற்றிப் பேராசியரை எழுத வைத்து தமிழ்நாட்டில் அங்கீகாரம் பெற்று விட வேண்டும் என்றோ, எந்த எண்ணமும் இருந்ததில்லை.

தமிழ்நாட்டு இலக்கியச் சூழல் பற்றிய அவரது கருத்துக்களைக் கேட்பது எங்களுடைய புரிதலுக்கும் தெளிதலுக்கும் பயன்படும் என்பதோடு, புலன் பெயர் இலக்கியம் பற்றி பேராசிரியரின் புரிதல் குறித்த எங்களுடைய நியாயங்களையும், ஆட்சேபங்களையும், ஆதங்கங் களையும் தெரியப்படுத்துவதும் தான் அந்த உரையாடலின் நோக்கமாக இருந்தது.

No holds barred! Nothing held back! என்று தலையங்கம் வைத்ததே, எந்த வித பாசாங்குகளும், எதிர்பார்ப்புகளும் இல்லாமல் பரஸ்பர புரிதலுக்கான திறந்த மனதுடனான உரையாடலைச் செய்ய வேண்டும் என்று நினைத்ததால் தான். அதற்கு எந்த விதமான தயாரிப்புகளும் எங்களிடம் இருந்ததில்லை. பேராசிரியர் எங்களுடனான சந்திப்புக்குச் சம்மதித்த போது, வெறும் சந்திப்பும், உரையாடலுமாகத் தான் அதை எதிர்பார்த்தோம். ஆவணப்படுத்தப்படக் கூடிய அளவுக்கு அது பெறுமதி மிக்கதாக அமைந்தது எங்களுக்கு மகிழ்ச்சி என்றாலும், வழமை போல சிலருக்கு பொறாமை தலைதூ க்கியிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

இலக்கிய உலகில் இதெல்லாம் சகஜம்பா!

ஆசான் தன்னுடைய கருத்துக்களே அறுதியும் இறுதியுமானவை என்று உளறும்போது, கீழே நின்று வாயைப் பிளந்தபடி பிரமித்து, அவர் போகிற போக்கில் அடித்து விடுகிற தவறான தகவல்களைக் கேள்விக்கு உள்ளாக்கக் கூடத் தகுதியும் திராணியும் அற்று, அவரோடு செல்பி எடுத்தால் பிறந்த நாளுக்குப் போடலாம் என்று முண்டியடிப்பவர்கள் போல, பேராசிரியரின் கருத்துக்களை பிரமிப்போடு நாங்கள் கேட்க முனையவில்லை.

அறிந்து கொள்வது எங்கள் சிந்தனைப் பரப்பை விசாலிக்கும் என்பதே நோக்கமாக இருந்ததால், பலவற்றை அறிந்து கொள்ள விரும்பினோம். பேராசிரியரை எல்லாம் தெரிந்தவராகப் பிரமிக்க வேண்டும் என்றோ, அவரை தமிழ் நாட்டு இலக்கியச் சூழலின் பிரதிநிதியாக நிறுத்தி, குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரை மூலையில் தள்ள வேண்டும் என்றோ நினைத்ததில்லை. பரஸ்பர கருத்துப் பரிமாற்ற நோக்கில், நாங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களைத் தர்க்கரீதியாகச் சொன்னோம். ஒரு பேராசிரியருக்கு அவரது அறிவும் தகைமையும் குறித்துத் தரப்பட வேண்டிய மரியாதையோடு தான் எங்கள் கேள்விகள் இருந்தன.

அவர் பதிவுகளுக்கு அப்பாற்பட்டு, off the record, எங்களுக்குச் சொன்னவற்றில் பல அபிப்பிராயங்களும், தகவல்களும் வெளியீட்டில் இடம் பெறவில்லை. பல சுவாரஷ்யமான உள்தகவல்களை அடக்கிய அந்தக் கருத்துக்களை வெளியிடாதது வெளியீட்டு அறத்தின் பாற்பட்டது.

அந்த உரையாடல் நிகழ்த்திய தாக்கத்தையும், சென்றடைந்த பரப்பையும், அடைந்த பரம்பலையும் பொறுக்க முடியாத பொறாமைக்கு கம்பனி பொறுப்பேற்காது. நம்ம கம்பனி இயங்குவதே இப்படித் தான். பொறாமை என்பது உங்கள் பிரச்சனை. எங்கள் பிரச்சனையோ, பழக்கமோ இல்லை. (அப்படி உங்கள் மீது பொறாமைப்பட என்ன இருக்கிறது என்று சொன்னால், பொறாமைப்பட வசதியாக இருக்கும்!)

வழமையில் என் படங்களைப் போடுவதில் அக்கறை கொள்ளாத நான் என்னுடைய படத்தைப் போட்டதற்கான காரணத்தைக் கூட, நெருக்கமான ஓரிருவருக்குச் சொல்லியிருக்கிறேன்.

பிரபலங்களோடு வளைந்து நெளிந்து குழைந்து செல்பி எடுத்து, நெருக்கம் காட்டுவது சுயத்தில் தலைநிமிர்ந்து நிற்க முடியாத எடுபிடி அல்லக்கைகளுக்கானது.

எங்களுக்கானது அல்ல!

நீண்ட காலமாக ஒரு ஃபேக் ஐடி பேஸ்புக்கில் உலாவி வந்தது. ரொறன்ரோ, கனடாவைச் சேர்ந்த ஒருவர் நந்தி வர்மன் என்ற பெயரில் எழுதிக் கொண்டிருப்பார். சொந்தமாக எந்தக் கருத்தையும் வைப்பவராக இல்லாமல், பின்னூட்டங்கள் விடுவது தான் இவருடைய தொழிலாக இருந்தது. இங்கேயுள்ள பலரின் நட்புப்பட்டியலில் இருக்கும் அவர் கழைக்கூத்தாடிகளின் குரங்கு மாதிரி வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தார். இத்தனைக்கும் எனக்குநட்புக்கோரிக்கைவிடுவதைத் தவிர்த்து விட்டிருந்தார். இத்தனை பேருக்கு ஃபேக் ஐடியோடு அழைப்பு விடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்டவர், எனக்கு அனுப்பாமல் இருக்கும் அளவுக்கு ஏதோ இருக்க வேண்டும் என்று சந்தேகம் இருந்தது.

இவரது கருத்துக்களைப் பார்த்த சிலர் அது நானாக இருக்குமோ என்று கூடச் சந்தேகப்பட்டிருந்தார்கள்.

'யாருக்குப் பயந்து?' என்று கேட்டிருந்தேன். புலி இருந்த காலத்திலேயே சொந்தப் பெயரில் எழுதிய எனக்கு, ஃபேக் ஐடியில் எழுத வேண்டிய தேவை ஒருபோதும் வந்ததேயில்லை.

அந்த ஃபேக் ஐடியில் இருக்கக் கூடியவர் என்று வேறு சிலரையும் அடையாளம் சொல்லியிருந்தார்கள். எனக்கும் குறித்த சிலரில் சந்தேகம் இருந்தது. ஆனால், அவரது பதிவுகளை முழுமையாக வாசித்ததில், ஆள் யாராக இருக்கும் என்பதில் எனக்கு ஒரு ஊகம் இருக்கிறது. என்னுடைய தீவிர வாசிப்பு பலரை அவர்களின் எழுத்தை வைத்தே அடையாளம் காண வைத்து விடுகிறது. வரிகளுக்கு இடையில் வாசிப்பது எனக்கு பிடித்தமானதாக இருப்பதால், என்னுடைய குறி பெரும்பாலும் தவறுவதில்லை. தற்போது நேரம் அதிகமாக இல்லா விட்டாலும், இந்தக் கழைக்கூத்தாடிக் குரங்கின் அடையாளத்தை விரைவில் கண்டுபிடித்து விடுவேன்.

இந்த அடையாளத்தை பேஸ்புக் கண்டுபிடித்தோ என்னவோ, அதே நபர் இப்போது 'ஒற்றை அவன்' என்ற பெயரில் நடமாடி வருகிறார். பெயர் மாறினாலும், குரங்குப் புத்தி மாறவில்லை. அதே கழைக்கூத்துத் தான்.

இருந்தாலும் நம்ம பேட்டைக்குள் வந்து குரங்குச் சேட்டைகளை வைத்துக் கொள்வதில்லை. வால் நறுக்கப்படும் என்ற பயமாக இருக்கலாம்.

எனது புத்தகங்கள் அமசோனின் வெளியிட்டபோது, என் நண்பர்கள் ஒரு இணையக் கூட்டம் நடத்தியிருந்தார்கள். என்னைப் பாராட்ட வேண்டும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். அதற்கும் எதையோ சொல்ல வந்த இந்த மந்திவர்மனும், தோழர் வேலன் எனப்படும் மட்டன் றோலரும் எதையோ புலம்பிவிட்டு ஓடித் தப்பியிருந்தார்கள்.

அதையெல்லாம் நான் நிற்கிற இடத்தில் ஏன் வந்து சொல்கிறார்கள் இல்லை என்பது தெரியவில்லை. 'வாடா, அடிக்க மாட்டேன்டா!' என்று சொன்னால் தான் வருவார்களோ என்னவா!?

இருந்தாலும் நம்ம பேட்டைக்குள் வந்து குரங்குச் சேட்டைகளை வைத்துக் கொள்வதில்லை. வால் நறுக்கப்படும் என்ற பயமாக இருக்கலாம்.

எனது புத்தகங்கள் அமசோனின் வெளியிட்டபோது, என் நண்பர்கள் ஒரு இணையக் கூட்டம் நடத்தியிருந்தார்கள். என்னைப் பாராட்ட வேண்டும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். அதற்கும் எதையோ சொல்ல வந்த இந்த மந்திவர்மனும், தோழர் வேலன் எனப்படும் மட்டன் றோலரும் எதையோ புலம்பிவிட்டு ஓடித் தப்பியிருந்தார்கள்.
அதையெல்லாம் நான் நிற்கிற இடத்தில் ஏன் வந்து சொல்கிறார்கள் இல்லை என்பது தெரியவில்லை.

'வாடா, அடிக்க மாட்டேன்டா!' என்று சொன்னால் தான் வருவார்களோ என்னவா!?

சென்ற அபத்தம் இதழில் அவதூறு இலக்கியம் பற்றி எழுதியிருந்தேன். இந்த வானரம் அதை வாசித்ததோ என்னவோ, அட்டைப்படத்தை மட்டும் பார்த்திருக்க வேண்டும்.

என்னுடைய பக்கத்திற்கு வராமல், அபத்தம் இதழைப் பகிர்ந்து கொண்ட ஒரு நண்பரின் பக்கத்தில் போய், 'அவதூறு செய்வதை விட இவர்களால் மேலதிகமாக என்ன செய்து விட முடியும்?' என்று பின்னூட்டம் விட்டிருந்தார்.

'அதைச் சொந்தப் பெயரில் செய்ய முடியும்' என்று அதற்குப் பதில் போட்டிருந்தேன்.

'அவதூறுகளை மட்டும் அள்ளித் தின்னும் அடிமைக்கூட்டம் ஒன்று பின்னால் இருக்கும்வரை, சொந்தப் பேரோ, சோத்துக்குப் பெற்ற பேரோ முக்கியமா?' என்று பதில் வந்தது.

அதற்கும் 'அவதூறை அள்ளித் தின்னிற அடிமைக்கூட்டத்திற்கும் சொந்தப் பெயரில் அதைச் செய்யிற துணிவு இருக்கே? அதிமேதாவிக்கு மட்டும் சோத்துக்குப் பெறாத பேக் ஐடி வேண்டிக் கிடக்கு!' என்று சிரித்திருந்தேன்.

அதன் பின்னால் ஆளையே காணோம். தலைக்கறுப்பைக் காணவில்லை.

அந்தப் பின்னூட்டத்தை என் பக்கத்தில் போட்டு, 'வா கண்ணா வா, மந்தி வர்மா? இதைக் கூட வேறே எங்கேயோ போய் தானே பீலா விட முடிகிறது' என்றிருந்தேன்.

இவ்வாறான குரங்கு வித்தை காட்டும் கோமாளிகளை நான் ஒருபோதும் entertain பண்ண

விரும்புவதில்லை. அவர்களை நாங்கள் பொருட்படுத்துகிறோம் என்ற எண்ணமே அவர்களை தொடர்ச்சியாக குரங்குச் சேட்டை பண்ணச் செய்கிறது.

கருத்து இருந்தால் அதை நியாயப்படுத்த முடிந்தால் சொல்லு. மற்றும்படி மதகுக்கு பின்னால் நின்று கூ காட்டும் பழக்கத்திற்கு இடம் அளிக்க முடியாது.

இதுவரையில் இந்த ஒற்றை அவன் விட்ட பின்னூட்டங்களுக்கு யாரும் விருப்புக்குறி இட்டதைக் காணவில்லை. இவ்வாறான கோமாளிகளுக்கு தங்களை யாரும் அடையாளம் கண்டுவிட முடியாது என்ற நினைப்பு இருக்கும் அளவுக்கு தங்களைப் புத்திசாலிகளாக நினைத்துக் கொள்வது உண்டு. இவர்களை அதிகம் பேச விட்டால் தான் அவர்கள் தங்கள் பற்றிய தடயங்களை விட்டுச் செல்வார்கள். அதற்கான என்னுடைய யுக்திகள் சில உண்டு. அதை நான் இங்கே இப்போதைக்குச் சொல்லப் போவதில்லை.

இப்போதும் சம்பந்தம் இல்லாத இடங்களில் போய், சம்பந்தம் இல்லாத ஏதோ ஒன்றை உளறிவிட்டு தலை தெறிக்க ஓடித் தப்புவது தான் வேலை.

எந்த வித சரக்கும் இல்லாமல், போகிற இடங்களில் குட்டிக்கரண வித்தை காட்டும் இது போன்ற கோமாளிகள் யார் போன்றவர்கள்?

ஊரில் சில கோமாளிகளுக்கு யாராவது பெண்கள் மீது மையல் இருக்கும். அந்த மையலை வெளிக்காட்டக் கூடிய அளவுக்குத் தன்னம்பிக்கை இருக்காது. ஆனால், அரிப்பு இருக்கும். பயத்தில் என்ன செய்வார்கள்? அந்தப் பெண்கள் தெருவில் போகும் போது, பற்றைக்குப் பின்னால் நின்று கூ காட்டி விட்டு, தலை தெறிக்க ஓடுவார்கள். தங்களை அடையாளம் கண்டுவிடுவார்களே என்ற பயம்.

இது இந்தக் கோமாளிகளுக்குச் சுய இன்பம். மற்றவர்களுக்கு வேடிக்கை.

கருத்தைச் சொன்னால், அதை நியாயப்படுத்த துணிவு வேண்டும்.

இப்படியான குரங்குகளை

**இப்போதும் சம்பந்தம் இல்லாத இடங்களில் போய், சம்பந்தம் இல்லாத ஏதோ ஒன்றை உளறிவிட்டு தலை தெறிக்க ஓடித் தப்புவது தான் வேலை.**

**எந்த வித சரக்கும் இல்லாமல், போகிற இடங்களில் குட்டிக்கரண வித்தை காட்டும் இது போன்ற கோமாளிகள் யார் போன்றவர்கள்?**

**ஊரில் சில கோமாளிகளுக்கு யாராவது பெண்கள் மீது மையல் இருக்கும். அந்த மையலை வெளிக்காட்டக் கூடிய அளவுக்குத் தன்னம்பிக்கை இருக்காது. ஆனால், அரிப்பு இருக்கும். பயத்தில் என்ன செய்வார்கள்? அந்தப் பெண்கள் தெருவில் போகும் போது, பற்றைக்குப் பின்னால் நின்று கூ காட்டி விட்டு, தலை தெறிக்க ஓடுவார்கள். தங்களை அடையாளம் கண்டுவிடுவார்களே என்ற பயம்.**

**இது இந்தக் கோமாளிகளுக்குச் சுய இன்பம். மற்றவர்களுக்கு வேடிக்கை.**

எல்லாம் வேடிக்கை பார்க்க நமக்கு நேரம் கிடையாது.

நம்ம ஏரியா பக்கம் வந்து, ஆப்பை இழுக்கும்போது, இந்தக் மந்தி வர்மக் குரங்கு கவனமாக இருக்கட்டும்.

கடந்த அபத்தத்தில் தமிழ்நாட்டுத் தொலைக்காட்சியில் பரிசு பெற்ற கில்மிஷாவை யாழ்ப்பாணிகள் தேர் இழுத்தது பற்றி எழுதியபோது, இன்றைக்கு தேரிலும் பல்லக்கிலும் சுமக்கிற இந்தச் சமூகம் காறித் துப்ப அதற்கு நேரமும் எடுக்காது. கூச்சமும் இருக்காது என்று எழுதியிருந்தேன்.

அவர் இலங்கை ஜனாதிபதியோடு செல்பி எடுத்தது தான் தாமதம். ஈரம் காயமுன் யாழ்ப்பாணிகள் துரோகி ஆக்கி விட்டார்கள்.

யாழ்ப்பாணிகள் தூக்கிக் கொண்டாடிய எல்லாருமே இப்படித் தான் துரோகி ஆக்கப்பட்டிருந்தார்கள்.

பிடிபட்ட பிரபாகரனை
பிரேமதாசா ரோகண விஜேவீரவுக்கு செய்த மாதிரி,
டிவியில் காட்டியிருந்தால்...

எல்லாப் பிரச்சனையும்
எப்போதோ முடிந்திருக்கும்.

யாழ்ப்பாணிகளே சாதி சொல்லித் திட்டியிருப்பார்கள்.

•••

பிரேமதாசா தேன்நிலவு காலத்தில்
கிட்டுவின் திருமணம்
கொழும்பு ஹோட்டலில் நடைபெற்றது.

சந்திரிகா பேச்சுவார்த்தை காலத்தில்
மதிவதனி குடும்பம்
டென்மார்க்கில் இருந்து
கட்டுநாயக்க ஊடாக
வன்னிக்கு வந்தது.

மகிந்தவிடம் எழுபது கோடி வாங்கி
ரணிலை விழுத்தித் தான்
புலி தன் தலையிலும்
மண்ணைப் போட்டது.

இப்ப கில்மிஷாவும்
GTF ம்
ஒரு வெறும் போட்டோ தானேடா எடுத்தாங்கள்?

•••

பொங்கலுக்கு ஈழப்பிரகடனம் என்ற
புலுடாவை பல தடவைகளும்...

நாலு இயக்கத் தலைவர்கள்
கை கோர்த்த படத்தையும்...

நம்பிக் கனவு கண்ட கோஷ்டிக்கு...

எந்த அதிகார பலமும் இல்லாத
இரண்டு தரப்பு கையெழுத்து வைத்த
இமாலயப் பிரகடனம் என்ற
ஒரு வெறும் கடுதாசிப் பேப்பரும்...

பக்கத்தில் நின்று எடுத்த
இரண்டு போட்டோவும்...

மலரப் போகும் தமிழீழத்தை
தடுத்து நிறுத்தி விடப் போகிற

கோபத்தை ஏற்படுத்துகிறது.

•••

தமிழரசுக்கட்சியின் தலைவர் தெரிவு அடிதடியில் முடியும் அளவுக்கு மணியான கேளிக்கை நிகழ்வு.

தமிழரசுக் கட்சி ஜனநாயக அடிப்படையில் வாக்களிப்பு மூலமாக ஒரு தலைவரைத் தெரிவு செய்வது ஒரு வளர்ச்சி தான். ஆனால், அது சுமந்திரன், சிறிதரன் என்று வந்து முடிந்தது இனத்தினதும் தமிழரசுக் கட்சியினதும் வங்குரோத்தைத் தான் காட்டுகிறது.

உசுப்பேத்து அரசியலில், வெத்துவேட்டு வாய்ச்சவடால்களை அரசியல் என்று நம்பிக் கொண்டிருக்கும் கூட்டத்திற்கு, சிறிதரன் பெரும் நம்பிக்கை நட்சத்திரம். பாராளுமன்றத்தில் 'எச்சரிக்கை, காட்டம், சவால்' விடவும், 'மீண்டும் ஆயுதம் ஏந்த நேரிடலாம்' என்று புலுடா விட்டால் போதும். யாழ்ப்பாணிக்கு ஒரே குஷிதான்.

அதற்குள் சிவபூமிக்குள் நுழைந்திருக்கும் சங்கிகளின் சம்பளப்பட்டியல் கூட்டம், சைவச் சிறிதரனை முதன்மைப்படுத்திக் கொண்டிருந்தது. தமிழ்த்தேசியத்தின் காவலராக சிறிதரனைக் காட்டியதன் நோக்கமே, சங்கி அரசியலின் உள்நோக்கத்துடன் தான். அதிலும் சுமந்திரன் கிறிஸ்தவர்.

மற்றும்படி, புலன் பெயர் தரப்பில் இன்னமும் சிறிதரன் நம்பிக்கைக்குரிய தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இன்றைக்கும் கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் ஆகிய முடக்குக் கழுதைகள் மீது தான் புலன் பெயர்ந்தவர்கள் காசைக் கொட்டத் தயாராக இருக்கிறார்கள்.

மறுபுறத்தில், கனடியத் தமிழ்க் காங்கிரஸ் போன்ற கோட்டுப் போட்ட கூட்டம் சுமந்தரன் சார்பானவையாகத் தான் இருந்தன.

சுமந்திரன் ஆங்கிலம் தெரிந்த சட்டத்தரணி என்பது சிறிதரனுக்கு மைனஸ் பொயின்டாக இருந்ததால், அவரும் 'இங்கிலிசு தெரிஞ்சால் தான் தலைவர் ஆக வேணும் எண்டா, செல்வா, ஜி.ஜி காலத்திலேயே விடுதலை அடைஞ்சிருப்பம்.

**இப்படியாக தேர்தல் முடிந்து சிறிதரன் வெற்றி பெற்றிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அவரது ஆதரவாளர்கள் கொண்டாடியது போல, புலன் பெயர் நாடுகளில் பெரிய குத்திமுறியல்கள் இடம் பெற்றதில்லை. காரணம், கஜேந்திரகுமாரைத் தான் புலன் பெயர் சமூகம் விடுதலை வீரனாக படம் காட்டிக் கொண்டிருக்கிறது. அதற்குப் போட்டியாக சிறிதரன் வருவது பலரின் பிழைப்பில் மண்ணைப் போடப் போகிறது என்ற பயம்.**

**சுமந்திரன் வரவேண்டும் என்பது பலரின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனாலும், சுமந்திரன் இந்த இடத்திற்கோ, இந்த அரசியலுக்கோ உரியவர் இல்லை. தமிழ் வாக்கு அரசியல் உசுப்பேத்தலை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு யதார்த்த நிலை பற்றி எந்த அக்கறையும் இல்லை. பாராளுமன்றத்தில் காட்டம், எச்சரிக்கை என்று லங்காசிறியில் வந்தால் போதும்.**

தலைவர் என்ன இங்கிலிசும் சட்டமும் படிச்சோ எங்கட பிரச்சனையை உலகத்திற்குத் தெரியப்படுத்தினவர்? தலைவர் பிரபாகரன் போல தமிழினத்தை உலகறியச் செய்வேன்' என்று சொல்லியிருந்தார். சர்வதேசம் யாழ்ப்பாணத்தை எப்போதும் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிற விசயமும், புலன் பெயர் யாழ்ப்பாணிகள் கொடி பிடித்தே கவனஈர்ப்புச் செய்கிற விசயமும் இவருக்குத் தெரியாது போல!

இப்படியாக தேர்தல் முடிந்து சிறிதரன் வெற்றி பெற்றிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அவரது ஆதரவாளர்கள் கொண்டாடியது போல, புலன் பெயர் நாடுகளில் பெரிய குத்திமுறியல்கள் இடம் பெற்றதில்லை. காரணம், கஜேந்திரகுமாரைத் தான் புலன் பெயர் சமூகம் விடுதலை வீரனாக படம் காட்டிக் கொண்டிருக்கிறது. அதற்குப் போட்டியாக சிறிதரன் வருவது பலரின் பிழைப்பில் மண்ணைப் போடப் போகிறது என்ற பயம்.

சுமந்திரன் வரவேண்டும் என்பது பலரின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனாலும், சுமந்திரன் இந்த இடத்திற்கோ, இந்த அரசியலுக்கோ உரியவர் இல்லை. தமிழ் வாக்கு அரசியல் உசுப்பேத்தலை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு யதார்த்த நிலை பற்றி எந்த அக்கறையும் இல்லை. பாராளுமன்றத்தில் காட்டம், எச்சரிக்கை என்று லங்காசிறியில் வந்தால் போதும்.

சுமந்திரனின் யதார்த்த இணக்க அரசியல் யாழ்ப்பாணிகளுக்குச் சரிப்பட்டு வராது. அத்துடன் சுமந்திரனின் தன்னிச்சையான இறுமாப்புத் தனம் (arrogance) அவருக்கு நண்பர்களைக் கொண்டிருக்கவும் விடவில்லை.

யாழ்ப்பாணியின் தமிழ் அரசியலின் நிலைமையும் எதிர்பார்ப்பும் சுமந்திரனுக்கு உரியவை அல்ல.

அவன் கொலைகாரன், இனத்தின் எதிர்காலத்தை அழிச்சவன், கள்ளன், அயோக்கியன், போராட்டத்திற்குச் சேர்த்த காசைச் சுருட்டினவன் எண்டாலும், கடைசி மட்டும் கொள்கையை விடேலைத் தானே, தமிழ்த் தேசியத்தோட தானே நிக்கிறவன், எங்களுக்காண்டி கதைக்கிறவன். இப்படித் தானே நாங்கள் எங்கள் தலைவர்களைத் தெரிவு செய்கிறோம்.

குடிகள் எவ்வழி, தலைவன் அவ்வழி. அவ்வளவு தான்.

இப்போது சுமந்திரன் தன்னைச் செயலாளராக்க வேண்டும் என்று முரண்டுபிடிப்பதாக செய்திகள்.

தமிழரசே ஒரு காலாவதியான கட்சி. இந்தத் தேர்தல் நடக்காவிட்டால் தமிழரசைப் பற்றி யாருமே அலட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இப்போது கூட்டமைப்புக் கட்சிகளும் விலகிப் போய் வாக்குகள் பிரிய, சனத்தொகைக் குறைவால் யாழ்ப்பாணத்திற்கு ஒதுக்கப்படும் ஆசனங்களின் எண்ணிக்கையும் குறைய, தமிழரசின் மரணம் வெகுதொலைவில் இல்லை.

ஆனால், தமிழர் அரசியலையும், அழிந்து போன மக்களையும் வைத்து பலர் இன்னமும்

பணம் சேர்க்கப் போகிறார்கள். அவ்வளவு தான்.

அதற்கு, காட்டம், இடித்துரைப்பு செய்து தானாக வேண்டும். இல்லையேல் இதே கூட்டமே சிறிதரனை துரோகி ஆக்கி விட்டு அப்பால் நகர்ந்து விடும்.

•••

நடிகர் விஜய் கட்சி ஆரம்பித்திருக்கிறார். தமிழக வெற்றி கழகத்தில், விகாரப் புணர்ச்சியில் க் மிஸ்ஸிங் என்பது பேஸ்புக்கில் பெரிய பிரச்சனை.

பேஸ்புக் கருத்து முதல்வாதிகள் ஒரு போதுமே பிரச்சனை இல்லை. அவர்கள் அடுத்த வாரம் இதையெல்லாம் மறந்து விடுவார்கள்.

விஜயம் அரசியலில் நுழையும் நோக்கத்தில் சொன்ன எதற்கோ 'ஜோசப் விஜய்' என்று அறச்சீற்றம் கொண்ட எச்.ராஜா அடக்கி வாசிக்க, எஸ்.வி.சேகர், சுமந்த் ராமன் வரவேற்புக் கொடுக்க, பின்னால் யார் இருப்பார் என்று ஊகிக்க பெரும் அறிவு தேவையில்லை.

சங்கிகள் தெளிவாக இருக்கிறார்கள். தமிழர்களுக்குத் தான் க் ஒரு பிரச்சனை.

வாழ்த்துகளா, வாழ்த்துக்களா என்பதிலேயே அடிச்சுக் கொள்கிற தமிழனுக்கு, க் எப்போதும் பிரச்சனை தான்.

நல்ல காலம், நானும் என் நண்பன் பிராங்கிளினும் நண்பர்களிடம் கையேந்தி வாங்கிய பணத்தில் முன்னாசனத்தில் முந்தியிருந்த பார்த்த, 'நீதிக்கு தலை வணங்கு' வந்த காலத்தில் பேஸ்புக் இருக்கவில்லை.

தி.மு.கவை தோற்கடிப்ப தாயின், அதற்குக் கிடைக்கும் வாக்குகளைப் பிரிப்பதன் மூலமாகத் தான் என்ற நோக்கில் தான் இத்தனை உதிரிக் கட்சிகளும் களம் இறக்கப்படுகின்றன. கொடுந்தமிழ்த் தேசியம் பேசுகிற சீமான் முதல், ஊழல் என்பதை முதன்மைப்படுத்தும் விஜய் வரைக்கும் கோஷம் அதுதான்.

ஆனால், இப்படி யார் அரசியலுக்கு வருவதாயினும் அதிகமாகத் துள்ளிக் குதித்து

**சங்கிகள் தெளிவாக இருக்கிறார்கள். தமிழர்களுக்குத் தான் க் ஒரு பிரச்சனை.**

**வாழ்த்துகளா, வாழ்த்துக்களா என்பதிலேயே அடிச்சுக் கொள்கிற தமிழனுக்கு, க் எப்போதும் பிரச்சனை தான்.**

**நல்ல காலம், நானும் என் நண்பன் பிராங்கிளினும் நண்பர்களிடம் கையேந்தி வாங்கிய பணத்தில் முன்னாசனத்தில் முந்தியிருந்த பார்த்த, 'நீதிக்கு தலை வணங்கு' வந்த காலத்தில் பேஸ்புக் இருக்கவில்லை.**

**தி.மு.கவை தோற்கடிப்ப தாயின், அதற்குக் கிடைக்கும் வாக்குகளைப் பிரிப்பதன் மூலமாகத் தான் என்ற நோக்கில் தான் இத்தனை உதிரிக் கட்சிகளும் களம் இறக்கப்படுகின்றன. கொடுந்தமிழ்த் தேசியம் பேசுகிற சீமான் முதல், ஊழல் என்பதை முதன்மைப்படுத்தும் விஜய் வரைக்கும் கோஷம் அதுதான்.**

ஆர்ப்பாட்டம் பண்ணுவது உடன்பிறப்புகள் தான்.

தங்களுடைய அரசியல் சமூகநீதியில் கட்டப்பட்டிருந்தால், மக்கள் தங்களோடு நிற்பார்கள் என்று தெரிந்திருக்க வேண்டும்.

இவர்கள் குத்தி முறிவதன் காரணம்?

திமுகவின் Achilles heel ஊழலும் வாரிசு அரசியலும் என்பது சங்கிகளுக்கும் தெரியும்.

முண்டு கொடுக்கும் உடன்பிறப்புகளுக்கும் தெரியும்.

ஊழல் குற்றச்சாட்டில் அமைச்சரைக் கைது செய்ததன் பின்னணியே ஊழல் பற்றி மக்கள் மனதில் ஆழமாக ஊன்றுவதற்கு.

இளைய தளபதியை, தளபதியின் புதல்வனுக்கு நேர் எதிராக நிறுத்துவதும் வாரிசு அரசியலை குத்திக் காட்ட.

மற்றும்படி, விஜயின் முயற்சி ஒரு long shot.

ஏற்கனவே விஜயகாந்த் முதல் கமல் வரையும் பல சக்கடத்தார்கள் ஏறிய குதிரை தான்.

உடன் பிறப்புகளை விட, அதிகம் கலக்கம் கொள்ள வேண்டியது, நம்ம அதிபர்!

மற்றும்படி யாரும் பெரும் கவலையும் பயமும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

•••

எம்ஜிஆரின்
மனைவி, துணைவி.

துணைவியின்
உடன்பிறவாச் சகோதரி.

உடன்பிறவாச் சகோதரியின்
பெறாமகன்.

இவர்களை
வானத்தையும் நிலத்தையும்
பார்த்து வணங்கிய அடிமைகள்.

போதாதற்கு மூன்று தலைமுறை
முதல்வர்கள்.

ராதிகாவின் காதலர்,
கணவர்.

டி.ராஜேந்தர் முதல் சீமான்.

ராமராஜன் முதல் கமல் வரைக்கும்.

இவர்கள் எல்லாம் முதல்வராக
வரமுடிகிற, வரமுடியும் என்று
நம்புகிற
ஒரு மாநிலத்தில்...

இன்னொருத்தன் கட்சி ஆரம்பித்தால்
ஜனநாயகம் என்ன அப்படி
குடிமுழுகியா போகப் போகிறது?

அதைத் தீர்மானிக்கப் போவது...

வேட்டியும் சேலையும்
டிவியும் கிரைண்டரும் வாங்கி
முடிவு செய்யும்
வாக்காளப் பெருமக்கள் தானே?

கக்கனும் காமராஜரும்
நல்லக்கண்ணுவும்
நமக்குத் தலைவராகணும்னு
சொல்லிக் கொண்டே
டி.டி.தினகரனுக்கும் எடப்பாடிக்கும்
வோட்டுப் போடுற பூமிடா இது!



# சொல்ல மறந்த கதை:01

ஒருவாறாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்துவிட்டதில், மனம் சற்று ஆறுதலாக இருந்தது அவனுக்கு. ஆயினும், இராணுவத்தினரின் குணவியல்புகள் குறித்து அச்சமடையவே செய்தான். தூ ரத்தே ஷெல் அதிர்வுகளும் துப்பாக்கி வெடியோசைகளும் மெலிதாகக் கேட்டவண்ணம் இருந்தன. அவன் சுற்றுமுற்றும் பார்க்கிறான். அவனைப்போலவே பல குடும்பங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைவிட்டு வெளியேறி, இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிக்குள் தஞ்சமடைந்திருந்தன. அந்தப் பரந்த வயல் வெளியில் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. உயிரோடு தப்பினால் போதுமென்று, உடுத்த உடுப்போடும் ஒருசில சிறு பொதிகளோடும் அக்குடும்பங்கள் வந்திருந்தன. வேறு பல குடும்பங்கள் உடுத்த உடையோடு மட்டுமே வந்திருந்தன. ஒவ்வொரு குடும்பத்தவர்களின் முகங்களிலும் அப்பிக்கிடந்தது பசிக்களை. அவனுக்குள்ளும் பசி நிறைந்திருந்தது. பக்கத்தில் அவனோடு ஒட்டியபடி இருந்தாள் அவனது மனைவி. அவளது மடியில் இரண்டுவயதுக் குழந்தை, புற நிகழ்வுகள் எதுவுமற்ற நிலையில், கண்களை மூடியபடி... உறக்க நிலையில் இருந்தது.

அவன் தன்மனைவியையும் மனைவி மடியில் படுத்திருக்கும் தன் குழந்தையையும் உற்றுப் பார்க்கிறான். மன ஆழத்திலிருந்து துக்கம் பீறிட்டு எழ முனைகிறது அவனுக்கு. தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு முன்பாக அழுது விடுவேனோ... என்ற மனப்பதகளிப்பு அவனுள் உருவாக, அவன் தன்மனதின் சிந்தனைகளை வேறு வழிகளில் திருப்ப முனைகிறான்.

'ஆமியின்ர கட்டுப் பாட்டுக்குள்ள வந்தாச்சு. இனி அடுத்தது என்னவாகுமோ...?' என்ற மனவோட்டமே எல்லோர் மனங்களிலும் வியாபித்திருந்தது. வயல்வெளியில் குழுமியிருந்த மக்கள் மத்தியில், ஆங்காங்கே தமிழ்மொழி தெரிந்த இராணுவச் சிப்பாய்கள் சிலர், மக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். ஆயினும், அங்கு குழுமியிருந்த மக்களைச் சுற்றி, பல இராணுவத்தினர் துப்பாக்கிகள் சகிதம் காவல் காத்தபடி நின்றார்கள்.

குழுமி நின்ற மக்களிடையே சிறு சலசலப்பு! அவன் திரும்பிப் பார்த்தான். இரு இராணுவத்தினர் ஒரு பெரிய கடதாசிப் பெட்டியைத் தாங்கிப் பிடித்தபடி...

வந்து கொண்டிருந்தார்கள். இன்னொரு சிப்பாய் அதனுள்ளிருந்து ஒருபிஸ்கட் பெட்டியோடு ஒரு சிறிய தண்ணீர்ப் போத்தலையும் எடுத்து, குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் இருக்கும் இடங்களைத் தெரிவு செய்து, வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

அலெக்ஸ் பரந்தாமன்

அவன் தன் மனைவியின் மடியில் கிடக்கும் குழந்தையின் முகத்தைப் பார்க்கிறான். ஒரு பத்து நிமிடத்துக்கு முன்பாக, பசியில் அழுத குழந்தை, அதன் அழுத களையில் உறங்கிக் கொண்டிருந்தது. உறக்கம் கலைந்து எழுந்துவிடின், மீண்டும் பசியில் அழத்தொடங்கிவிடும்.

என்ன செய்வது...?

இராணுவத்தினரிடம் வலியச் சென்று வாங்குவதா? அவனது உள்மனம் மறுத்துக் கொண்டது. காரணம், வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்தபோது, சிங்கள அரசுக்கு எதிராக, ‘எங்கள் தலைவன் பிரபாகரனே...?’ என்று உரக்கக் கோஷம் போட்ட அவனது சுயகௌரவம் விடவில்லை. இவர்கள்தானே எங்கள் வாழ்வையும் வளத்தையும் அழித்தார்கள். ஒட்டுமொத்தமாக இடம்பெயர வைத்தார்கள். உதிரத்து உறவுகளைப் பலியெடுத்தார்கள். இவர்களிடம்போய் நான் கையேந்துவதா? சீச்சி... என்ன மானங்கெட்ட வேலை. பசி கிடந்தாலும் பட்டினியாகச் சாகிறது எவ்வளவோ மேல்.

ஆனால், குழந்தை...? அவனால் மேற்கொண்டு சிந்திக்க முடியவில்லை. திரும்பி மனைவியைப் பார்த்தான். அவள் அந்த இராணுவத்தினர் நிற்கும் இடத்தை நோக்கியபடி இருப்பது தெரிந்தது. அவளது விழிகளில் ஓர் ஏக்கம்.

‘குஞ்சு...’ அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

‘ஆமிக்காரர் விசுக்கோத்தும் தண்ணிப் போத்திலும் குடுத்துக்கொண்டு வருகினம்...’

‘ம்...’ அவளது பதில் பட்டும் படாமலும் வெளிப்பட்டதை அவன் அவதானித்தான். இராணுவத்தினர் அவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் நின்றபடி... ஒரு முதியவருக்கு பிஸ்கெற் பையையும் தண்ணீர்ப்போத்தலையும் வழங்கிக் கொண்டிருந்தனர்.

‘இஞ்சரப்பா...’

‘என்ன குஞ்சு...’

‘நீங்கள் ஒருக்காப்போய் எங்களிட்டை ஒரு சின்னப்பிள்ளை இருக்கெண்டு சொல்லி, விசுக்கோத்தும் தண்ணிப்போத்திலும் கேட்டுப் பாருங்கோவன்...’

அவன் திகைத்துப் போனான்.

எங்கும் இருளாக இருந்தது. ஆம்! இருளேதான்.

இந்த இருளைப் போக்குவதற் கென்றுதானே அவர்கள் போராடப் புறப்பட்டார்கள். பிறகேன் இப்படிப் பின்வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். எமது போராட்டம் ஏன் இப்படி ஆனது? அமைப்புக்குள் அப்படி என்னதான் நடந்தது? பகையை விரட்டும் துணிவு படுகுழிக்குள் விழுந்தது எப்படி? எத்தனை கனவுகள் கண்டோம்? எத்தனை எதிர்பார்ப்புகளோடு இருந்தோம்? இறுதியில், கானலாகிக் கசங்கி ஒரு கடற்கரைவெளியில் குடும்பத்தோடு குந்தவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது?

பகைவன் என்று யாரை வெறுத்து ஒதுக்கினோமோ அவனிடமே இன்று சரணடைய வைத்த சதி என்ன?

‘என்னது... நானா?’

அவனது பதில் அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவள் அவனை ஒருமாதிரியாகப் பார்த்துவிட்டு, அவன் காதோரம் மெதுவாகக் கூறினாள்.

‘இஞ்சை பாருங்கோ... இப்ப நாங்கள் அவங்கட கட்டுப்பாட்டுக்கை வந்திட்டம்... எண்டது ஞாபகமாக இருக்கட்டும். அங்கை ஊரில இருக்கேக்கை இயக்கத்தைத் தூக்கிப் பிடிச்சுக் கதைச்சுத் திரிஞ்சமாதிரி, இனிக் கதைக்கேலாது. அதுவும் ஆமியளின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருந்து கொண்டு... மீறிக் கதைக்க வெளிக்கிடுவியள் எண்டு சொன்னால், வாய்க்குள்ளதான் வெடிவைச்சு விழுத்துவாங்கள்...’

அவளது பதில் அவனுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. அதுவும், அவள் கூறிய இறுதி வார்த்தைகள்...

அவன் கண்களை மூடிக் கொண்டான். எதுவும் தெரியவில்லை எங்கும் இருளாக இருந்தது. ஆம்! இருளேதான். இந்த இருளைப் போக்குவதற் கென்றுதானே அவர்கள் போராடப் புறப்பட்டார்கள். பிறகேன் இப்படிப் பின்வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். எமது போராட்டம் ஏன் இப்படி ஆனது? அமைப்புக்குள் அப்படி என்னதான் நடந்தது? பகையை விரட்டும் துணிவு படுகுழிக்குள் விழுந்தது எப்படி? எத்தனை கனவுகள் கண்டோம்? எத்தனை எதிர்பார்ப்புகளோடு இருந்தோம்? இறுதியில், கானலாகிக் கசங்கி ஒரு கடற்கரைவெளியில் குடும்பத்தோடு குந்தவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? பகைவன் என்று யாரை வெறுத்து ஒதுக்கினோமோ அவனிடமே இன்று சரணடைய வைத்த சதி என்ன? இச்சதிக்குப் பின்புலமாக இருந்து இயங்கிய சூத்திரம்தான் எது?

‘இஞ்சரப்பா என்ன யோசிக் கிறியள்...?’

மனைவியின் குரல் கேட்டு, அவன் கண்களைத் திறந்தான். அருகில் மிக அருகில் ஒரு சிறுவனுக்கு பிஸ்கட்டையும் தண்ணீரையும் வழங்கிவிட்டு, அவனருகில் வந்தார்கள் இராணுவத்தினர். அவர்களை அருக்களிப்புடன் பார்த்தான் அவன். அவனது மடியில் உறங்கும் குழந்தையைக் கண்டுகொண்ட அவர்கள், கொண்டுவந்த பொருள்களில் இரண்டையும் எடுத்து, அவன் மனைவியிடம் கொடுத்தார்கள். அவளும் அதைப் பெற்றுக் கொண்டாள். அவளது முகத்தில் மெலிதானதொரு புன்முறுவல். அதைக் கண்ணுற்ற அவனுக்கு ஏற்பட்டது எரிச்சல் உணர்வு. ஆயினும், அவன் அதை

முகத்தில் காட்ட விரும்பாது, தனது பார்வையை வேறுபக்கம் திருப்பினான். கிழக்குப் பக்கத்திலிருந்து தொடர்ந்தும் மக்கள் உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். வயல்வெளி மேலும் மக்களால் நிறைந்து கொள்ள ஆரம்பித்தது.

'மாத்தையா! நமக்கும் சாப்பிட ஏதாவது கிடைக்குமா...?'

குரல் ஒலித்த இடத்தை நோக்கினான் அவன்.

இருபதுவயது மதிக்கத்தக்க மெலிந்த உடல்வாகு கொண்ட ஓர் இளைஞன், பிஸ்கெட் வழங்கிக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்களிடம் கேட்டது அவனுக்குத் தெரிந்தது. அந்த இளைஞனைப் போன்று ஏனையவர்களின் முகங்களிலும் உணவுக்கான தேவையின் எதிர்பார்ப்பு தொக்கி நின்றது.

'மிச்சம் பொறுங்க. சோறு வாறது... அவங்க உங்கலுக்கு தாறது. ஹரித(சரியா)?'

அந்த இளைஞன் மறுமொழி எதுவும் கூறவில்லை. மௌனமாக நின்றான். சிப்பாய்கள் மூவரும் அங்கு நின்ற அனைவரையும் அனுதாபத்தோடு பார்த்த வண்ணம் அங்கிருந்து அகன்றனர்.

அவனுக்கு ஆத்திர உணர்வு மேலெழுந்து கொண்டது. அது யார்மீதிலான கொதிப்பு என்பது அவனுக்கே தெரியாதிருந்தது பசியில் வயிறு தகித்துக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். குழந்தைக்கெனக் கொடுத்த தண்ணீர்ப்போத்தலை மனைவியிடமிருந்து வாங்கி, மூடியைத் திறந்து இரண்டுமிடறு நீரை உள்ளிழுத்து, தொண்டைவரட்சியை நீக்கிக் கொண்டான். மனைவியும் அவனைப்போலவே மிகுந்த பசித் தகிப்பில் இருந்தாள். போத்தல்நீரில் சிறிதளவைக் குடித்தவள், போத்தலை மூடிவிட்டுப் பையினுள் வைத்தாள். அவனுக்குத் தன்மனைவியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இருந்தாற் போல் குழுமியிருந்த மக்களிடையே ஏற்பட்டது ஒரு பரபரப்பும் சலசலப்பும். சிலர் எழுந்து ஓட ஆரம்பித்தார்கள். வேறுசிலர் அவனைக் கடந்து ஓடினார்கள். ஓடுகின்ற ஒருவரிடம் விபரம் கேட்டான் அவன்.

'ஆமிக்காரர் தங்கட ட்ரக் வண்டியில வைச்சு சோத்துப் பாசல் குடுக்கினம்...' கூறிக்கொண்டே... அவர் ஓடி மறைந்தார்.

' இஞ்சரப்பா! நீங்களும்போய் ஒரு சோத்துப்பாசலை வாங்கிக் கொண்டு வாங்கோவன்...'

அவனுக்கு தொண்டைக்குள் ஏதோ 'திமுக்'கென அடைத்தது போலிருந்தது. பசிவந்திடப் பத்துப் பறந்திடும்... என்பதுபோல, மனைவி பார்சல் ஒன்று வாங்கி வரும்படி கேட்டதும், பிறந்த ஊரினுள் பிரபாகரனுக்காகப் போட்ட 'கோஷங்கள்' அனைத்தையும் மறந்தான். அவனுக்கு அப்போது மனைவிக்கும் தனக்கும் பிள்ளைக்கும் ஏற்பட்டுள்ள பசி எனும் உணர்வுக்கு, ஒரு வடிகால் தேவையாக இருந்தது. அந்த இடத்தில், அந்த நிலையில் முதலில் மனைவி, பிள்ளை, குடும்பம்... அதன்பிறகே மற்றையவை... என நினைத்தவன்... ஓடுபவர்களோடு இணைந்து அந்த ட்ரக் வண்டியை நோக்கி ஓடினான்.

இனிப்பிலே விழுந்த இலையான்கள் போல, ட்ரக் வண்டியைச் சுற்றி ஏகப்பட்ட மக்கள் நின்றார்கள். ஒரே தள்ளுமுள்ளாக இருந்தது. ட்ரக் வண்டியினுள் மூன்று சிப்பாய்கள், தாம் கொண்டுவந்த சோற்றுப் பொதிகளை எடுத்து, தம்மை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கும் எந்தக்கையினுள் திணிப்பது என்று தடுமாறிக் கொண்டிருந்தார்கள். சிலரது கைகளில் அகப்பட்டு விடுகிறது பொதி. வேறுசில பொதிகள் இருவரது கரங்களில் அகப்பட்டு, பாதிபாதியாகப் பிரிந்து, சோறு, பருப்புக்கறி யாவும் சிந்தி ஏனையவர்கள்மேலும் விழுந்து தெறிக்கிறது. இதைக் கண்ணுற்ற சிப்பாயொருவன், தனது மொழியில் படு கெட்ட வார்த்தைகள் கொண்டு, அவர்களைத் திட்டித் தீர்த்தான்.

போர்க்களத்துள் தொழிலின்றி... வருவாயின்றி... பணமின்றி.. பொருளின்றி... இருந்தவர்கள் அவர்கள். உயிர் குடிக்கும் ஆயுதங்களோடு மட்டுமன்றி, பசிக்குத் தேவையான உணவுக்காகப் போராடியவர்கள். இந்த உணவு கிடைக்க வேண்டுமென்பதற்காக, உயிரைப் பணயம் வைத்து, இராணுவத்திடம் சரணடைந்தவர்கள். பல மாதங்களாக 'சோறு' எனும் உணவைக் காணாத நிலையில், இராணுவத்தினர் சோற்றுப்பொதி கொடுப்பதைக் கண்டு, இப்போது அவர்களது வாகனத்தைச் சூழ்ந்து நிற்கிறார்கள்.

பெரும்பாலான சோற்றுப் பொதிகள் கரங்களில் இருந்து தவறி கீழே விழுந்து, கால்களில் மிதிபட்டு, சேறுசகதிபோல் ஆகின்றன. மீண்டும் அந்தச் சிப்பாய், தனது மொழியில் வசைபாட ஆரம்பித்தான்.

சோற்றுப்பொதி வாங்க வந்த அவன், ஒரு சோற்றுப்பொதிக்காக நடைபெறும் களேபரத்துக்கு நடுவில் சிக்க விரும்பாதவனாக, சற்று எட்டத்தில் நின்றவாறு கவனித்துக் கொண்டிருந்தான்.

கூட்டத்தில் ஒரு பெண்... சற்று பருத்த சரீரமுடையவளாக இருந்தாள். தனது உடற் பருமனைக்கொண்டு, ஏனையவர்களை முட்டியும் மோதியும், இடித்தும் விழுத்தியும் அவளது கைக்குப் பொதி கிடைக்கவில்லை. அவளது மனக்கொதிப்பும் பசித்தகிப்பும் அந்தச் சிப்பாய்கள் மீது ஆற்றாமை காரணமாக வசைவார்த்தைகளாக வெளிவந்து விழுந்தன.

'அட... கேடு கெட்ட நாயளே! சனியனுகள், மூதேசியள் இஞ்சாலை எனக்கொரு பாசலைத் தாங்கோடா அறுதலி மக்களே...'

நல்லவேளை! அந்தச் சிப்பாய் மூவருக்கும் தமிழ்மொழி தெரிந்திருக்க வில்லை.

பொழுது மெல்லெனவாய் இறங்கிக் கொண்டிருந்தது இருளை வரவேற்க... அ

அடுத்த நேரச் சோற்றுக்கும்
அடுத்த வார சம்பளத்திற்கும்
அவலப்பட நேராமல்
அப்பன் ஆத்தா சொத்து வைத்துப் போயிருந்தால்...

அல்லாமல்,
அதிஷ்ட தேவதையின்
அணைப்பாவது கிடைத்திருந்தால்...

சுயநலத்தால் நிறைந்தபடி
சுமைகளையும் கடமைகளையும் பொறுப்புகளையும்
சுலபமாக வீசி எறிந்து, கண்காணா
சூன்யங்களுக்குள் தலைமறைவாக முடிந்திருந்தால்...

கண்ணுக்கு முன்னால் நடக்கும் அநீதிகளை
கண்டும் காணாமல்
கடந்து போக முடிந்திருந்தால்...

அயோக்கியர்கள் போலவே
அடிமனது நஞ்சையெல்லாம்
அகன்ற வாய்ச் சிரிப்புக்குள்ளே
அடக்க முடிந்திருந்தால்...

பொறாமையை மூடி மறைத்து
போலிகளைப் புகழ்ந்து பாடி
பொய்யர்களோடு தோள் உரசி
பொய் வேடம் பூண முடிந்திருந்தால்...

நிர்வாண நகரத்தில்
கோவணத்தோடு அலையாமல்...

அந்தந்த உலகங்களின்
அந்தந்த ஒழுங்குகளுக்குள்
அடங்கி ஒடுங்கிய
அப்பாவிப் பிரஜையாக
வாழ முடிந்திருந்தால்...

அந்த அப்பாவிகளை
ஏய்த்துப் பிழைக்கும்
அயோக்கியனாக வாழ முடிந்திருந்தால்...

விதி வந்து விளையாடி
இழுத்து விழுத்தி
உதைத்து மிதித்து
அடித்துத் துவைத்து
உலர்த்தி உலைக்காமல்...

வளரும் வயதில்
கண்ட கனவு போலவே,
வாழ்க்கையும் அமைந்திருந்தால்...

வாழ்தல் இனிது தான்!

ஆன்மாவை விற்றுத் தான்
அதெல்லாம் கிடைக்க வேண்டியிருந்தால்,

இந்த நாய் படாப்பாடு வாழ்க்கையே
எனக்கு என்றும் மேல்!



**ஜோர்ஜ் இ.**




# உள்ளம் கவர் கள்வன்

என்னுடைய முகத்தில் திருடன் என்று எழுதி ஒட்டியிருக்கிறதோ? அல்லது எனக்குத் திருட்டு முழியோ? எனக்குத் தெரியாது.

ஊரில் முன்பு மித்திரனில் ஐ.ஆர்.சி கள்ளன் தேடப்படுகிறார், கைது, மீண்டும் சிறைக்குள் என்று எல்லாம் செய்திகள் வரும். யாழ்ப்பாணச் சமூகத்திலும் ஐ.ஆர்.சி என்ற அந்த வார்த்தை பிரபலம். Island Re-convicted Criminals என்று, இலங்கையில் நாடளாவிய அளவில் குற்றங்களுக்காக மீளவும் தண்டனை பெற்ற குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்தப்படுவோர் உள்ளனர். இவர்களுக்கு நெற்றியில் ஐ.ஆர்.சி என்று பச்சை குத்தி விடுவார்கள் என்று சிறுவயதில் எனக்கு என் ஐயா என்னைப் பயமுறுத்தியிருந்தார்.

என்னை இவ்வாறான குற்றங்களில் மாட்டிக் கொள்ளாமல் இருக்கப் பயமுறுத்துவதற்காக அவர் சொன்னதாக இருக்கலாம். அப்படி, அது ஒரு உண்மையில்லாத urban myth தான்.

அப்படி, ஏதோ என் முகத்தில் எழுதி ஒட்டியிருப்பதைப் போலத் தான், என்னைப் பார்க்கும்போது ஏதோ திருடனைப் பார்ப்பது போல, பெண்கள் என்னைப் பார்ப்பதுண்டு.

நான் ஏதோ தங்கள் கற்பைத் தட்டிப் பறித்துக் கொண்டு ஓடித் தப்பி விடுவேன் என்ற எண்ணம் பெண்களுக்கு இருப்பது போலத் தான் எனக்குத் தெரிகிறது.

என்னைக் கண்டால், ஏதோ துட்டனைக் கண்டு தூர விலகுவது போல, வீதியின் மறுபக்கமாகவோ, அல்லது வேறு எங்கோ பார்த்துக் கொண்டோ போகும் பெண்கள் அதிகம்.

என் முகத்தை விட, என் ஆடைகளுடனான தோற்றம் கொஞ்சம் சிக்கலானதுதான். அதை நான் மறுக்கப் போவதில்லை. ஆடைகள் பற்றி நான் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. எங்காவது புறப்படும் போது, முன்னால் கண்ணில் படுவது எதுவோ அதைத் தூக்கிப் போட்டுக் கொண்டு போய் விடுவதுண்டு.

கனடியக் குளிர் அதற்கு வசதி. எப்போதும் குளிர் ஜக்கட் போட்டிருக்க வேண்டும். உள்ளே எது இருந்தால் தான் என்ன? யாருக்குத் தெரியும்? கோடைகாலம் என்றாலும், வேலைக்குப் போடும் யூனிபோர்மோடு, வேலை முடிய கடைத்தெரு அலுவல்கள் முடிந்து வீடு சேர்ந்த பின்னால், உடைகளுக்குப் பெரிதும் தேவையும் இல்லை.

மற்றும்படி என் சாயம் போன டெனிமும், டீசேர்ட் மேல் போட்ட போலோ வகை அரைக்கைச் சட்டையும் எப்போதும் கண் முன்னால் கிடக்கும். சொன்னது கேட்கும்.

நான் பிறர் வீடுகளுக்குப் போனாலும், ஜக்கட் கழற்றுவதில்லை. பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி, ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பேன். ஆகவே அங்கு போகும்போது கூட, உள் ஆடைகள் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

வீட்டுக்காரியிடம் இந்த அநீதி குறித்து முறையிட்டால், ‘நீ ஏதோ பரதேசி மாதிரி உடுத்திக் கொண்டு போனால், பெம்பிளையள் அப்பிடி நினைப்பினம் தானே!?’ என்று நியாயம் வரும்.

தோற்றம் என்னவோ வீடில்லாத தெருக்குடிமக்கள் மாதிரி இருந்தாலும், நான் குளிப்பு முழுக்கும் ஒழுங்கு. தலைமயிர், தாடி எல்லாம் வெட்டி கிளீனாகத் தான் இருக்கும். உடுப்புகள் எல்லாம் ஒழுங்காகத் தோய்த்துத் தான் இருக்கும். ஆனால், மினுக்காமல் சுருக்கங்களோடு இருக்கும்.

ஏதாவது நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள் என்றால் மட்டும் வீட்டுக்காரியின் தெரிவுகளுக்கு தலைவணங்குவதுண்டு. என்னைக் கேளாமலேயே ஏற்கனவே அயர்ன் பண்ணி வைக்கப்பட்டிருக்கும். இல்லாவிட்டால் கிடப்பதைப் போட்டுக் கொண்டு போய் விடுவேன் என்று தெரியும். அதுவும் சில நேரங்களில் கலவரங்களில்

பேராறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ

முடியும்.

'அங்க எல்லாருக்கும் என்னைப் பற்றித் தெரியும், பிறகென்னத்துக்கு?' என்பது என் வாதமாக இருக்கும்.

அப்படித் தெரியாதவர்களாக இருந்தால்,

'அங்க ஒருத்தருக்கும் என்னைப் பற்றித் தெரியாது, பிறகென்னத்துக்கு?'.

இதன் பின்னால், நிகழ்ச்சிக்குப் போகும் வரைக்கும், காரில் பாலைவன அமைதி நிலவும்.

•••

வழமையில் என்னைத் தெரியாத பெண்களோடு நான் பெரிதாகக் கதை, காரியம் வைத்துக் கொள்வதில்லை. அனாவசியத் தலையிடிகள் பற்றிய பயம்.

ஆனால், டிலிவரி வேலையில் கண்ணில் தெரிகிற, கண்ணோடு கண் பார்க்கிற எல்லாப் பெண்களுக்கும் தவறாமல் ஹலோ சொல்வேன். கனடியத் தொடர்மாடிச் சேரிகளுக்குள் இறை தொழுதலும் இனப்பெருக்கமும் முழுநேர வேலையாக இருக்கும் முக்காடு போட்டு முகமூடிய பெண்களாயினும் கண்கள் மட்டுமே தெரிந்தாலும், எலிவேட்டரிலும் மாடிகளின் தளங்களிலும் தனியாகக் காணும்போது ஹலோ தான். அவர்களும் தவிர்க்க முடியாது. சொல்லியே ஆக வேண்டும்.

அதுவும் ஒரு வகையில் பாதுகாப்பு கருதியது தான். எலிவேட்டரில் தனியே பின்னால் நிற்கும்போதும், தளங்களில் எதிரே வரும்போதும் எதையும் சொல்லாமல் போனால், அவர்களின் மனதில், நான் தங்களின் பேரழகில் மயங்கி, காமம் தலைக்கேறி 'எந்தக் கணமும் தங்கள் மீது பாய்ந்து கற்பைக் குதறிப் போடலாம்' என்ற பயம் வரக்கூடாது என்பதற்கான breaking the ice முயற்சி அது.

ஆனால், அடிக்கடி காண்கிறவர்களாயின், நெருக்கம் ஏற்பட்டு, என் மீது மதிப்பும் மரியாதையும் நிறைந்தவர்களாக அவர்கள் மாறி விடுவதுண்டு. முகமூடிய பெண்களுக்கும் நான் 'இன்டியன் பிரதர்' ஆகி விட்டிருப்பேன்.

அதற்கு என் பவ்வியமான பேச்சும் காரணமாக இருக்கலாம். அந்த 'ஹலோ' கூட ஒரு பாட்டு மாதிரித் தான் அவர்களுக்குக் கேட்கும்.

இப்படி, கிட்டத்தட்ட ஒரு 'உள்ளம் கவர் கள்வன்' ரேஞ்சில்!

அதை நீங்கள் ஒரு நம்பிக்கைக்கு உரிய நண்பனுக்கான மரியாதை என்றும் வைத்துக் கொள்ளலாம்.

அனாவசியமான கதைகள் இருக்காது. எப்போதுமே தேவையான விடயங்கள் குறித்துத் தான் உரையாடலும் இருக்கும். மற்றும்படி கேள்விக்குப் பதில் மட்டும் தான்! அதையும் மீறி எதையும் சொன்னால், பகிர்ந்து கொள்ள விரும்பினால், மிகுந்த அக்கறையோடு பதில் அளிப்பேன்.

எனக்குச் சம்பந்தமில்லாத மற்றவர்கள் பெண்களைப் பார்த்தும், போய் நின்றும் வழிகின்ற போதே எனக்கு வெட்கம் வரும்போது, நான் வழியாத கிறுக்கனாக இருப்பதும் பலர் என்னைப் பொருட்படுத்ததாதற்கும், ஏன் நெருக்கமாக இருப்பதற்கும், காரணமாக இருக்கலாம்.

•••

ஆனால், எங்கள் தமிழ்ப் பெண்டிரைக் கண்டால், நான் புலியைக் கண்ட மாதிரித் தான்.

பத்தாயிரம் முழம் தள்ளித் தான்.

அதிலும் குறிப்பாக, eye contact விடயங்களுக்கு எல்லாம் போவதில்லை. அனாவசியமான தலையிடி.

'அவற்ரை பார்வை!'

ஏதோ தங்களை கவர்ந்து போக வட்டம் போடும் இராவண அரக்கன் மாதிரித் தான் இந்த யாழ்ப்பாணிச் சீதைகள் சீன் போடுவார்கள்.

இதனால் கண்களைத் தரிசிக்க விரும்புவதில்லை.

ஆனால், அவர்களின் சகல நெளியல், வளையல், குழையல்கள் எல்லாவற்றையும் அவர்களுக்கே தெரியாதபடிக்கு, கண்களை எறிந்து விட்டு அவதானித்துக் கொண்டிருப்பேன்.

நான் eye contact ஐ தவிர்ப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. என்னுடைய கண்ணில் வீசும் வசீகர ஒளி!

எனக்கு பன்னிரண்டாம் வகுப்பில் ஆங்கிலம் கற்பித்த பிலிப் மாஸ்டர் ஒரு நாள் வகுப்பில் என் கண்களில் ஒளி நிறைந்திருப்பதாக, என் கண்களைப் பற்றிச் சிலாகித்துச் சொல்லியிருந்தார். அவர் அன்று என் கண்களைக் காட்டிச் சொன்னது இன்றைக்கும் என் கண்களுக்குள் நிற்கிறது.

அந்த மயக்கும் வசீகர ஒளியில் மயங்கி, இவர்கள் என் பின்னால் வர நேர்ந்தால், அது வேறு தலையிடி வீட்டில்!

•••

இதற்குள் இந்தத் தமிழ் மூதாட்டிகள் தொல்லை வேறு.

என்ன, கிட்டத்தட்ட என் வயது தான் இருக்கும்.

எங்காவது வைபவங்களில், அவர்கள் என்னைக் கண்டதும் தங்கள் கற்பைக் காத்துக் கொள்ளப் படும் பாடு சிரிப்பாக இருக்கும். அழகு ஜொலிக்காவிட்டாலும், சரிகையும் தங்கமும் ஜொலிக்க, உடுத்திப் படுத்தி வெளிக்கிட்டு வந்திருப்பார்கள்.

என்னைக் கண்டதும் கடுமையாக அவஸ்தைப்படுவார்கள். நெஞ்சை மறைத்துக் கொள்வார்கள். தாவணியால் போர்த்திக் கொள்ளுவார்கள். தாலிக்கொடியை வெளியே இழுத்து விடுவார்கள்.

இவர்களை விட, இவர்களுடைய 'எங்கட இவர்'கள் அங்கே தூரத்தில் இருந்து, 'மாற்றான் மனைவி மேல் மையல் கொள்ளாதே, மார்த்தாண்டா! மரணம் தான் உனக்கு முடிவு' என்று நம்பியாரைப் பார்த்த வாத்தியார்லுக் அடிப்பார்கள்.

ஏதோ நான் ஒட்டிய மீசையும் கன்னத்தில் வைத்த தடித்த மச்சமுமாக, கையில் வைத்திருக்கும் கத்தியோடு இவர்களை, 'இணங்கி விடு, தேன்மொழி!' என்று மிரட்டிக் கொண்டிருப்பது போல!

தற்செயலாக இவர்கள் 'ஐயோ, காப்பாத்துங்க!' என்று கூச்சல் போட்டால், அன்றைக்கு மட்டும் கோட் போட்ட அந்த வாத்யார்கள் நம்மைத் துவம்சம் செய்து விடுவார்கள் என்ற பயம்

வேறு! வாத்தியார் அந்த வயதுகளில் தானே நம்பியாரைப் புரட்டி எடுத்தார்.

பல வாத்தியார்கள் சேர்ந்தால்?

இப்படி இந்தப் பெண்கள் எல்லாம் என்னைத் தவிர்ந்த மற்ற ஆண்களோடு சகஜமாகப் பேசிக் கொள்கிறார்கள். சில நேரம் கொஞ்சுகிறார்கள். குலவுகிறார்கள். வழிகிறார்கள். கண்களால் கதை பேசுகிறார்கள்.

என்னைக் கண்டால் மட்டும் அவர்களுக்குத் தங்களுடைய கற்பைத் திருட விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு வரும் அளவுக்கு ஏதோ ஒரு தமிழ்ப் பட வில்லத் தோற்றம் எனக்கு இருக்குமோ என்று கண்ணாடியைப் பார்க்கும் போது அவதானித்தாலும், அப்படி ஒன்றும் நம்பியார் கன்னத்தில் காயங்களோ, மச்சங்களோ இருப்பது மாதிரியும் தெரியவில்லை. என்னுடையசிரிப்பும்வீரப்பா மாதிரி அட்டகாசமாகவும் இருப்பதில்லை. இத்தனைக்கும் பயமுறுத்துவதற்கு எனக்கு மீசையும் கிடையாது.

•••

முன்பு ஒருதடவை இப்படித் தான் மனைவிக்கு வேலை தேடி காரில் கொண்டு போய் விட்டுவிட்டு, முன் அலுவலகத்தில் உட்கார்ந்திருக்கிறேன். மனைவி இன்டர்வியூவுக்கு உள்ளே போக, எனக்குப் பக்கத்தில் இன்னொரு தமிழ்ப் பெண் உட்கார்ந்திருந்தார். நீண்ட நேரமாக பேசாமல் உட்கார்ந்திருக்கிறேனே என்று சங்கடப்பட்டு, பேச்சுக் கொடுத்து, கதைத்துக் கொண்டிருந்தேன். பிறகு அந்தப் பெண் அங்கு வேலை செய்த எங்கள் நண்பர் ஒருவரிடம், ‘அவர் கொஞ்ச நேரத்துக்குள்ள தன்ரை வரலாறு எல்லாம் சொல்லிப் போட்டார்’ என்றிருக்கிறார். என்னைத் தெரிந்த நண்பரோ, அந்த மனிசன் ஒருத்தரோடயும் தேவையில்லாமல் கதைக்காது என்று சேர்ட்டிபிக்கேட் கொடுக்க வேண்டி வந்தது.

அவவின் பேரழகில் நான் வழிந்ததாக அவவுக்கு ஒரு நினைப்பு.

•••

முன்பு நீண்ட காலம் வேலை செய்த வேலையிடத்தில் ஒரு யாழ்ப்பாணிப் பெண் அலுவலகப் பக்கம் வேலை செய்ய வந்தார். என்னோடு வேலை செய்த அண்ணர், இன்னொரு தமிழ்நாட்டுத் தம்பி எல்லாம் அவரோடு பேசியிருந்தார்கள். அண்ணர் ஊர் புங்குடுதீவாம் என்று வேறு போனஸ் தகவலும் தந்தார். நான் ஒரு போதும் அவரோடு பேசியதில்லை. எதிரே வந்தால் கூட!

அவரும் அலுவலகங்களில் வேலை செய்யும் எல்லாத் தமிழ்ப் பெண்கள் மாதிரியே, மற்றத் தமிழர்களைக் கண்டால், தங்களோடு வேலை செய்யும் வெள்ளையர்களோடு கடுமையாக ஆங்கிலம் பேசி கொஞ்சிக் குலாவுவார். நான் சொல்லும் ஹலோ கூட அப்படி இசைநயத்தோடு இருக்காது. தங்களுடைய ஆங்கிலப் புலமையை எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதில் உள்ள அக்கறை அது.

அந்த வேலையிடத்தில் அலுவலகத்தில் வேலை செய்யும் இத்தாலியப் பெண் என்னைத் தேடி வந்து, தான் வாசித்த ஆங்கிலப் பேப்பர்களைத் தந்து விட்டுப் போவார். அங்கே பெரும்பதவியில் இருந்த Vice President ஆக இருந்த பெண் கூட என் மேல் மிகவும் மரியாதையாக நடந்து கொள்வார். நான் தொழிற்சங்கப் போராட்டங்கள் செய்தவன் என்பதால் தனி மரியாதை. யாருடனும் அனாவசிய கதை, பேச்சுக்களுக்குப் போவதில்லை, எவருக்கும் அஞ்சாத கிறுக்குப் பேர்வழி என்பது அவர்களுக்கும் தெரியும்.

மதிய உணவு நேரத்தில், நான் எவரோடும் பேசிக் கொள்ளாமல் ரொறன்ரோ ஸ்டார் வாசித்துக் கொண்டிருப்பேன். என் நண்பர்களுக்கும் தெரியும். என்னைத் தொந்தரவு செய்வதில்லை.

ஒருநாள் தீவிரமாக வாசித்துக் கொண்டிருந்தபோது, தற்செயலாக தலையைத் தூக்கி எங்கேயே பார்த்தேன். சனி பகவான் கடாட்சம். என் கஷ்டகாலம், அந்தப் பெண் திரும்பிப் பார்க்கும் போது, என் கண்கள் அவரையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. நான் ஏதோ நீண்ட நேரமாக தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர் நினைத்திருக்கக் கூடும்.

மறுநாள் பெரிய தாலிக்கொடியோடு வந்து மதிய உணவு அறையில் உட்கார்ந்திருந்தார். பெரும்பாலும் தமிழ்ப் பெண்கள் வேலையிடங்களில் தாலிக்கொடி போட்டு வருவதில்லை. அது தாலிக்கொடி இல்லை. எனக்குக் காட்டப்பட்ட எச்சரிக்கைக் கொடி.

அதன் பின்னால், அந்த அண்ணனுக்கும் தமிழ்நாட்டுத் தம்பிக்கும் அந்தப் பெண் பற்றிக் கதைக்கும் போது நான் வைத்த பட்டப் பெயர், ‘தீர்க்க சுமங்கலி!’.

அந்த அண்ணன் குறும்புக்காரர். அதையும் அந்தப் பெண்ணுக்கு சொல்லியிருக்கிறார். பிறகென்ன? கம்பனி மூடும் வரைக்கும் கண்கள் பேசியதில்லை.

**மறுநாள் பெரிய தாலிக்கொடியோடு வந்து மதிய உணவு அறையில் உட்கார்ந்திருந்தார். பெரும்பாலும் தமிழ்ப் பெண்கள் வேலையிடங்களில் தாலிக்கொடி போட்டு வருவதில்லை. அது தாலிக்கொடி இல்லை. எனக்குக் காட்டப்பட்ட எச்சரிக்கைக் கொடி. அதன் பின்னால், அந்த அண்ணனுக்கும் தமிழ்நாட்டுத் தம்பிக்கும் அந்தப் பெண் பற்றிக் கதைக்கும் போது நான் வைத்த பட்டப் பெயர், ‘தீர்க்க சுமங்கலி!’. அந்த அண்ணன் குறும்புக்காரர். அதையும் அந்தப் பெண்ணுக்கு சொல்லியிருக்கிறார். பிறகென்ன? கம்பனி மூடும் வரைக்கும் கண்கள் பேசியதில்லை.**

முந்தி ஊரில் இருந்த காலத்தில், யாழ்ப்பாணப் பெண்கள் கல்லூரி ஒன்றில் படித்த, இளம் வயதிலேயே தலை நரைத்திருந்த ஒரு பெண், எந்த ஆணைக் கண்டாலும், ‘அவர் முந்தி என்னைக் கேட்டவர், நான் தான்

மாட்டன் எண்டு சொன்னனான் என்று சொல்வதுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

இதனால், அந்தப் பெண்ணைக் கண்டால், நான் புலியைக்கண்ட மாதிரித்தான்! அந்தப் பெண்ணுக்கு என்னைத் தெரியாது, நான் யார் என்பது தெரியாது என்றாலும், எதற்கு அனாவசியமாக என்று தான். தற்செயலாக என் வருங்காலக் காதலிகள் யாராவது அந்தக் கதையைக் கேட்டால், அந்தச் சந்தேகத்தைத் தீர்க்கப் பெரும்பாடுபட வேண்டி வருமே என்ற முன்ஜாக்கிரதைச் சிந்தனை அது.

அதைப் போல, இலக்கிய வட்டங்களுக்குள் தங்களைச் சில இலக்கியர்கள் படுக்கைக்கு அழைத்ததாக சில கவிஞைகள் உட்பட்ட இலக்கியாயினிகள் சொன்னதாக அரசல் புரசல் கதைகள் நடக்கும் போது, காதை எறிந்து விட்டுக் கேட்டதும் உண்டு. இதுவேறு புதுத் தலையிடியாய் போய் விடுமே என்று, சாயாத கொம்புளதற்கு எல்லாம், எப்போதும் ஐம்பது முழம் தள்ளித்தான்!

•••

நாங்கள் இருவரும் வேலைக்குப் போனதால், எங்கள் வேலை நேரத்தில் மகனைப் பராமரிக்க ஒரு தமிழ்ப் பெண்ணிடம் முன்பு விடுவதுண்டு. நான் வேலை முடிந்து வந்ததும் மகனை அழைக்கப் போவேன். கதவைத் தட்டி, நாலு முழம் தள்ளி நின்று, அனாவசியமான பேச்சு எதுவும் இன்றி அழைத்து வருவேன்.

மனைவிதான் போய் அழைத்து வரும்போது நடக்கும் கதைகள் பற்றி மனைவி சொல்வதுண்டு. அந்தப் பெண் தமிழ் சீரியலில் ஒன்றிப் போய் கதாபாத்திரங்களோடு சேர்ந்து அழுவார். இறந்து போன பெண்ணுக்காக ஒப்பாரி வைப்பார். சீரியலின் காட்சியில் போன் அடிக்கும்போது, கோபத்தில் எடுக்காமல் இருக்கும் நாயகியைத் திட்டுவார். ‘அபி, எடடி போனை! எடடி போனை!’.

எங்களுக்கு ஒரே சிரிப்பாக இருக்கும்.

ஒருநாள் என்னைப் பற்றி மனைவிக்கு ஒரே முறைப்பாடு,

‘என்னக்கா, உங்கட அவர் வந்தால் கதைக்கிறார் இல்லை. அங்கால தள்ளி நிண்டு பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போறார். அவருக்கு ஏதோ குறைபாடு இருக்கு போல. அவருக்கு விட்டமின் வாங்கிக் குடுங்கோ, அக்கா!’.

நான் வீட்டுக்காரிக்குச் சொல்வேன். ‘அன்னியப் பெண்களோடு எனக்கேனடி அனாவசியமான கதை?’.

இப்படி, என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்த என் வீட்டுக்காரி, என்னை நம்பித் தன் நண்பிகளோடு காரில் அனுப்புவதுண்டு.

இத்தனைக்கும் அந்தப் பெண்கள் எல்லாம் தங்களை காரில் ஏற்றிச் செல்லும் அன்னிய ஆடவர்கள் தங்களுக்குக் கை போட்ட கதைகளை வீட்டுக்காரிக்குச் சொல்லும்போது, நான் காதை எறிந்து விட்டு, கவனிக்காதது போலக் கேட்டுக் கொண்டிருப்பதுண்டு.

ஆக, பிரச்சனை என்னைத் தெரியாத பெண்கள் பற்றியது தான்.

இதுவும் நான் உடுக்கும் உடைகள் மாதிரித் தான்.

‘அவர்களுக்கு என்னைத் தெரியும். பிறகென்னத்துக்கு?’.

‘அவர்களுக்கு என்னைத் தெரியாது, பிறகென்னத்துக்கு?’. இப்படி நான் இது பற்றி எல்லாம் அலட்டிக் கொள்வதில்லை.

•••

டிலிவரியின் போது நடந்த இன்னொரு சுவாரஷ்யமான விடயம், அந்தப் பாதையில் வினியோகிக்கும் எல்லோருக்கும் அந்தப் பெண்ணைத் தெரியும். பெரும் தலையிடி. நாங்கள் போய் அழைப்பு மணியை அடித்தால் உடனே வர மாட்டார். மற்றவர்கள் உடனேயே துண்டு எழுதி வைத்து விடுவார்கள், போய் அலுவலகத்தில் பார்சலைப் பெற்றுக் கொள்ளும்படி.

எனக்கு இதை யாரும் சொல்லவில்லை. நான் போய் மணி அடித்தேன். மற்றவர்களை விட, நான் கொஞ்ச நேரம் கூட காத்திருப்பேன். ஆளைக் காணவில்லை. துண்டை எழுதி வைத்து விட்டு வாகனத்தில் ஏறுகிறேன், பாய்ந்து கொண்டு வந்தார். நான் விளங்கப்படுத்த முயன்றேன். உன்னுடைய அடையாள அட்டை இலக்கம் என்ன என்று மிரட்டினார். நான் சொன்னேன் அலுவலகத்திற்கு போன் அடியுங்கள் என்று.

அவரோ எனது வாகனத்திற்கு முன்னால் நின்று, என்னை அசைய விடாமல் தடுத்து நிறுத்தி, பெருந்தெருவில் சீன் காட்டி, என் வாகனத்தைப் படம் எடுத்து என் மேலாளருக்கு அனுப்பி விட்டார். அடுத்த நாள் மேலாளர் என் மீது விசாரணை. ஆனால், அவருக்கு நான் பவ்வியமானவன் என்பது தெரியும். அது பற்றி பெரிது படுத்தவில்லை. அதை விட, அந்தப் பெண்ணோடு மற்றவர்களும் அல்லல்பட்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பெண்ணையும் அவருக்குத் தெரியும்.

அதன் பின்பும் நீண்ட காலமாக அந்தப் பெண்ணுக்கு வினியோகித்துக் கொண்டிருந்தேன். அவளுக்கு அவளுடைய துணைவர் விட்டுப் போயிருக்க வேண்டும். அந்தக் கவலையும் துயரமும் என் போன்ற ஆண்கள் மீதான கோபத்திற்குக் காரணமாக இருக்கக் கூடும் என்று அதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை. எனவே, நான் கோபித்துக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவும் இல்லை.

இதனால் மனம் மாறியோ என்னவோ, கிறிஸ்மஸ் தினத்திற்கு எனக்கு ஒரு வாழ்த்து மடலும் முப்பது டொலரும் வைத்திருந்தார். எனக்கு அம்முறை கிறிஸ்மஸ்க்கு பெரும் வேட்டை. என்னோடு வேலை செய்தவர்களில் அவ்வளவுக்கு அதிகளவு அன்பளிப்புப் பெற்றவர்கள் மிகக் குறைவு. எனக்கு அன்பளிப்பு தந்தவர்கள் முழுப் பேருமே பெண்கள் தான். ஒரு வயதான பெண் நூறு டொலர்கள் தந்தார். அவர்கள் அனைவருக்கும் வாழ்த்து அட்டைகளில் என் பெயர், நான் ஏதோ வழிகிறேன் என்று நினைக்கக் கூடாது என்று என் மனைவி, மகன் பெயரோடு, என் நாயின் பெயரையும் போட்டு நன்றி சொல்லி அவர்களின் தபால் பெட்டிகளுக்குள் போட்டு விட்டேன்.

அதுவரை நாளும் என்னை டிலிவரிமான் என்று

அழைத்தவர்களுக்கு இப்போது என் பெயர் தெரிந்து விட்டது. பிறகென்ன, அந்தப் பெண்கள் எல்லாரினதும் ‘உள்ளம் கவர் கள்வன்’ தான். ‘ஓ, அந்தப் பெண் உன் மனைவியா? மகளா?’ என்று என்னை முரட்டு சிங்கிளாக இருக்குமோ என்று சைட் அடித்து, மனைவி என்றதும் முகம் தொங்கிப் போன பெண்ணும் உண்டு.

அப்படி வினியோகித்துக் கொண்டு போகும் வழியில் அந்தப் பெண் வீட்டு படியில் ஏறிக் கொண்டு போகும் போது, எனக்காகவே காத்திருந்து கதவைத் திறந்து பெரும் மகிழ்ச்சியோடு எனது வாழ்த்து அட்டையை தான் சமையலறை மேசையில் வைத்திருப்பதைக் காட்டி, என்னுடைய நாய் பற்றி விசாரித்து, தனக்கும் நாய்கள் என்றால் பெரும் விருப்பம் என்று என்னோடு பெரும் நட்புப் பூண்டு விட்டாள். அதன் பின்னால், என்னோடு அந்த மாதிரி ஒரு பெரும் நெருக்கம். நான் திருமணம் ஆகாதவனாக இருந்திருந்தால், அந்த நெருக்கம் அடுத்த கட்டத்திற்கும் போயிருக்கவும் கூடும்.

**அப்படி வினியோகித்துக் கொண்டு போகும் வழியில் அந்தப் பெண் வீட்டு படியில் ஏறிக் கொண்டு போகும் போது, எனக்காகவே காத்திருந்து கதவைத் திறந்து பெரும் மகிழ்ச்சியோடு எனது வாழ்த்து அட்டையை தான் சமையலறை மேசையில் வைத்திருப்பதைக் காட்டி, என்னுடைய நாய் பற்றி விசாரித்து, தனக்கும் நாய்கள் என்றால் பெரும் விருப்பம் என்று என்னோடு பெரும் நட்புப் பூண்டு விட்டாள். அதன் பின்னால், என்னோடு அந்த மாதிரி ஒரு பெரும் நெருக்கம். நான் திருமணம் ஆகாதவனாக இருந்திருந்தால், அந்த நெருக்கம் அடுத்த கட்டத்திற்கும் போயிருக்கவும் கூடும்.**

இப்போது எனக்கு மேலாளராக இருப்பவர் ஒரு பெண். எனது பகுதிக்குப் பொறுப்பாக இருந்த அவரை, அந்தப் பகுதிக்கு நான் போய்ச் சேர்ந்த மறுநாளே வேறு ஏதோ புரஜக்ட்டுக்காக அனுப்பி விட்டார்கள். நான் தற்காலிக மேலாளருடன் நீண்ட நாட்கள் வேலை செய்தேன். பிறகு, தற்காலிக மேலாளர் ஒருவாரம் விடுமுறையில் சென்றதால், இந்தப் பெண் மேலாளர் அவருக்காக வந்திருந்தார்.

இந்த திருட்டு முழி வேலை செய்யத் தொடங்கி விட்டது. ஏனோ தெரியவில்லை. அவருக்கு என்னைப் பார்த்த உடனேயே பிடிக்கவே இல்லை. நான் வேலை செய்யும்போது எனக்குப் பின்னால் வந்து நீண்ட நேரமாக நான் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பார். எனது வேலைகளில் தேவையில்லாமல் பிழை பிடிப்பார். மற்றவர்கள் பற்றி அலட்டிக் கொள்வதேயில்லை. மற்றவர்கள் செய்கிறவற்றை நான் செய்வது கூட அவருக்கு பிழையாகத் தெரிந்தது. ஒரு வாரம் எனக்கு நரகம். கிட்டத்தட்ட, வேண்டாப் புருஷன் கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் தான்.

அதுவரை நாளும் வேலை செய்த கறுப்பினத்தவரான மேலாளருக்கு மட்டுமன்றி, அங்கு வேலை செய்கிற மேல் மட்டத்தினர் எல்லாருக்குமே என்னைப் பற்றி மிகுந்த நல்லபிப்பிராயம். கூட வேலை செய்கிறவர்கள் எல்லோருக்குமே என் மீது நல்ல மதிப்பு. ஏனோ இவருக்கு மட்டும் என்னை அறவே பிடிக்கவில்லை.

ஏற்கனவே எனக்குத் தெரிந்து நன்றாகச் செய்து கொண்டிருக்கிற வேலைகளையே, தான் எனக்குப் பழக்கப் போகிறேன் என்று அலுப்புத் தந்து கொண்டிருந்தார். நான் எதுவும் பேசவில்லை. வழமையில் இவ்வாறான பிரச்சனை என்றால் தொழிற்சங்கத்தைத் தொடர்பு கொண்டு மேலிடத்தில் நடவடிக்கை எடுக்கக் கோருவார்கள்.

நான் அந்த ஒரு வாரமும், அவர் எனக்குச் செய்த சகலத்தையும் திகதி போட்டு எனது போனில் குறிப்பு எடுத்து வைத்திருந்தேன். வார இறுதியில் பெரிய கடிதம் ஒன்றை எழுதி, சகல விடயங்களையும் நாள் குறித்து விவரித்து, வேலையிடத்தின் உச்ச அதிகாரிப் பெண்ணுக்கு, தனியாக கண்ட ஒரு நேரத்தில் ‘உன்னோடு நான் ஒரு விடயம் பேச வேண்டும்’ என்று சொல்ல, தன் அலுவலகத்திற்கு அழைக்க, ‘உனக்கு நேரம் இருக்கும் போது இதை வாசி’ என்று கடிதத்தைக் கொடுத்து விட்டு வந்து விட்டேன். அந்த மேலதிகாரிப் பெண் ஏற்கனவே என் மீது மரியாதை பூண்டவர். ஒரு வாரத்தின் பின்னால் என் மேலாளரும் புதிய புரஜக்ட்டுக்குப் போய் விட்டார்.

விசாரணை நடைபெற்று, அவருக்கும் எச்சரிக்கை விடப்பட்டு, என்னை அவரோடு சேர்ந்து ஒரு சந்திப்புக்கு விருப்பமா என்று மேலிடத்தில் கேட்டார்கள். நான் சொன்னேன், எனக்குத் தேவையில்லை. எனக்குத் தலையிடி தராமல் வேலை செய்ய விட்டால் போதும் என்று.

என் கறுப்பின மேலாளர் சொன்னான், ‘கவனமாயிரு, அவள் உன் மீது கோபமாக இருக்கிறாள். உன்னைப் பழி வாங்குவாள்’ என்று.

எனக்கென்ன, மடியில் கனமா?

ஆனால் அந்தக் கறுப்பின மேலாளர் சொன்னார்... எனக்கு என்றும் நினைவில் இருப்பது.

People who hate are the ones who are hurt most.

எவ்வளவு உண்மை? தாங்கள் அதிகளவு துன்புற்றிருப்போர் தான் மற்றவர்களை வெறுக்கிறார்கள். நான் சதா இன்புற்றிருப்பவன். யாரையும் வெறுப்பதில்லை.

அந்த மேலாளர் மனம் விட்டுச் சிரித்ததை நான் ஒருபோதும் கண்டதில்லை. யாருடனும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருப்பதைக் கூடக் கண்டதில்லை. வேலை செய்யும் ஒரு சிலரைத் தவிர வேறு எவரும் அவரோடு பேசுவதை விரும்புவதும் இல்லை.

கடைசியில் தற்காலிக மேலாளரும் போய், இந்த பெண் மேலாளர் எனது பகுதிக்குத் திரும்ப வந்து விட்டார்.

நான் எப்போதும் போல, அவரைக் காணும்போதெல்லாம்

காலை வந்தனங்கள் சொல்வேன். கோபம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை. உண்மையில் எனக்கு எந்தக் கோபமும் இல்லை.

நான் எப்போதுமே என் வேலையில் கவனம். யாருடனும் அனாவசியமாக கூடி நின்று பேசுவதில்லை. நானுண்டு, என் வேலையுண்டு என்று இருப்பேன். எதிர்பார்க்கப்பட்ட வேலைகளைச் சரியாகச் செய்து முடிப்பேன்.

அத்துடன், புதிதாக அங்கு வருகிறவர்கள் இருந்தால், அவர்களுக்கு உதவி செய்வேன். அவர்கள் கேளாமலேயே! என்னோடு வேலை செய்கிறவர்களுக்கு அதிகமான வேலை இருந்தால், போய் உதவி செய்வேன்.

அவர்கள் அல்லல்படுவதைப் பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடிவதில்லை. நான் என் வேலைகளை முடித்து விட்டு, மற்றவர்கள் போல சும்மா இருப்பதில்லை. போய் அவர்களுக்கு உதவி செய்வேன்.

அதை விட நான் மனக்கணக்கு வேகமாகச் செய்வேன். அவர்களுக்கு கல்குலேட்டர் இல்லாவிட்டால் வேலை நடக்காது. இதனால், நான் உதவி செய்யும்போது, அவர்கள் வேகமாக வேலையை முடிக்கக் கூடியதாக இருக்கும்.

வேலை முடிந்து நான் வீட்டுக்குப் போக முடிந்தாலும், நின்று அவர்களுக்கு அந்த வேலையை முடிக்க உதவி செய்து விட்டுத் தான் வீட்டுக்கு போவேன். இப்படி என்னுடைய வேலை கிளீனாக இருப்பதால், அவராலும் என்னைப் பழிவாங்க முடியவில்லை என்பதை விட, என்னுடைய இயல்பை அவருக்கு அப்போது தான் தெரிந்து கொள்ள முடிந்திருக்கிறது.

அதன் பின்னால், எனக்கு எந்த விதமான அலுப்பும் தருவதில்லை. அவர் ஒருமுறை தான் விடுமுறைக்குப் போனார். அப்போது என் மேசைக்கு அருகில் உள்ள இடம் ஒன்றில், எனது கண்ணுக்குப் படும்படி ஒரு துண்டு. கம்பனி கடிதத் தலைப்பு மாதிரி ஒரு துண்டில், 'நீ புதியவர்களுக்கு எல்லாம் உதவி செய்வது குறித்து எங்களது பாராட்டுக்கள்' என்று எழுதி வைத்துப் போயிருந்தார்.

ஏற்கனவே, எனக்குத் தந்த அலுப்புக் காரணமாக அவருக்கு எனக்கு நேரில் தர முடியவில்லை. கூச்சமாக இருந்திருக்கும். இதனால், அங்கே வைத்து விட்டுப் போயிருந்தார். நானும் தெரிந்த மாதிரியோ, கிடைத்த மாதிரியோ காட்டிக் கொள்ளவில்லை. படம் எடுத்து வைத்திருக்கிறேன். பெரும் மேலதிகாரிக்கு என்றாவது காட்ட வேண்டி நேர்ந்தாலும் என்று.

இப்போது அந்தப் பெண் மேலாளர் என்னோடு வலும் வாரப்பாடு. இப்போது தனக்கு கீழ் வேலை செய்கிறவர்களில் பிடித்தவர்கள் யார் என்று கேட்டால், என்னைத் தான் சொல்லக் கூடும்.

•••

இப்படி என்னைத் தெரிந்து கொண்டவர்கள் மிகவும் மரியாதையோடு நடந்து கொள்கிறார்கள். தெரியாதவர்களால் தானே இத்தனை தலையிடிகள், இப்படி இந்த தலையிடிகள் வேண்டாம் என்றாலும், துன்பம் எப்போதும் வாசல் தேடி வருகிற மாதிரித் தான் சனி பகவான் கடாட்சம் எனக்கு எப்போதும் உண்டு.

•••

எங்கள் வீட்டுக்கு அருகில் சிறுகடைத் தொகுதி ஒன்று உண்டு. அதில் உள்ள பேக்கரிக்கு நான் அடிக்கடி பாண் வாங்கச் செல்வதுண்டு. அங்கு ஒரு பருமனான சீனப் பெண் பல சரக்குக் கடை ஒன்று வைத்திருந்தாள். பெண் உரிமையாளர் என்று சொல்வதற்கான காரணம் அவருக்கு இருந்த மெல்லிய கணவர் தான். கல்லா முதல் சகலமும் பெண் தான். கணவர் அங்கே ஓரமாக நின்று கொண்டிருப்பார்.

கடும் குளிர் காலத்தில் கடை கடுமையான குளிராக இருக்கும். வாயுச் சூடாக்கியைப் போடாமல், தடித்த ஜக்கட் ஒன்றைப் போட்டபடி தான் கல்லாவில் நிற்பார். அவர்களின் குழந்தை ஒரு சிறு கார் சீட் தொட்டிலில் பின்னே ஆடிக் கொண்டிருக்கும்.

ஆனால், அங்கு ஏதோ மர்ம வியாபாரம் ஒன்று நடந்தபடி இருக்கும். முன்னால் நிறுத்தப்பட்ட வாகனம் ஒன்றில் அவர்களின் கடைப்பொருட்கள் இருக்கும்.

அப்போது திடீரென்று கார்கள் வரும். கணவர் நிறுத்தப்பட்டிருந்த தங்கள் காருக்குள் சென்று எதையோ எடுத்துக் கொண்டு, அருகில் சென்று சாரதியின் பக்கத்தில் உள்ள கண்ணாடிக்குள்ளால் இரகசியமாக ஏதோ பேசுவார். தன் ஜக்கட்டுக்குள் இருந்து எதையோ எடுத்துக் கொடுத்து விட்டு, காசை வாங்கிக் கொள்வார். கார்கள் வேகமாக வெளியேறி விடும்.

அது என்னவாக இருக்கும் என்று எனக்கு நீண்ட காலம் ஆராய்ச்சி. இணையம் பிரபலமாகாத முந்திய காலம். சில நேரம் நீலப்படங்களாக இருக்கலாம் என்ற எண்ணம். அதற்கும் தனியான கடைகள் சுற்றாடலில் இருந்தன. பிறகெதற்கு என்ற கேள்வியும் வரும்.

கஞ்சா போல இருப்பதற்கு, பரிமாறப்படுவது சிறிய பக்கட்டாகவும் இல்லை.

பிறகு தான் அறிந்தேன். அங்கே வைத்து சட்டவிரோதமாக மது விற்பனை செய்து கொண்டிருந்தார் என்று. பல தடவைகள் பொலிசாரால் பிடிபட்டு, நீதிமன்றம் சென்று தண்டம் கட்டி வெளியே வந்தாலும், அவர் அந்தத் தொழிலை விட்டதாகத் தெரியவில்லை. வாங்க வருகிறவர்கள் வெள்ளையர்களாகத்

**இப்படி என்னைத் தெரிந்து கொண்டவர்கள் மிகவும் மரியாதையோடு நடந்து கொள்கிறார்கள். தெரியாதவர்களால் தானே இத்தனை தலையிடிகள், இப்படி இந்த தலையிடிகள் வேண்டாம் என்றாலும், துன்பம் எப்போதும் வாசல் தேடி வருகிற மாதிரித் தான் சனி பகவான் கடாட்சம் எனக்கு எப்போதும் உண்டு.**

தான் இருப்பார்கள்.

அந்தப் பெண் என் மனைவியோடு நல்ல மாதிரி. பெண்களின் கருத்துப் பரிமாற்றம் எல்லைகளுக்கு அப்பாற்பட்டது தானே. அந்தப் பெண் பற்றிய அனாவசிய தகவல்கள் எல்லாம் எனக்குக் கிடைக்கும்.

ஆனால் பிரச்சனை இந்த திருட்டு முழியோடு தான்.

அங்கே சில நேரம் பஸ் டிக்கட்டுகள் வாங்கச் செல்வேன். வேறு யாருக்கும் அப்படிச் செய்வதில்லை. எனக்கு மட்டும் டிக்கட்டுக்களைத் தர முன்னால் பணத்தைத் தரும்படி கேட்பாள். கேட்டு விட்டு, நான் பணத்தைக் கொடுக்கும் வரைக்கும் அலட்சியத்தோடு ஒரு அற்பப் புழுவைப் பார்ப்பது போல பார்த்துக் கொண்டு நிற்பாள். என் பணத்தை வாங்கிக் கொண்டு தான் டிக்கட்டுக்களைத் தருவாள்.

நான் ஏதோ தன்னுடைய டிக்கட்டுக்களை வாங்கிக் கொண்டு பணம் கொடுக்காமல் ஓடி விடுவேன் என்று இந்த திருட்டு முழி மீது அவளுக்குச் சந்தேகம்.

எனக்குக் கோபமாக இருந்தாலும், ஆங்கிலத்தில் பேசினால் அந்தப் பெண்ணுக்கு விளங்குமோ தெரியாது. அவளின் ஆங்கிலமும் அப்படி இப்படி!

சண்டை பிடித்து விட்டு, டிக்கட் வாங்க வேறு எங்கோ போக வேண்டி வரும். கதையை வேறு மாதிரி மாற்றி, கையைப் பிடித்தார் என்று விட்டால், அது வேறு தலையிடி. கமராப் படங்கள் நீதிமன்றத்துக்கு வருவதற்குள் நான் குற்றவாளியாகி விடுவேன்.

பேசாமல் காசைக் கொடுத்து வாங்கி வருவேன்.

இதைப் பற்றி மனைவியிடம் சொன்னால், 'என்னோடு அப்படி நடந்து கொள்வதில்லையே, அவளுக்கு உன்னைப் பாக்க கள்ளன் மாதிரித் தானே இருக்கும்?' என்று வேறு மேலும் எரிச்சல் ஊட்டுவாள்.

'சரி, வேறு என்ன வாங்கப் போகிறேன். இது தானே, அதுவும் எப்போதாவது ஒரு தடவை தானே?' என்று பேசாமல் வாங்கிக் கொண்டிருந்தேன்.

**அதன் பின்னால், அந்நியப் பெண்களுடன் அனாவசியமான பேச்சுக்கள், eye contact எல்லாவற்றையும் நிறுத்தி விட்டு, இப்போது பெண்களைக் காணும் போதெல்லாம் தலை நிமிராமல் நிலம் பார்த்து, இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க, நடமாடிக் கொண்டிருக்கிறேன்.**

**ஏன் வேற பக்கம் பார்த்துக் கொண்டு போகலாம் தானே என்று நீங்கள் கேட்கக் கூடும்.**

ஒருநாள் பேக்கரிக்கு பாண் வாங்கப் போனேன். அந்தக் கடைக்கு முன்னால் பொலிஸ்காரர்களும் காரர்களும் நின்றிருந்தார்கள். என்ன நடந்ததோ என்று பார்த்தபடியே பேக்கரிக்குள் போனேன். உள்ளே ஒரு பொலிஸ்காரர் எனக்கு எக்ஸ்கியூஸ் மீ சேர் என்றபடி ஏணியோடு வந்தார். வந்து பேக்கரிக்குள் இருந்த சிசிடிவி கமெராவைப் பார்த்துச் சுழல விட்டுக் கொண்டிருந்தார். பேக்கரிக்காரரைக் கேட்டேன்.

'என்ன பிரச்சனை, அண்ணை?'.

'மனிசியிட்ட லொத்தர் டிக்கட் வாங்க வந்த கறுவல்கள் டிக்கட்டுக்களை அள்ளிக் கொண்டு ஓடிவிட்டார்கள்'.

அவர் யாழ்ப்பாணி. கறுப்பினத்தவரை கறுவல் என்பது சகஜம். அவருக்கு நான் political correctness பற்றிக் கற்பிக்க முடியுமா?

சுரண்டிப் பார்த்து அதிர்ஷ்டத்தைத் தெரிந்து கொள்ளும் டிக்கட்டுகள், மேசையில் கண்ணாடிக்கு கீழே இருக்கும். வெளியே தூக்கி வைத்து தெரிவு செய்ய விடுவார்கள். அப்போது தான் அவர்கள் அள்ளிக் கொண்டு ஓடியிருக்கிறார்கள்.

ஆக, இங்கே கறுப்பு இனத்தவர்கள் சட்டவிரோதச் செயல்கள் செய்கிறார்கள் என்று பொலிசார் ஊகத்தில் சந்தேகப்படுவதே பெரிய பிரச்சனையாகி, அது பற்றியே விசாரணைகள் நடக்கும் அளவுக்கு நிலமை இருக்கும் போது, அவர்களைக் காசைத் தரும்படி கேட்காமல், என்னை விட அவர்களை நம்பும் அளவுக்கு இருக்கும் அந்த சீனப் பெண்ணுக்கு, என்னுடைய திருட்டு முழி மீது சந்தேகம் இருக்கிறது என்றால், there must be something wrong about me.

•••

அதன் பின்னால், அந்நியப் பெண்களுடன் அனாவசியமான பேச்சுக்கள், eye contact எல்லாவற்றையும் நிறுத்தி விட்டு, இப்போது பெண்களைக் காணும் போதெல்லாம் தலை நிமிராமல் நிலம் பார்த்து, இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க, நடமாடிக் கொண்டிருக்கிறேன்.

ஏன் வேற பக்கம் பார்த்துக் கொண்டு போகலாம் தானே என்று நீங்கள் கேட்கக் கூடும்.

வேறெங்காவது பார்த்தால், திரும்புகிற நேரமாகப் பார்த்து, ஏதாவது ஒரு தமிழ்த் தீர்க்கசுமங்கலியின் கண்கள் தற்செயலாகவேனும் என் கண்களைத் தரிசிக்கக் கூடிய துர்ப்பாக்கிய நிலை நேரக் கூடிய அளவுக்கு, எல்லோருக்கும் ஏழரை வருடங்களில் முடிகிற சனி, இந்த உள்ளம் கவர் கள்வனுக்கு வாழ்நாள் பூராவும் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறது.

பிறகு அந்தத் 'துள்ளுவதோ இளமை' தீர்க்கசுமங்கலிகளும், 'சும்மா வெறுங் கழுத்தோட போனால், வேற ஆம்பிளையள் தேவையில்லாமல் எங்களைப் பாப்பினம், பின்னால வரப்பாப்பினம், அதுக்கு போடுற தாலிக்கொடியை 54 பவுண் தங்கத்தில பெரிசா செய்து போட்டால் தான் அவே அதைப் பாத்திட்டு எங்களுக்கு லுக் விட மாட்டினம்' என்று தங்கள் 'எங்கட இவர்' வாத்தியார்களுக்குச் சொல்லப் போக...


அந்த வாத்தியார்களும் தங்கள் பட்டத்து ராணிகளுக்கு எடைக்கு எடை தங்கம் போட்டு அழகு பார்க்கப் போக...

அந்த பாவமும் பழியும் என் மீதும் என் வம்சத்தின் மீதும் இல்லாமல் போகக் கடவதாக!










# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!

# கோமாளிப் படையணி

**கற்சுறா**




கடந்த அபத்தம் இதழில், ரொரண்டோவிலிருந்து வெளிவரும் ‘காலம்‘ பத்திரிகை குறித்தும் அதன் ஆசிரியர் செல்வம் அருளானந்தம் அவர்கள் குறித்தும் ஜோர்ஜ் அவர்களால் வெளிப்படையாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கருத்துநிலையினூடாகநமதுஇலக்கிய சமூகத்தில் ஒரு உரையாடலுக்கான முன்நகர்வுடன் என்னுடைய கவன நிலைப்பாட்டினையும் நான் முன்வைக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்.

ஏனெனில், 20 பக்கங்களைக் கொண்ட ஜோர்ஜ் அவர்களின் அந்தக் கட்டுரை 20 ஆண்டுகளுக்கு மேலான கனடிய இலக்கிய வாழ்வில் ஜோர்ஜ் தான் எதிர் கொண்ட விடயங்கள் குறித்துப் பேசுகிறது. இந்த எழுத்து நிலை குறித்தாவது ரொரண்டோ இலக்கியச் சூழல் கட்டாயம் எதிர்வினை ஆற்றும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் எத்தனையோ இலக்கிய விமர்சனங்களையும் அரசியல் முரண்பாடுகளையும், வாசிக்காதது போலவும், பார்க்காதது போலவும், கேள்விப்படாதது போலவும் உரையாடலைத் தவிர்த்து நகர்ந்து போகும்இந்தரொரண்டோஇலக்கியச் சூழல் இதனையும் தவிர்த்துப் போக முனைவது வேடிக்கையானதல்ல. மிகுந்த விபரமானது.

ரொரண்டோவிலிருந்து வெளிவரும் காலம் சஞ்சிகையும் அதன் ஆசிரியர் செல்வம் அருளானந்தம் அவர்கள் குறித்தும் கடந்த காலங்களில் நான் முன்வைத்த விமர்சனங்கள் முரண்பட்டுக் கொண்ட கருத்துக்களின் அடிப்படையில் இங்கும் சில விடயங்களைப் பேச வேண்டும் என எண்ணுகிறேன்.

கடந்த சிலகாலங்களின் முன் அகழ் மின்னிதழில் செல்வம் அவர்கள் கொடுத்திருந்த பேட்டி குறித்தும், ‘அண்ணா100‘ மாநாட்டில் அவர் ஆற்றியிருந்த ‘சொற்பொழிவு‘ குறித்து மட்டுமல்ல கடந்த காலத்தில் காலம் இதழின் கருத்துக்களோடும் மிக அதிகமாக முரண்பட்டிருக்கிறேன். வெளிப்படையாக அவற்றை முன்னிறுத்தி எழுதியும் இருக்கிறேன்.

**பட்டிருந்தோம். அந்த யுத்தத்திற்குள் இருந்து வெளியேறி புகலிடம் கோரிய நாடுகளிலிருந்து வெளிவந்த சிறுசஞ்சிகைகள் தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படையாகப் பேசி நின்றவை. போராட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த யுத்தங்களுக்கான எதிர் நிலையை மனித உரிமை சார்பாக நின்று பேசுவதற்காகத் தொடங்கப்பட்ட சஞ்சிகைகள் அவற்றில் முக்கியமானவை.**

**ஈழத்தில் கருத்துக்களுக்காக கடத்தப்படுபவர்களும், வதைமுகாம் களில் அடைக்கப்படுபவர்களும், கொல்லப்படுபவர்களும் அதிகமாகிக் கொண்டிருந்த காலங்கள் அவை. அவற்றை சுதந்திரமாக எதிர்த்து நிற்கக் கூடிய சூழல் ஈழத்தில் அறவே அற்றுப் போன காலங்கள் அவை. அந்தச் சூழலில் புகலிடத்தில் தோன்றிய சஞ்சிகைகள் மிக முக்கிய பேசுபொருளாக இருந்தன. இதனோடு இணைந்துதான் புகலிட இலக்கியச் சந்திப்பும் நகர்ந்து வந்தது.**

**இதன் பின்னால் இருந்த உழைப்பும் அதன் வலிகளும் மிகவும் மலினப்படுத்தப்பட்டு அடையாளமற்றுப் போக வைக்க முனையும் செயற்பாட்டினை நாம் ஒருபொழுதிலும் அனுமதிக்கமுடியாது.**

ஆனாலும் அவருடன் என்னுடைய தனிப்பட்ட நட்புணர்வை நான் தொடர்ந்தும் பேணி வருகிறேன். அந்த முரண்பாடு ஒரு பகை முரண்பாடு அல்ல. நான் எழுதும் ஒவ்வொரு தடவையும் தனிப்பட்ட முரண்பாடாகக் கருதி அவர் என்னுடன் உறவை முறித்திருந்தாலும் அந்தப் பகை சில நாட்களில் காலாவதியாகிவிடும். அவ்வாறு காலாவதியாகும் நேரத்தில் அவர் குறித்து நான் இன்னொன்றை எழுதிவிட வேண்டிய நிலையையும் அவர்தான் எனக்குத் தருகிறார்.

ஆனால், றொரண்டோவில் அவரைச் சுற்றியுள்ள சூழல் அவருக்கே ஆபத்தான சூழல் என்பதனை அவர் ஏன் விளங்கவேயில்லை? என்று நான் நினைப்பதுண்டு. அவரை முன்னுக்குத் தள்ளி அவரைப் 'உசுப்பேற்றி' முறிந்து விழச் செய்யும் சூழலையே அவர் சுற்றிவர வைத்திருக்கிறார். கிட்டத்தட்ட அவரை ஒரு கோமாளியாக்கிவிட்டு அலுவலைக் கொண்டு போகும் ஒரு கூட்டமே அவரைச் சுற்றியிருக்கிறது. அதனை அவர் விளங்கிக் கொள்ளாமலும் இருக்கமாட்டார் என்றே எண்ணுகிறேன். அந்தக் கூட்டத்திற்கு இவரைவிட்டால் ஆள் இல்லை. இவருக்கும் அவர்களை விட்டால் ஆள் இல்லை என்ற நிலைதான் இந்த அவமானங்களை அது அவமானங்கள் என்றுதெரிந்தும் அவர் தொடர்ந்து சுமக்க வேண்டியிருக்கிறது.


இன்னொருபுறம் அவர், தன்னுடைய இயல்பு நிலையில், ஒரு இலக்கிய விருப்பு நிலையில், கருத்துக்களை எதிர் கொள்வதனை விடுத்து யாரையோ திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக வலிந்து செய்யப்படும் செயற்பாடுகள் அவரை ஒரு நாளும் நிலை கொள்ளச் செய்யாது. நித்தியத்திலும் வரலாறு அவரை மன்னிக்காது. அதனால்த்தான் இது தொடர்பான என்னுடைய கருத்தினை நான் எழுதுகிறேன். இந்த றொரண்டோ பெரும்பாகத்திலிருந்தோ அல்லது தமிழ் நாட்டில் இருந்து அனைத்தும் தெரிந்த அ.ராமசாமி அவர்களின் குறிப்புப் போலவோ கூட, யாரும் எதுவும் தெரிவிக்காததால் என்னுடைய கருத்தினை எழுதுகிறேன்.

## முன்பதிவு.

புகலிடச் சூழலின் இலக்கிய வெளியில் வெளிவந்த சஞ்சிகைகள் ஏராளம் ஏராளம். ஏறத்தாழ 40 வருடங்களுக்கு மேலான இயங்கு நிலை அதற்குண்டு. அவற்றில் பல சஞ்சிகைகளுக்குச் சமூகப் பொறுப்புணர்வும் பொறுப்புக் கூறலுமான அரசியற் பார்வை இருந்திருக்கிறது. இந்த சமூகம் பற்றிய பெரும் கனவு இருந்திருக்கிறது. அந்தக் கனவுகள் குழப்பமடைந்திருக்கிறது. குழப்பமடையும் பொழுது சஞ்சிகைகளுக்குள் சண்டை உருவாகியிருக்கிறது. சண்டைகள் சஞ்சிகைகளின் தொடர்ச்சியை மறுத்திருக்கிறது. பின் அது வேறு ஒன்றாகியும் இருந்திருக்கிறது. சில குறிப்பிட்ட காலத்தில் நின்று போயிருக்கிறது. சஞ்சிகைகளில் கருத்துப் பிளவும் தற்குறி மனமும் தோன்றும் பொழுது சஞ்சிகைகளும் பிளவுபட்டு இருக்கின்றன. நீண்டகால உழைப்பின் நிமித்தம் பொருளாதாரப் பலமின்றி நின்று போனவையும் உண்டு. இவ்வாறு சிறு சஞ்சிகைகளுக்குரிய ஒரு உள்மதிப்பீட்டின் படி அவற்றின் இயங்கு நிலை இருந்திருக்கிறது. ஆனால் அண்மைக்காலமாக அவ்வாறான சிற்றிதழ்களின் மீதான கரிசனை எதனையும் கணக்கில் கொள்ளாது அவற்றை மதிப்பிழக்கம் செய்து பரப்பப்படும் அவதூறுகளே எனக்கு இதனை எழுதத்தூண்டுகிறது.

நாம் யுத்தத்தால் சூழப்பட்டிருந்தோம். அந்த யுத்தத்திற்குள் இருந்து வெளியேறி புகலிடம் கோரிய நாடுகளிலிருந்து வெளிவந்த சிறுசஞ்சிகைகள் தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படையாகப் பேசி நின்றவை. போராட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த யுத்தங்களுக்கான எதிர் நிலையை மனித உரிமை சார்பாக நின்று பேசுவதற்காகத் தொடங்கப்பட்ட சஞ்சிகைகள் அவற்றில் முக்கியமானவை. ஈழத்தில் கருத்துக்களுக்காக கடத்தப்படுபவர்களும், வதைமுகாம் களில் அடைக்கப்படுபவர்களும், கொல்லப்படுபவர்களும் அதிகமாகிக் கொண்டிருந்த காலங்கள் அவை. அவற்றை சுதந்திரமாக எதிர்த்து நிற்கக் கூடிய சூழல் ஈழத்தில் அறவே அற்றுப் போன காலங்கள்

அவை. அந்தச் சூழலில் புகலிடத்தில் தோன்றிய சஞ்சிகைகள் மிக முக்கிய பேசுபொருளாக இருந்தன. (சுருக்கம் கருதி, அவற்றின் பொது அடையாளத்தை மட்டும் கருத்தில் எடுத்துக் கொண்டு,சஞ்சிகைகளின் பெயர்களைத் தவிர்க்கிறேன்.) இதனோடு இணைந்துதான் புகலிட இலக்கியச் சந்திப்பும் நகர்ந்து வந்தது. இதன் பின்னால் இருந்த உழைப்பும் அதன் வலிகளும் மிகவும் மலினப்படுத்தப்பட்டு அடையாளமற்றுப் போக வைக்க முனையும் செயற்பாட்டினை நாம் ஒருபொழுதிலும் அனுமதிக்கமுடியாது. அதனை உணர்ந்தபடியால் மட்டுமே இதனை எழுத வேண்டிய தேவை எனக்கு எழுகிறது.




ஒரு கருத்தினை வெளிப்படையாகப் பேசும் நிலையை புகலிடச் சூழலிலும் துப்பாக்கிகள் மறித்திருந்தனதான். அச்சப்படுத்தியது தான். இதற்குள் தான் புகலிடசஞ்சிகைகள் முக்கிய பேசுபொருளாயிருந்தன. இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. ஒரு இதழுடனோ இரண்டு மூன்று இதழ்களுடனோ இல்லை பத்து இதழ்களுடனோ மட்டும் நின்று போன சஞ்சிகைகளில், புகலிட இலக்கியத்திற்கென ஒரு சமூகப் பொறுப்பும் பொறுப்புக் கூறலுடனான அரசியற் பார்வையும் அதற்கான கருத்து நிலையும் இருந்தபடியால்த்தான் தொடங்கப்பட்டதும் அவை நின்று போனதும். நானறிந்தவரை இவ்வாறான சஞ்சிகைகளைத் தொடங்கிச் செயற்படுத்தியவர்கள் அனைவருமே அந்த சஞ்சிகைகள் நின்று போன பின்னாலும் வேறு வேறு தளத்திலும் தமது கருத்துநிலை சார்ந்து தொடர்ந்தும் இன்றுவரை இயங்கிக் கொண்டு தானிருக்கிறார்கள். அவர்கள் யாருமே தமது பிழைப்பிற்காக சஞ்சிகை நடத்தியவர்களல்ல. எந்தக் கருத்து நிலையில் என்றாலும் தமக்கான முரண்பாடுகளால் தமக்குள்ளேயே அதிகம் சண்டையிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். தமது பிழைப்பிற்காக சஞ்சிகைகள் வெளியிடுபவர்கள் என்றால் எந்த விமர்சனங்களைக் கண்டாலும் பார்க்காதது போலவும் வாசிக்காதது போலவும் கடந்து போய்விடுவார்கள். ஆனால் இவர்களால் அவ்வாறு இருக்க முடியாததன் நிலைதான் அந்த சஞ்சிகைகளின் தொடக்கமும் முடிவும்.

ஆனால் இந்தக் கருத்து நிலை சார்ந்து நீண்டதொரு உரையாடல் வெளிப்படையாக நம் சூழலில் இன்றுவரை முன் வைக்கப்பட்டதில்லை. வெறுமனே சஞ்சிகைகளின் பெயர்களையும் அவை உருவாகிய பிரதேசங்களையும் அடையாளம் காட்டியதோடு முடிவடையும் கட்டுரைகளே அவ்வப்பொழுது வெளிப்படுத்தப் படுகின்றன. அவை சஞ்சிகைகளின் கருத்து நிலை சார்ந்து விரிவான ஆய்வாக முன்வைக்கப்பட்டவையல்ல. அது இந்த சமூகத்திற்குத் தேவையான ஒன்றாகக் கூட இன்றுவரை யாரும் கருதவேயில்லை.

சரி இதெல்லாம் ஒருபுறம் இருக்க,

கனடாவில் வெளிவரும் காலம் இதழ் குறித்த பேச்சுக்கள் பல்வேறு இடங்களில் தற்பொழுது பேச வைக்கப்படுகின்றன. அவ்வாறு பேசப்படும் விடயங்களில் மிக முக்கியமாகத் துருத்திக் கொண்டு நிற்கும் விடயம் அதன் தொடர்ச்சி குறித்ததுதான். இதுவரையான

**இங்கே அடையாளம் காட்டும் பெயர்களைப் பார்க்கும் பொழுது, பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களுக்கு எவ்வித ஈழ இலக்கியப் பார்வையும் தெரியாது, வாசிப்பும் கிடையாது என்பதனையே அப்பட்டமாகக் காணமுடிகிறது. கவிஞர் சோலைக்கிளியையும் தேவஅபிரா (தேவஅபிதா என்று ஒருவர் இருப்பதாக நான் அறியவில்லை. இருந்தால் அடையாளம் காட்டுங்கள்) அவர்களையும் இவர் அறியாதிருந்து கொண்டு ஒரு 30 வருடகால சஞ்சிகையை விமர்சனம் செய்து இதுதான் வராலாறு என்பதாகக் காட்ட முனைவது சுத்த அபத்தம். இதில் தமயந்தி என்று அடையாளம் காட்டப்படுவது நம்முடைய நண்பன் நோர்வேத் தமயந்தியைத்தானே?**

**(அவனைக் கூட அறியாத ஒரு அசடாக இருந்து இப்படியானதொரு விமர்சனத்தை இந்தப் பேராசிரியர் எழுதலாமா? இவர் என்ன வகையான பேராசிரியர்?)**

புகலிட சஞ்சிகைகளின் அத்தனை தர்மங்களையும் நீர்த்துப் போக வைப்பது போல் மிக அண்மையில் ஜெயமோகனின் பக்கத்தில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி என்ற ஒருவரால் 'காலம் அறுபது' என்று காலம் சஞ்சிகைகள் குறித்த கட்டுரை ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. மிக அண்மைக்காலமாக ரொரண்டோவில் மா. சின்னத்தம்பி என்பவரைச் சில கூட்டங்களில் கண்டிருக்கிறேன்.

சின்னத்தம்பி அவர்கள் அந்தக் கட்டுரையில்

1.'காலம் வெளிவரத்தொடங்கிய 1990கள் புலம் பெயர் அரசியலில் மிகவும் பரபரப்பான காலகட்டம். காலம் இயன்றளவு அரசியலைத் தவிர்த்து இலக்கியத்தை மையப்படுத்தி இயங்கி வந்தமை ஒரு புறம் அதன் சிறப்புத்தான். ஆனால் அதற்காக விமர்சிக்கப்பட்டும் வந்திருக்கிறது' என்கிறார்.

ஒரு சமூகம் ஒரு அரசியல் நெருக்கடிக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட காலத்தில் வெளிவந்த பத்திரிகை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வெளிவந்தது எனில் அதன் தேவை அந்த சமூகத்திற்குள் என்னவாக இருந்திருக்கும்? ஒரு சில இதழ்களுடன் நின்றுபோன மற்றய சஞ்சிகைகள் பேசிய அரசியல் என்ன? காலம் இதழ் எந்த அரசியல் நீக்கம் செய்யப்பட்டது? நாம் கடந்து வந்த வெளியில் இது ஒரு முக்கிமான விவாதக் கேள்வியல்லவா? காலம் இதழ், இலக்கியத்தை மையப்படுத்தியது என்றால், அது என்ன இலக்கியம் என்று நாம் பேச வேண்டாமா?

2.'காலத்தின் படைப்புகளில் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கீதா சுகுமாரன், தமிழ் நதி, பத்மா அரவிந்த், சுமதி ரூபன், தான்யா, பிரதீமா.தி. பெண்ணியா போன்றவர்களது ஆக்கங்கள் முக்கியமானவை. அதேபோல அஜிதா நிவேதா, சோலைக்கிளி, கௌசல்யா, மதி, ரஞ்சினி, திரேசா, ஆழியாள், நஜீபா, யமுனா, ரஞ்சனி, மிஸ்ரா, தமயந்தி, தர்மினி, கறுப்பி கனிமொழி, ரிஸ்மினி, மைதிலி, ஊர்வசி, தேவாஅபிதா போன்றவர்களது பங்களிப்பும் கவனத்தில் கொள்ளத்தக்கன.' என்கிறார் இந்தப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள்.

இங்கே அடையாளம் காட்டும் பெயர்களைப் பார்க்கும் பொழுது, பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களுக்கு எவ்வித ஈழ இலக்கியப் பார்வையும் தெரியாது, வாசிப்பும் கிடையாது என்பதனையே அப்பட்டமாகக் காணமுடிகிறது. கவிஞர் சோலைக்கிளியையும் தேவஅபிரா (தேவஅபிதா என்று ஒருவர் இருப்பதாக நான் அறியவில்லை. இருந்தால் அடையாளம் காட்டுங்கள்) அவர்களையும் இவர் அறியாதிருந்து கொண்டு ஒரு 30 வருடகால சஞ்சிகையை விமர்சனம் செய்து இதுதான் வராலாறு என்பதாகக் காட்ட முனைவது சுத்த அபத்தம். இதில் தமயந்தி என்று அடையாளம் காட்டப்படுவது நம்முடைய நண்பன் நோர்வேத் தமயந்தியைத்தானே?

(அவனைக் கூட அறியாத ஒரு அசடாக இருந்து இப்படியானதொரு விமர்சனத்தை இந்தப் பேராசிரியர் எழுதலாமா? இவர் என்ன வகையான பேராசிரியர்?)

அதிலையும் '... போன்றவர்களது பங்களிப்பும் கவனத்தில் கொள்ளத்தக்கன.' என்ற வசன முடிவு வேறு. இவரை என்ன சொல்லித் திட்டுவது?

ஒரு சமூகம் ஒரு அரசியல் நெருக்கடிக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட காலத்தில் வெளிவந்த பத்திரிகை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வெளிவந்தது எனில் அதன் தேவை அந்த சமூகத்திற்குள் என்னவாக இருந்திருக்கும்? ஒரு சில இதழ்களுடன் நின்றுபோன மற்றய சஞ்சிகைகள் பேசிய அரசியல் என்ன? காலம் இதழ் எந்த அரசியல் நீக்கம் செய்யப்பட்டது? நாம் கடந்து வந்த வெளியில் இது ஒரு முக்கிமான விவாதக் கேள்வியல்லவா? காலம் இதழ், இலக்கியத்தை மையப்படுத்தியது என்றால், அது என்ன இலக்கியம் என்று நாம் பேச வேண்டாமா?

ஈழக் கவிதைச் சூழல் பற்றியோ அல்லது புகலிடச் சூழலின் கவிதைகள் குறித்தோ எந்த வாசிப்பு அனுபவமும் இல்லாது தனது கையில் திணிக்கப்பட்ட பக்கங்களை மட்டும் வைத்து மொத்தச் சூழலையும் அடையாளம் காட்டி ஒன்றுமேயில்லை என்று சொல்லும் அயோக்கியத்தனத்தை இவர்கள் இனியாவது நிறுத்த வேண்டும். இந்தமாதிரியான செயலைச் செய்யத் துணை நிற்பவர்களையும் அடையாளம் கொள்ள வேண்டும். இதேபோன்றதொரு ஈழக்கவிஞர் அடையாள கதையைக் காலம் பத்திரிகையிலும் முன்னர் ஜெயமோகன் அவர்கள் எழுதியிருப்பார்.

சரி, இவ்வாறு மா.சின்னத் தம்பியால் எழுத வைக்கப்பட்ட ஒரு கட்டுரையை யார் ஜெயமோகனுக்கு அனுப்பி வைத்தது? என்றதொரு கேள்வி இருக்கிறதல்லவா? அதிலும் அனுப்பியவரும் சரி ஜெயமோகனும் சரி இந்தக் கட்டுரையை இன்றுவரை வாசிக்கவில்லையா? ஜெயமோகன் அவர்கள்தானே ஈழத்துக் கவிஞர்கள் குறித்து அடிக்கடி ஆய்வுகளும் அடிதடிக் கருத்துக்களும் உரைப்பவர்? அவருக்கும் சோலைக்கிளி என்ற கவிஞனைத் தெரியாதா? அதனையும் விட ஜெயமோகனது பக்கங்களைத் தவறாது படித்து தனது அடிபொடிகளுக்குக் கருத்துரைக்கும் செல்வம் அருளானந்தம் அவர்கள் கூட தனது காலம் பத்திரிகை பற்றி எழுதப்பட்ட இந்த பேராசிரியரின் மொக்குக் கட்டுரையை இரண்டு தடவை தனது முகநூலில் பகிர்ந்திருந்தும், இன்று வரை வாசிக்கவில்லையா? (செல்வம் அவர்கள் பகிந்திருந்த நேரமும் ஜெயமோகன் தனது பக்கத்தில் பதிந்த நேரத்தையும் கணக்கிட்டால் இதனைச் செல்வம் அவர்களே அனுப்பி வைத்ததாகத்தான் தெரிகிறது. இந்தக் கட்டுரையையும் செல்வம் அவர்கள் தான் மா. சின்னத்தம்பியைக்

கொண்டு எழுத வைத்திருப்பார் என்று நான் நம்புகிறேன்.)

தனது முகநூல் பக்கத்தில் இரண்டு தடவை இதனைப் பகிர்ந்திருக்கும் செல்வம் அவர்கள் எப்படி இதனை வாசிக்காது இருந்திருக்க முடியும்.? அல்லது செல்வம் அவர்களுக்கும் சோலைக்கிளி என்ற கவிஞன் யார் என்று தெரியாதா? என்ன வகையான பித்தலாட்டம் இது?

## நடுக்களம்

*3.*'தனது இரண்டாவது தாயகத்தில், செல்வம், காலம் சிற்றிதழை முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அதிக ஆவலுடனும், தெளிவான இலக்குகளுடனும் தொடங்கினார். இப்படி பலர் சிற்றிதழ்களைத் தொடங்கினர் அவர்கள் மனதிலும் நல்ல ஆசைகள் இருந்திருக்கும். தக்கனவே பிழைத்துக் கொள்ளும் என்றார் விஞ்ஞானி டார்வின். புலம் பெயர் தேசத்து ஹறிகேனில் பல அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. காலம் நிலைத்து நிற்கிறது. இதழ் ஆசிரியர் தனது தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, தொழில் வாழ்வு என்பவற்றுக்குரிய நேரத்தில் ஒரு பகுதியை பறித்தெடுத்து காலத்திற்காக ஒதுக்கினார். இந்த நாட்டின் சூழலையும் மனிதர்களையும் நிதானமாக இனங்கண்டுகொண்டார். 'ஊர்கூடி தேர் இழுத்தல்' தத்துவத்தை புரிந்து கொண்டனர். நல்ல, உண்மைத் தோழர்களை கண்டறிந்தார். 'பிழைப்புக்காக இலக்கியம்' என்பதிலிருந்து விலகி நின்றார். காலம் கால் ஊன்றியது."கனடாவில் மூன்று தசாப்தங்களாக எத்தனை சிற்றிதழ்கள் முனைப்புடன் தொடங்கப்பட்டன. எத்தனை நின்று விட்டன.' என்கிறார் இந்தப் பேராசிரியர்.

இந்தப் பேராசிரியரின் அறிவின்படி நிலைத்து நிற்கும் காலத்திற்கும் நின்று போன சஞ்சிகைகளுக்கும் இடையிலிருக்கும் எந்த ஒரு அடிப்படை வித்தியாசத்தையும் அவரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவற்றை அடையாளம் காட்ட முடியவில்லை. ஏனெனில் இந்தக் கட்டுரை எழுதும்பொழுது வேறு எந்த ஒரு சஞ்சிகையையும் இவர் பார்த்திருக்கவில்லை. வாசித்திருக்க வில்லை என்று தெரிகிறது. அவ்வாறு வாசித்திருந்திருந்தால் ஒரு பேராசிரியராக இருக்கும் அறிவின்படி தன்னுடைய முட்டாள்த் தனத்தை மறைக்கவாவது அதன் அடிப்படைகளை மெல்லிதாகவேனும் தொட்டிருப்பார். அதன் பெயர்களை யாவது அடையாளம் காட்டியிருப்பார். இங்கே அது நடக்கவில்லை. இது ஒரு வேலை வெட்டியில்லாத ஒருவருக்கு ஊதியம் கொடுத்து எழுத வைக்கப்பட்ட கட்டுரையேதான் என என்னால் ஊகிக்க முடிகிறது. ஆனடியால் தான் இன்றுவரை இதன் மீதான ஒருசிறு கரிசனையும் யாரிடமும் இருந்தும் எழுவில்லை.

அதனையும் விட பிழைப்புக்காக இலக்கியம் என்பதிலிருந்து செல்வம் விலகி நின்றார். காலம் கால் ஊன்றியது என்கிறார் இந்த அசட்டுப் பேராசிரியர். மற்றய சிற்றிதழ்கள் எல்லாம் தங்களுடைய சொந்தப்பணத்தினைச் செலவு செய்து வெளிவந்த சிற்றிதழ்கள். காலம் அப்படியல்ல. அது இங்கே பல்வேறு விளம்பரதாரர்களைத் தாங்கியே அது வெளிவந்தது. இன்றும் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதற்குள் இருக்கும் வியாபார முனைப்புக் குறித்து அவ்வப்பொழுது நண்பர்கள் வட்டத்தில் பேசப்பட்டாலும் ஜோர்ஜ் குருசேவ் அவர்கள் பிழைப்புக்கான இலக்கியம் காலம் என்பதனை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் மா. சின்னத்தம்பி என்ற இந்த அசட்டுப் பேராசிரியர் கயிற்றை மாற்றிப் போடுகிறார். உண்மையில் யார் இந்த மா. சின்னத்தம்பி? என்ன வகையான பேராசிரியர் இவர்?

ஒரு சமூகத்தில் சிற்றிதழ் என்பதனுடைய பங்கு மற்றும் அதன் தர்க்கங்கள் இருப்புக்கள் எதையும் உணரத் தெரியாத ஒரு படித்த முட்டாள் பேராசிரியருக்குள் யாரோ தங்கள் பேயை ஏவிவிட்டிருக்கிறார்கள். அதன் முழுமையான வெளிப்பாடுதான் இந்தக் கட்டுரை. இந்தக் கட்டுரையை வாசித்து, இதை விட வேறு என்னதான் கருத்துச் சொல்லிவிட முடியும்?

## இலக்கிய முட்டாள்களின் காலமல்ல இது.

அடுத்து இன்னொரு ஆய்வு, அருண்மொழி வர்மனுடையது. அவரது காலம் சஞ்சிகை குறித்த கட்டுரையில்,

*1.*'காலத்தின் முதலாவது இதழில் ஆசிரியராக செல்வமும் வெளியிடுபவராக கே.வி. மூர்த்தியின் (குமார் மூர்த்தி) பெயர்களும் இடம் பெற்றிருக்கின்றன. காலத்திற்கு காலம் ஆசிரியர் குழுவினரும் ஆலோசகர்களும் மாறி வந்திருக்கின்றனர். குமார் மூர்த்தி, செழியன், ஆனந்தப்பிரசாத், என். கே. மகாலிங்கம், சரவணன், அ.கந்தசாமி, உஷா மதிவாணன் ஆகியோர் வெவ்வேறு காலகட்டங்களில் அதன் இணை ஆசிரியர்களாகவும் ஆலோசகர்களாகவும் இடம் பெற்றிருக்கின்றனர்.' என்கிறார்.

இதில் பெயர் குறிப்பிட்டி ருப்பவர்களில் பலரை நான் நன்றாக அறிந்திருந்திருக்கிறேன். ஆனாலும், நான் அதிகம் செழியன் அவர்களோடு நெருங்கியிருந்த படியாலும் அதிகமான விடயங்களில் அவரோடு பல்வேறு முரண்பாடுகளை உரையாடி இருந்ததாலும் மேற்குறிப்பிட்ட ஆலோசகர் என்ற பதவி குறித்தும் ஒருமுறை கேட்டிருந்தேன். அதற்கு முன்பு இயல் விருதுக் குழுவில் இருப்பது பற்றியும் கேட்டிருந்தேன்.அதற்கு அவர் சிரித்துக் கொண்டு, உன்னுடைய பெயரை நாங்கள் பாவிக்கலாமா என்று கேட்டார்கள். பாவியுங்கள் என்றேன் எனச் சொன்னார். அதில் என்பெயர் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன அதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோல் தெரிவித்தார். (இது குறித்து முன்னரும் நான் பதிவு செய்திருக்கிறேன்)

அபத்தம் இதழில் அ. ராமசாமி அவர்களுடன் தளவாய் சுந்தரத்தின் அம்ருதா இதழிற்கு ஆலோசகராக இருக்கும் விடயம்

கூட உரையாடப்பட்ட கருத்தினை வாசித்து அறிந்திருப்பீர்கள். அதுபோன்ற ஒரு 'கலந்து கட்டும்' விளையாட்டுத்தான் இங்கேயும் நடக்கின்றது. அருண்மொழிவர்மன் சொல்வது போல இந்த ஆலோசகர் என்பவர்களுக்கு ஒரு அடையாளமும் இல்லை. சம்பந்தமும் இல்லை. சிலரது பெயர் பாவிக்கப்படுவது என்பது சஞ்சிகையின் மானம் காப்பாற்றும் ஒரு செயல் ஒன்று மட்டுந்தான். அதனை விடுத்து வேறு எதுவுமில்லை.

செழியன் குறித்து அவரது அஞ்சலிக் குறிப்பிற்கும் அப்பால் நாம் பேச வேண்டும் என்று ஒரு பதிவினை சிலமாதங்களின் முன் அபத்தத்தில் சொல்லியிருந்தேன். ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஒரு ஆளுமையை,

'மரணத்தைக் கண்டு
நாங்கள் அஞ்சவில்லை.
ஆனால், புதிய
எஜமானர்களுக்காகத்
தெருக்களில் மரணிப்பதையே
வெறுக்கிறோம்'

என்று ஈழச் சமூகத்தின் கொலைக் கலாச்சாரத்தைக் கேள்விக்குள்ளாக்கிய கவிஞனை ஒரு 'பபூனாக' ஆக்கிய றொறண்டோ இலக்கியச் சூழலைக் கேள்வி கேட்காது கடந்து போகக் கூடாது. அது விரிவாகப் பேச வேண்டிய இன்னொரு பகுதி. அது இன்றுவரை பேசப்படவேயில்லை என்பதின் அழுத்தத்தில் நான் எழுதிய பதிவுதான் அது.

**ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஒரு ஆளுமையை,**

**'மரணத்தைக் கண்டு
நாங்கள் அஞ்சவில்லை.
ஆனால், புதிய
எஜமானர்களுக்காகத்
தெருக்களில் மரணிப்பதையே
வெறுக்கிறோம்'**

**என்று ஈழச் சமூகத்தின் கொலைக் கலாச்சாரத்தைக் கேள்விக்குள்ளாக்கிய கவிஞனை ஒரு 'பபூனாக' ஆக்கிய றொறண்டோ இலக்கியச் சூழலைக் கேள்வி கேட்காது கடந்து போகக் கூடாது.**

இங்கே காலம் பத்திரிகைக்கு ஒப்புக்கு ஆலோசகராக இருந்த செழியனை, நம்மிடையே இருந்த ஓவியர் கருணா அவர்கள் சீரழித்த கதை இன்னொரு கதை. கருணா ஒரு ஓவியராகவும் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு வடிவமைப் பாளராகவும் செயற்பட்டவர்.அவர் குறித்தும் நம்முடைய சூழலில் அஞ்சலி புகழுரை, அழுகைகளைத் தவிர, வெளிப்படையான உரையாடல் இன்றுவரை நிகழவேயில்லை. எங்கள் எல்லோருடைய நண்பர்கள் என்பதற்கப்பால் இந்த சமூகப் பொறுப்பின் நிமித்தம் நாம் வெளிப்படையாகப் பேச வேண்டிய பகுதிகளை பேசவே வேண்டும். அவை நிறையவே உண்டு. அவர் கனடாவில் ஓவியராகத் தொடங்கிய காலம், ஒரு வடிவமைப்பாளராக மாறிய காலம், அதில் அவர் கோலோச்சிய காலம், அவரது மறைவுக் காலம் என்று இந்த சமூகத்திற்காகக் கட்டாயம் நாம் பேச வேண்டிய கதைகள் பலவுண்டு. இங்கே அவை பேசாது கடந்து போவதற்கும் பின்னால் பலரது தற்குறித்தனமே தலையுயர்த்தி நிற்கிறது.

கருணா அவர்கள் வடிவமைப்பாளராக இருந்த பத்திரிகைகள் சமூகத்தின் எதிர்காலத்திற்கு முரணாக இருந்தாலும், அவற்றின் தொடர்ச்சிக்காக அவர் எதையும் செய்து விடத் தயாராக இருந்தார். அப்படித்தான் ஜெகோவா சாட்சியக் குழுவினரால் வெளியிடப்பட்ட 'ஆசீர்வாதம்' என்ற பத்திரிகையில் செழியனின் பெயரில் கட்டுரைகளை அவர் பிரசுரித்திருந்தார். அதுகுறித்து செழியனோடு உரையாடியபோது, 'விடு தலைவா; அது கருணா கேட்டதால் எழுதினேன்.' என்றார். அதன்பின் கருணாவிடம் அதுகுறித்து அந்தக் காலத்திலேயே நான் அதிகம் சண்டை செய்தேன். கருணாவுடன் நான் அதிக தடவைகள் இவ்வாறான செயற்பாடுகளுக்காகச் சண்டை செய்திருக்கிறேன். ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும் அவருடன் குறைந்தது ஆறு மாதங்கள் உறவு முறிந்திருக்கும். கருணா தான் வடிவமைத்த சில பத்திரிகைகளுக்கு செழியனின் பெயரை 'சிவா சுப்ரா' என்று கூட பெயரிட்டு கட்டுரைகளைப் பதிவு செய்திருக்கிறார். செழியனும் அவரது சிரிப்பான சுபாவத்துடன் இருக்கும் இயல்பின்படி அதற்குப் பேசாமல் இருந்து விடுவார். அவரது அந்த இயல்பினைப் பலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டே இருந்தார்கள். செழியன் என்ற ஒரு ஆளுமை சீரழிக்கப்பட்டதின் ஒரு பக்கக் கதை இது. இதில் ஒரு வடிவந்தான் காலம் பத்திரிகைக்கான ஆலோசகர் செழியன் என்பதுவும். இப்பொழுது நாம் கருணாவையும் இழந்து செழியனையும் இழந்திருக்கிறோம். இந்த இருவர் குறித்தும் எங்களிடையே வெளிப்படையான உரையாடலற்று இருப்பதுவும் ஒரு தற்குறிமனநிலையே. இந்த ஒப்புக்கு ஆலோசகர் என்ற நிலையிலிருந்த செழியன் உண்மையிலேயே வெளியிலே இருந்தார். ஆனால் அருண்மொழிவர்மன் போன்ற ஆய்வாளர்கள் அதற்கு இன்னொரு முகம் பொருத்துகிறார்கள். அவர்களுக்கு அது தெரிந்திருந்தும் அதனைப் பேசாது தவிர்க்கிறார்கள்.

தொடர்ந்து அருண்மொழி வர்மன் அவர்கள் காலம் இதழ் குறித்து எழுதும் போது,

2.'அதுபோல காலத்தின் முதலாவது இதழில் அதன் முகவரியாக வயல் என்கிற அமைப்பின் இந்திய முகவரியும், கனடா மற்றும் இலங்கை முகவரிகளுடனும் வெளிவந்திருக்கின்றது. இதன்பிறகு இரண்டாவது இதழில் பிரான்ஸ் முகவரி ஒன்றும் காலத்தின் முகவரியாக சேர்க்கப்பட்டிருந்தது. பின்னர் ஏழாவது இதழ் முதல் கனடிய முகவரியுடன் மட்டுமே காலம் வெளிவந்தது. செல்வம் அவர்களுடன் ஒருமுறை பேசிக்கொண்டிருக்கையில் இது பற்றிக் கேட்டபோது அந்தக் காலப் பகுதிகளில் நடந்த ராஜீவ் காந்தி கொலைக்குப்பின்னர் தமிழகத்தில் ஏற்பட்ட சூழல் காரணமாக ஈழத்தவர் பத்திரிகை ஒன்றைக் கொண்டு நடத்துவதை (அல்லது முகவரியுடன் கொண்டு நடத்துவதில்)

தமிழகத்தவருக்கு பாதுகாப்புக் காரணமாக ஏற்பட்ட தயக்கம், பிரான்சில் காலம் இதழுக்கான தொடர்பாளராக இருந்த சபாலிங்கம் கொலை செய்யப்பட்டது போன்ற பல்வேறு காரணிகளைச் சொன்னார்.' என்கிறார்.

இங்கே சாதாரணமாக கனடாவில் வெளியிடத் தொடங்கிய பத்திரிகையின் முகவரி ஏன் வெவ்வேறு நாடுகளின் முகவரியாக இருக்க வேண்டியிருந்தது? புலம்பெயர் சூழலில் வெளிவந்த எந்தச் சிறுபத்திரிகைகளுக்கும் இல்லாத ஒரு நிலை இது. மற்றய அதிகமான புலம்பெயர் சஞ்சிகைகளைப் போன்று வெளிப்படையாக எந்த அரசியல் நிலைப்பாட்டினையும் கொண்டிராத காலம் பத்திரிகைக்கு, அரசியல் நீக்கம் செய்யப்பட்ட காலம் பத்திரிகைக்கு ஏன் வேறு இடத்து முகவரி? இதற்குள் சபாலிங்கம் கொலைக்கும் காலம் வெளிவந்த முகவரிக்கும் என்ன சம்பந்தம்? சபாலிங்கம் அவர்கள் காலம் இதழின் தொடர்பாளராக இருந்தாரா? துரையப்பாவைச் சுட்டது சரிதான் என்று இன்றும் சொல்லும் ஒருவருடைய சஞ்சிகைக்கு சபாலிங்கம் அவர்கள் தொடர்பாளராக இருந்தாரா? இதன் மீதான உள் விபரங்கள் இன்னும் வெளிப்படையாக ஆராய்ந்து எழுதப்பட வேண்டிய சங்கதிகள். ஏனெனில் இந்தக் கதைகள் எல்லாவற்றையும் நாளைய சமூகம் வரலாறாக்கிவிடும். இதன் பின்னாலுள்ள வேறு கதைகள் குறித்தும் நான் விபரமாகப் பதிவு செய்ய வேண்டும்.

அத்தோடு முக்கியமாக அருண்மொழிவர்மன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும் விடயம்,

3.காலம் இதழ் வெளிவரத் தொடங்கியதிலிருந்து பத்தாவது ஆண்டுக்காலமான 2000 வரை புலம்பெயர் நாடுகளில் வெளியான ஏனைய அனைத்து இதழ்களுமே தற்போதுநின்றுவிட்டன. இப்படியான ஒரு சூழலில் காலம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் அதன் தொடர்ச்சித் தன்மையை முக்கியமான ஓர் அம்சமாகவே பார்க்கின்றேன். என்கிறார்.

அது என்ன சவால்? அதனை அவராவது விளக்கமாக எழுத வேண்டுமல்லவா?

ஒன்று தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதில் இவர்கள் அனைவரும் புழங்காகிதம் அடையும் விடயந்தான் என்ன?

இவ்வாறுதான் அண்மையில் ரொரண்டோவில் இருந்து எழுதும் இளங்கோ டி.சே என்பவரும் ஒரு கருத்தினைப் பதிவிட்டிருந்ததார்.

இவர் இந்தப் பதிவில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளை உற்றுக் கவனியுங்கள்.

'என்றாலும் இந்தப் புலம்பெயர்-ஈழச்சூழலில் வந்த எத்தனையோ பத்திரிகைகள் முற்றாக நிறுத்தப்பட்டும், ஆசிரிய குழுக்களின் உள்ளரசியலால் தடுமாறிக் கொண்டிருக்கின்ற போதும், ஒரு சஞ்சிகை 30 ஆண்டுகளுக்கு மேலாக வருவதும் 60வது சஞ்சிகையை வெளியிடுவது என்பதும் எளிதான விடயமில்லை.' என்கிறார்.

இந்த வார்த்தைகளுக்காக இவரை நான், என் வாழ்நாள் பூராவும் அறிந்த அத்தனை கெட்ட வார்த்தைகளாலும் திட்டித் தீர்த்துவிட வேண்டும் என்று என் மனம் உன்னினாலும், அபத்தம் அதனைப் பிரசுரிக்காது என்பதால் என்மனதுக்குள் திட்டித் தீர்த்து விடுகிறேன். நீங்கள் புலி மனதிற்குள்




**நீங்கள் புலி மனதிற்குள் ஆடிய காலத்தில் புலம்பெயர் சஞ்சிகைகளின் நிலை என்னவாக இருந்தது என்றாவது தெரியுமா தம்பி? ஒரு செயற்பாட்டின் தொடர்ச்சிதான் முக்கியம் எனப் புழங்காகிதம் அடைந்தால் ரொரண்டோவில் உதயன் பத்திரிகையின் தொடர்ச்சியை ஏன் நீங்கள் பேசுவதில்லை? புகலிடச் சூழலில் சிற்றிதழ்கள் எதிர் கொண்ட சிக்கல்களில் பணச்சிக்கல்கள் என்பது பெரிதானதல்ல. ஐரோப்பாவில் சபாலிங்கம் கொலையுடன் அத்தனை சிறு சஞ்சிகைகளும் நின்றுதான் போயின. அதைக் கூட உங்களைப் போன்றவர்களுக்கு, சலித்தாலும் நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. உங்களைப் போன்றவர்களுக்கு இப்படி எழுந்தமானமாகத் தற்குறித்தனமாகக் கருத்து சொல்லும் போது வெட்கமே வருவதில்லையா? கூச்சமே இருப்பதில்லையா? (இப்படிக் கேட்டவுடன், எனக்கு பெண்கள் இடுப்பில் கிள்ளினாலும் கூச்சமே இருப்பதில்லை என்று உங்கள் சொந்தக் கதையைச் சொல்லக் கூடாது)**

ஆடிய காலத்தில் புலம்பெயர் சஞ்சிகைகளின் நிலை என்னவாக இருந்தது என்றாவது தெரியுமா தம்பி? ஒரு செயற்பாட்டின் தொடர்ச்சிதான் முக்கியம் எனப் புழுங்காகிதம் அடைந்தால் ரொரண்டோவில் உதயன் பத்திரிகையின் தொடர்ச்சியை ஏன் நீங்கள் பேசுவதில்லை? புகலிடச் சூழலில் சிற்றிதழ்கள் எதிர் கொண்ட சிக்கல்களில் பணச்சிக்கல்கள் என்பது பெரிதானதல்ல. ஐரோப்பாவில் சபாலிங்கம் கொலையுடன் அத்தனை சிறு சஞ்சிகைகளும் நின்றுதான் போயின. அதைக் கூட உங்களைப் போன்றவர்களுக்கு, சலித்தாலும் நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. உங்களைப் போன்றவர்களுக்கு இப்படி எழுந்தமானமாகத் தற்குறித்தனமாகக் கருத்து சொல்லும் போது வெட்கமே வருவதில்லையா? கூச்சமே இருப்பதில்லையா? (இப்படிக் கேட்டவுடன், எனக்கு பெண்கள் இடுப்பில் கிள்ளினாலும் கூச்சமே இருப்பதில்லை என்று உங்கள் சொந்தக் கதையைச் சொல்லக் கூடாது)

ஒருவருக்கு இருக்க வேண்டிய சமூகப் பொறுப்பும் பொறுப்புக் கூறலையும் மறுத்து இயங்கும் இந்த வகைத் தற்குறியாளர்களே செல்வம் போன்ற அவதூறாளர்களை விடவும் மோசமானவர்கள். செல்வம் போன்றவர்கள் செய்யும் மோசமான செயற்பாடுகளுக்கு ஆதரவும் நலனும் நல்குபவர்கள் இவர்கள்தான். ஆனால் இவர்கள் அனைவருக்கும் செல்வம் அவர்களை நன்கு தெரியும். அவற்றை நேரடி உரையாடல்களில் யாரேனும் இவர்களிடம் வெளிப்படையாகக் கேட்டால் 'உங்களுக்குச் செல்வம் அண்ணையைத் தெரியாதோ? அவர் தொடர்ந்தும் அப்படித்தானே! செய்கிறார்' என்று அதனை நகைச்சுவையாக்குவார்கள்.

இந்த மாதிரியான கோமாளிகளை விட இன்னொரு கோமாளித்தனமான பதிவு ப.அ.ஜயகரனுடையது. உண்மையில் நான் இதனை ஜயகரன் அவர்களிடமிருமிருந்து எதிர்பார்க்கவேயில்லை.

காலம் பத்திரிகையின் ஆசிரியர் செல்வம் அவர்கள் அண்ணா 100 நிகழ்விற்காக தமிழ்நாட்டு அரசின் அனுசரணையுடன் அழைக்கப்பட்டு அங்கே 'சொற்பொழிவு' நிகழ்த்தினார். நீங்கள் அனைவரும் அந்த அற்புத 'சொற்பொழிவு' உரையைக் கேட்டிருப்பீர்கள்!. புகலிடச் சூழலிலிருந்து இவருடன் சோபாசக்தியும் ப. தெய்வீகனும் அழைக்கப்பட்டு உரை நிகழ்த்தினார்கள். மூன்று பேருடைய உரையும் புகலிடச் சூழல் பற்றிய எந்த மதிப்பீடுகளுமற்று வெறுமனே தற்குறி மனநிலையில் எவ்வாறு பேசப்பட்டது என்றும் அதனுள் செல்வம் அவர்கள் இன்னும் கோமாளித்தனமாக எப்படி அவதூறுகளும் அலட்டல்களுமாக உரையாற்றினார் என வெளிப்படையாக எனது வலைப்பக்கத்தில் எழுதியிருந்தேன்.

அந்த மூன்று உரைகள் குறித்தும் புகலிடச் சூழலிலிருந்த பலரும் தமது அதிருப்தியினைத் தெரிவித்து இருந்தார்கள். அதன்பின்பு தமிழ் நாட்டிலிருந்து செல்வம் அவர்கள் தனது உல்லாசப் பயணத்தை முடித்துக் கொண்டு ரொரண்டோ திரும்பிய நாளில் எந்த முரண்படு உரையாடல்களையும் கவனத்தில் எடுக்காத ப.அ. ஜயகரன், செல்வம் அவர்களது செயற்பாட்டை வாழ்த்தியது போல் Boss is back என்று ஒரு அறிவிப்பினை அறிவித்திருந்தார். மேம்போக்காகப் பார்த்தால் அது ஒரு நாய்க்குட்டி சொல்வதாக இருக்கும். அந்த அறிவிப்பு என்பது தன்னைக் 'காலச்சுவடு'ப் பதிப்பகத்துடன் கொண்டு சேர்த்து இணைத்து விட்டதற்கான நன்றிக் கடன் என்பதனைப் பின்னர்தான் நான் விளங்கிக் கொண்டேன். அவரும் நாடக இயக்குனர் ஆயிற்றே!

## அடையாளக்குறி

ஒருவருக்கு இருக்க வேண்டிய சமூகப் பொறுப்பும் பொறுப்புக் கூறலையும் மறுத்து இயங்கும் இந்த வகைத் தற்குறியாளர்களே செல்வம் போன்ற அவதூறாளர்களை விடவும் மோசமானவர்கள். செல்வம் போன்றவர்கள் செய்யும் மோசமான செயற்பாடுகளுக்கு ஆதரவும் நலனும் நல்குபவர்கள் இவர்கள்தான். ஆனால் இவர்கள் அனைவருக்கும் செல்வம் அவர்களை நன்கு தெரியும். அவற்றை நேரடி உரையாடல்களில் யாரேனும் இவர்களிடம் வெளிப்படையாகக் கேட்டால் 'உங்களுக்குச் செல்வம் அண்ணையைத் தெரியாதோ? அவர் தொடர்ந்தும் அப்படித்தானே! செய்கிறார்' என்று அதனை நகைச்சுவையாக்குவார்கள். செல்வம் அவர்களும் ஒரு கோமாளியைப் போல் இந்தக் கோமாளிகளின் முன் எந்த வெட்கமும் இல்லாது தொடர்ந்து செயற்படுவார். ஆனாலும் செல்வம் அவர்களது இந்தவகைத் தொடர் செயற்பாடுகளுக்கு இப்படியானவர்களே முதற் காரணமாகிறார்கள். தனியே செல்வம் அவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது. ஆனாலும் ஜயகரன் போன்றவர்கள் இந்த நிலையை வந்தடைந்திருப்பது மிகுந்த கவலையான விடயமே.

அண்மையில் தெளிவத்தை ஜோசப் அவர்களது அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்கு அருண்மொழிவர்மன் அவர்கள்தான் தலைமை தாங்கினார்.உ அதில் செல்வம் அவர்கள் உரையாற்றியபொழுது, ஒரு இடத்தில் 'தெளிவத்தை ஜோசப் அவர்கள் நல்லதொரு கிறிஸ்தவன்' என்றார். என் அருகில் இருந்தவர்கள் சிலர் தாங்கள் கையில் வைத்திருந்த புத்தகத்தைக் கொண்டு வெட்கத்தால் முகத்தை மூடிச் சிரித்தார்கள். ஆனாலும் அவர்கள் அனைவரும் கூட்டம் முடிந்து வெளியில் வந்தபின் உரையாடிய பொழுது 'உங்களுக்கு செல்வம் அண்ணையைத் தெரியாதோ அவர் அப்படித்தானே' என்றார்கள்.

இவர்களின் பேச்சு முடிந்தபின்னாவது, ஒருகணம் மறித்து

கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளரும் முரண்பாடுகளைப் பேசுவதில்லை. சபையிலிருந்தும் கூட யாரும் பேசுவதில்லை. ஒரு உரையாடலும் நிகழாது கடந்து போகும் நிகழ்வுகள் தான் இங்கே அதிகம். ஆனாலும் அடுத்ததொரு நிகழ்விலும் செல்வம் அவர்கள் மைக் முன்னால் நின்று மீண்டும் ஒரு முட்டாள்த்தனமான கதை ஒன்றைச் சொல்லிக் கொண்டிருப்பார். கேட்டுக் கொண்டிருப்போர் ஒரு கணம் முகத்தைச் சுழித்தாலும் பின்னர் எந்தக் கூச்சமும் இல்லாது கடந்து செல்வார்கள். கூட்டம் முடிந்தவுடன் வெளியில் வந்து, 'உங்களுக்குச் செல்வம் அண்ணையைத் தெரியுந்தானே' என்று சொல்வதுதான் அவர்களது ஆகக் கூடிய கருத்துரைப்பாக இருக்கும்.

இப்படித்தான் செல்வம் அவர்களைத் தெரிந்து கொண்டும் இந்த இலக்கியச் சூழல் அவரைத் தொடர்ந்தும் ஒரு கோமாளியாக்கிக் கொண்டிருக்கிறது. அதே கோமாளித் தனத்தின் வெளிப்பாட்டில்த்தான் எந்தக் கூச்சமும் இல்லாது தமிழ்நாட்டு 'அண்ணா 100' 'சொற்பொழிவு' இனையும் அவர் ஆற்றினார். அந்த உரையைக் கேட்டு 'வெல் டன்' செல்வம் என்று எழுதியவர்களும் இருக்கிறார்கள்.

அண்மையில் அ. ராமசாமியினுடனான உரையாடலில் காலம் பத்திரிகையைக் கலாநிதி பட்டத்திற்காக வெட்டிவேலு என்ற ஒருவர் ஆய்வு செய்து பட்டம் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டது. (இந்தக் கலாநிதிப்பட்ட ஆய்வும் விரைவில் வெளியிடப்படும் என்றே அறிகிறேன். இது குறித்து அதன் பின்பே எழுத முடியும்.) இதன் பின்னணியில் கவிஞர் சேரன் அவர்களும் செல்வம் அவர்களுமே இருப்பதாக அவர் தெரிவித்தார். சேரனுக்கும் செல்வம் அவர்களைப் பற்றிய முழுவிளக்கமும் நன்கு தெரியும். ஆனாலும் இந்தமாதிரிச் செயற்பாடுகளில் இவர்கள் எல்லோருமே ஒரு தளத்தில் இயங்குபவர்கள். இன்று காலச்சுவடு நிறுவனம் ஒரு ஒரு கோப்பிறேற் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு ஒரு வியாபார நிறுவனமாக ஆக்கப்பட்டிருப்பது குறித்தும் அ.ராமசாமி அவர்களுடன் உரையாடினோம். இதில் பல்வேறு எழுத்தாளர்கள் பங்குதாரர்களாக இருப்பதாக அறிய முடிகிறது. காலச்சுவடு எந்தக் குப்பையையும் புத்தகமாக இடும் பொழுது அவை பற்றி எதையுமே அறியாது அந்த வெளியீட்டில் மகிழ்ச்சி கொள்பவர்கள் அதன் பங்குதாரர்களாக இருக்குமோ என்றே என்மனது தேடுகிறது. இன்றைய காலத்தில் இலக்கியத்தின் பெயரில் அதிகமாக நடப்பதெல்லாம் வெறுமனே வியாபாரங்கள்தான். இதன் அசிங்கங்களுக்கு அளவேயில்லாதுதான் போகிறது. கூடவே அவதூறுகளும் சேரும் போது சமூகம் பற்றிய கரிசனையோ எக்காலத்திலும் இருக்காது.

இந்த வியாபாரக் கணக்கில் வெளிப்படையாக செல்வம் அவர்களின் பெயரை மட்டும் அடையாளம் காட்டி அவமானப்படுத்திவிட்டு அதன் பின்னால் ஒழிந்திருக்கும் அயோக்கியக் கூட்டம் குறித்த அக்கறை நமக்கு இனிமேலாவது இருக்க வேண்டும். இந்தமாதிரியான பித்தலாட்டத்திற்கு செல்வம் அவர்கள் மட்டும் காரணம் இல்லை. (இது இன்னமும் விரிவாக எழுதப்படவேண்டிய பகுதி.)

'செல்வம் இப்படித்தான்' என்றும் 'செல்வத்தைத் தெரியாதோ' என்றும் 'செல்வம் திருந்தமாட்டார்' என்றும் வெளியில் பேசிக் கொண்டு தனக்குப்பின்னால் லைன் கட்டி ஒழித்து நிற்கும் சிலரையாவது செல்வம் அண்ணை கண்டு பிடிக்க வேண்டும்.

நீங்கள் எவ்வளவு முட்டாள்த்தனமான கதையைச் சொன்னாலும் அதனை ஒரு சிரிப்போடு கடந்து போகிறார்கள் இவர்கள். ஆனால் மீண்டும் ஒரு முட்டாள்த்தனமான கதையைச் சொல்ல உங்களையே சார்ந்து நிற்கிறார்கள். உங்களையே தலைவனாக்குகிறார்கள். ஒரு சிறு உரையாடல்களில் கூட உங்களை விமர்சனத்திற்குள் இழுத்து வர அவர்கள் தயங்குகிறார்கள். ஆனால் அவர்களுக்கு பழக்கப்பட்ட வார்த்தை 'உனக்கு செல்வம் அண்ணையைத் தெரியாதோ?' என்பதுதான். இப்படித்தான் கடந்து போகிறது இந்தக் 'காலம்.'

ஆனால் இதன் செயற்பாட்டுத் தொடர்ச்சி இதுவரையான புகலிட இலக்கிய சஞ்சிகைகளின் காலத்தையும் அதன் தொடர் அரசியல் இயங்குதலையும் ஒன்றுமேயில்லை என்பதாகச் செய்து, சூனியமாக்கும் செயலாகத் தொடரும் பொழுது, இல்லை. இல்லை. இல்லவேயில்லை. என்று சொல்லி தொடர்ந்தும் பேச வேண்டியிருக்கிறது.

ஒரு கோமாளிக் கூட்டத்தின் வேடிக்கை வினோதங்களை வெளிப்படையாகப் பேச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மேலே சுட்டிக்காட்டிய விடயங்களுக்காவது பொறுப்பான பதில்களை அளிப்பது அனைவரதும் கடமை. அல்லது ஆகக் குறைந்தளவு இவ்வாறான முட்டாளாக்கும் செயல்களைச் செய்யக் கூடாது என்றாவது இனி நினைக்க வேண்டும்.

**இப்படித்தான் கடந்து போகிறது இந்தக் 'காலம்.' ஆனால் இதன் செயற்பாட்டுத் தொடர்ச்சி இதுவரையான புகலிட இலக்கிய சஞ்சிகைகளின் காலத்தையும் அதன் தொடர் அரசியல் இயங்குதலையும் ஒன்றுமேயில்லை என்பதாகச் செய்து, சூனியமாக்கும் செயலாகத் தொடரும் பொழுது, இல்லை. இல்லை. இல்லவேயில்லை. என்று சொல்லி தொடர்ந்தும் பேச வேண்டியிருக்கிறது.**

**ஒரு கோமாளிக் கூட்டத்தின் வேடிக்கை வினோதங்களை வெளிப்படையாகப் பேச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.**

# தீப்பொறி : புதியதோர் உலகம் : தமிழீழக்கட்சி விசாரம்


தமிழீழ
மக்கள் விடுதலைக் கழகம்
பின்தள மகாநாட்டு அறிக்கை



"அனுபவ முதிர்ச்சியின்மை காரணமாகவும், பிற்போக்கு சக்திகளின் அகப்புறத் தாக்கங்கள் காரணமாகவும் நாம் போராட்டக் களத்திலேயே பல்வேறு தவறுகளை விட்டிருக்கின்றோம். தவறுகளுக்கு தத்துவார்த்த முலாம் பூசுவதன் மூலமோ அல்லது அவற்றை நியாயப் படுத்துவதன் மூலமே எங்களை நாங்களே தூய்மைவாதிகளாக காட்டிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. எங்களுடைய தவறுகளை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதே சமயம் எங்கள் மீது சுமத்தப்பட்ட ஆதாரப்பூர்வமற்ற குற்றச்சாட்டுக்களையும் கீழ்த்தரமான விமர்சனங்களையும் நாம் நிராகரிக்கின்றோம்"

அமைப்பிற்கு உள்ளே வைக்கப்பட வேண்டிய விமர்சனங்களை அமைப்பிற்கு உள்ளேயே வைக்கவேண்டும்.

அவற்றிற்கு இடமில்லாத போது அந்த அமைப்பிலிருந்து விலகி வெளியே வைத்தல் மிகவும் நிதானத்துடன் செய்யப்படவேண்டும்.

தனிமனித ஆளுமையும் அரசியற் தெளிவும் கொண்ட டொமினிக்- கேசவன்- தான் சார்ந்த புளொட் அமைப்பிலிருந்து வெளியேறி அந்த அமைப்பிலிருந்த முரண்பாடுகளை, குழப்பங்களை, நெருக்கடிகளை தன் பார்வையில் தீப்பொறி என்ற சிறிய அமைப்பொன்றை உருவாக்கி புதியதோர் உலகம் என்ற நூலைத் தன் பார்வையில் எழுத அதை வெளியிடுவதற்கு என்எல்எவ்ரி, தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அமைப்பினரிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கின்றது.

ஹற்றன் நசனல் வங்கியில் என்எல்எவ்ரி கொள்ளையடித்த பணத்தில் இப் புதினத்தை வெளியிட ஆங்கே புல்லுக்கும் பொசிந்ததுபோல் நிதியுதவி கிடைக்கிறது.

இந்த நாவலை எல்லா மட்டங்களிலும் கொண்டுபோய்ச் சேர்க்க புலிகள் வேலை செய்கிறார்கள்.

அப்போது புலிகளும் என்எல்எவ்ரியும் தம் பிரதான எதிர்த்தரப்பாகக் கருதியிருந்தது புளொட் அமைப்பைத்தான்.

தமிழ் நாட்டில் அச்சடித்த நூலைப் புலிகள் தம் படகுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி இலங்கைக்குக் கொண்டுவந்து சேர்த்து வினியோகிக்கிறார்கள்.

ஆனால் உயிராபத்தான நெருக்கடிகளை தீப்பொறி அமைப்பினர் எதிர்கொண்டபோது அவர்களுக்கு முதலில் பாதுகாப்பு வழங்கியது புலிகள்தான்.

இப்போது புலிகளின் பாதுகாப்பு வலயத்தில் அகப்பட்ட தீப்பொறியினரைச் சந்திக்கவரும் இதர அமைப்பாளர்கள் புலிகளின் கண்காணிப்பினுள் வருகிறார்கள்.

இப்படியிருக்க புளொட்டி லிருந்து வெளியேறியபின் தீப்பொறி அமைப்பினர் தம் கருத்தியல்களை மீள வடிவமைக்க வேண்டியிருந்தது.

தமிழீழம், தமிழ்த் தேசியம் இவற்றை முன்மொழியாவிடினும் அதற்கிணையாக ஒரு குறுங்குழுவாத சிந்தனை முறையில் தம்மைப் பாடுபடுத்தி, ஈடுபடுத்தி, அறியப்படுத்திக் கொண்டார்கள்.

இத்தனைய குறுங்குழு வாதச் சிந்தனை முறையின் விருப்பார்வங்களை புதியதோர் உலகத்திலும் காணலாம்.

அந்த நாவலில் ஒரு பாத்திரமாக வரும் ஜான் மாஸ்ரர் கனடாவிலிருந்து எழுதிய எழுத்துக்களில் மோசமாக திரிபாயும் குறுக்கமாயும் இவற்றைக் காணலாம்.

இந்த நாவல் இத்தீப்பொறிக் குழுவினரை வேறொரு தளத்திற்கு எடுத்துச் சென்றது. முற்றுமுழுதாக தலைமறைவாக இருக்கவேண்டிய நிலையில் புலிகளும் என்.எல்.எவ். ரியும் இதன் வினியோகத்தைக் கையேற்றுப் பிரச்சாரப்படுத்திக் கொண்டார்கள் எனப் பார்த்தோம்.

தமிழீழக் கட்சி என்ற பெயரில் தம்மைத் தளமாற்றம் செய்த தீப்பொறியினர் புலிகளின் ஒவ்வொரு செய்கைக்கும் செயலுக்கும் நியாயம் சொல்ல வேண்டியவராயினர். எப்படியெனில் ஒரு சிறு உதாரணம் சொல்லலாம்,

மாணிக்கதாசனைக் கிளைமோர் தாக்குதலில் புலிகள் கொன்றபோது பீடை ஒழிந்தது! என தம் பத்திரிகையில் எழுதவேண்டிய நிலை வந்தது.

பின்னர் 'உயிர்ப்பு' என ஒரு சித்தாந்தக் கோட்பாட்டு சஞ்சிகையை கொண்டுவந்தபோதும் அதற்குள் இருந்த அக முரண்பாடுகளால் அந்த எத்தனமும் இல்லாமலாகி பின் தீப்பொறி, தமிழீழக் கட்சி, உயிர்ப்பு இவையெல்லாமும் காணாமலானது.

முதற்பதிப்பு 1985 இல் வெளிவருகிறது. தோராயமாக ஆண்டின் இறுதிப்பகுதி எனக் கொண்டாலும் 1986 பிப்ரவரியில் நடந்த தளமாநாட்டிற்கு முன்னரே நூலும் தீப்பொறி அமைப்பும் தயாராகிவிடுகின்றது. இரண்டு மா நாடுகளிலும் கோவிந்தனோ ஜான் மாஸ்ரரோ கலந்துகொள்ளவில்லை.

இந்தா! பிடி! இந்தா பிடி! சுடுகுது, மடியைப்பிடி! என்ற அவசரக் குடுக்கைத் தனத்துக்கு அவர்கள் தம்மை ஒப்புக்கொடுத்ததில் அவர்கள் செலுத்திய விலை மிக அதிகம்!

இந்த நூல் ஏற்படுத்திய

சுகன்

தாக்கத்தில் புளொட் அமைப்பு மிகப் பலவீனமான நிலையை அடைந்தது. புலிகளின் நோக்கமும் அதுவாயிருந்தது. தாபனத்தைப் பலவீனப்படுத்துவதில் வெளியே யான விமர்சனங்களுக்கு இருக்கும் வலு இதுமட்டும்தான்.

'நீண்டகால மக்கள் யுத்தம் 'எனும் கோட்பாடு வலிமைகாண்பதும் இங்குதான்.

இப்படி இன்னொரு தளத்தில் புலிகளுடன் முரணில்லாத, விமர்சனங்களில்லாத வகையில் தாம் இயங்கமுடியும் என்ற நப்பாசையில் இருந்தபோதும் ஏற்கனவே மற்ற அமைப்புகளை அழித்தொழித்த திமிரில் 1991 மே மாதம் 17 ஆம் தேதி கேசவனும் அவர் சார்ந்த தோழர்களும் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டு புலிகளால் கொல்லப்படுகின்றனர்.

தமிழீழம் என்ற அதே இலட்சியத்துடனும் கோட்பாட்டுடனும் தீப்பொறி தம் குறுகிய காலத்தில் இயங்கிய போதிலும் 1986 மே மாதம் ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் கொல்லப்பட்ட கையோடு தலையெடுத்த தமிழ்ப்பாசிச வகைமை தமிழ்ப்பிரதேசங்களில் இயங்கிய அமைப்புகளை அனைத்தையுமே அழித்தொழித்தது.

ஆனால் புதியதோர் உலகம் 1985 இல் வெளிவருகிறது. புதியதோர் உலகம் வெளிவந்த பின்னரே உடுவிலில் தளமாநாடு நடைபெறுகிறது . அதில் புளொட்டின் படைத்துறைச் செயலர் கண்ணன், அரசியற்துறைச் செயலர் வாசுதேவா ஆகியோர் கலந்துகொண்டு வைக்கப்பட்ட விமர்சனங்களை ஏற்றுக்கொள்கின்றனர்.

தாபனத்தை அமைப்பினுள்ளிருந்து சீர்திருத்துவதற்குப் பதில் அவர்களுக்கு தெரிந்த ஒரே வழி தீப்பொறி குழுவாக வெளியேறி புதியதோர் உலகம் நாவலைக் கூட்டுச் சேர்ந்து எழுதிப் பரப்புவதுதான்.

இத்தனைக்கும் கேசவனும் ஜானும் அமைப்பின் அதியுயர் பொறுப்புகளில் இருந்தவர்கள். ஆனால் அமைப்பின் அடிமட்டத்

**தர்க்கத்திலும் திறந்த பார்வை மதிப்பீடுகளிலும் ஒரு விடுதலை அமைப்பினுள் உள்ள உள்முரண்பாடுகளைப் புனைவின் வழியே வெளியே முன்வைத்ததில் இருந்த திறந்தநோக்கு இருக்க புலிகளின் பாசிச அமைப்பு முரண்களை அதற்குள் இருந்து இப்படி வெளிக்கொண்டு வந்து இருக்கிறார்களா?**

**மாத்தையாவும் கருணாவும் துரோகிகளாகவே இருந்து விட்டுப்போகட்டும்!**

**கவிஞராகவும் அறியப்பட்டு புலிகளின் அறியப்பட்ட பிரமுகராகவும் அதிகாரக் குரலாகவும் இருந்த ஒருவரின் எழுத்துக்களை, பிரபாகரனின் அணிந்துரையுடன் அவை ஏற்கனவே நூல்களாக வெளிவந்து பாசிச மன நிலையை பொது உளவியலில் கட்டமைப்பதில் பங்குவகித்த ஒருவரின் தொகுப்பை விற்பதில் மனம் கூசாது வந்தவரை லாபம் என்ற வியாபார எண்ணம் நிச்சயம் மாற்றுக்கருத்துகளையும் மாற்று முயற்சிகளையும் ஜனநாயத்தையும் அவாவி நிற்போருக்கு எதிர்காலம் குறித்து அச்சமூட்டவே செய்யும்.**

தோழர்களுக்கும் அமைப்பின் வெகுமக்கள் பிரதிநிதிகளுக்கும் இருந்த கடப்பாடு இவர்களுக்கு இருக்கவில்லை.

தாம் வெளியேறுவதற்கான நியாயங்களைச் சொல்லும் தூய்மைவாத வெள்ளை அறிக்கையாகத் தான் புதியதோர் உலகத்தைக் கட்டமைத்தார்களே அன்றி தார்மீகப் பொறுப்பேற்கும் கடப்பாட்டிலிருந்து அல்ல.

கேள்விப்பட்டவற்றை சுவாரஸ்யமான புனைவாக்கம் செய்தமாறான புதியதோர் உலகம் கதைக்கு உதாரணம் சொல்வதென்றால் பிரான்ஸிலிருந்து ஒரு பிரமுகர் வருகிறார், என்னுடைய குதம் இப்போ எவ்வளவு விரிவடைந்திருக்கிறது தெரியுமா? எனக் கேட்டபடி அப்பாத்திரம் அறிமுகமாகிறது.

நாவலின்படி அப் பாத்திரம் போதை மருந்து கடத்தி அதனால் வரும் பணத்தை அமைப்பிற்குக் கொடுக்கிறது.

அப் பாத்திரம் கதையின்படி போதை மருந்து வியாபார நபர்.

ஆனால் உண்மையில் அப் பாத்திரம் காந்தீயம் உள்ளிட்ட அமைப்புகளில் கடுமையாக வேலை செய்து பொலிஸ் நெருக்கடிகளால் பிரான்சுக்குப் புலம்பெயர்ந்து சில தொழில் நிறுவனங்களை அவரது படித்த துணைவியாரோடு உருவாக்கி அதன் வருமானத்தை மிக எளிமையாக வாழ்ந்து அமைப்பிற்குக் கொடுத்து வந்தவர். இதற்காகவே தமக்கென வாரிசு எதையும் ஏற்படுத்திக்கொள்ளாதவர்கள்.

போர்க்காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கு உதவிசெய்து மிகப் பின்தங்கிய தங்கள் பிரதேசத்து மக்களின் வாழ்வாதாரத்திற்கு இன்றுவரை ஆதாரமாய் நிற்பவர்.

ஆனால் புதியதோர் உலகத்தின் தூய்மையில், கேள்விச் செவியில் அவர் ஒரு போதைவியாபாரி.

இப்போது லண்டனில் ஒரு நுட்பமான வியாபார நிலை காணப்படுகிறது. புதியதோர் உலகம் விற்பனையை கைத்துணையாகக் கொண்டு புதுவை ரத்தினதுரையை விற்பதில் ஒரு வியாபார அனுகூலம் உண்டு.

தர்க்கத்திலும் திறந்த பார்வை மதிப்பீடுகளிலும் ஒரு விடுதலை அமைப்பினுள் உள்ள உள்முரண்பாடுகளைப் புனைவின் வழியே வெளியே முன்வைத்ததில் இருந்த திறந்தநோக்கு இருக்க புலிகளின் பாசிச அமைப்பு முரண்களை அதற்குள் இருந்து இப்படி வெளிக்கொண்டு வந்து இருக்கிறார்களா?

மாத்தையாவும் கருணாவும் துரோகிகளாகவே இருந்து விட்டுப்போகட்டும்!

கவிஞராகவும் அறியப்பட்டு புலிகளின் அறியப்பட்ட பிரமுகராகவும் அதிகாரக் குரலாகவும் இருந்த ஒருவரின் எழுத்துக்களை, பிரபாகரனின்

அணிந்துரையுடன் அவை ஏற்கனவே நூல்களாக வெளிவந்து பாசிச மன நிலையை பொது உளவியலில் கட்டமைப்பதில் பங்குவகித்த ஒருவரின் தொகுப்பை விற்பதில் மனம் கூசாது வந்தவரை லாபம் என்ற வியாபார எண்ணம் நிச்சயம் மாற்றுக்கருத்துகளையும் மாற்று முயற்சிகளையும் ஜனநாயத்தையும் அவாவி நிற்போருக்கு எதிர்காலம் குறித்து அச்சமூட்டவே செய்யும்.

வானத்தைப் பிளந்த கதை எழுதி ஈபிஆர்எல்எவ் வை விமர்சித்து, மன ஆறுதல் அடைந்தபின் செழியன் உதிரியாகிச் சீரழிந்து பின், தன் அற உணர்வைக் கைவிட்டது போல, தீப்பொறி முகாமையில் வெளிவந்த‘ புதியதோர் உலகம் தொட்டு ஒரு புலிச்சாய்வு எடுத்து ஈற்றில் புலிகளாலேயே கொல்லப்பட்டும் சீரழி துயரமும் நிகழ்ந்தது.

வலதுசாரிகளுக்கு அமைப்புகள் பிளவுபட்டு உதிரி அமைப்புகள் உருவாகுவது அவர்களளவில் சேதங்களை உருவாக்காது, ஆனால் இடதுசாரி, ஜனநாயக, மக்கள் சார்பு அமைப்புகளில் இருந்தவர்கள் அவ்வவ்வமைப்புகளில் இருந்து வெளியேறும் முடிவுகளை ஆற அமர யோசித்தே எடுக்கவேண்டும், தம்மை நம்பிவந்த தோழர்களை அப்படியே நடுத்தெருவில் விட்டுவிட்டு தாம் மட்டும் தம் கருத்தியல் தூய்மையையும் தூ யதிலும் தூய கரங்களையும் காட்டிக்கொண்டிருக்க முடியாது.

அமைப்புகளிலிருந்து வெளியேறியபின் தம்மைத் தூ ய்மையாளர்களாக நிறுவ முன்னிறுத்தப்பட்ட நூல்களிற்கும் படைப்பினூடு இலக்கியமாய்க் கதை அமைவில் வெற்றிபெறும் படைப்புகளுக்கும் வேறுபாடுண்டு. அடூர் கோபால கிருஷ்ணனின் ‘முகாமுகம்‘ அப்படியாக கலை நுட்பத்திலும் இலக்கியக் கதையாதலிலும் வெற்றிபெற்ற திரைப்படம்.

புளொட் மக்கள் அமைப்பில் அமைப்பாளராயிருந்து பின் தீப்பொறியிலும் இயங்கிய ஆளுமை மிக்க தோழர் ஒருவர் இப்போதும்

வலதுசாரிகளுக்கு அமைப்புகள் பிளவுபட்டு உதிரி அமைப்புகள் உருவாகுவது அவர்களளவில் சேதங்களை உருவாக்காது, ஆனால் இடதுசாரி, ஜனநாயக, மக்கள் சார்பு அமைப்புகளில் இருந்தவர்கள் அவ்வவ்வமைப்புகளில் இருந்து வெளியேறும் முடிவுகளை ஆற அமர யோசித்தே எடுக்கவேண்டும், தம்மை நம்பிவந்த தோழர்களை அப்படியே நடுத்தெருவில் விட்டுவிட்டு தாம் மட்டும் தம் கருத்தியல் தூ ய்மையையும் தூயதிலும் தூய கரங்களையும் காட்டிக்கொண்டிருக்க முடியாது.

அமைப்புகளிலிருந்து வெளியேறியபின் தம்மைத் தூய்மையாளர்களாக நிறுவ முன்னிறுத்தப்பட்ட நூல்களிற்கும் படைப்பினூடு இலக்கியமாய்க் கதை அமைவில் வெற்றிபெறும் படைப்புகளுக்கும் வேறுபாடுண்டு. அடூர் கோபால கிருஷ்ணனின் ‘முகாமுகம்‘ அப்படியாக கலை நுட்பத்திலும் இலக்கியக் கதையாதலிலும் வெற்றிபெற்ற திரைப்படம்.

கொழும்பில் மனநிலை பிறழ்ந்து சிங்கள உறவுகளின் பராமரிப்பில் இருக்கிறார். அமைப்பினுள் இருந்து இயங்கியமட்டிலும் அவர் மிகவும் ஆளுமை மிக்கவராயிருந்தார்.

அவரது ஆளுமைச் சிதைவிற்கு காரணம் தமிழ்ப் பாசிசம்.

போர்க் குணாம்சமிக்க போராளிகள் அரசியல், சமூக அரங்குகளிலிருந்து அகற்றப்பட்ட அவ்விடத்தில் வந்தமர்ந்த பாசிசம்.

இந்த அவலமான சித்திரங்களை எல்லாம் புதியதோர் உலகத்தின் பின்னணியிலிருந்து எல்லாம் புரிந்துகொள்ளமுடியாது.

மேலும் அதே தளத்தில் அமைப்புக் குறித்த விமர்சனங் களோடும் சுயவிமர்சனங்களோடும் தளப் பொறுப்பாளராயிருந்த சின்ன மெண்டிஸ் - விஜயபாலன் - கிட்டுவால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட பின்னணியையெல்லாம் புதியதோர் உலகத்தைத் தலைமேற் தூக்கி வைத்துக் கொண்டாடுபவர்கள் இணையாகப் பேசப்போவதில்லை.

20.05.1989 இல் முள்ளிக்குளத்தில் இலங்கை ராணுவ உதவியோடு புலிகள் 60க்கும் மேற்பட்ட ஆரம்பகாலப் புளொட் தோழர்களைப் படுகொலை செய்த பின்னணியையும் கூறப் போவதில்லை.

‘புலிப்பொறியினுள் வீழ்ந்த தீப்பொறி‘‘ என தேசம் நெற் ஜெயபாலன் பொருத்தமாகப் பெயரிட்டிருந்தார்.

பாசிசத்தின் மனச் சாய்வில் தற்திருப்தி காண்பவர்களுக்கு, கொள்பவர்களுக்கு புதியதோர் உலகத்தை விட்டால் வேறு போக்கிடமுமில்லை.

# பச்சை இனவாதிகள்

டொமினிக்கின் (கேசவன்) வவுனியா வருகையை அடுத்து தோழர் சுனிமெல்லினுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் ‘தீப்பொறி‘ செயற்குழு உறுப்பினர்களான டொமினிக்கும் (கேசவன்) நானும் கலந்து கொண்டிருந்தோம்.

தோழர் சுனிமெல் தனது கருத்துக்களையும், தனக்கு தென்னிலங்கையில் இருக்கும் பாதுகாப்புப் பிரச்சனைகளையும் எடுத்துக் கூறியதோடு ‘தீப்பொறி‘க் குழுவுடன் இணைந்து செயற்பட விரும்பும் தனது முடிவையும் கூடவே தெரிவித்திருந்தார்.

தோழர் சுனிமெல்லினுடைய கருத்துக்களை செவிமடுத்த டொமினிக் (கேசவன்) ‘தீப்பொறி‘ செயற்குழுவின் முடிவை தோழர் சுனிமெல்லிடம் தெரிவித்தார்.

அதாவது, சுனிமெல் தென்னிலங்கைக்கு சென்று சிங்கள மக்கள் மத்தியில் செயற்படுவதன் மூலம் அவர் ஒரு இனவாதியல்ல என நிரூபிக்க வேண்டும் என்பதே

அம்முடிவாகும்.

டொமினிக்கால் (கேசவன்) தெரிவிக்கப்பட்ட 'தீப்பொறி'ச் செயற்குழுவின் முடிவைக் கேட்டுக்கொண்டிருந்த தோழர் சுனிமெல் சற்றுப் பொறுமை இழந்தவராக உணர்ச்சி வசப்பட்டவரானார்.

'அப்படியானால் என்னை ஒரு இனவாதி என்கிறீர்களா?' என அவரால் அடக்கிக்கொள்ள முடியாத ஆவேசத்துடன் எம்மீது கேள்வி எழுப்பினார்.

'இனவாதி என்று நாம் உங்களைக் கூறவில்லை, சிங்கள மக்கள் மத்தியில் சென்று செயற்படுமாறு தான் கூறுகிறோம்' என டொமினிக்(கேசவன்) தோழர் சுனிமெல்லுக்குப் பதிலளித்தார்.

ஆனால், நாம் தோழர் சுனிமெல்லிடம் கூறிய கருத்து அல்லது செயற்குழுவின் முடிவு எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்றாகும்.

'தென்னிலங்கை சென்று சிங்கள மக்கள் மத்தியில் செயற்பட்டு தோழர் சுனிமெல் ஒரு இனவாதியல்ல என்று நிரூபிக்க வேண்டும்' என்பதானது முழுமையான இனவாதக் கருத்தே தான் என்பதை ஒரு பள்ளிச் சிறுவனால் கூடப் புரிந்து கொள்ள முடியும்.

> **அதாவது, சுனிமெல் தென்னிலங்கைக்கு சென்று சிங்கள மக்கள் மத்தியில் செயற்படுவதன் மூலம் அவர் ஒரு இனவாதியல்ல என நிரூபிக்க வேண்டும் என்பதே அம்முடிவாகும்.**
>
> **டொமினிக்கால் (கேசவன்) தெரிவிக்கப்பட்ட 'தீப்பொறி'ச் செயற்குழுவின் முடிவைக் கேட்டுக்கொண்டிருந்த தோழர் சுனிமெல் சற்றுப் பொறுமை இழந்தவராக உணர்ச்சி வசப்பட்டவரானார்.**
>
> **'அப்படியானால் என்னை ஒரு இனவாதி என்கிறீர்களா?' என அவரால் அடக்கிக்கொள்ள முடியாத ஆவேசத்துடன் எம்மீது கேள்வி எழுப்பினார்.**

இத்தகையதொரு கருத்துக்கு நாம் எவ்வளவு தான் கவர்ச்சிகரமாக விளக்கம் கொடுத்தாலும் அதன் சாராம்சம் அல்லது அதன் கருப்பொருள் இனவாதமே தான்.

டொமினிக்கால் (கேசவன்) தெரிவிக்கப்பட்ட செயற்குழுவின் முடிவால் தனது பொறுமையை இழந்தவராகக் காணப்பட்ட தோழர் சுனிமெல் 'தீப்பொறி'க் குழு குறித்த தனது கருத்தை முன்வைத்தார்.

'நீங்கள் இடதுசாரிகள் அல்ல, பச்சை இனவாதிகள்' என தோழர் சுனிமெல் எம்மை விமர்சித்தார்.

'உங்கள் போன்றவர்களிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதைவிட நான் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டாலோ, அல்லது ஜே.வி.பியால் கொலை செய்யப்பட்டாலோ கூடப் பரவாயில்லை தென்னிலங்கைக்கு செல்கிறேன்' எனக் கூறிய தோழர் சுனிமெல் எம்முடனான சந்திப்பை இடையில் முறித்துக் கொண்டவராய் தென்னிலங்கைக்கு புறப்பட்டுச் சென்றார்.

(ஒரு தீப்பொறித் தோழரின் சுயவிமர்சனம் April 06. 2012)

## புதியதோர் உலகம் நூலாசிரியர் கோவிந்தன் பற்றிய குறிப்புகள்

பெயர் ;சூசைப்பிள்ளை நோபேட்
புனைபெயர்கள் ; டொமினிக், ஜீவன்.

பிறப்பு;1948.5.02
பாலையூற்று, திருகோணமலை.

தந்தையின் பெயர்; மைக்கல் சூசைப்பிள்ளை.

தாயின் பெயர்; நிக்கொலஸ் அன்னம்மா.

கல்வியும் தொழிலும்; தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை புனித வளனார் தமிழ் வித்தியாலயத்தில் முடித்தார்.

இடைநிலைக் கல்வியை திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும் உயர்கல்வியை திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் முடித்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். அக் காலத்தில் மாணவர் அமைப்புகளில் தீவிரமாக பங்கெடுத்தார்.

மார்க்சியக் கருத்துகளில் ஈடுபாடு செலுத்தினார். பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு கொழும்பு நில அளவையாளர் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றினார். பின்பு திருமலை மாவட்ட கல்விக் கந்தோரில் பணியாற்றினார்.

அரசியல்`; பல்கலைக்கழக வாழ்வில் பல்வேறு இடதுசாரிக் குழுக்கள், அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டார். பின்னர் மலையகத்திலிருந்து வெளியான 'தீர்த்தக்கரை' எனும் அரசியல், இலக்கிய காலண்டிதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் அதன் வெளியீட்டாளராகவும் இருந்தார். அப்போது பிரான்சிஸ் சேவியர் எனும் பெயரில் சிறுகதைகள் எழுதியுள்ளார்.


1980 களின் தொடக்கத்தில் 'சங்கப்பலகை ' எனும் குழுவை அமைத்து மாதாந்தம் முக்கிய சமூக, அரசியல், பொருளாதார, கலை இலக்கிய விடயங்கள் தொடர்பான கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடாத்தி வந்தார்.

1982 இல் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (PLOTE) இணைந்து கொண்டார்.

1983 இல் முழுநேர உறுப்பினரானதுடன் கழகத்தின் மத்திய குழுவிற்கும் தெரிவானார்.

1985 இல் (PLOTE) அமைப்பிலிருந்து வெளியேறினார்.

# உன்னை யாரும் அணைத்துக் கொள்ளவில்லையா?



நான்
என் வேலையைப்பார்த்தபடிதான்
போய்க் கொண்டிருந்தேன்.

என்னுடைய கவலைகள்,
துன்பங்கள்!

என்னுடைய வாழ்க்கை!

என்னுடைய சிலுவைகளை
நான் தானே சுமக்க வேண்டும்?

நாலு பெண்கள்
அழுது கொண்டிருந்தார்கள்.

தன்னைப் பார்த்து
அழுது கொண்டிருந்த
ஜெருசலேம் நகரத்து
மகளிருக்கு ஆறுதல் சொன்ன...

சிலுவை சுமந்து கொண்டிருந்த
ஜேசு என்ற நினைப்பில்
ஆறுதல் சொன்னப் போனேன்.

அன்றைக்கு
என்னை அணைத்துக் கொண்டது...

சனியன்!

*1.1.2024*
இரவு *11.30* (கனடிய நேரம்)
ஜோர்ஜ் இ.